

30894

தமிழ்க்கடல் அலை ஓசை

**
**

தமிழ்நாடு நல்வாழ்வுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
பேராசிரியர் க அன்பழகன், எம். ஏ.

அணிந்துரை :
தமிழக முதல்வர்
மாண்புமிகு
டாக்டர் கலைஞர் மு கருணாநிதி அவர்கள்

**
**

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1

© கல்யாணசுந்தர அன்பழகன் (1922)

1975 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம் திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : கஙிஙிஎ
முதற் பதிப்பு : ஜுன், 1975

O31, 6N22,1
N75

THAMIZHKKADAL ALAI OSAI

அப்பர் அச்சகம், சென்னை-600 001 (II)

பதிப்புரை

தமிழ் ஒரு பெருங்கடல். அதனினின்று எழும் அலையோசை என்றும் ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும் புகழோசையாகும். அதனைத் தம்முடைய அறிவாற்றல்-நாட்டுப்பற்று—தன்மானப்பற்று—மொழிப்பற்று ஆகிய வற்றால் நிலைநிறுத்திவருவோர் புலவர் பெருமக்களாவர்.

அத்தகைய புலவர் பெருமக்களின் வரலாறுகள் செவ்வனே தொகுக்கப்பெறின், அவை தமிழகத்தின் எதிர்கால வளத்திற்கும் வாழ்விற்கும் சிறந்த கருவூலங்களாக அமையும் என்பது திண்ணம்.

இத்தகைய நல்ல குறிக்கோளினை உள்ளத்திற் கொண்டே, தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகனார் அவர்கள் 'தமிழ்க் கடல் அலை ஓசை' என்னும் இவ் வரலாற்று நூலினை உருவாக்கியுள்ளார்.

இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு தெற்கேயிருந்து துவங்கப் பெறுதல் வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து. ஈண்டுப் பேராசிரியர் அவர்கள், இப் புலவர் வரலாறுகளைக் குமரி முனையிலிருந்து துவங்கியிருப்பது, அவ் அறிஞர் பெருமக்களின் கருத்துக்கு அரண் செய்வதுபோல் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இந்நூல் 'குமரிக் காட்சி'யில் துவங்குகிறது. அதனைத் தொடர்ந்து தமிழ்மரபு காத்த புலவர்களையும், வடமொழி மயக்கறுத்த வண்டமிழ்வாணர்களையும், சதுரகராதி

தொகுத்த வீரமாமுனிவர், திராவிடமொழிகளை ஆராய்ந்த கால்டுவெல், சீகன்பால்கு ஆகிய மேனாட்டறிஞர்களையும், தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரையும், சங்க இலக்கியங்கள் சாகாமற் காத்த டாக்டர் உ. வே. சா. அவர்களையும், நற்றமிழ் வள்ளல் நமச்சிவாயரையும் மற்றும் இன்னபிற புலவர் பலரையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் தமிழின் மாண்பைத் தரணிக்கு எடுத்துக்காட்டி, இறுதியில் தமிழன்னையைப் போற்றி வணங்கும் பேராசிரியரின் பேருள்ளமும் தமிழ்ப்பற்றும் வியந்து பாராட்டற் குரியன.

வரலாறுகள் அனைத்தும் படிப்போரின் உள்ளத்தைத் தொட்டுத் தமிழ் உணர்ச்சியினைத் தூண்டுவனவாகஅமைந் துள்ளன. இதற்குக் காரணம் பேராசிரியர் அவர்கள் நாட்டு மக்களோடு தொடர்புடைய நல்லதோர் அரசியல் தலைவராகத் திகழ்தலேயாகும். அதிலும் 'தமிழ்ப் பேரொளி' பேரறிஞர் அண்ணா அவர்களின் அருமைத் தம்பியருள் ஒருவராகத் திகழ்ந்து அவரிடம் கற்ற பாடமும் பெற்ற பட்டறிவுமேயாகும்.

எனவேதான் இவர் எடுத்துக்கூறும் புலவர் வரலாறு களில் ஒரு புது மிடுக்கினையும் உயிரோட்டத்தினையும் காண முடிகின்றது.

பேராசிரியர் அவர்கள் இந் நூலுள் ஆங்காங்கே சில அரிய உண்மைகளைச் சுட்டிக் காட்டுதல் குறிப்பிடத்தக்க தாகும். அரசியலில் ஈடுபட்டிருக்கும் பேராசிரியர் ஒருவர் இத்தகையதொரு வரலாற்று நூலினை இயற்றுதல் சாலப் பொருத்த முடைத்தாகும். ஏனெனில் பேராசிரியர் அவர் களின் தமிழ்ப் பற்றுன்று—நாட்டுப்பற்று இனப்பற்று களின் அடிப்படையில் அமைந்த தூய தமிழ்ப்பற்றாகும்.

எனவே, நாட்டில் யாண்டும் மொழிப் பற்றும், அதனை அடிப்படையாகக் கொண்டு பொது நலமும் பூக்க இந்நூல் வழிவகுக்கும் என்பது எமது துணிபு.

தம்முடைய அரசியல் பணிகளுக்கிடையே இத்தகைய வரலாற்று நூலினை உருவாக்கிய பேராசிரியர் அவர்களின் அயரா உழைப்பும் மொழிப்பற்றும் பெரிதும் பாராட்டுதற் குரியன.

இதனைக் கழகவழி வெளியிடப் பெரிதும் விரும்பிய பேராசிரியர் அவர்கட்குக் கழகத்தின் நன்றி என்றும் உரித்தாகும். தமிழகம் இந்நூலினை ஏற்றுப் போற்றிப் பயன்கொள்ள இஃது அனைத்து நூலகங்களிலும் இடம் பெறுதல் நலமாகும். வாழ்க தமிழ்! யாண்டும் பரவுக தமிழ்க்கடல் அலையோசை!

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

படையல்

எனை ஈன்று புறந்தந்து ஆளாக்கிய
என் அருமை அன்னை, அன்பின் திருவுருவாம்
சுவர்ணம்பாள் அவர்கட்கும்
எனை நடைபயிற்றி, அறிவன அறிந்து தெளியவும்
அவையத்து முந்தியிருப்பவும் செய்த
என் அருமைத் தந்தையார் அறிவின் திருவுருவம்
மு. கல்யாணசுந்தரனார் அவர்கட்கும்
அவர்தம் இணையடி போற்றி வணங்கி
இந்த ஏட்டினைப் படைப்பதில்
அகமிக மகிழ்கின்றேன் நான்.

க. அன்பழகன்.

தமிழக முதல்வர்

டாக்டர் கலைஞர்

மு. கருணாநிதி

அவர்கள் வழங்கிய

அணிந்துரை

தமிழ் இனத்தின் பெருமை—தமிழ்மொழியின் தொன்மை—இவை பற்றிய தெளிவும் ஆர்வமும் எள்முனையளவு மில்லாது தேய்ந்து ஓய்ந்து கிடந்த தமிழ்மக்களைத் தட்டியெழுப்பிய பெருமக்களில் ஒருசிலரை நினைவுபடுத்துவதின் வாயிலாகத் தமிழ் நிலத்தின் வருங்காலத் தலைமுறையை எழுச்சிபெறச் செய்யும் ஏற்றமிகு எண்ணத்துடன், இந்நூல் பேராசிரியர் அன்பழகன் அவர்களால் எழுதப் பெற்றுள்ளது. மூலையில் ஒளிந்து கிடந்த முத்தும் மணியும் மூதறிஞர்களின் முயற்சியால் எவ்வாறு தமிழ்க் குடியினருக்கு எடுத்தளிக்கப்பட்டன என்ற விளக்கங்களும், வடமொழி நுழைவின் வரலாறும், தென்மொழியாம் தேன்தமிழ் மொழியின் இளமைமாறு முதுபெருஞ்சிறப்பும், பேராசிரியருக்கே உரிய அருவியோட்டத் தமிழில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. குமரிக் காட்சியில் தொடங்கித் தமிழ்த் தென்றலில் சுகம் வழங்கி, அன்னையைப் போற்றி முடியும் இந்நூல், அந்த அன்னை பெற்றுள்ள அரும் பெரும் செல்வர்களைப் பற்றிய செவியினிக்கும் சிறப்பு

களைத் தொடர்ந்து சொல்லும் என்ற நம்பிக்கையும், சொல்லவேண்டுமென்ற அவாவும் மிகவுண்டு எனக்கு! இந்த நூலில் இடம்பெறும் செந்தமிழ்ச் செல்வர்களே யன்றி வேறு பலரும் உளரே, வேர்ப்பலாத் தமிழுக்குச் சுவை சேர்த்தவர்களாக! அவர்தம் செழுமிய வரலாறு களையும் பேராசிரியர் படைத்திட வேண்டும் என்ற உணர்வினை, இந்த நூல் நமக்குத் தருகின்றது என்பதில் ஐயமுண்டோ?

சுற்றிச் சுழன்று வந்த பகைமை அணிகளை யெல்லாம் புறமுதுகிடச் செய்து வெற்றிக்கொடி நாட்டி நிற்கும் தமிழ் மொழியின் வலிவு எத்தகையது என்பதையும், வளம் எத்துணை சிறப்பு மிக்கது என்பதையும் இந்நூல் மலரின் இதழ்கள் ஒவ்வொன்றும் மணம் பரப்பிக் காட்டும் விந்தைதான் என்னே!

அடிமையற்ற நிலையும், அன்னைமொழி போற்றுதலும் மண்மேற் பிறந்தார்க்கு இரு கண்ணைத்தவைகளாம்.

தாய்மொழிப்பற்று குறையத் தொடங்கினுல் தாயக உரிமையும் மெல்ல சாகத் தொடங்கும்.

தளையால் கட்டுண்டு கிடக்கும் உடலை ஆர்த்தெழச் செய்து, உறுதிகொண்ட வலிமை சேர்த்திட அந்த உடலுக்கு உயிர் வேண்டுமன்றோ? அந்த உயிர்தான் மொழியாகும். உயிர் இல்லாது உடல் அசையாது. மொழி மாய்ந்த பின்னர் மண்ணுரிமைக்கு மாண்புதான் ஏது?

"தமிழ்க்கடல் அலைஓசை" என இந்நூலுக்குப் பெயர் சூட்டியிருப்பது மிகப் பொருத்தம். அலை, உயர்ந்தும் தாழ்ந்தும் எழுந்தும் வீழ்ந்தும் இறுதியில்

கரையைத் தொடுவது போலவே தமிழ்மொழியின் வரலாறும் அமைந்துளது எனலாம்.

அழிந்துவிட்ட தமிழ்ச்சுவடிகள் எத்தனை! காலக்கரையானின் வாய்க்கிரையாகிய இலக்கியங்கள் எத்தனை! மாறுபட்ட கருத்துகளுக்கிடையே சேற்றில் தலைநீட்டிக் கிளம்பிய செந்தாமரை போன்ற செந்தமிழ்க் கருவூலங்கள்தாம் எத்தனை! எத்தனை!!

தீ நாக்குகளின் கொடிய விளையாட்டுக்கு உணவாகிக் கொண்டிருந்த ஓலைக்குடிலுக்குள் ஊரில் உள்ள உறுதி மிக்கோர் நுழைந்து, பதைப்புடனும் பரபரப்புடனும் சீரிய பொருள்கள் சிலவற்றை மீட்டுக் கொணர்தல் போல, பல்வகை எதிர்ப்புகளால் பாழாகி விடாமல் பழந்தமிழ்ச் செல்வங்களைப் பாதுகாத்துக் கொடுத்தனர் நம்முடைய முன்னோர். அவர்களில் தமிழ்நாட்டாரும் உண்டு. வெளிநாட்டாரும் உண்டு. அவர்தம் ஆக்கமும் ஊக்கமும் தமிழ்மொழியை வளர்க்கக் காவிரியாற்று நீத்தம்போல் பயன்பட்டுள்ளன. நமது மொழியின் வளர்ச்சி, அவர்தம் பணியோடு முடிந்து விடவில்லை. பழங்கால மன்னர்களின் ''தேர்''போகப் போடப்பட்ட சாலைகளில் இன்று ''கார்'' போகும் வண்ணம் ''தார்'' போட்டிருக்கிறோம்.

அந்த மன்னர்கள் அமைத்த சாலைகள் போன்றவை, மறைந்த தமிழ்ப்பெரியோர் தமிழுக்குச் செய்த தொண்டுகள் எனக்கொண்டு, காலத்திற்கேற்பச் சாலை மேம்பாட்டைப் போற்றிப் பணியேற்றல் நமது கடனாகும். அந்த முனைப்புக்கு வழிகாட்டுவதே இந்த நூலின் பெருமையாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அறிஞர் அண்ணா கண்டெடுத்த கொள்கை முத்துகளில் ஒன்றே பேராசிரியர் அன்பழகன். அவருடைய கருத்தழகும்,

கனிவான சொல்லழகும், தமிழ்க் கட்டழகும், மேடையில் கண்டு மகிழ்ந்தோம். இதோ கோடையிலே இளைப்பாற்றும் குளிர் தருவென எழுத்தழகு காணுகிறோம் இந்நூலில் !

இளைய தலைமுறைக்கு இந்தநூல் இனிய தமிழ் அமுது ! எழுச்சி விருந்து !

அன்புள்ள,



ஆசிரியரின்

பணிந்துரை

பல நூறு காதம் பரப்பளவு கொண்டு குமரிக்கண்டம் என்று குறிக்கப்பட்ட பழந் தமிழகத்தைத் தென்கடல் தன் பசி தீர்க்கப் பலகாலும் விழுங்கிற்று. கடல் கொண்ட நெடுநில மருங்கில் எஞ்சி நின்ற நிலமே இன்றைய தென்னாடு.

தமிழ் மண்ணை விழுங்கிய கடல் அந்த மண்ணில் வளர்ந்திருந்த கலை இலக்கிய நாகரிக நல்வாழ்வுச் செல்வங்களையும் சுவைத்தது. அவற்றின் சுவை கண்டு விட்டதால் மேலும் ஓயாது உண்பதாயிற்று; தமிழ் நிலத்தையும் தொடர்ந்து அரிப்பதாயிற்று. தன் அலைக் கரங்களால் அரித்தும் அணைத்தும் பூம்புகார் முதலான எழில் மிகு பட்டினங்களையே கொண்டது கடல்.

தமிழ்ச் சுவைகண்ட கடலின் வேட்கையைத் தணிப்பான் போலும் நாட்டவரிடம் மீதமிருந்த சுவடிகள் பலவும் ஆற்று வெள்ளத்துக்குப் பலியாக்கப்பட்டு, கடலுக்கு விருந்தாக்கப் பட்டன. அறியாமையில் ஆழ்ந்த தமிழன் தனது அறிவுக் கடலையே, இயற்கைக் கடலிடம் ஒப்படைத்து விட்டான். அதனால் தான் போலும் இரக்க உணர்வு கொண்டு 'ஓ' வென்று அவல ஓசை எழுப்புகின்றது அந்தக் கடல்!

கவிஞர் முடியரசன் அவர்கட்கு, அந்தக் கடலின் அலை ஓசை அப்படித்தான் தோன்றுகின்றது.

"யாழுங் குழலும் பல பறையும்
யாழா ரொடு பாட ரங்கும்
போழும் பனையே டுந் தோய்ந்த
பொதி பொதியான தமிழ் நூலும்
வாழும் பொருளும் நிலபுலமும்
மனையோ டினவும் வாய்க் கொண்ட
பாழுங் கடலே அதற் கோநீ
ஓல மிடு கின் றனையோ ?"

என்பது கவிஞரின் உள்ளத்தில் எழுந்த ஓலமே ஆம்.

இதுவேயன்றி இடைக்காலத்தில் ஆரிய சாகரத்துக்கும் தமிழ் இரையாயிற்று. வடமொழி உயர்ந்தது, அதன் உறவும் கலப்பும் தமிழுக்கு ஆக்கம். சமக்கிருதம் தேவமொழி, தெய்வத் தன்மை கொண்டது. தமிழ் நீசமொழி—தாழ்ந்தோர் பேசும் மொழி—இழிந்த மொழி. இப்படிப்பட்ட எண்ணங்கள் உருவாகி, தமிழ் ஒதுக்கப்பட்ட மொழியாக, நாளும் தேயும் நிலைக்கு ஆளாயிற்று. தமிழ் இலக்கியம் போற்றுவாரற்றுக் கிடந்தது. தமிழ்மொழியின் வடிவு சிதைய வழி கோலப்பட்டது.

தமிழில் மணிப்பிரவாள நடை தலைதூக்கலாயிற்று. செந்தமிழ் வழங்காத பகுதிகளில், வட மொழிக் கலப்பு, புது மொழிகளை உருவாக்க ஏதுவாயிற்று. சிதைந்த தமிழே, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய புதுவடிவு பெற்று, தனித்தனி மொழிகளாயின. இவற்றின் மூலத் தொடர்பும், வேர்ச்சொற்கள் ஒற்றுமையும் காட்டியே இவை யாவும் திராவிட மொழிகள் என்னும் குழுப்பெயர் பெற்றன. ஆம், வைதிக வாடை வீச்சாகிய வடமொழித் தொடர்பு தமிழ் நிலவி இருந்த பரப்பிலும் அதைச் சிதைத்து விட்டது. யார் வைத்த கொள்ளியோ, 'தமிழ் வீடு' வெந்தது என்று ஏங்கிடவே வரலாறு ஏதுவாகின்றது.

கத்துகடல் நீராலும் கயவ ராலும்
கனலாலும் கண் கலந்த தூக்கத்தாலும்
எத்தனையோ நூற்களை நாம் இழந்து விட்டோம்
இல்லையெனில் ஒரு நூலா—இரண்டு நூலா
பத்திரண்டா யிரங்கோடி நூற்களன்றோ
பைந்தமிழர் கைவசத்தில் இருந்தி ருக்கும்!

என்று உவமைக் கவிஞர் சுரதா புலம்புவது தமிழ்ச் செல்வத்தை நாம் இழந்த வகையைச் சித்தரிப்பதன்றோ!

ஆம்! இந்த நிலைக்காளான 'தமிழை' உயர்த்த—தமிழ் மாட்சியைப் புலப்படுத்த, வடமொழி மயக்கறுக்க, வழிகாட்டிய அறிஞர் பெருமக்கள் பலராவர். தமிழ்ப்பற்று மிகக் கொண்டு—தமிழ் உணர்வும் தமிழ் ஆர்வமும் நம்மிடையே தழைக்க, தமிழின் தன்னிகரற்ற தனித் தன்மையையும் தகுதியையும் உலகோர் உணர வழிகண்ட உத்தமர்கள் அவர்கள்.

தாழ்த்தி வைக்கப்பட்டிருந்த தமிழ்—தலை நிமிரக் காரணமான உண்மைகளை ஆராய்ந்து அறிவுறுத்திய, ஆராய்ச்சியாளர்களை நாம் அறிந்து போற்றக் கடமைப் பட்டவர்களன்றோ! அந்தக் கடமை உணர்வே 'தமிழ்க் கடல்அலை ஓசை' என்னும் இந்தக் கட்டுரைகளை எழுதத் தூண்டு கோலாயிற்று.

தமிழ்மொழி இலக்கியக் கடலிலிருந்து கிளம்பும் உணர்ச்சி அலைகளில் இருந்து எழும் ஓசையே இது வாகும்.

தமிழ்க்கடல் எனத்தகும் அறிஞர் தம் உள்ளத்துப் பிறந்த உணர்ச்சி அலைகள் எழுப்பிய முழக்கம் எனினும் பொருந்தும்! தமிழ்க் கலை இலக்கியச் செல்வங்களை விழுங்கிய கடலிலிருந்து எழும் அலைகள் எழுப்பிய ஓசை,

உணர்வார்க்கு உணர்த்தும் உண்மைகள் என்று கருதினும் தவறல்ல!

இந்த ஏட்டினில் காணப்படும் அறிஞர் பெருமக்கள் கால வரிசையில் இடம் பெறவில்லை. மாறாகத் தமிழ் மக்களின் உள்ளத்தில் தமிழ் வீறு பிறக்கவும், தமிழ்ப் பெருமை நிலைக்கவும், உண்மை கண்டு துணிவு கொள்ளவும் அவர்தம் கருத்துகள் துணையாகும் வகை நோக்கி, வரிசைப் படுத்தப் பட்டுள்ளன எனலாம்.

முத்தமிழாம் இயல் இசை நாடக மறுமலர்ச்சிக்கும், உரைநடை வளர்ச்சிக்கும், ஆட்சி மொழி ஏற்றத்துக்கும் வழிகண்ட பெருமக்கள் மேலும் பலராவர். தமிழ் இலக்கிய ஆராய்ச்சியாலும், நாடு, இன, மொழி வரலாற்று ஆராய்ச்சியாலும் உறுதுணையானோரும் பலர். அவரெல்லாம் நம் போற்றுதலுக்குரியோராவர்.

கடந்த நாற்பது ஆண்டு காலத் தமிழக வரலாற்றில் தனி இடம் பெறுபவரும், தமிழ் - தமிழன் என்னும் உணர்வு தழைக்கவும், எழுச்சி பொங்கவும் பெரிதும் வழி கண்ட பெருமக்களுமான, பகுத்தறிவு இயக்கத் தந்தை பெரியார் அவர்களும், தமிழ் இனத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களும், தமிழ் இயக்கக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களும்—தனித்தனி போற்றுதலுக்கு உரியோர் ஆவர். அவர்கள்தம் அருமையையும் பெருமையையும் நாடு நன்கறியும். அவ்வாறு மக்களால் நினைவில் நிறுத்தப்படாத பெருமக்கள் பலர் இந்த ஏட்டில் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் வழங்கியுள்ள அரிய கருத்துகளைக் காண்போர்—அவற்றின் சிறப்பினையும் பயனையும் உணர்ந்து அவர்களை நாளும் போற்றுவர் என்பதே என் எண்ணம்.

இந்த ஏட்டின் நோக்கம் – எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு! என்னும் புரட்சிக் கவிஞரின் முழக்கம், அதன் பொருள் உணர்ந்த தமிழ் இளைஞர் தம் முழக்கமாக வேண்டும் என்பதே.

இந்த ஏட்டில் வந்துள்ள கட்டுரைகள் யாவும்—பத்து ஆண்டுகட்கு முன்னர் சிங்கப்பூர்—'தமிழ் மலர்' ஏட்டில் கிழமைதோறும் பொலிவுடன் வெளியிடப் பட்டவையாம். நான் எழுத வேண்டும் என்று விரும்பி, என்னிடம் கேட்டுப் பெற்று வெளியிட்ட அதன் ஆசிரியர் திரு. செல்வகணபதி அவர்களின் அன்புக்கு நான் பெரிதும் நன்றியுடையேன்.

நாடும் மொழியும் நாளும் உயர்ந்திட ஓய்வே நாடாது உழைத்திடும் செம்மல், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமது பல்வேறு அலுவல்கட்கிடையிலும் இந்த ஏட்டினைப் படித்துப் பார்த்து ஏற்றதொரு அணிந்துரையை விருப்புடன் வழங்கியமை—என்பால் கொண்ட அன்பின் அடையாளமே யாம். அவர்தம் அன்பில் விளைந்த அணிந்துரைக்கு என் நன்றி என்றும் உரித்தாகும்.

இதனை ஒரு நூலாக வெளியிட இசைந்து, சிறப்பாக அச்சிட்டுள்ள 'தமிழ்த் தொண்டே இறைத் தொண்டு' என்று உள்ளங் கொண்ட, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கும், அதன் நிருவாகத் தலைவர் மதிப்பிற்குரிய பெரியவர் திரு. வ. சுப்பையா அவர்கட்கும் என் நன்றி நாளும் உரித்தாகும்.



உள்ளுறை

		பக்கம்
குமரிக் காட்சி	...	1
குருடருக்கு விழி	...	10
புகழ் மணக்குந் தமிழ்	...	20
தமிழ் இனிமை கெடுத்த தகாத கலப்பு	...	28
கால்டுவெல் கண்ட கன்னித்தமிழ் மாட்சி	...	34
சீகன்பால்கு சிந்தை கவர்ந்த தமிழ்	...	45
வீரமாமுனிவர் வியந்தேத்திய தமிழ்	...	50
போப் ஐயர் போற்றிய தமிழ்	...	55
தனித்தமிழ் இயக்கங்கண்ட தகைசால் அடிகள்	...	60
வடமொழி மயக்கறுத்த பல்கலைப் புலவர்	...	78
தனித்தமிழர் மரபு போற்றிய நாவலர் பாரதியார்	...	85
சங்க இலக்கியங்களைச் சாகாது வழங்கிய டாக்டர் உ. வே. சா.		94
பழந்தமிழ் ஏடுகளைப் பதிப்பித்துத் தந்த தாமோதரனார்	...	104
'மொழிநூல்' கண்ட முதறிஞர்	...	113
வடமொழி உயர்வுக்குக் கண்டனம் எழுப்பிய செல்வகேசவராயர்	...	125
தமிழ்த்திருநாள் கண்ட நமசிவாயனார்	...	138
தமிழ்த் தென்றல்	...	145
அன்னையைப் போற்றுவோம்	...	156

———



குமரிக் காட்சி!

முப்பது ஆண்டுகட்கு முன்னர் ஒரு நாள் கல்லூரிப் படிப்பு முடிந்த நிலையில், தண்டமிழ் வழங்கும் திருநிலத்தின் தென்கோடியாகத் திகழும் குமரிமுனைக்குச் சென்றிருந்தேன். அந்த முனையின் கண்கொள்ளாக் காட்சியைப் பற்றியும் கவினுறு மாட்சியைப் பற்றியும் முன்னரே கேள்விச் செய்தியாக அறிந்திருந்தனனாயினும் கண்குளிரக் காணப் பெற்றபோது பெரிதும் களிப்புற்றேன்.

ஓரிரு நண்பருடன் கடற்கரையில் உலாவச் சென்றேன். கன்னி ஒருத்தியைத் தொட்டுத் தொட்டு மகிழும் ஒரு காளையைப் போன்று, கடல் மணாளன் நிலமகளைத் தன் அலைக் கரங்களால் தொட்டுத் தொட்டுக் களித்துத் தான் எழுப்பும் அலை ஓசையால் அவள் புகழையும் பாடிக் கொண்டிருந்தான். காதலரைக் களிப்புறச் செய்ய, தென்றல் கவரி வீசிக்கொண் டிருந்தது. அலை நுரைகளும், கரைமணலும் ஒன்றுடன் ஒன்று கலந்தும் கரைந்தும், குளிர்ந்தும் காய்ந்தும் குழைந்து கொண்டிருந்தன. மணப்பெண்ணுக்கு வழங்கும் மாப்பிள்ளை சீர் எனக், கரையிலே குவிந்த சங்குகளும் சிப்பிகளும், கூழாங் கற்களும் காட்சியளித்தன.

அதே மணற்பரப்பில்தான் எத்தனை எத்தனை வண்ணப் பொடிகள்! ஒரு பக்கம்—கண் மையை ஒத்த கருநிற மணல், மற்ருெரு பக்கம் குங்குமக் குழம்போ என்னும்படி சிவப்புப்பொடி! வெள்ளைநிற மணலோடு போட்டியிடும் பொன்னிற மணல்! கடற்கரைப் பரப்பிலே வானவில் தரும் வண்ணக்காட்சி!

கடற்கரையை அடுத்துச் சிறுசிறு குன்றுகள் பல. ஒரு குன்றின் உச்சியில் ஏறி நின்று, அதன் சூழல் அனைத்தையும், நாற்றிசைக் காட்சிகளையும் காண முனைந்தேன். அதன் மூன்று பக்கங்களிலும்—நீலவண்ணக் கடல் வடதிசையிலோ, மேலும் பல குன்றுகளும், சோலைகளும், சாலைகளும், வயல் களும்—கண் நிறைத்தன.

கீழ்ப்புறக் கடலும், மேற்புறக் கடலும், தென்புறக் கடலோடு கைகோத்து நின்று, குமரியைச் சுற்றி அவள் தப்பி ஓடாதவாறு மடக்கியது போன்று தோன்றியது. குமரிமுனை யின் முப்புறமும் கடல்களும், வடதிசையில் சிறு சிறு குன்றுகளும் நின்ற கோலம், முப்புறமும் கடல்களும், வடதிசையில் வேங்கடப்பெருமலையையும் எல்லையாகக் கொண்ட தமிழகத்தின் சிறு வடிவ அச்சு எனவே விளங்கிற்று.

மறுநாள் விடியற்பொழுதில், வைகறைக் காட்சியையும் கண்டேன். கீழ்வானம் தன்கருமையைக் கடல் நீரில் கரைத்து

விட்டு, வெள்ளுடை உடுத்தலாயிற்று. தாமரைப் பொய்கை யினில் மூழ்கிய பொன்னிற மேனியாளொருத்தி—தன் கரங்களை உயர்த்தியவாறு எழுந்து ஒளி முகத்தைக் காட்டுதலை ஒப்ப—கருநீலக்கடலினிலிருந்து பளபளக்கும் ஒளிக்கதிர்களாம் கரங்களை நீட்டி, இருட்பகையை ஓட்டிச் செக்கச் சிவந்த முகங்காட்டி, வெற்றிநகையெனச் சுடரொளி கூட்டி, விண்ணில் வீசிய தணல் பந்தென உயரும் எழு ஞாயிற்றின் காட்சி தந்த இன்பத்தில் அமிழ்ந்தேன். அன்று முழு நிலா நாள். மாலைக் காட்சியும் தனிச்சிறப்புடைய விருந்தாயிற்று.

மாலையில், மேற்றிசை வானம், குங்குமம் கொட்டிய வெள்ளித் தட்டென, உருக்கி வார்க்கப்படும் இரும்புப் பாளமென—தனிச்சிவப்பு நிறமும், பல்வேறு வண்ணமும் குழைந்து பளபளத்தது. மேற்றிசை மலைகளுக்கு அப்பால் கதிரவன் மறைவதாகத் தோன்றும் காட்சியையே—தமிழகத் தின் பல பகுதிகளிலும் கண்டவர்க்குக்—கதிரவன் கடலுள் மூழ்கிய அக் காட்சியும் புதுமையே!

கதிரவன் எழுந்தவேளை, தன் பால் முகம் மறைப்பினும் ஞாயிறு மறைந்த வேளை, தன் ஒளிநகை காட்டி உலகத்து உயிர்களை எல்லாம் மதிமயங்கச் செய்யும் திங்கள், அன்று அதன் முழு வடிவில் முளைத்தெழுந்தது. மேற்றிசையில் ஞாயிறு மூழ்கு முன்னரே, கீழ்த்திசையில் திங்கள் முகிழ்த்து எழுந்து காட்சி நல்கியது.

ஞாயிறும், திங்களும், தத்தம் இயல்பினால், தணலும் நீருமாக, வெம்மையும் தண்மையுமாக, முரண்பட்டனவெனினும், உலகத்து உயிர்கட்கெல்லாம் வாழ்வும் இன்பமும் அளிப்பதில் ஒன்றற்கொன்று துணையாக நிற்கும் தன்மையை உணர்த்துவது போன்று, அவை இருபக்கமும் காட்சி யளித்தன. அவை ஆணும் பெண்ணுமாகக் கற்பிக்கப்பட்டனவல்லவோ சில கவிஞர்களால்! அதனால்தான்போலும் காதலரைப் போன்று, ஒன்றைக் கண்டு ஒன்று மறைந்தும், ஒன்றை ஒன்று தேடியும், தொடர்ந்து ஓடியும் வருகின்றனபோலும் உலகோர் கண் களுக்கு.

ஆம்! ஒருநாளன்று, இருநாளல்ல, பலநாட் பழகிப் பலரொடு சென்று, பலபொழுது காணினும்—புதுப்புதுக் கோலங்காட்டி எழில் விருந்தளிப்பவள் குமரி.

முப்புறமும் அலைவீசும் கடல், அதன்மீது மீன்வாரி வரும் பாய் விரித்த படகுகள்!

வடபுறம் வெண்மணற் குன்றுகள், பசுஞ்சோலைகள்! பச்சைப் பட்டு விரித்தது போன்ற கழனிகள்!

விண்ணிலே—ஒளிக் கோளங்கள் வகைவகையான காட்சி தர, அவற்றை மறைத்திடும் மேகக் கூட்டங்கள்!

மண்ணிலே—பல வண்ணப் பொடிகள், நீர்த்திவலை அள்ளிவரும் தென்றல் காற்று!

இவை உடலும் உள்ளமும் சிலிர்த்திடச் செய்யும் இன்பமன்றோ!

இந்தக் காட்சிகளை எல்லாம் பைந்தமிழ்ச் சொல்லாலே பாடி நிலைபெறச் செய்திட நான் ஒரு கவிஞனும் அல்லேனே! வண்ண ஓவியம் ஆக்கிட ஒரு கலைஞனும் அல்லேனே! என்றுதான் உள்ளம் கவன்றது.

மறுகணம்—குமரியைப் பாடிய, புதுமைக் கவிஞர் பாரதியார் காட்சி தந்தார்.

"நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தந் தவஞ்செய் குமரி எல்லை"

என்று பாடினரல்லரோ அவர்! தென் எல்லையாக நிற்கும் குமரி—கடல் ஓரத்திலே நிற்கிறது, நித்தந் தவஞ்செய்கிறது, என்பதைக் கவிஞர் கூறியதை எண்ணியபோது, அந்த எல்லையையேனும் கடல் கொள்ளாது காக்கத்தான் குமரி தவஞ் செய்கிறதோ! என்று உள்ளங் குழைந்தது.

தென் குமரியைப் பாடிய கவிஞர்,

"வட மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு"

என்று வட எல்லையையும் குறித்தார்.

பாப்பாவிற்கு எனப் பாட்டிசைத்த போதும்,

"வடக்கில் இமயமலை பாப்பா! தெற்கில்
வாழுங் குமரி முனை பாப்பா!
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா!"

என்று இதனை வாழுங் குமரி என்று புகழ்ந்தார். ஆம்! இந்தக் குமரிதான், நாம் வாழத் துணையாகும் குமரி! தமிழ் வாழ நிலையாக நின்ற குமரி!

"சூழும் தென்கடல் ஆடுங் குமரி
தொடரும் வடபால் அடல்சேர் வங்கம்
ஆழுங் கடல்கள் கிழக்கு மேற்காம்
அறிவும் திறனும் நிறைந்த நாடு"

என்று தென் கடலலை ஆடும் குமரியைப் போற்றிப் பாடினர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

இவ்வாறு குமரிமுனை போற்றப்பட்டது இந்நாளில்—இருபதாம் நூற்றாண்டில்.

இந்தக் குமரி முனை என்னும் பெயர்தானும் இதற்குப் பொருந்தியது, தமிழ் வழங்கு நிலத்தின் தெற்கு எல்லையாக நின்றதால்தான். தமிழ் வழங்கும் நிலமாக விளங்கிய பகுதியிலுள்ளும் சிறப்பு நோக்கி, 'பாண்டிய நாடே' 'செந்தமிழ் நாடு' என்று வழங்கப்பட்டு வந்துள்ள காலத்தில், அதன் எல்லை கூற வந்த ஒரு புலவர், பாடியது இது:

"வெள்ளாறது வடக்கு, மேற்குப் பெருவெளியாம்,
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும் உள்ளான
ஆய்ந்த கடல் கிழக்(கு) ஐம்பத்தாறு காதம்
பாண்டி நாட்(டு) எல்லைப் பதி"

இவ்வாறு புனல் கன்னி என்று குறித்தது, குமரிமுனை தழுவி நிற்கும் கடலையே ஆகும்.

இலக்கண நூலாகிய நன்னூலில்,

"குண கடல், குமரி, குடகம், வேங்கடம்
எனும் நான் கெல்லை"

என்று பவணந்தியால் குறிப்பிடப்பட்டதும்—இந்தக் கடல் சூழ்ந்த குமரியேயாகும்.

அதற்கு முன்னர்க் 'குமரி' என்றழைக்கப்பட்டது, இதன் தெற்கே நின்ற பிறிதோர் 'குமரி' எனவும் அதனைக் 'குமரிக்கோடு' என்றும் "குமரியாறு" என்றும் அழைத்துள்ளனர் எனவும்—அதன் தெற்கேயும் நிலப்பரப்பு இருந்தது எனவும் அறிகின்றோம்.

ஒல்காப்புகழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் வரைந்த சிறப்புப் பாயிரத்தின்கண்,

"வடவேங்கடம் தென்குமரி, ஆயிடை
தமிழ் கூறு நல்லுலகத்து"

என வருகிறது. இதன்கண் வரும் குமரி—ஓர் ஆறு எனவே கொண்டனர், உரையாசிரியர்களான இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும். "குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டதாகலின்," என்று குறிப்பதால்—அந்தக் குமரி—தமிழகத்தின் தெற்கு எல்லையில் ஓடியதோர் ஆறு என்பதும், அதன் தெற்கேயும் நாடுகள் பல இருந்தன என்பதும் அவை முதல் கடல்கோளால் அழிந்தன என்பதும்—அவை அழிந்த பின்னும், அஃது ஓர் ஆறுகவே நின்றது என்பதும், அந்த ஆற்றுக்கும், இன்று நிலவும் குமரி முனைக்கும் இடையேயும் ஒரு நிலப்பகுதி பாண்டிய நாடு

ஆக நிலவி இருந்தது என்பதும், இரண்டாம் கடல்கோளி ஞலேயே அப் பரப்பும் அழிந்தது என்பதும் பெறப்படும்.

பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய காரிகிழார் என்னும் புலவர், அவனது நாட்டு எல்லையைக் கூறுங்கால்,

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்,
தெனுஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணுஅது கரையொடு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்"
(புறம் - 6)

எனச் சுட்டுகிருர். இதன்கண் குமரி என்பதற்குக் கன்னியாறு எனப் பழைய உரைகாரர் கூறியுள்ளார்.

புறநானூற்றில் கோப்பெருஞ் சோழனைப் பாடிய பிசிராந்தையார் என்னும் புலவர் அன்னச் சேவலை விளித்துப் பாடுமிடத்து,

"குமரிஅம் பெருந்துறை அயிரை மாந்தி
வடமலை பெயர்குவை ஆயின், இடையது
சோழ நன்ஞட்டுப் படினே"

எனக் கூறுகிருர். ஈண்டும், இதன் பழைய உரையின்கண் "குமரியாற்றின் பெரிய துறைக் கண்ணே" என்றே கூறப்பட்டுள்ளது.

மற்றும், இளங்கோ தந்த சிலப்பதிகாரத்தின் வேனிற் காதையில்,

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனஞட்டு"

எனத் தமிழக எல்லை கூறுமிடத்து, தொடியோள் பௌவ மெனக் குறித்தது, குமரிக் கடலையே (குமரி முனைதான்) எனி னும், அக்காலத்திற்கு முன்னர், தமிழ் நிலத்தின் "தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னும் ஆற்றிற்கும் குமரியாற்றிற்கும் இடையே—எழுநூற்றுக்காவதவாறும்.......,

தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல்கொண்டது''—என அடியார்க்கு நல்லார் உரையினின்றும் அறியப்படுதலால்—கடல்கோளுக்கு முன்னர் ஒருகாலத்தில் குமரியாறு தெற்கு எல்லையாக நின்றது தெளிவு.

பின்னரே குமரிக் கடல் (முனை) தமிழகத்தின் தெற்கு எல்லையாய்க் குறிக்கப்படலாயிற்று என விளக்கம் உரைத்தார் அடியார்க்கு நல்லார்.

சிலப்பதிகாரத்தின் காடுகாண் காதையில்—இளங்கோவடிகள்,

''வடிவே லெறிந்த வான்பகை பொறுது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன்''

என்று கூறுவதிலிருந்து,—இது மேலும் தெளிவாகும். இதனால் பஃறுளியாற்றுடன் குமரியாற்றையும் கடல் கொண்டது தெளிவு. ஒரு வேளை குமரிக் கோடு என்றதால் அது மலையேயாக வேண்டும் எனக் கொள்ளினும்—குமரியாறு தோன்றிய மலையாகக் கூடும். இதனால்—இன்று நிலவும் குமரி முனைக்குத் தெற்கே, பழந்தமிழ் நாட்டின் தென் பகுதி நிலவியதும், அந்தப் பரப்பினில், பஃறுளி குமரி என்னும் யாறுகளும் மலைகள் பலவும் இருந்தனவாதலும், அக்காலத்தின் தென் எல்லையாக நின்ற குமரியாற்றுக்குத் தெற்கிலும்—பிற நாடுகள் பலவிருந்து கடல்கோளால் அழிந்துபட்டன என்பதும் துணியப்படும்.

இவ்வாறு குமரி, ஒரு முனையாக நிற்பினும் கடலாகவும் விரிந்து, முன்னாளில் ஆறாக ஓடி, ஒரு பெரு நிலப்பரப்பு மறைந்ததற்குச் சான்றாக நிலவுகிறது. தமிழகத்தின் தெற்கே விளங்கிய ஒரு பெரு நிலப்பரப்பு, கடல்கோள் பலவற்றால் மறைந்த அக்கண்டம்—வரலாற்று ஆசிரியர்களால் குமரிக் கண்டம் (லெமூரியா) என்றே அழைக்கப்படுகின்றது.

தொல்லுலகில் நின்று அழிந்த குமரிக் கண்டத்துக்கும், அங்குத் தோன்றி வளர்ந்த தமிழ் இனத்தவரின் தொன்மைக் கும், அவரிடையே அரும்பி மலர்ந்த தமிழ் நாகரிகத்தின் தனித் தன்மைக்கும், அவர் தம் அறிவினில் முகிழ்த்து வாழ்வினில் கலந்த முத்தமிழின் முதன்மைக்கும் இன்றைய குமரிமுனை —நீடு புகழ்பாடி நிலைத்திருக்கும் சின்னமாய் விளங்குகின்றது!

அங்கு எழும்பியுள்ளதொரு கோயிலில் விளங்கும் காவல் தெய்வமும், கன்னியா குமரி—என்றே அழைக்கப்படுவது, எத்தனையோ கடல் கோள்களினாலும் அழியாது நிலைத்த கன்னித்தமிழையே — கோயில் கொள்ளச் செய்ததெனத் தோன்றும்! கன்னி கழியாக் குமரியாக—திருமணம் கொள்ளாத மகளாகப் பேசப்படுவது—கன்னித் தமிழ் மொழியின் தனித்து நிற்கும் இயல்பினை விளக்கவே போலும்!

கடல் எனப் பரந்து விரிந்த தமிழ் மொழி இலக்கியங்களுள், அலை எனத் தோன்றிய வண்ணம் இருக்கும் செய்யுட்களையும் அலைஓசை என ஒலித்திடும் செய்திகளையும் செவி கொடுத்துக் கேட்போர்க்கு, ஒரு காலத்தில் தமிழர்கள் வாழ்ந்திருந்த பெருவாழ்வும், தலைநிமிர்ந்து நின்ற உயர்நிலையும்; இடைக் காலத்தில், தமது தனிநிலை காக்கத் தவறியமையின், அறிவு மயக்குற்று இடறி வீழ்ந்து தாழ்ந்த வகையும் அவர்தம் உணர்வைத் தட்டி எழுப்பிச் சிந்தனையைத் தூண்டுமாதலின் இந்நாளில் தமிழர்தம் வாழ்வை ஈடேற்றும் வழிவகைபற்றிய எண்ணம் உள்ளத்தில் ஊற்றெடுக்கத்தான் செய்யும்!

கடல்கோளுக்குத் தப்பி நிலைத்த குமரிமுனையில் நின்று அக் காட்சியைக் கண்டு—கடந்த காலத்தை எண்ணுவோர்க்கு—முத்தமிழ்க் கடலின் கலை, இலக்கிய அலைகள் எழுப்பும் பாட்டோசையும், பொருளும் புலனாகாமற் போகா! தமிழ்க் கடலில் எழும் அலையே கலை, இலக்கியம்! அதன் ஓசையே—பாட்டு, பொருள், கருத்து!

———

குருடருக்கு விழி!

கடல்கோளால் அழிந்த குமரிக்கண்டம், குமரியாறு முதலியனபற்றி அறியாத இந்நாள் மக்களைப்போன்றே, அழியாது வாழும் தமிழ் மொழியின் தோற்றம், தொன்மை, தனிமை, இனிமை, நன்மை, மேன்மை, இளமை, வளமை பற்றியும் அறியாதவர்களே தமிழருள்ளும் பலராவர்.

தமிழ் முத்தமிழாகக் கிளைத்து, இயலாகவும், இசையாக வும், கூத்தாகவும், கருத்துக்கும் காதுக்கும் கண்ணுக்கும் விருந்தாகும் சிறப்புப் பற்றியோ; அகமாகவும், புறமாகவும் வாழ்க்கையினைச் சுவைப்படுத்தும் மாட்சியைப் பற்றியோ;

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலாக வாழ்க்கையை விளக்கி நிற்கும் திறன் பற்றியோ; பிறமொழிகள் பெருதன வாய்த் தமிழ் மட்டுமே பெற்றுள்ள இலக்கிய இலக்கண நூல் களின் உயர்வு பற்றியோ; இன்னும் தமிழர்கள் அறிந்தவராக வில்லை. இந்நிலையில்தான் தமிழ் மக்களிடையே தாய்மொழிப் பயிற்சியும், தமிழக வரலாறுபற்றிய கேள்வியும் இந்த நூற் ருண்டில் அண்மைக் காலத்திலே தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ் மொழியின் மாட்சியும், தமிழர் ஆட்சியின் உயர்ச்சி யும், தமிழர்களாலேயே ஏற்கப்படாத அளவு தாழ்வு மனப் பான்மை அவர்களிடையே குடிகொண்டிருந்தது. தமது தாய் மொழி தமிழ் என்னும் பற்றும், அதைப் போற்றி வளர்ப்பது தமது கடன் என்னும் தெளிவும் அற்றிருந்த நிலையில், தம்மை ஆட்கொண்ட தெய்வமொழி சமஸ்கிருதம், அரசியல் சட்ட மொழி ஆங்கிலம், இசை ஞானம் வழங்கும் மொழி தெலுங்கு, தம்மை ஆள்வதற்கு உரியவர்கள் பிறநாட்டார் என்று மயங்கிக் கிடந்தனர். கடந்த ஒரு நூற்ருண்டாகத்தான், ஆங்கிலேயர் ஆட்சியினுல் ஏற்பட்ட மேலைநாட்டுத் தொடர்பாலும், விஞ்ஞான முடிவுகளின் பயன்களாலும், மேலைநாட்டு அறிஞர் பலர் ‘தமிழ்’ குறித்து நிகழ்த்திய ஆராய்ச்சியாலும், இந்தியாவின் விடுதலை இயக்கம் ஊட்டிய உரிமை வேட்கையாலும், தமிழ்க் கவிஞர் களும், அறிஞர்களும் தமிழ்மொழியில் பூத்திடச் செய்த மறுமலர்ச்சி எண்ணங்களாலும் பொதுமக்கள் தெளிவடையத் தொடங்கினர். ஒவ்வொரு துறையிலும் வெவ்வேறு அளவிலும் வகையிலும் மறுமலர்ச்சியின் மணத்தை இன்று நுகரமுடிகிறது.

எனினும் இன்றுங்கூடத் தமிழ்மொழி தனக்கு உரிமையான எல்லாச் சிறப்புகளையும் எய்தியபாடில்லை. இன்றும் பெரும் பாலான தமிழர்கள், தமிழ் கற்றுத் தேர்ந்த தமிழர்களுங்கூட தாம் நிகழ்த்தும் கோயில்வழிபாடு முதல் திருமணவிழா முதலான குடும்பச் சடங்குகள் வரை தெய்வமொழி என்று நம்பும் வடமொழிக்கே இடமளிக்கின்றனர். வடமொழியில் உள்ள வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவை இன்றும் தமிழரால் போற்றிப் பரவ வேண்டிய ஏடுகளாகவே நம்பப்படுகின்றன. பகவத்கீதையும்

மனுதர்மமுமே இன்றும் தமிழர்க்குத் தரும விளக்கம் செய்யும் நூல்களாகப் பேசப்படுகின்றன.

முப்பது ஆண்டுகட்கு முன்னர்த் தமிழிலே புலமை பெற விரும்பும் எவரும் பல்கலைக் கழகத்தில் தகுதிச்சான்று பெற வேண்டின் வடமொழியிலும் தேர்ச்சி பெற்றாகவேண்டிய நிலை இருந்தது. அந் நாட்களில் வடமொழி அறிவு இன்றித் தென் மொழி அறிவு நிறைவுடையதாகாது என்னும் எண்ணமும் இலக்கிய வளமுள்ள மொழி (Classical language) வடமொழி, தமிழ் ஒரு வட்டாரப் பேச்சுவழக்குமொழி என்னும் தவறான கருத்தும், வடமொழியின் துணையின்றித் தமிழ் தனித்து இயங்காது என்னும் அறியாமையும் நிலவின.

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தென்னகத் தில் ஆட்சி நடத்திய பல்லவர் முதலான அரச வழியினர் தமது ஆட்சி முறையில் வடமொழிக்கு முதன்மை அளிக்கத் தலைப்பட்ட தாலும், வளர்க்கப்பட்ட சமய உணர்ச்சிகளோடு கலந்து வடமொழியும் இடம்பெறச் செய்யப்பட்டு வந்ததாலும், அது அண்மைக் காலம்வரை தமிழ்மக்களின் வாழ்வில் நீக்கமற நிறைந்து ஆட்கொண்டிருந்தது. சமஸ்கிருதம் தேவ பாஷை, தமிழ் நீச மொழி என்றும்; சமஸ்கிருதம் பூதேவர் மொழி, தமிழ் சூத்திரர் மொழி என்றும்;. தமிழில் உள்ள இராமாயண மும், பாரதமும், மற்றைய புராணங்களும் வடமொழியில் இருந்தே வந்தவையாதலின் தமிழ் வடமொழி மூலத்தைக் கொண்டே வளர்வது என்றும் தவறாக உணர்த்தப்பட்டன.

இரண்டு மூன்று நூற்றாண்டுகட்கு முன்னரேகூட வடமொழி ஆதிக்கம் மேலோங்கிய நிலையில், தமிழ் மொழியிலே நிறைந்த புலமை கொண்டவர்கள் சிலர் தமிழ் தாழ்வது காண மனமில் லாதவர்களாய் வடமொழியோடு ஒப்பத் தமிழுக்கும் மதிப்புத் தேட முயல்வாராயினர்.

வடமொழி சிவபெருமானின் கையிலுள்ள உடுக்கையின் வலப்பக்கத்து ஓசை எனின், தென்மொழி அந்த உடுக்கையின் இடப்பக்கத்து ஓசை எனவும், வடமொழி கலைமகளின் வலக்

கண்ணாக ஒளிரும் நிலைபெற்றதெனில், தென்மொழி கலைமகளின் இடக் கண்ணாக ஒளிர்கிறது எனவும் வாதிட்டனர். ஆனால், இந்த வாதத்திலும் வலமும், வலியதும் வடமொழியே என்ற கருத்தும், இடமும், இளைத்ததும் தென்மொழியே என்ற கருத்துமே நாளடைவில் நிலைபெற்றன. சிவநெறி வளர்த்த சிவஞான அடிகளார், வடமொழியும் தென்மொழியும் ஒத்த நிலையுடையன என்று குறிப்பதற்காக, 'இரு மொழிக்கும் கண்ணுதலார் (சிவன்) முதற்குரவர்' என்று குறித்ததோடு,

'வடமொழியைப் பாணினிக்கு
வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை
யுலகமெலாம் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார்
கொல்லேற்றுப் பாகர்'

என்று கூறியுள்ளார். இவ்வாறு வடமொழியினும் தமிழ் தாழ்ந்ததன்று என்று தன்னம்பிக்கை கொள்ளவே பல பெருமைகளைக் கற்பித்துக் கூற வேண்டியதாயிற்று சிவஞான அடிகளார் காலத்தில்.

சிவஞான அடிகளாருக்கு முன்னர் வாழ்ந்திருந்த ஈசான தேசிகர் என்பார் தாம் எழுதிய 'இலக்கணக் கொத்து' என்னும் நூலில் தமது வடமொழி அறிவையும் பற்றையும் உணர்த்திட விரும்பி,

"ஐந்தெழுத் தாலொரு பாடையும் உண்டென
அறையவும் நாணுவர் அறிவுடை யோரே"

என்று கூறிச் சென்றார். தமிழ் எழுத்துகளுள், வடமொழி நெடுங்கணக்கில் இல்லாதனவாக ற, ன, ழ, எ, ஓ என்னும் ஐந்து எழுத்துகளே உள்ளனவாக பிறவெல்லாம் வடமொழியிலும் காணப்படுதலின், தமிழை ஒரு தனிமொழி என்று கொள்ளுதற்கே நாணவேண்டும் என்பது அவர் கருத்து. அவர்தம் தெளிவற்ற மொழியறிவும் தாழ்வுமனப்பான்மையும் தமிழையே தாழ்த்தச் செய்துவிட்டன.

இவ்வாறெல்லாம் கற்றவரும் கல்லாதவரும் தம் தாய் மொழியின் மாட்சியை உணர்தல் இன்றி வடமொழியைப் போற்றித் துதித்து வாழ்கின்ற நிலையே பொதுத்தன்மையாக நிலவியது. தமிழ்ப் பெரும் புலவர்கள் பலர், தொன்னுள் முதலாகவே தமிழைப் போற்றி வழங்கியிருப்பினும், அவை நினைவுகூரப்படுதலும் இன்றித் தமிழ், தமிழர் மதிப்பிலேயே தாழ்ந்து கிடந்தது.

இந்நிலையில் தேசீய விடுதலை உணர்ச்சியோடு கலந்து அரும்பிய தாய்மொழிப் பற்றும், அப் பற்றுடன் மக்கள் உணர்ச்சியைத் தட்டி எழுப்பிய புதுமைக் கவிஞர்களின் பாடல்களுமே, தமிழின் மறுமலர்ச்சிக்கும், புதுவாழ்விற்கும் அடிப்படையாய் அமைந்தன.

இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த தேசீயக் கவி சுப்பிரமணிய பாரதியாரின் குரலே தமிழ்நாட்டு மக்களைப் புத்துணர்ச்சி கொள்ளச் செய்த முதல் குரலாகும். தமிழ் வடமொழியினும் தாழ்ந்ததன்று என்பதை உணர்த்துவாராய்த் தமிழ்த்தாய் தன் மக்களுக்குக் கூறும் மொழியாக அவர் பாடியது இது :

''ஆதி சிவம் பெற்றுவிட்டான் – என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்.

இக்கூற்று, வரலாற்று ஆராய்ச்சிக்கு ஏற்காவிடினும், சிவன் பெற்ற மொழி தமிழ், அகத்தியன் இலக்கணம் வகுத்த மொழி தமிழ் எனக் கூறி வடமொழிக்கு ஒத்த தகுதி நிலை தமிழுக்கு உண்டு என்றூர். அஃது அவர் கருத்தாதலை

''மூன்று குலத்தமிழ் மன்னர்—என்னை
மூண்ட நல்லன்போடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளி னுள்ளே—உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்''

என்பதனால் தெளியலாகும்.

மேலும் தமிழ்த்தாய் கூறுகின்ருள் :

"கள்ளையும் தீயையும் சேர்த்து நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்'

'கன்னிப் பருவத்தில் அந்நாள் என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்!

தந்தை அருள்வலி யாலும் முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டும் காலன் என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்"

தமிழ்ப்புலவர்கள், இயற்கையைக் கண்டு உணர்ந்து தாமே முதல் நூல்களாகப் பல தீஞ்சுவைக் காவியம் (கவிதைகள்) செய்து கொடுத்தார் என்பதனுல், தமிழில் உள்ள இலக்கியங்கள் எல்லாம் வடமொழி வழிவந்தவை என்ற எண்ணத்தை மறுத்தார்.

தமிழ் மொழியின் கன்னிப் பருவத்தில் எத்தனையோ தனி மொழிகள் இருந்தனவாகவும் அவை பலவும் காலவெள்ளத்தில் நிலைகொள்ள முடியாமல் அழிவுற்று மறைந்தன என்றும் கூறுவதன் மூலம் தமிழனைய தொன்மையும், மேன்மையும் கொண்டு திகழ்ந்த ஈப்ரு, - இலத்தீன் - முதலான பிற மொழிகளும், தமிழினும் மேன்மையானது என்று பலரும் போற்றிய வடமொழியுங்கூட வழக்கிழந்து இறந்துவிட்டன என்பதைக் கூருமல் கூறுகிருர். இதனுல் இயற்கையோடு பிறந்து இயல்பாகவே வளர்ந்து இன்றளவும் வழங்கி வாழும் வளமுள்ள தமிழே மேலான மொழி என்று அவர் கொண்ட கருத்துத் தெளிவு விளங்கும்.

இறைவன் படைத்த மொழி, தெய்வ பாடை என்றெல்லாம் போற்றப்படும் வடமொழியைக் காலன் அணுகிவிட்டானாகத் தமிழை வளர்த்த புலவர்தம் ஆற்றலால் இந்த நேரம் வரையிலுங்கூட அழிவுக்குரிய காலன் தமிழை எதிர்நோக்கி விழித்திடவும் அஞ்சி இருந்தான் என்றதனால் தமிழின் உயிர்த் தன்மை எந்நாளும் நிலைபெறும் அழியாச் சிறப்புடையது என்று அவர் உள்ளம் போற்றியதைக் காணலாம்.

பாரதியாரின் உள்ளத்தில் முளைத்தெழுந்த தமிழ்ப் பற்று பல்வேறு வடிவத்திலும் வெளிப்பட்டது. தமிழ் மொழியை வாழ்த்தி அவர் இசைத்தது இது :

''வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வன்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!''

எங்கள் மொழி, வன் மொழி வளர்மொழி எல்லாம் அறிந்து அறிவிக்கும் மொழி என்று தமிழை வாழ்த்தி வணங்கினார் அவர்.

தமிழின் தனிச்சிறப்பு இயல்புகளையும், தமிழைப் போற்ற வேண்டிய கடமையையும் அவர் பின்வருமாறு உணர்த்தினர்:

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்;
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.”

பாரதியார், பிள்ளைப் பருவத்திலேயே சமஸ்கிருதமும், ஆங்கிலமும் பயின்றவர். மாணவ நிலையில் காசியில் வாழ்ந்த காலத்தில் இந்தியும் கற்றவர். அரசியலாரின் தொல்லை காரணமாகப் புதுச்சேரியில் சென்று வாழ்ந்த நாட்களில் பிரஞ்சு மொழியும் அறிந்தவர். இசை விருப்பத்தால் தெலுங்கும் தெரிந்தவர். எனினும், யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று முழங்கினர் எனில் பிறமொழிகளினும் தமிழ் எப்படியெல்லாம் இனித்திருக்க வேண்டும்! இவ்வுலகில் மட்டுமேயன்றி மேலுலகிலும் காணோம் என்னும் நினைப்பாலன்றோ எங்குங் காணோம் என்றார்! என்னே தமிழின் மாட்சி! தமிழ்மொழியின் மேன்மைக்குச் சான்றுவன தமிழ் இலக்கியங்களேயாதலின் அந்தக் கவிதைச் செல்வங்களை நிலைபெறுமாறு அளித்த தண்டமிழ்ப் புலவர்களைப் போற்றிடவும் அவர் தவறவில்லை.

‘யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மைவெறும் புகழ்ச்சி இல்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்;
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

தமிழகத்தே பிறந்த தலைசிறந்த தமிழ்ப் புலவர்களை ஒப்பாரும் மிக்காரும் உலகினில் வேறெங்கும் பிறந்ததில்லை என்பதன் மூலம் தமிழ்மொழி தந்த தனிப்புலமையும் தன்னிகரற்ற ஆற்றலும் உணர்த்தப்பட்டனவல்லவோ! அந்தச் சிறப்புள்ள தமிழோசை உலகமெல்லாம் பரவவும் தமிழகத்துத் தெருவெல்லாம் முழங்கவும் அவர் ஆணையிட்டார்.

அந் நாட்களில் தமிழ் மக்கள் நிலைதான் யாது?

''உலகமெல்லாம் இகழ்ச்சி சொல்ல, அறியாமையினால் பாமரராய்; உரிமையின்மையினால் விலங்குகளாய்; தமிழைப் போற்றிப் பாடாமையினால் ஊமையராய்; பாடிக்கேட்டு மகிழாமையினால் செவிடர்களாய்; தமிழின் மேன்மையைக் காணாமையினால் குருடர்களாய்; பெயரளவில் மட்டும் தமிழர் எனப் பிறர் நம்மைக் கண்டுகொள்ளத் துணையாகத் தலைகவிழ்ந்தே இங்கு வாழ்ந்திடுகின்றோம்,'' என்றார் பாரதியார்.

இந்த நிலை மாறவே, உள்ளக்கிளர்ச்சி எழப் பாடினார் அவர்.

''உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்''

இதனால் குருடருக்கு விழியாகவும், வாழ்வுக்கு அமுதமாகவும் இன்பம் செய்யும் தமிழ் அறிவு பெற்றுத் தமிழ் மக்கள் எல்லாரும் உயர்வடைய வேண்டுமென்ற அவரது பேரவா புலப்படும். அத்தகு தாய்மொழிப் பற்றினைக் குழந்தைகட்கும் ஊட்டிவிட விரும்பிய பாரதியார்,

"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!

அமிழ்தில் இனியதடி பாப்பா — நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே!—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!"

என்று உணர்த்தினர்.

தமிழ்நாட்டு வாழ்த்துப் பாடியவிடத்தும், தமிழ் தந்த இன்பத்தையே பெரிதாக எண்ணியவர்,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்று தொடங்கினர். செந்தமிழ், தேனாக, பாலாக, அமிழ்தமாக அவர் நெஞ்சை நிறைத்தது. அவர் உள்ளத்தினிலே ஏற்பட்ட நிறைவு, அவர்தம் சொல்லாலே கவிதையாலே தமிழர்தம் செவிவழி பாய்ந்து, அறிவை நிறைத்துப் புத்துணர்ச்சி ஊட்டியது. தமிழ் மறுமலர்ச்சிக்குக் கவிஞர் பாரதியார் வித்திட்டார். தமிழரிடையே தாய்மொழிப் பற்று அரும்பிற்று! குருடர்களும் விழி பெற்றனர்!

புகழ் மணக்குந் தமிழ்!

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!" என்னும் தனிப் பாராட்டுக்குரிய புதுமைக் கவிஞர் பாரதியார் வாழ்ந்த காலத்திற்கு முன்னர், மேல் நாட்டு அறிஞர் பெருமக்கள் சிலரது அருந்தொண்டினாலேயே தமிழின் தனிச் சிறப்புகள் கண்டறியப்பட்டு உலகிற்கு உணர்த்தப்பட்டன.

மேல் நாட்டினின்றும் கிறித்தவ சமயத் தொண்டாற்ற வந்த பாதிரிமார்கள் பலர். அவர்களுள்ளும் சிலர், சமயக் கருத்துகளைப் பரப்புவதற்குத் துணையாக, நம் நாட்டு மக்களின் மொழிகளைப் பயின்று தேர்ச்சி பெற்றனர். தாம்

முன்னரே கற்றுத் தெளிந்திருந்த மேலை மொழிகள் சிலவற்றோடு தமிழ் மொழியையும் கேட்டும் கற்றும் தெளிந்த நிலையில் பிற மொழிகளோடு ஒப்புநோக்கி ஆராய்ந்து பார்த்துத் தமிழ் மொழியின் தனித்தன்மையையும், பிற மொழிகளிடம் காணாத சிறப்பியல்புகளையும் கண்டு வியந்து, போற்றி உரைக்க முற்பட்டனர். தமிழின் தொன்மையையும் மேன்மையையும் உலக அறிஞர்கள் ஒப்புக்கொள்ளும் வண்ணம் தக்க சான்று களுடன் நூல்களும் இயற்றினர். அந்நூல்கள் பலவும் ஆங்கிலம் முதலான பிற மொழிகளிலே இயற்றப்பட்டன வாகலின் தமிழ் மக்கள் அக்கருத்துகளை உடனடியாக அறிந்து பயன்கொள்ள முடியவில்லை.

ஆங்கிலத் தேர்ச்சியும் தமிழ்ப் புலமையும் நுண்ணறிவும் ஒருங்கே கொண்டிருந்த தமிழ்நாட்டு அறிஞர் பலரால், மக்கள் உள்ளங்கொள்ளும் வண்ணம் அக்கருத்துகள் எடுத் துரைக்கப்பட்ட பின்னரே, தமிழரிடையே அக்கருத்துகள் இடம் பெற்று உரம் பெறலாயின.

அதுகாறும் தமிழுக்குக் கற்பிக்கப்பட்டு வந்த தகுதிக் குறைவும் வடமொழி வழிவந்ததென்னும் இழுக்கும், களையப் படுவதற்கும், தமிழ் மொழியின் தனி உரிமைகளும், பெருமை களும் காக்கப்படுவதற்கும் வேண்டிய துணிவும், தெளிவும் தமிழ் கற்றவரிடையே பிறக்கலாயின. தமிழின் மாட்சியைத் தலை நிமிர்ந்து முழங்கவும், தமிழை இழிப்பவர்தம் நோக்கைத் தூவென உமிழவும் தமிழ் பயின்றோரும், ''தமிழர்'' எனத் தெளிந்தோரும் தன்னம்பிக்கை கொள்ள, தமிழறிஞர்தம் பாட்டும் உரையும் பயன்பட்டன.

அத்தகைய வழிகாட்டிகளான அறிஞருள் ஒருவர்தாம் மனோன்மணீயம் என்னும் தமிழ்நாடக நூலை இயற்றி வழங்கிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள். இற்றைக்கு எண்பது ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருந்த அப்பெரியார் தமிழோடு ஆங்கிலப் புலமையும் தத்துவ நூல் கருத்துகளிலே தேர்ச்சியும் பெற்றிருந்தவர். அவர் தாம் இயற்றிய தனிச் சிறப்புக்குரிய

நாடக இலக்கியமாகிய ''மனோன்மணீயத்தின்'' தொடக்கத்தில் கடவுள் வணக்கத்தை அடுத்துத் தமிழ்த் தெய்வ வணக்கமும் கூறியுள்ளார்.

என்றுமுள தென்தமிழ் என்பதாலே, தமிழ் அன்னையைத் தெய்வமாகவே கொண்டு அவர் போற்றிப் பாடிய பாட்டினை யாரும் மறக்க முடியாது. அவர்தம் கண்குளிர, செவியார, நாவினிக்க, சிந்தை மகிழ, நாளும் கண்டும், கேட்டும், உரைத்தும், உணர்ந்தும் ஒன்றிநின்ற தாய்மொழியைத் தெய்வமாகவே போற்றி வணங்கினர். தமிழின் உறைவிடத்தையும் உலகிற்கு அதனால் விளையும் பயனையும் எண்ணிப் பாடினர். இதனை,

''நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே''

எனும் பாடல் மூலம் நாம் அறியலாம். பெருநீர்ப் பரப்பாகிய கடலையே ஆடையாக உடுத்தியுள்ள நிலமகளுக்கு இயற்கை அழகு நிரம்பிய சிறப்புப் பொருந்திய ஒளி முகமென விளங்குகின்ற பரதகண்டமென்னும் இத் துணைக்கண்டத்தில் பொருத்தமாக அமைந்த சிறிய பிறைமதியன்ன நெற்றியாகவும், அதில் விளங்கும் நறுமணங்கமழும் பொட்டாகவும் விந்தியத்திற்குத் தெற்கேயுள்ள தெக்கணமும் அதிலும் மேம்பாடுடைய திராவிடத் திருநாடும் விளங்குகின்றன என்றார். உலகம் ஒரு பெண். அவள் முகமே பாரதம்; நெற்றி தெக்கணம்; அதில் திகழும் திலகம் திராவிடம். அப்படியானால் பாரதம் சிறப்பதும் தெற்கிலேயன்றோ! பேராசிரியர் சுந்தரனார் கருத்துப்படி புலவர்கட்கே உரிய கற்பனையின்படி பாரதத்தின் முகம் தெற்கிலே, இடை விந்தியத்திலே, அடி இமயத்திலே அமையுமன்றோ! இமயக் கல்லில் அடி வைத்து, குமரி முனையில் முடிவைத்து அன்றோ பாரதத்தை வரைந்து காண்கிறார்!

அந்தத் திராவிடத் திலகத்தினின்றும் எழும் மணமாக, உலகெங்கும் உள்ளவர்கள் இன்பம் எய்திடவும், நாற்றிசைகளில் மட்டுமன்றிப் பிற திசைகளிலும் தன் புகழ் விளங்கவும், தொன்னுள் முதல் இருந்தவளும் இன்றும் இருந்து எம்மை வாழ்விப்பவளுமான தமிழ்த்தாயே! என்று பூரிப்போடு விளிக்கின்ருர். தொடர்ந்து அவர்,

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"

என்று பாடலானுர். பலப்பல உயிர்களையும், உலகங்களையும் தோற்றுவித்துக் காத்து அழித்திடினும், அவற்றிற்கு ஏதுவான ஒரு நிலைபெற்ற பொருள் (கடவுள்) காலத்தால் அளவிட்டு உரைக்கலாகாத அளவு என்றும் இருந்த தன்மையாகவே அன்றும் இன்றும் இருந்துவரும் தமிழ்த்தாயே,

கற்கண்டெனை இனிக்கும் கன்னடமும்
தேன் எனக் களிப்பூட்டும் தெலுங்கும்
ஓசையினுல் இனிமைதரும் மலையாளமும்
இளம்பிள்ளையாக இலங்கும் துளுவும்

நின் வயிற்றிலிருந்தே பிறந்து வளர்ந்து, நீ ஒருத்தியாக இருந்தும் அவை பலவாகப் பெருகி வாழ்ந்திடினும், எல்லா வகையினும் மேம்பாடுடைய மொழி என்று பறைசாற்றப்பட்ட வடமொழியைப் போன்று, உலகோர் உரை நடையில் வழங்கும் நிலைகெட்டுச் சீரழிந்து உருக்குலையாத உன்னுடைய சீர் வளரும் இளமைத் தன்மையைக் கண்டு, வியப்பு மேலிட்டு எமது மனம் உன்னையே எண்ணிக் களித்துக் கிடப்பதால் செய்வது அறியாது வாழ்த்திப் பணிகின்ருேம்! என்ருர் பேராசிரியர்.

தமிழின் மேன்மையைக் கூற வந்தவர், முன் இருந்தவாறே மாற்றமும் அழிவும் இன்றி நிலவும் பரம்பொருளோடு ஒப்பிடுகின்ருர். பல உயிர்களையும் உலகங்களையும் படைத்துக்

காக்கும் கடவுளுங்கூடப் பின்னர்—தொடர்ந்து காத்தலாகாமை யினால் போலும் அழித்துவிடுகின்றார். ஆயினும் தமிழ் பலமொழி களைத் தோற்றுவித்து வளர்த்திடினும் பின்னர் அவற்றை அழித்திடுதல் இல்லை. அதனால் பரம்பொருளினும் மேம்பட்ட தொரு பொருளாக அன்றோ தமிழைக் குறிக்கின்றார்!

அதுகாறும் தமிழை வடமொழியோடு ஒப்பவைத்துப் பாடுவதே அரிதாக இருந்த நிலையில், ஒப்ப மதித்திடத் தெளிவு மட்டுமன்றித் துணிவும் வேண்டப்பட்ட நிலையில், வடமொழியாம் ஆரியத்தைப்போல் உலக வழக்கழிந்து ஒரு தேவபாடையாக ஆகிவிடாமல் இன்றும் ஐந்துகோடி மக்கள் பேச்சினிலே விளங்கி, அவர்தம் கருத்தினிலே வேரோடி நிற்கும் அழியாத இளமையுள்ள ஆற்றல்மிகு தமிழ் என்று உரைத்தார். அதன் மூலம் தமிழோடு வடமொழியை ஒப்பிடுவதே வேண்டப்படாதது என விளக்கினார். தமிழ்த்தாயைத் தமிழர் உள்ளங்களில் தெய்வமாகக் கோயில் கொள்ளவைத்து வாழ்த்திய இப்பாட்டி னாலே பிறந்த எழுச்சி சிறிதன்று.

தமிழின் மேன்மையை விளக்கி அவர் பாடியது இது!

"கடல்குடித்த குடமுனியுன் கரைகாணக் குருநாடில்
தொடுகடலை யுனக்குவமை சொல்லுவதும் புகழாமே!"

கடல் குடித்த அகத்தியரும் தமிழின் எல்லையை உணரக் குருவை நாடி அறிந்தார் எனப்படுதலின் ஆழ்கடலைத் தமிழுக்கு உவமை கூறினும், கடலுக்கே அது புகழாகும் என்றார். கடலைக் குடித்தவரும், தமிழின் எல்லையைத் தாமாகவே காண வில்லையன்றோ!

"ஒருபிழைக்கா அரனார்முன் உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே!"

"நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று நக்கீரனார் என்னும் நற்றமிழ் வல்லார் இறைவனாரையே எதிர் நின்று வாதாடினார் என்று கூறப்படும்போது தமிழ் மொழியின் இலக்கணம் மேம்பட்டது என்று கூறித்தான் அறிய வேண்டுமோ? கூறுவதும் வியப்பாமே என்றார்.

இறையவனுர் என்று சிவபெருமான் சுட்டப்படுதலின் அவர் வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத் தென்மொழியை அகத்தியருக்கு அறிவித்து அனுப்பினுர் என்னும் பாட்டின் கருத்தினை நோக்குவார்க்கு, இறையவனுரே தமிழில் ஒரு பிழை செய்தாரெனில், அவர் படைத்தார் எனவும், அவரால் அறிவுறுத்தப்பட்ட அகத்தியர் தமிழ் செய்தார் எனவும் கொள்ளுதலின் உண்மை விளங்குகின்றதன்ருே? மேலும் வடமொழியில் வல்ல அரனுர், தமிழில் உரையிழந்து விழித்தா ரென்பதன் குறிப்பால் வடமொழி வல்லார்க்கும் தமிழ் அரிதாக மேம்பட்டு விளங்குதல் உணர்த்தப்பட்டது.

"சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே"

நான்கு வேதங்களை உடையது என்பதொன்ருலேயே பெருமை பெற்ற வடமொழி இந்நாட்டிற்கு வருமுன்னரே உலகமெல்லாம் தமிழைக் கொண்டே தமிழர்கள் தொடர்பு கொள்ளும் நிலையில் தமிழுக்கு உரியதாக இருந்ததெனில் அம்மொழியை முதிய மொழி, காலங்கடந்த மொழி என்று கூறவேண்டிய நிலை இருப்பதும் வியப்பே என்ருர். மேலும் பல சிறப்புக்களைப் பாடிய சுந்தரனுர்,

"வடமொழி தென்மொழியெனவே வந்தவிரு விழியவற்றுள்
கெடுவழக்குத் தொடர்பவரே கிழக்கொடுமேற் குணராரே!"

"வீறுடைய கலைமகட்கு விழியிரண்டு மொழியாஞல்
கூறுவட மொழிவலமாக் கொள்வர்குண திசையறியார்"

"கலைமகடன் பூர்வதிசை காணுங்கா லவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியாரோ மதியுடையார்"

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனுல் கலைமகளுடைய இருவிழிகளையும் இருமொழிகள் எனக்கொண்டும் அவற்றிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கும் கெடுமதியுடன், வடமொழி வலக்கண் என்போர் கிழக்கு மேற்கு

அறியாதவரே என்றார். கலைமகளுக்கு அவள் பார்க்கும் திக்கு என்று கூறப்படும் கிழக்கினை நோக்கும் நிலையில், வலப்புற விழியே தெற்குப் பக்கமாக விளங்குவதாகலின் அதையன்றோ தென்மொழி என்று கொள்வர் நல்லறிவாளர் என்று வினவுகின்றார். மேலும்,

''பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே!''

என்றதனால் வடமொழிவழி வந்துள்ள அறிவுக்கொவ்வாத, இலக்கணத்தோடு பொருந்தாத பொய்மைகளை இன்று போற்றுவோரும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலான சங்கச் செய்யுட்களில் ஈடுபட்ட மனம் உடையவர்களாயின் போற்றுவார்களோ! மாட்டார்கள் என்று குறிப்பிட்டார். கருத்தால் சிறந்த சங்க இலக்கியங்களைக் கொண்ட செந்தமிழ் அறிந்தோர் கற்பனை புராணங்களால் மலிந்த வடமொழியை மதியார் என்பது தெளிவு.

''வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி யொருகுலத்துக் கொருநீதி''

வருணமுறைப்படியான நீதி கண்ட மனு முதலானோர் நூல்களின் கருத்துகளைத், திருக்குறள் காட்டும் பொதுநெறியினை உள்ளங் கொண்டோர் ஒருக்காலும் (மனுதருமத்தை) ஒரு நீதியாகக் கருதவும் மாட்டார் என்றார். இதனால் வடமொழி வல்லுநர்களுக்கு நீதியைக் குறித்து ஏற்படக்கூடிய அறிவுத் தெளிவைவிட, முப்பாலுந் தெளிந்து எப்பாலவருக்கும் ஏற்புடைத்தாகுமாறு வள்ளுவர் வழங்கிய திருக்குறள் நீதி தேர்ந்த ஒப்பிலாத் தமிழ்ப் புலவர்கட்குத் தோன்றக்கூடிய தெளிவின் உயர்வு எடுத்துக்காட்டப்பட்டது. தமிழின் வழிவழி வந்த நீதி நியாய அறவுணர்வுகளுக்கு இது சான்றாகும்.

அடுத்து,

''மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண் மூடிக் கதறுவரோ''

என்று கேட்டதன் மூலம், தான் என்னும் அகந்தையை அகற்றித் தன்னை மறந்து, உள்ளங் கசிந்துருகத் துணையாகும் திருவாசகத்தில்- தமிழ் வாசகத்தில் திளைத்தவர்கள், கண்ணை மூடி உருவேற்றி உள்ளம் கனியாது கதறுவார்களோ! மாட்டார்கள் என்றார். வேதமந்திர பாராயணத்திலும் உள்ளங் கலந்து உருகிநிற்கும் வாசகங்களைக்கொண்ட தமிழைப் பாடுதலே பயன்மிக்கது என்றார் பேராசிரியர்.

இவ்வாறு தமிழ் அன்னையின் தன்னிகரற்ற பெருமையையும், அதனைப் போற்றி வழிபடுவோர் பெறும் நன்மைகளையும் உணராது மாறுபட்ட கருத்தினராய் வடமொழியைப் போற்றித் தமிழை ஒதுக்கித் தாழ்த்துவோர் சிறுமையையும் விளக்கிப் பாடியதன் வாயிலாகத் தமிழ்மக்கள் தம் தாய்மொழியைப் பற்றிக்கொண்டிருந்த தாழ்வு எண்ணத்தை மாற்றிக்கொள்ள வழிகாட்டினார்! தமிழர்கள் தம் தாய்மொழியாந் தமிழைப் போற்றித் தமிழராகத் தலைநிமிர்ந்து வாழ உணர்ச்சி தந்தார், பேரறிஞர் மனோன்மணீயம் சுந்தரனார்.



தமிழ் இனிமை கெடுத்த தகாத கலப்பு

வடமொழியினும் தமிழ் தாழ்ந்தது என்னும் அறியாமை இருள் விலகி, வடமொழியும் தமிழும் ஒத்த நிலையின என்னும் விடிவெள்ளி தோன்றி, வடமொழியினும் தமிழ் மேலான, உலக வழக் கழிந்தொழியாச் சீரிளமைத் திறம் உடைய செம்மொழி என்னும் இளஞாயிற்றின் ஒளி இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பரவத் தொடங்கியது. அதற்குத் துணைநின்ற தமிழ் அறிஞர்களுள் குறிப்பிடத் தகுந்த பெருமைக்குரியவர், பரிதி மாற்கலைஞர் என்னும் தமிழ்ப் பெயர் பூண்ட வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார் ஆவார்.

சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியில் (கி.பி. 1870) பிறந்து இளமையிலேயே தமிழொடு வடமொழியும் ஆங்கிலமும் கற்றுத் தாம் பயின்ற சென்னைக் கிறித்தவக் கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய அப்பெரியார், தமிழின் மேன்மையைத் தாம் உணர்ந்து, உலகிற்கு உணர்த்துவதில் தலைசிறந்து விளங்கினுர். தமிழ்க்கலை வல்லுநராக விளங்கிய யாழ்ப்பாணம் தந்த பெரும்புலவர், சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்களாலே, மாணவர் சூரியநாராயணனின் தமிழ்ப் புலமையும் கவிபாடுந் திறனும் ஆராயப்பட்டு, ''திராவிட சாத்திரி'' என்னும் சிறப்புப்பட்டமும் அளிக்கப்பட்டதெனில் அவரது பெருமைக்கு வேறென்ன சான்று வேண்டும்?

அத்தகு திராவிட சாத்திரியார் இயற்றிய 'தனிப்பாசுரத் தொகை' (முதற்பகுதி) என்னும் நூலைக் குறிப்பிட்டுத் தமிழ்க் கலைச்செல்வியின் மறுமலர்ச்சியைக் காட்டும் நூல்கள் இரண் டனுள் ஒன்று 'மனேன்மணீயம்' என்றும், மற்றென்று இந்தத் 'தனிப்பாசுரத் தொகை' என்றும் தமிழ் தேர்ந்த அறிஞரும், ஆங்கில மேதையுமான ஜி. யு. போப் ஐயர் கூறியுள்ளா ரெனில், அவரது தமிழ்த் தொண்டின் சிறப்பு விளக்கமாகும்.

அதுகாறும், தமிழின் மாட்சியை ஏற்பவருங்கூட வட மொழியின் துணைகொண்டே தமிழ் இயங்குவதாகவும், வடமொழிக் கலப்பால் தமிழ் அழகு பெற்று இலங்குவதாகவுமே எண்ணிக்கிடந்தனர். அது குறித்து ஆராய்ந்த சாத்திரியார்— வடமொழியின் துணையின்றித் தமிழ் இயங்கவல்லது என்னும் கருத்தைச் சான்றுகளுடன் வெளியிட்டார்.

ஒரு காலத்தில், அவர் வடமொழிப் புலவர் ஒருவரோடு உரையாடிக் கொண்டிருந்த போது, அப் புலவர், ''மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஐம்பொறியானும் சிறந்து விளங்கி யாக்கைநலம் வாய்ந்த தமிழ்மகள், தான் சமக்கிருதநாயகனை எதிர்ப்பட்டு மணக்குங்காறும், முகங்காட்டாது தலைகவிழ்ந்து நின்றனள்! இஃதென்னே!'' என்று கூறிப் புன்னகை செய் தனராம். அதனைக் கேட்ட திராவிடசாத்திரியார் அப்பொழுதே கூறினுராம் : ''எவ்வாற்றனும் யாக்கை நலம் வாய்ந்தொளிரும்

தமிழ் மகள், தன்னை மணக்குமாறு போந்த வடமொழிநாயகன் மூங்கையாய், வாய் திறத்தலின்றி, முகத்தினால் பல சைகைகள் செய்து நின்றமை கண்டு, முகஞ் செய்து புறக்கணித்து நின்றனள்! இஃதென் கொலோ!'' என்று அந்த வடமொழி வாணர் தமிழினைத் தாழ்வான மொழி என்று சுட்டிக்காட்ட விரும்பியே, ''தமிழில் முகத்தினைக் குறிக்கத் தக்க தமிழ்ச் சொல் இல்லை; 'முகம்' என்னும் சொல் வடமொழியே'' என்று இறுமாந்து நகைத்தார். அவரது நகைப்பின் உட்கிடக்கை கண்ட சாத்திரியார்—இயற்கை வளர்ச்சியினால் ஓங்கி நிற்கும் தமிழ்மொழியின் நிகரற்ற தனித்தன்மையை விளக்குதற்கு, 'முகம்' என்னுஞ் சொல் தமிழே என்னும் கொள்கையில் உறுதி பூண்டவராய் அதனை வலியுறுத்திக் கூற, ''தமிழ் மகள் முகஞ்செய்தாள்'' எனக் குறிப்பிட்டு, வடமொழியில் 'முகம்' என்னுஞ் சொல் வழங்குவதாயினும், 'வாய்'க்குத் தக்கசொல் வடமொழியில் இல்லாமையை, ''வடமொழி நாயகன் மூங்கையாய் வாய் திறத்தலின்றி முகத்தினால் (அதுவும் தமிழினின்றும் பெற்ற கடன்) பல சைகைகள் செய்து நின்றமை''யைத் தமிழ்மகள் கண்டாள் என உருவகித்துக்கூறி, அது பேச்சு வழக்கற்ற மொழி என்பதையும் அவ் வடமொழிவாணர் உணருமாறு உரைத்து இளநகை செய்துள்ளார். ஆயின், தமிழை இழித்துரைக்கும் கருத்துடையாருக்கு அவர்தம் உட்கிடக்கையை மாற்றிக் கொள்ளுமாறு சாத்திரியார் அளித்த மாற்றம், தமிழின் மேதகவினைப் புலப்படுத்துவதன்றோ!

அக்காலத்தில் தமிழ்நிலத்தில் விளங்கிய ஊர்ப் பெயர்களும் மக்கள் பெயர்களும் வடசொற்களாகவே அமைந்திருந்ததைக் கொண்டு எல்லோரும் போற்றிக் கைக்கொள்ளும் அளவிற்கு வடமொழியே வளமுள்ளது எனவும், வடமொழித் துணையின்றித் தமிழும், தமிழரும் இயங்கல் இயலாது எனவும் பலரும் கருதுவாராயினர். தமிழ்மொழியைக் கொண்டே அனைத்தும் ஆகும் எனத் தெளிந்த சூரியநாராயண சாத்திரியார், பலரும் வடமொழியைப் பிரித்து வேறுபடுத்திக் காணாமையானும், அம்மொழிமீது பிறந்த பொருந்தாக் காதலாலும், முன்னர் வழங்கிய தமிழ்ப் பெயர்கள் பலவற்றையும்

எடுத்தாலும் அறிவும் ஆர்வமும் முயற்சியும் மங்கியதனுலுமே இந்த அவலம் விளைந்தது என்று கண்டார். அதன் பயனாகத் தாம் அதுகாறும் எழுதிய பலநூல்களில் வடசொற்கள் விரவி வருவதை முறையாகவே கருதியிருந்த சாத்திரியார் அதன் பின்னர் வடசொற்கள் விரவாமல் எழுதுவதே தமிழுக்கு ஏற்றம் என உணர்ந்து மேற்கொண்டார்.

கற்றல் அரிது, கற்றதை விரித்து எழுதுதல் அதனை உரைத்தலினும் அரிது; அவ்வாறு எழுதும் நூல்களின் மொழி நடை இப்படி அமைய வேண்டும் என்று தீர்மானித்து அவ்வாறே இயற்ற முற்படுதல் அரிதினும் அரிதேயன்றோ! அவ்வாறு தமிழ்ப் பெருமை காக்க முனைந்தார் அவர்.

அதன் விளைவாகவே தம்மைப் பெற்றோர், அவரது மரபுக் குரிய முறைப்படி தமக்கிட்ட பெயரான சூரிய நாராயணன் என்பதையே தமிழ்ச் சொற்களாக அமைக்க விரும்பிப் **பரிதிமால்** எனப் புனைந்து கொண்டார். சூரியனைப் 'பரிதி' எனவும் நாராயணனை 'மால்' எனவும் சாத்திரியைக் 'கலைஞன்' எனவும் மொழி பெயர்த்து வழங்கலாயினர். தமிழுக்காகச் சாத்திரி அவர்கள் தம்மைக் கலைஞன் என்று அழைத்துக் கொள்ள முற்பட்டது வடமொழிச் சொற்களை நீக்கித் தமிழ்ச் சொற்களையே பெயர்களாக வழங்கலாகும் என்பதற்குக் கால்கோள் நாட்டியதாகும்.

பரிதிமாற் கலைஞன் அவர்கள், தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சியினில் ஈடுபட்டுத் தெளிந்து **தமிழ்மொழி வரலாறு** என்னும் அரியதொரு நூலினை இயற்றியதன் மூலம் தமிழின் மேன்மையை மறுப்பாரையெல்லாம் வாய் புதைக்கச் செய்தார். அதனுள் வடமொழிக் கலப்புக் குறித்து எழுதும் தொடக்கத் திலேயே ''வடமொழி தமிழ் நாட்டில் வெகுநாள் தானும் இயங்கியும் அதற்குத் தமிழ் மொழியைத் தன் வழியில் திருப்பிக் கொள்ளுதற்குற்ற ஆற்றல் இல்லாது போயிற்று. வடமொழி யாளர் தமிழர்களுடைய ஒழுக்க வழக்கங்களை யுணர்ந்து அவற் றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர்— இன்றும் அவர்தம் புந்திநலங் காட்டித் தமிழரசர்களிடம்

அமைச்சர்களெனவும், மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர்; தமிழரிடத்திருந்த பல அரிய உண்மை கருத்துகளையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும் வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்'' என்று அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் வடமொழிச் சொற்கள் தமிழிலே கலத்தல் குறித்து அவர் கருத்தாவது, ''வடமொழி பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய்மட்டிலிருக்கும் நிலைமை எய்திவிட்டமையின், பேச்சு வழக்கிலுமிருந்த தமிழில் வடசொற்கள் புகுவது எளிதாகவும், வடமொழியில் தமிழ்ச் சொற்கள் புகுவது அரிதாகவும் ஆகிவிட்டன. அதனாலேயே தமிழ்ப் புலவர்கள் ஆரியச் சொற்கள் தமிழில் வருவதற்கேற்ற விதிகளும் வகுத்தனர்'' என்பதாகும்.

அடுத்துத் தமிழ்மொழியிலே வடமொழி வரன் முறை கடந்து கலக்க நேரிட்ட நிலைமையைக் குறித்து அவர்தம் உள்ளக் கிடக்கை இதுவாகும்:

''இந்நிலையில் சைனர் எழுந்தனர். அவர்கள் ஆரியருடைய ஆசாரங்களுள் பலவற்றை மேற்கொண்டனர். அஃதன்றியும் வடமொழியின்கண் பெருமதிப்பு உடையராய் அதனைப் பெரிதும் பயில்வாராயினர். வடமொழியின் பாகதங்களையும் அவற்றின் இலக்கணங்களையும் நன்குணர்ந்து கொண்டிருந்த அவர்கள் தமிழைப் பயிலத் தொடங்கித் தமிழின் கண்ணே அளவிறந்த வடசொற்களை ஏற்றினர்''.

''அத்துணையோடமையாது, ''மணிப் பிரவாளம்'' என்றதோர் புதிய பாஷை வகுத்து விட்டனர். அஃதாவது வடமொழியும் தென்மொழியும் சரிக்குச்சரி கலந்த பாஷையாம். மணியும் பவளமும் கலந்து கோத்ததோர் மாலை காட்சிக்கின்பம் பயத்தல்போலத் தமிழும் சமஸ்கிருதமும் கலந்த பாஷை கேள்விக்கு இன்பம் பயக்கும் என்ற போலி எண்ணமே இத்தகைய ஆபாச பாஷை ஒன்று வகுக்குமாறு தூண்டிற்று.

"ஸ்ரீபுராணம்" என்னும் சைன நூல் முழுதும் மணிப்பிரவாளம் என்னும் இவ்வாபாச நடையில் இயன்றதாமாறு காண்க."

"இவ்வாறு சைனர் ஒரு புறம் செய்துகொண்டு செல்ல நிற்க, மற்றொரு புறத்தில் ஆரியப் புலவர் சிலர் தமிழ் மொழியைப் பயின்று கொண்டு, நீதிநெறியையும் சமய நூல்களையும் தமிழர்க்குப் போதிப்போம் எனப் புகுந்து, தம்முடைய கருத்துகளையெல்லாம் மேற்கூறிய மணிப்பிரவாள பாஷையில் வெளிப்படுத்துரைப்பாராயினர்."

பல்லாற்றானும் வேற்றுமையுடையனவாய், வெவ்வேறிடத்தில் பிறந்து தனித் தனி வளர்ந்து மாறுபட்ட இலக்கணங் கொண்டு ஒலி அமைப்பில் முரண்கொண்ட இரு மொழிகளையும் கலந்து ஒரு புதுமொழி உருவாக்க முற்பட்ட செயலைப் போலி எண்ணத்தின் விளைவு எனவும் அது ஆபாச பாஷை எனவும் அவர் கடிந்ததனால்தான், அந்த ஆபாச பாஷை, கள்ளி என வளர்ந்து இனிய தமிழாம் முல்லைக் கொடியை மூடாமல் ஒழிந்தது எனல் தவறாகாது.

தமிழ்ச் சொற்களோடு வடசொற்கள் விரவத் தொடுத்தல் மணியும் பவளமும் கலந்து கோத்த மாலை ஒக்கும் என்றன்றோ தமிழ் அருமை உணராதார் கூறினர். ஆனால், அது தமிழ் மணியோடு வடமொழி பவளம் கலந்தது போலன்றி, பவளத்தைப் போன்று செந்நிறம் உடையதான மிளகாய்ப் பழம் கலந்தது போன்ற பயனையே செய்தது என்பது அறிஞர் தம் கருத்தாம். மணியொடு மிளகாய்ப் பழத்தையும் விரவிக் கோத்து மாலையாக அணிய நேரிட்டால் சிறுபொழுது செல்லு முன்னரே மிளகாய்ப் பழத்தின் தோல் காய்ந்து காம்பொடிந்து, விதை உடம்பிலே பட்டு, வியர்வையோடு கலந்து, தோல் பொறுக்கவொண்ணா எரிச்சலைத்தான் தரும். தோல் தடித்து உணர்ச்சி கெடாத எவரும் அந்த எரிச்சலை உணர்வர். அதைப் போன்றே தமிழ்த்தாயின் எழில் நலம் மிகுந்த உடம்பிற்கு, "மணிப் பிரவாள நடை" எரிச்சலைத்தான் ஊட்டியிருக்க வேண்டும் என்பதை உணர்ந்த திராவிட சாத்திரியார் அதைக் கண்டிக்கத் தயங்கவில்லை.

மேலும் அவர் கூறினர்: "தமிழ்நாட்டில் ஆங்கில அரசாட்சி ஏற்பட்ட பின்னர்த் தாய்மொழியாகிய தமிழை அதன் வழிமொழிகளாகிய தெலுங்கு, கன்னட, மலையாள துளுவங்களோடு அடக்கி "உள்நாட்டு மொழிகள்" என வகைப்படுத்தினர் சிலர். தனிமொழி ஒன்றை அதன் வழி மொழிகளோடு வகைப் படுத்தலாமோ? அது முன்னதனை (தமிழை) இழிவுபடுத்தியதாகாதோ? ஆரிய மொழிகளுள் தலை நின்ற வடமொழியை அதன் பாகதங்களோடு ஒருங்கு வைத்தெண்ணத் துணியாமைபோலத் தமிழ் மொழியையும் அதன் வழிமொழிகளோடு ஒருங்குவைத்து எண்ணத் துணியா திருத்தலே அமைவுடைத்தாம். இவ்வாருகவும் நமது சென்னை சர்வகலாசாலையார் மேற்கூறியாங்கு, தமிழை இழிவுபடுத்தி வகுத்தபோதே தமிழராயினர் முற்புகுந்து அவ்வாறு வகைப் படுத்தல் சாலாதென மறுத்திருத்தல் வேண்டும். அப்போழ் தெல்லாம் வாய் வாளாமை மேற்கொண்டிருந்து விட்டனர் தமிழர்". இவ்வாறு தமிழுக்குரிய தகுதிநிலை நாட்டப்படாத குறையை அவர் கண்டித்தார்.

மேலும், உலகத்தில் வழங்கும் மொழிகள் தொள்ளாயிரத் திற்கு மேற்பட்ட எண்ணிக்கையவாகவும், அவற்றுள் நான்கைந்து மொழிகளே "தொன் மொழிகள்" (Classical Languages) என்னும் சிறப்பிற்குரியனவாம். அந் நான்கைந் தனுள் தமிழ்மொழியும் ஒன்ருக ஏற்கப்படாத நிலையே அந்நாளில் இருந்தது. அதைக் கண்ணுற்ற பரிதிமாற் கலைஞன் அவர்கள், நிகழ்த்தும் வாதம் இது: "பரவை வழக் கற்று ஏட்டு வழக்காய் மட்டும் நிற்பனவே தொன்மொழிகள்; மற்று இக்காலத்தில் பரவை (பேச்சு) வழக்கால் இயங்குவன வெல்லாம் தொன்மொழிகள் ஆகாவென்பது சிலர் துணிபு, இத்துணிபு தருக்கநூற் குற்றமே. பாஷைகள் பரவை வழக் கற்றுப் போதற்குக் காரணம் இலிபிகள் (எழுத்துக்கள்) ஏற்படாமையும், பாஷை பேசுவோர் பல்வேறிடங்கட்குப் பிரிந்து செல்லலும், இடங்கட்குத் தக்கபடி புது இலிபிகள் வகுத்துக் கோடலும் பிறவுமாம். ஏட்டு வழக்குப் பேச்சு வழக்கோடு இணங்கி வராவிடின், பின்னது பிரிந்து கொண்டே போய்

ஏட்டு வழக்கினின்றும் வேறுபட்டு அதன் வழிமொழி என்று கருதப்படும். அதனல் பேச்சு வழக்கோடு இணங்கி வாராதன வெல்லாம் தொன் மொழிகளோ? அல்ல.''

இந்த வாதத்தின் கருத்தை எண்ணுவோர்—தொன் மொழி என்னும் சிறப்புக்குரியதாக வடமொழியைக் கொண்டு, தமிழை விலக்கிய அறியாமையை எள்ளி நகையாடத்தான் செய்வர்.

தொன்மொழி என்னும் பெருமையை ஒரு மொழி கொள்ளத் துணையாவது ஏட்டு வழக்கிலே—நெடுங்காலத் திற்கு முன்னர் அஃது இடம் பெற்றுப் பல வகையாலும் உயர்ந்த கருத்துகளைத் தாங்கி நிற்றலேயாகும். அத்தகு தொன்மை யுடைய மொழிகள் யாவும் தொடர்ந்து பேச்சு வழக்கிலும் நீடித்து ஒரு தன்மையதாக நிலைத்தல் அரிதாகும். வட மொழியும், இலத்தீனும், கிரேக்கமும், எபிரேயமும் எய்திய நிலைதான் காலத்தால் ஏற்படுவது. ஆனல் தமிழோ முன்னைப் பழம் பொருளுக்குப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையதாய் நிலைத்துப், பேச்சு வழக்கிலும் நிலைத்தலுண்மை ஏதுவாக அது தொன்மொழி ஆகாது என்பது அறிவுடைமை ஆகுமா? இதனைக் கருதித்தான் — பண்பாடு சிறப்புக்கு வேண்டும் தொன்மொழிப் பெருமை தமிழுக்கு உண்டு என்று பரிதிமாற் கலைஞன் தெளிவுபடுத்தினர். நாட்டு வழக்கினில் வாழாத மொழிகளே தொன்மொழி என்று கொள்ளும் இருள் விலகப் பரிதிமாற் கலைஞன் வீசிய அறிவு ஒளி ஏதுவாயிற்று எனல் மிகையாகாது.

கால்டுவெல் கண்ட கன்னித்தமிழ் மாட்சி

இந்த இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலுமே தமிழின் தனித்தன்மை விவாதத்திற்குள்ளாக்கப்பட்டு வந்தது எனில், பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடையில் தமிழ் மதிக்கப்பட்டவாறு யாதாம்? ஏதோ ஒரு பேச்சுமொழி; அதுவும் பிற இந்திய மொழிகளைப் போன்றே வடமொழி வழி பிறந்து வளர்ந்த மொழி; இந்திய, ஐரோப்பிய மொழி வகையைச் சார்ந்ததொரு மொழி! என்னும் கருத்துகளே மொழிநூல் துறையினரிடம் மாறுபாடற்று நிலவியிருந்தது அக்காலம். தமிழின் தனித் தன்மை எதுவும் உலகிற்கு எடுத்துக் காட்டப்படாத நிலை. வடமொழியினை மூலமாகக் கொண்டு

இந்திய மொழிகளை ஆராய்ந்த பலருக்கும் தமிழின் தனி ஒளியும் சிறப்பு ஒலியும் புலனாகாமற் போய்விட்டன. அக்காலத்தில் ஒரு மொழியின் சிறப்பை உணர்தற்கு வேண்டிய பயிற்சியுடன் மொழிநூலார் எவரும் தமிழை ஆராயப் புகவில்லை.

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் நேப்பாளத்தில் வாழ்ந்திருந்த ஹட்சன் என்னும் அறிஞர் தென்னிந்திய மொழிகள் பலவற்றிலும் வழங்கிய சொற்கள் பலவற்றைத் தொகுத்து முறைப்படுத்தி வெளியிட்டார். ஆரியம் அல்லாத அச் சொற்களையும் அவை வழங்கிய மொழிகளையும் "திராவிடம்" என்னும் பெயரிட்டு அழைத்த முதல் மொழிநூலாசிரியரும் அவரேயாவர்.

அதைத் தொடர்ந்து, ஆராய்ந்த "பெறி" என்னும் அறிஞர் வடநாட்டில் வழங்கும் மொழிகள் பலவும் ஆரிய வகுப்பின என்றும், தென்னாட்டில் வழங்கும் மொழிகள் பலவும் தமிழ் வகுப்பின என்றும் தெளிவுபடுத்தினார். அக்கருத்து மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்களிற் பலர் தமிழைக் குறித்துப் புதிய ஆர்வத்தோடு ஆராய ஏதுவாயிற்று. அதன் பயனாகத் தென்னாட்டில் வழங்கிய மொழிகளைக் கற்றுத்தேற முற்பட்டவர் பலர். அவருள்ளும் சிலர் தென்னகத்திலேயே உறைந்து தென்மொழியில் ஒன்றைத் தேர்ந்து ஆராய்ச்சி நடத்த முற்பட்டனர்.

"டாக்டர் குண்டர்ட்" என்னும் செருமானிய மொழிப் புலவர் மேலைக் கடற்கரையில் வழங்கும் மலையாளத்தைக் கற்றுத் தெளிந்து ஆராயலானார். கருநாடகத்தில் வழங்கும் கன்னட மொழியைக் "கிட்டல்" என்னும் பெரியார் ஆராய்ந்தார். "பிரௌன்" என்னும் அறிஞர் தெலுங்கு மொழியிலே தேர்ச்சி யுற்று, அதன் சிறப்புகளை ஆராய்ந்து வெளியிட்டார். அதே காலத்தில் கிறித்தவ சமயத் தொண்டாற்ற வந்த கால்டுவெல் என்னும் பாதிரியார் தமிழகத்தின் தெற்குப் பகுதியில் தங்கி வாழ்ந்து தமிழினைக் கற்றுத் தேர்ந்து, மொழிநூல் ஆராய்ச்சி முறைப்படி தமிழின் இயல்பினையும் சிறப்பினையும் கண்டறிய லானார்.

பண்டைத் தமிழ்ச் சொற்களைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களினின்றும் தொகுத்து, பழங்கன்னடச் சொற்களோடும், ஆதி ஆந்திரச் சொற்களோடும் ஒப்பிட்டு நோக்கி அச் சொற்களின் வேர்கள் (மூலப் பகுதிகள்) ஒன்றுபட்டிருக்கக் கண்டு வடமொழியினின்றும் முற்றிலும் வேறுபட்டுத் தனித்தன்மை கொண்டிலங்குவது தமிழ் என்பது தெளிந்து வியந்து போற்றித் தமிழினது மாட்சியை உலகு ஒப்பும் வண்ணம் சான்றுகளுடன் நிலைநிறுத்தினர்.

தென்னாட்டு மொழிகளின் இயல்புச் சொற்களையும், இலக்கணப் பாகுபாட்டினையும் ஆராய்ந்து அவற்றிடையே காணும் ஒற்றுமையைப் புலப்படுத்தித் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் கண்ட தனிப் பெருமை அவருக்குரியதாகும். 'திராவிட மொழி நூலின் தந்தை' என்று தமிழ் உள்ளளவும் போற்றப் படும் அருந் தொண்டாற்றியவர் அப் பெரியார்.

1856ஆம் ஆண்டிலேயே வெளியிடப்பட்ட அவரது திராவிட ஒப்பியல் மொழிநூலைக் கண்டு கிளாஸ்கோ பல்கலைக் கழகம் அவருக்கு ''டாக்டர்'' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது எனில் அப் பணியின் அருமை விளங்கும்.

திராவிட மொழிகள் வடஇந்திய மொழிகளிலிருந்து பற்பல இயல்புகளில் வேறுபடுகின்றன. அவ்வாறிருந்தும், அத் திராவிட மொழிகள் வடஇந்திய மொழிகளைப் போலவே சமக்கிரதத்திலிருந்து பிறந்தனவாகச் சமக்கிரத பண்டிதர்களால் கருதப்பட்டன. தாங்கள் அறிந்த எப்பொருளுக்கும் பிரமாண மூலம் கற்பிக்கும் இயல்பினர் அப் பண்டிதர்கள். அவர்கள் கூறும் அம்முடிவை, முதன் முதலில் வந்த ஐரோப்பிய அறிஞர்களும் அவ்வாறே ஏற்றுக் கொண்டனர். மேலும், திராவிடம் சமக்கிரதத்திலிருந்து பிறந்தது என்ற கருத்து, முந்திய தலைமுறையினரான மொழிநூல் வல்லுநர்க்கு ஏற்புடையதாய் விளங்கினும், இக்காலை அறவே அடிப்படை அற்றுப்போன கட்டுக்கதையாகி விட்டது. மேலே குறித்த சமக்கிரத பண்டிதர்கள், அம் மொழியை ஆழக்கற்று வடஇந்திய மொழிகளை விளங்க அறிந்தவரே எனினும் திராவிட மொழிகளைச் சிறிதும் அறியாதவர், அல்லது சிறிதே அறிந்தவராவர்.

ஒப்பியல் மொழிநூலின் விதிமுறைகளில் ஒரு சிறு பயிற்சியும் பெருத எவரும் திராவிட மொழிகளின் இலக்கண விதிகளையும், சொற்களையும் நன்கு கற்றுத் தேர்ந்து அவற்றைச் சமக்கிரத இலக்கண முறைகளோடும் ஒப்புநோக்க அறியாத எவரும், திராவிட இலக்கண அமைப்பு முறையும், சொல்லாக்க வடிவங் களும், இன்றியமையாச் சிறப்பு வாய்ந்த அவற்றின் எண்ணற்ற வேர்ச் சொற்களும், எத்தகைய சொல்லாக்க, சொற்சிதைவு முறைகளினுலேயாயினும், சமக்கிரதத்திலிருந்து தோன்றியன வாகும் என்று கூற உரிமையுடையவராகார்.

அதுகாறும் தமிழைக் குறித்துத் தவருன கண்ணேட்டத் தில் கொள்ளப்பட்டிருந்த முடிவை இவ்வாறு மறுத்து, திராவிட மொழிகளை ஆராய்வதற்கு வேண்டிய தகுதியை விளக்கினுர் **டாக்டர் கால்டுவெல்** அவர்கள்.

திராவிட மொழிகளோடு சமக்கிரதம் உள்ளிட்ட இந்தோ ஐரோப்பிய மொழிகள் கொண்டுள்ளதாகக் காட்டப்படும் சில ஒற்றுமைப் பண்புகளைக் கொண்டு பழைமை வாய்ந்த உண்மை யான இனஉறவு இருக்கிறது என்று கொள்ளும் முடிவும் கற்பனையே எனவும் அவ்வாறு கொள்ளினும் சமக்கிரதத் திலிருந்து திராவிட மொழிகள் பிறந்தன என்று கூறும் கொள்கையிலிருந்து அது முற்றும் முரண்பட்டதாகும் எனவும் கூறியுள்ளதோடு **டாக்டர் கால்டுவெல்** அவர்கள்,

''திராவிட மொழிகள் அவ்வொற்றுமைப் பண்புகளைச் சமக்கிரதத்திலிருந்தே கடன் வாங்கின என்ருே, அவ்விரு இனமொழிகளுமே அவ்வொற்றுமைப் பண்புகளைத் தம் இரு மொழிகளுக்குமே புறம்பான ஒரு மொழியிலிருந்து ஒருசேரக் கடன் வாங்கின என்ருே கொள்வதற்கு மாருகத் தன் அண்டை மொழிகளிடம் கடன் வாங்கத் தயங்காத சமக்கிரதம், அவ் வொற்றுமைப் பண்புகளைத் திராவிடத்திலிருந்தே கடன் வாங்கி யுள்ளது என்று கூறுவதால் (மேலே கூறிய) அவ்வொற்றுமைப் பண்புகள் அனைத்திற்கும் இல்லையாயினும் சிலவற்றிற்காவது, அமைதிகூற என்னுலும் ஆகும் என்று கருதுகின்றேன்'' என வாதிட்டுள்ளார்.

மேலும் திராவிட மொழிகளில் வந்து வழங்கும் சமக்கிரதச் சொற்களைப் பழந்திராவிட வேர்ச் சொற்களிலிருந்து வேறு பிரித்தறிவதில், பொதுவாக எவ்வித இடர்ப்பாடும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். ''திராவிட மொழிகளைச் சமக்கிரதத்திலிருந்தே பிறந்தனவாகவே கொள்ளுதல் வேண்டும் என்று கூறும் கீழை நாட்டு மொழிநூலார், திராவிட மொழிகளில் சமக்கிரதச் சொற்கள் எங்கோ அருகி இடம் பெறுவதல்லது பொதுவாக அறவே இடம்பெறுதனவாய திருந்தாத திராவிட மொழிகள் இருப்பதை அறிந்தவரல்லர். சமக்கிரதச் சொற்களை மேற்கொள்ளும் திராவிட மொழிகள் தாமும் அச் சொற்களை ஆடம்பரப் பொருளாகவும், அழகுதரும் பொருளாகவும் மதிப்பதல்லது மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாக மதிப்பதில்லையாதலின் அவற்றை அறவே கைவிட்டும் வாழவல்லவாம் என்பதையும் அவர்கள் அறிந்தவரல்லர். தெலுங்கும் கன்னடமும் மலையாளமும் தம்தம் தனி நிலைகளை நிலைநாட்டுவது முற்றும் இயலாத அளவு சமக்கிரதச் சொற்களை அளவிற்கு மீறிக் கடன் வாங்கியுள்ளன. அவற்றின் துணையை எதிர்நோக்கி எதிர்நோக்கிப் பழகிவிட்டன. அவற்றின் இயல்பு அதுவேயாயினும், திராவிட மொழிகள் அனைத்தினும் உயர்தனிச் செம்மொழியாக நிலைபெற்று விளங்கும் தமிழ் தன்னிடையே இடம்பெற்றிருக்கும் சமக்கிரதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு, அவற்றின் துணையை ஒரு சிறிதும் வேண்டாமல், வளம்பெற்று வளர்வதும் இயலும்''. இவ்வாறு தமிழின் தனித் தகுதியை விளக்கியுள்ளார் அப் பெரியார்.

செந்தமிழ் என்னும் சிறப்புப் பெற்றிருப்பது அது தனித் தமிழ் ஆவதனாலேயே என்று கண்ட **டாக்டர் கால்டுவெல்** அவர்கள், ''ஒரு தமிழ்ச் செய்யுள், இலக்கியச்சுவை மலிந்து, இலக்கியம் என்ற தகுதிக்கு உரியதாயுளது என்பது, பிறமொழி இலக்கியங்களில் உள்ளதுபோல், அச் செய்யுள் ஆண்டிருக்கும் சமக்கிரதச் சொற்களின் எண்ணிக்கை அளவைப் பொறுத்திராமல், அச் சமக்கிரத ஆட்சியிலிருந்து எந்த அளவு விடுதலை பெற்றிருக்கிறது, எந்த அளவு வடசொல் ஆட்சியை வெறுத்

துள்ளது என்பதையே பொறுத்திருக்கிறது என்று மதிக்கு மளவு, கற்றுவல்ல தமிழ்ப் பெரியோர்கள் உள்ளத்தில், அச் சமக்கிரத (கலப்பினை விலக்கும்) வெறுப்புணர்ச்சி ஆழப் பதிந் துள்ளது. நகரத் தொடர்பற்ற நாட்டுப்புறங்களில் வாழும் கல்லா மக்கள் வழங்கும் பேச்சுத் தமிழ், சமக்கிரத ஆட்சியைக் கைவிடுவதில், செந்தமிழ் நடையோடு பேரளவு ஒத்துள்ளது'' என்றும் தெளிவுபடுத்தினர்.

மேலும், தமிழில் வழங்கும் சமக்கிரதச் சொற்களைக் குறித்து அவர் தரும் விளக்கம் இது: ''சமக்கிரதத்திலிருந்து தமிழ் கடன் வாங்கி யிருக்கும் சொற்கள் பெரும்பாலும் சமய உண்மைகள், அறிவியல் பொருள்கள் நுண்கலைகள் ஆகிய வற்றை வெளியிடத் துணைபுரிவனவே ஆகும். பிறதுறை இலக் கியங்களைக் காட்டிலும், சமக்கிரதச் சொற்களை மிகுதியாகக் கையாளும் சமயக் கருத்துகளை விளக்கும் உரைநடைகளிலுமே, தமிழ் மொழியில் கலந்திருக்கும் வடசொற்களின் அளவு, ஆங்கில மொழி இலத்தீன் மொழிச் சொற்களை மேற்கொண் டிருக்கும் அளவினும் அதிகம் அன்று''.

கிறித்தவ சமயத் தலைவர் ஒருவர், ஆங்கிலமொழி, இலத்தீன் மொழியினின்றும் பெற்றுள்ள துணையின் அளவு பற்றிக் கூறியிருப்பதைத் தமிழ்மொழி பெற்றுள்ள வடமொழித் துணையளவிற்குக் கூறுவது பொருந்தும் என எடுத்துக் காட்டு கின்றார். அக் கூற்றின்படி, ''ஒரு மொழியின் தோல், இரத்தம், இறைச்சி, எலும்பு இவற்றின் இணைப்பு என மதிக்கத்தக்கன வான வாக்கியங்களை ஒழுங்குசெய்து ஒரு மொழியை உருவாக்க உதவுவனவாகிய இடப் பெயர்கள், துணை வினைகள் ஆகிய அனைத்தும் (தமிழே) திராவிடமே. ஒரு மாளிகையை அணி செய்ய உதவும், வனப்புற வனைந்து மெருகேற்றிய வண்ணக் கற்கள் போலும் பொருள்களைச் சமக்கிரதம் அளித்திருக்கும். ஆனால், அவை அனைத்தும் ஆங்காங்கே அமைந்து சிறந்த அழகு செய்ய உதவுவதும் அவையனைத்தையும் ஒன்று சேர்த்து உருவாக்கப் பயன்படுவதும் ஆகிய சுண்ணும்புச் சாந்து முழுக்க முழுக்கத் திராவிடமே'' என்னும் உண்மை பெறப்படும்.

டாக்டர் கால்டுவெல் அவர்கள், "ஆங்கிலம், இலத்தீனுக்குக் கடன்பட்டிருப்பதைப் போலவே, தமிழும் சமக்கிரதத்திற்குக் கடன்பட்டிருப்பதாகக் கருதுவது அறவே பொருந்தாது. பொருள் விளக்கத்தைக் கைவிடாமல், இலத்தீன் சொற்களைக் கைவிடுவது ஆங்கிலத்திற்கு இயலாது. ஆனால், தமிழின் நிலை அத்தகையதன்று. சமக்கிரதச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்செல்வங்களை அஃது அளவின்றிப் பெற்றுள்ளது. வடமொழிச் சொற்களை உண்மையான தேவை குறித்து மேற்கொள்ளாது காலக்கோளாறு விரும்பும் வெளிப் பகட்டு காரணமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்றும் அறிவித்துள்ளார். "மேலும் புராணச் சார்பான சமயங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றோடு புகுத்தப்பட்டு, பிராமண சமயங்களின் அளவிறந்த செல்வாக்கின் பயனாய் இன்றையத் தமிழ் உரைநடையில் கலந்திருக்கும் சமய விளக்கச் சொற்கள் பலவும் சமக்கிரத மூலச் சொற்களாகவே உள்ளன. அச் சொற்களுக்கு இணையாகவோ அவற்றிலும் சிறப்பாகவோ, அக் கருத்துகளை வெளியிடவல்ல தூய திராவிடச் சொற்களும் உள்ளன என்றாலும், உரைநடைகளில், அவற்றின் ஆட்சி பழக்கத்தில் இன்மையால் கடுந்தமிழ் நடைவாய்ந்து காது வெறுக்கும் கடின ஒலி உடையனவாகக் கருதுமளவு அச் சொற்கள் மெல்லமெல்ல வழக்கிறந்து போய்விட்டன. தமிழ் மொழியின் சமய இலக்கியங்களில் சமக்கிரதச் சொற்கள் ஆட்சிபுரிவதன் உண்மைக் காரணம் இஃது ஒன்றே!" இவ்வாறு வடமொழிச் சொற்கள் புகுந்த வழியையும், அதன் விளைவையும் விளக்கினார். மேலும் அவர் நிகழ்த்திய ஆராய்ச்சியில் தமிழைக் குறித்து வெளியிட்ட கருத்துகளில் பல எந்நாளும் நினைவிற் கொள்ள வேண்டியவை யாகும்.

"திராவிட மொழியின் தொன்மை நிலையை நிலைநாட்டப் பேரளவில் பெறலாகும் துணையினைச் செந்தமிழே அளிக்கிறது. இது திராவிட மொழிகள் அனைத்தினும் அது நனிமிகப் பழங் காலத்திலேயே நாகரிக நிலை பெற்றுவிட்டதன் விளைவாகும்!"

"தமிழ்மொழி பெற்றிருக்கும் எண்ணி மதிப்பிடற்கியலாச் சொற் செல்வங்களும் செந்தமிழின் பல்வேறு வகைப்பட்ட

இலக்கண வடிவங்களும் அம்மொழிப் பழைமையை நிலைநாட்டும் வேறு நல்ல சான்றுகளாகும். செந்தமிழிலக்கணம், வழக்கிறந்து போன சொல் வடிவங்கள், கைவிடப்பட்ட சொல்லாக்க முறைகள், முரண்பட்ட மரூஉ முடிபுகள் ஆகிய பழம்பெரும் மொழிக் கருவூலங்களின் காட்சிக் கூடமாகும்''.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமெரிக்கக் கிறித்தவ சமயப் பணியாளர் வெளியிட்ட தமிழ்க் கையகராதி 58,500 க்குக் குறையாத சொற்களைக் கொண்டுள்ளது என்பது ஒன்றே தமிழ் மொழியின் எண்ணிலாச் சொற் செல்வத்திற்குப் போதிய சான்றாகும். அவ்வகராதியைக் குறைவிலா முழுநூலாக ஆக்க வேண்டின், அதில் அடங்கியுள்ள சொற்களோடு கலைச்சொற்களும் குழூஉச் சொற்களும் திசைச் சொற்களும் தொகைச் சொற்களுமாக ஆயிரம் ஆயிரம் சொற்கள் மேலும் சேர்க்கப் படல் வேண்டும். தமிழ்ப்பேராசிரியர் ஒருவர் திராவிட இனப் பிறமொழி அகராதிகளை ஆராய்ந்து காணநேர்ந்தால் தமிழை நோக்க அம் மொழிகள் பெற்றிருக்கும் ஒத்த சொல்லுருவங்களின் குறைபாடல்லது வேறு எதுவும் அவர் கருத்தில் பதியாது. தமிழ் அகராதிகள் தமிழ்மொழிக்கே உரிமையானவையும் தமிழிலேயே வழங்குவனவுமாகிய சொற்களையே யல்லாமல் தெலுங்கு கன்னடம் போலும் பிற மொழிகளின் சொற்களென வழங்கப்படும் சொற்களையும் கொண்டுள்ளன. ஆகவே, தமிழ் இலக்கிய நாகரிகத்தின் தோற்றக் காலம், அவ்வினப் பிறமொழி இலக்கிய நாகரிகத்தின் தோற்றக் காலத்திற்கு மிகமிக முற்பட்டதாகுமென்றும், திராவிடத் தொன்மொழி, அவ்வினம் பல்வேறு மொழிகளாகப் பிரிவுண்ட காலத்திற்கு நனிமிக அணித்தான காலத்தைச் சேர்ந்ததாகும் என்றும் முடிவு கட்டிக் கூறலாம்.

தமிழில் வந்து வழங்கும் வடமொழிச் சொற்களை மிகவும் உருமாற்றி வழங்குவது அத்தமிழின் தொன்மைக்குப் பிறிதொரு சான்றாகும்.

தமிழ் இலக்கிய நாகரிக வளர்ச்சியின் தொன்மை, தமிழ்க் கல்வெட்டுகளாலும் நிலைநாட்டப் பெறும். கருநாடகத்திலும்,

தெலிங்கானுவிலும் காணலாகும் பழைய கல்வெட்டு எதுவும், அதை ஆள மேற்கொண்ட எழுத்துகள் எம்மொழி எழுத்துகளேயாயினும், கன்னட மொழியிலோ தெலுங்கு மொழியிலோ எழுதப்பட்டிலது என்பதிலிருந்து தமிழ் இலக்கிய வளர்ச்சியின் முதுமையும் தனித்தியங்கும் உரிமையும் பேரளவு ஐயமற நிலை நாட்டப்பெறும் என அறிக. மேலும் பேராசிரியர் வில்சன் என்பார், ''தென்னிந்திய மொழிகள் சமக்கிரத மொழியைப் பார்த்துப் பின்பற்றி வளர்க்கப் பெறுகின்றன. திராவிட மொழிகளில் உள்ள தலையாய இலக்கியச் செல்வங்கள் அனைத்தும், ஒன்று வடமொழி மூல இலக்கியங்களின் மொழி பெயர்ப்பாகும்; அல்லது அவற்றின் பொழிப்புரைகளாகும். அவை அம்மூல இலக்கியங்களின் சொற்றொடர் அமைப்பு முறைகளையும் அவ்வாறே கடன் வாங்கியுள்ளன,'' என்று கூறியிருந்தார். அக் கருத்தை மறுத்து டாக்டர் கால்டுவெல் அவர்கள், ''தமிழைப் பொறுத்த வரையில் அவர் கூற்று முழுதும் பொருந்துவதன்று. தமிழ்மொழியின் தலையாய இலக்கியங்களாம் என்று எல்லோராலும் ஒரு சேர ஒப்புக்கொள்ளப்பட்ட திருக்குறளும், சிந்தாமணியும் அமைப்பிலும், ஆக்கிய முறையிலும் அறவே சமக்கிரதத் தொடர்பற்றனவாம்; முழுக்க முழுக்க முதல்நூல் தன்மை வாய்ந்தனவாம்'' என்று கூறியுள்ளார்.

அக்காலத்தில் - சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தொல்காப்பிய இலக்கணமும், சிலம்பும் மேகலையும் அச்சேற்றப்பட்டு வெளியிடப்படவில்லை எனினும் இம்முடிவினை அவர் கொண்டது கருதத்தகும்.

தமிழ்ப் புலவர்கள் இராமாயண, பாரதங்களை உள்ளது உள்ளவாறே மொழி பெயர்க்கவில்லையெனினும், வடமொழியாளர் போக்கைப் பின்பற்றியே இயற்றி உள்ளனர் என்பது உண்மையே. ஆயினும் தமிழர்கள் தங்கள் கம்பன் ஆக்கிய தமிழ் இராமாயணம், வான்மீகி இராமாயணத்தைக் காட்டிலும் நனிமிகச் சிறந்ததாம் என்று பெருமை பாராட்டிக் கொள்ளவும் தவறுவதில்லை. இவ்வாறு தமிழ் இலக்கியங்கள் மூலநூல் தன்மையும் தனிச் சிறப்புகளும் கொண்டு தமிழுக்குப் பெருமை தருபவையே என விளக்கினர்.

மேலும் - ஆரியத்தின்மீது திராவிட மூலமொழியும் அதன் இலக்கணக் கூறும் ஆட்சி பெற்றுள்ளது என்னும் உண்மையையும் அவர் புலப்படுத்தினுர்.

பேராசிரியர் பிளிக் என்பவர் "பால் வேறுபாடு உணர்த்தும் பிற மொழிகளிலிருந்து, ஆரியமொழிகள், பால் உணர்த்தா அஃறிணைச் சொற்களைப் பெற்றிருப்பதால், அவை வேறு பிரித்து அறியப்படும். ஆரியமொழித் தோற்றத்தின்போது, திராவிடச் செல்வாக்கும் ஓரளவு ஆட்சி புரிந்தது என்பதும் ஒருவகையில் ஏற்புடையதாம். வேறு சில இயல்புகளைப் போலவே, இவ்வஃறிணை ஒருமைப்பாடும் அவ்வாட்சியின் விளைவுகளில் ஒன்ருகும்" என்று கூறினுர். அதனை எடுத்துக் காட்டி டாக்டர் கால்டுவெல் அவர்கள், "பால் வேறுபாடு, வேறு எம்மொழியிலும் இல்லாத அளவு, திராவிட மொழிகளிலேயே முறையாகவும் முழு அளவிலும் மேற்கொள்ளப்படுகிறது. இது சமக்கிரத ஆட்சியின் விளைவாக இருத்தல் இயலாது. மாருக திராவிட ஆட்சியின் பயனுகவே சமக்கிரதத்திலும் அஃது இடம் பெற்றிருக்கும்" என்ருர்.

"ஒரே நாட்டில் திராவிட இனமும், ஆரிய இனமும் பல நூற்ருண்டுகளாக, அடுத்தடுத்து வாழ்ந்திருந்தமையால், திராவிட மொழிகள் (தமிழல்லாத பிற மொழிகள்) ஆரியச் சொற்களைப் பேரளவு கடன் வாங்கியுள்ளன. அதே நிலையில் திராவிடத்திலிருந்து கடன் வாங்க ஆரியமும் தயங்கவில்லை என்பதும் உணரற்பாலதாம்" என்று முடிவு செய்துள்ளார்.

இவ்வாறு தமிழ் மாட்சியை நிறுவிய கால்டுவெல் பெருந்தகையார், "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக, மிகப் பெரிய இனத்தவரும், ஆற்றலும் நன்கு மதிக்கற்பாடும் உடையவரும், சமயத் துறையால் வழிபாட்டிற்கு உரியவருமான ஆரிய மக்களின் சமக்கிரத மொழியை எதிர்த்து நின்று, தம் ஆட்சியை நிலைநாட்டி வந்துள்ள திராவிட மொழிகள், தம் இடத்தைப் பற்றவரும் வேறு எம்மொழி முயற்சியையும், இனி வரும் காலங்களிலும் எதிர்த்து

அழித்துவிடும்'' என்று குறிப்பிட்டுள்ளார். இக் கூற்று எந்நாளும் நம் நினைவில் நிலைக்க வேண்டியதன்றோ?

''தமிழ் எம்மொழிக்கும் தாழ்ந்து வளையாது தலைநிமிர்ந்து நின்று, தன் தனித்தன்மை காத்து, தன்னை அணைத்து அழிக்க வந்த வடமொழியையும் வலுவிழக்கச் செய்து வாழ்ந்து வளர்கிறது'' என்னும் பேருண்மையை ஒப்பிலக்கண முறைப்படி ஆராய்ந்து, உலகம் ஏற்கும் வண்ணம் நிலை நிறுத்திய டாக்டர் கால்டுவெல் அவர்கள், கன்னித் தமிழ் மாட்சியை நமக்குக் காட்டியவரல்லரோ! அவாது தொண்டிலே பிறந்த கருத்துக் கதிர் தமிழைச் சூழ்ந்திருந்த அறியாமை இருளை அகற்றிய அறிவொளியன்றோ! வாழ்க கால்டுவெல் நினைவு! வளர்க தனித் தமிழ் மாட்சி!

சீகன்பால்கு சிந்தை கவர்ந்த தமிழ்

என்றுமுள இன்தமிழ்மொழி உலகோர் கருத்தினில் இடம் பெற்று, அறிவுக்கு விருந்தாகிப் பிற நாட்டவர் போற்றுதலைப் பெறவும், தமிழ்மக்களிடையே தம் தாய்மொழியைப் பற்றிய மதிப்பீடு உயரவும், தாழ்வு மனப்பான்மை நீங்கவும் வழிகோலிய பெருமை மேலைநாட்டு நல்லறிஞர்களையே சாரும். அவர்கள் சமயத் தொண்டு ஆற்றவே தமிழகத்திற்கு வந்தவர் எனினும், தமிழ் மொழியின் இனிமை, மென்மை, எளிமை, தொன்மை ஆகிய இயல்புகளிலும், தமிழ் இலக்கியங்களில் கண்ட இயற்கை நலம், அறிவு விளக்கம், அன்பு வளர்க்கும் பண்பு,

அறநெறி மாட்சி ஆகிய சிறப்புகளிலும் ஈடுபட்டுத் தம் வாழ் நாளிலே பெரும் பகுதியைத் தமிழ்த் தொண்டிலேயே செல வழிப்பாராயினர்.

தமிழ் பயின்ற அம் மேலை நாட்டவர் தமிழில் முதன் முதலாக அச்சு முறையைக் கையாண்டு, நூல்களும் சிறு சிறு ஏடுகளும் அச்சியற்றி வெளியிட்டனர். தமிழ் எழுத்துகளையே சீர்திருத்தி அமைத்தனர். உரைநடையில் மொழி பிளந்து எழுத வழிகாட்டினர். மேனாட்டு மொழிகளில் உள்ள அகராதி களுக்கொப்பத் தமிழ் அகராதியும் கண்டனர். மேலை நாட்டு மொழிகளில் தோன்றியிருந்த சிறந்த நூல்களைத் தமிழாக்கம் செய்தனர். தமிழில் சிறந்திருந்த நூல்களை இலத்தீன், ஆங்கிலம் முதலான மொழிகளிலும் பெயர்த்து வெளியிட்டனர். தமிழ் மொழி இலக்கண இலக்கியங்களை ஆராய்ந்து ஒப்பியன் மொழி நூல் முதலான பல புதிய துறைகளைத் தோற்றுவித்தனர். சுருங்கக் கூறின் தமிழ் மறுமலர்ச்சிக்கே வித்திட்டனர் எனலாம். அம் மேலை நாட்டவர்தம் தகுதிமிக்க பணியால் அனைத்துலகும் இன்பமுறவும், எத்திசையும் புகழ் மணக்கவும் தமிழ் அணங்கு விளங்குகிருள் என்பதும் மிகையன்று.

தமிழ்க் கடல் அலை ஓசை எந்நாளும் எழுகின்ற சிறப்பு நோக்கித் ''தரங்கம் பாடி'' என்னும் கடற்கரைப் பட்டினமே, முதன்முதலாக மேலை நாட்டார் பலர் வந்துறைந்து தமிழுக்குத் தொண்டாற்றிய சிறப்புடைய தமிழ்ப் பாடி வீடாகத் திகழ்ந் துள்ளது. பதினெட்டாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் அங்கு வந்து தங்கிய செருமானியப் பாதிரியார் இரண்ட்லர் என்பார், ''செருமானியப் பல்கலைக் கழகங்களில் படிப்பிக்கத் தக்க சிறப்பு வாய்ந்த மொழி தமிழ்'' என 1715ஆம் ஆண்டி லேயே தம் நாட்டவருக்கு எழுதியுள்ளார். இதனை அறியும் எவர்தாம் அவருக்கு நன்றிக் கடன் பட்டவர் ஆகார்?

அதே பட்டினத்தில் 1706ஆம் ஆண்டில் வந்திறங்கிய **பார்த்தலோமகு சீகன்பால்கு** என்னும் டேன் இனத்துப் பாதிரியார், தம் தாய்மொழியைப் போன்றே தமிழிலும் தேர்ச்சி பெற்று, தமிழிலேயே சிந்திக்கும் அளவு உள்ளத்தால்

கலந்து தமிழே பேசி வாழ்ந்து வந்துள்ளார். தமிழ் கற்பதிலே ஒருதனிச் சுவை கண்டு, தமிழ் நூல்கள் சிலவற்றைத் திரும்பத் திரும்பப் பயின்று உணவருந்தும் வேளையிலும் அவர் தம் செவி தமிழமுதை நுகருமாறு பிறரைப் படிக்கச் சொல்லிக் கேட்டு வந்தார் எனில், அவரது ஆர்வம் அளவிடற் பாற்றோ!

அக்காலத்தில் தமிழ்நாடும் மொழியும் மேலை நாட்டவரால் 'மலபார் என்னும்' பெயராலேயே குறிப்பிடப்பட்டு வந்தது. அதன் விளைவாக ''மலபார் நூல் பட்டியல்'' எனும் பெயரில் அவர் எழுதிய குறிப்பேட்டில் அவரே படித்தறிந்த 161 தமிழ் நூல்களின் பெயர்களையும் பொருளடக்கத்தையும் விவரித்துள் ளார். தமிழ்மொழியின் இலக்கிய வளத்தை மேலை நாட்டார் அறிய இது கருவியன்றோ?

சீகன்பால்கு அவர்களின் தலையாய முயற்சி தமிழ்ச் சொல் அகரவரிசை ஒன்றை உருவாக்க முனைந்ததாகும். அம்முயற்சி பிற்றைநாட்களில் தரங்கம்பாடி அகராதியும், வேறு சில அகராதி களும் வெளிவருவதற்கு ஏதுவாகவும் துணையாகவும் அமைந்தது.

ஈராண்டு முயற்சியிலேயே இருபதினாயிரம் தமிழ்ச் சொற் களையும், தொடர்களையும் தொகுத்த அப் பெரியார் அடுத்த நான்கு ஆண்டுகளில் நாற்பதினாயிரம் அளவு தொகுத்திட்டார். அவர் தொகுத்த இலக்கியச் சொற்கள் அகரவரிசை பதினேழா யிரம் செந்தமிழ்ச் சொற்களைக் கொண்டதாக அமைந்தது. தமிழ் இலக்கணம் பற்றிய விளக்க நூல் ஒன்றும் அவர் எழுதினார்.

தென்னக மக்கள் வாழ்க்கையில் படிந்திருந்த சமயக் கொள்கைகள், வழிபட்ட தெய்வங்கள் ஆகியவை பற்றியும் அவர் எழுதியுள்ளார். அவரியற்றிய அந்த நூல்கள், அந் நாட்ட வரால் கண்டு பிடிக்கப்படாமலே இரு நூற்றாண்டுகள் கடந்த நிலையில், இந்த நூற்றாண்டிலேதான் வெளியிடப்பட்டுள்ளன. அவர் இயற்றிய ''மலபார் மக்கள் மதம்'' என்னும் நூல், தமிழருடைய சமய தத்துவங்களையும், நெறிகளையும், ஆழ்ந்த

நம்பிக்கைகளையும் தமிழரிடையே நிலவிய சாதிகள், சடங்குகள், கலை, கவிதை, இசை, மருத்துவம், போர், உழவு முதலான பல்வேறு பொருள் குறித்து விவரிப்பதாகும். ''மலபார் தெய்வங்கள்'' செய்தி அவரது நூலில் அவை தோன்றிய விதம், அவற்றின் உருவம், குணங்கள், பெயர்களின் பட்டியல், குடும்பங்களின் செய்திகள், அவற்றிற்குரிய பணியாளர் பணிகள், விருந்துகள் முதலான பலவும் விவரிக்கப்பட்டுள்ளன. இந்நூல்களைக் ''கல்விக் களஞ்சியம்'' என்றே அழைக்கலாம் என்றுரைக்கிறார் டாக்டர் அர்னே லெமான் என்னும் செருமானியப் பல்கலைக் கழகப் பேராசிரியர் எனில், அவை தமிழரைப் பற்றிய ஒரு கலைக் களஞ்சியமாகத் தொகுக்கப்பட்டுள்ளது தெளிவாகும்.

மேலும் சீகன்பால்கு அவர்கள் சிறு குறிப்புகள் என்னும் தலைப்பில் தமிழ்ப் பாக்கள் பலவற்றைச் செருமானியில் மொழி பெயர்த்துள்ளார். நீதிவெண்பா, கொன்றைவேந்தன், உலக நீதி ஆகிய வாழ்வியல் விளக்கும் செய்யுட்கள் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

அக்காலத்தில் ஐரோப்பிய மக்கள் மனத்தில் ''மலபார் மக்கள்'' (தமிழர்கள்) இலக்கியப் புலமையும், ஒழுக்க மேம்பாடும் அற்ற அநாகரிகக் கூட்டத்தார்'' என்னும் தவறான கருத்தே நிலவியதால் சீகன்பால்கு அவர்கள் அதனை மாற்றவும், தமிழ் அறிந்ததால் தாம் பெற்ற சிறந்த எண்ணங்களை மேலைநாட்டவருக்கு அறிவிக்கவுமே இவற்றை மொழி பெயர்த்ததாக அவரே குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தமிழ் நலத்தை மேல்நாட்டவரும் உணரச் செய்ய அரும்பாடுபட்ட சீகன்பால்கு அவர்கள் தமிழைச் சீர் பெறச் செய்தவரல்லரோ? தொடக்கத்தில் குறிப்பிட்ட கிரண்ட்லர் என்பார் அக்காலத்திலேயே தமிழகத்தில் வழங்கிய மருத்துவ முறையின் தனிச் சிறப்பைக் கண்டு மருத்துவத்துறை பற்றி ஒரு நூல் [செருமானியில்] இயற்றினார். இதனாலும் தமிழரது அறிவுத்திறன் மேலைநாட்டவரால் ஏற்கப்படுவதாயிற்று.

அதே செருமானிய நாட்டைச் சேர்ந்த அறிஞர் கார்ல் கிரவுல் என்பார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையில்

தமிழிலே இலங்கும் 'கைவல்ய நவநீதம்', 'சிவஞான சித்தியார்' முதலான சில தத்துவ நூல்களைச் செருமானியிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தார். அதனோடு எல்லோரும் பயன் பெறும் தனிச் சிறப்புடைய திருக்குறளை அதன் அருமை பெருமைகளை உணர்ந்து, இலத்தீன், செருமன் ஆகிய இரு மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளார். அவரது இந்த அரிய முயற்சியின் பயனாகத் தமிழர்கள் வழிவழி வளர்ந்த தொன்மை மிக்க தமிழின் பயனாகப் பெற்றிருக்கும் அறிவு நுட்பம், தெளிவு, திட்பம், செப்பம் ஆகியவற்றையும் பண்புநலன், சால்பு, ஒழுக்கம் முதலியவற்றையும் மேல்நாட்டவர் அறிந்து மதித்திட வழி பிறந்தது. இவ்வாறு மேலைநாட்டவருள் செருமானிய மொழிப் புலவோர் தொடங்கிய தமிழ்ப்பணி இன்றும் தொடர்கிறது, வளர்கிறது.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே "தத்துவ போதகர்" எனத் தமிழருக்கு விளங்கும் பெயர் பூண்ட "ராபர்ட் தி நொபிலி" என்னும் இத்தாலிய நாட்டுப் பெரியார் தமிழகத்திற்கு வந்துள்ளார். அவர் தமிழும் வடமொழியும் பயின்று கிறித்தவ சமய விளக்கம் செய்யும் உரைநடை நூல்கள் பல இயற்றியதோடு தமிழ்—போர்ச்சுகீசிய அகராதி ஒன்றும் தொகுத்துள்ளார். இவரது உரைநடை வடசொல் விரவிய கலப்புமொழி நடையே எனினும், அத்துறையில் அது முதன் முயற்சி என்பது கருதற்பாலது. இவர் தம்மை, இத்தாலிய நாட்டு அந்தணர் எனக் கூறிக் கொண்டதோடு தமிழ்மக்களுடன் கலந்து உறைந்து தமிழகத்து வழக்கங்களைத் தழுவி, தமிழகத்துத் துறவிகளைப் போன்று பூங்காவி ஆடையும், புலித் தோல் இருக்கையும், பொற் பூணூலும் கடுக்கனும், சந்தனப் பொட்டும் கொண்டு காட்சியளித்தார் என்றும் அறிகிறோம். தமிழ்மொழியில் தோன்றிய பற்று தமிழர் விரும்பும் தோற்றத்தையே அவரை மேற்கொள்ளச் செய்தது போலும்!

வீரமாமுனிவர் வியந்தேத்திய தமிழ்

பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சீகன்பால்கு அவர்களின் தொண்டு நிகழ்ந்த அதே காலத்தில் தமிழ்த் தொண்டாற்றிய தனிப் பெருஞ் சிறப்புக்குரிய பெரியார், ஜோசப் கான்ஸ்டான்டைன் பெசுகி என்னும் பெயர் பெற்ற இத்தாலியராவர்.

தமிழகத்திலே வந்துறைந்த காலத்தில், கோவை, தூத்துக்குடி, மணப்பாடு முதலான ஊர்களில் வாழ்ந்து தமிழ் பயின்றுர். இளமையிலே ஐரோப்பிய மொழிகளான இத்தாலி, இலத்தீன், எபிரேயம், கிரேக்கம் ஆகியவற்றில் பயிற்சி

பெற்றிருந்த அவர், தமிழகத்தில்—தமிழுடன்—அதன் இன மொழிகளான, தெலுங்கும் கன்னடமும் பயின்றதோடு வட மொழியும் கற்றுத் தேர்ந்தார்.

தமிழ்ப் புலவராக விளங்கிய சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் பயின்றார். திருவள்ளுவரும், கம்பரும், திருத்தக்க தேவரும் அவருக்கு நட்பாயினர். தமிழ் உரைநடை மட்டுமின்றிக் கற்பனைக் கவின்மிகும் கவிதை இயற்றும் ஆற்றலும் கைவரப் பெற்றார்.

அவர் இயற்றிய 'தேம்பாவணி' என்னும் காப்பியம், பல்வேறு சமயச் சார்புடைய காப்பியங்களும் தமிழிலே தோன்றி இருந்தபோதிலும் கிறித்தவ சமயச் சார்புடைய காப்பியம் ஒன்றில்லை என்னும் குறையை நீக்கியது என்பதைவிடத் தமிழ் உள்ளம் பெற்றுவிட்ட வேற்று நாட்டவரும் தமிழிலே காப்பியம் இயற்ற முடியும் என்னும் பேருண்மையை விளங்கச் செய்தது. உரை நடையில் அவர் இயற்றிய நூல்களில் சமயச் சார்பானவை பல எனினும், 'பரமார்த்த குரு கதை' என்னும் நகைச்சுவைப் படைப்பு அத் துறையில் வழிகாட்டிய முதல் நூல் என்பது கருதத்தகும். அவரது உரைநடையின் சிறப்பினை அவரது 'வேதியர் ஒழுக்கம்' என்னும் நூலை, 'தமிழ் உரை நடை பயிலும் மாணவர்க்குரிய மேல்வரிச் சட்டமாக நான் மதிக்கிறேன்' என்று பின்னாட்களில் டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் கூறியதிலிருந்து தெளியலாம்.

பெசுகி அவர்கள், தமிழ் இலக்கணத்தையும் விரிவாக ஆராய்ந்து பல நூல்களை இயற்றினார். அவரது செந்தமிழ் இலக்கணத்திலே, இலக்கிய வழக்கிலே வரும் சொற்களுக்கான இலக்கணத்தையும், கொடுந்தமிழ் இலக்கணத்தில், நாட்டு வழக்கில் நிலவிய மொழி (சொற்கள்) வழக்கிற்கான இலக்கணத்தையும் விளக்கியுள்ளார். மேலும், அவர் இயற்றிய தொன்னூல் இலக்கணம், ஐந்திலக்கணத்தையும் சுருங்கக் கூறுவது. அதற்கு உரையும் அவரே வரைந்துள்ளார். இதன்கண், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து கூறுகளும் விளக்கப்படுகின்றன. அதன் பொருள்

பகுதியில், 'சொல்லோசை நலம்' (Rhetoric) குறித்தும் புதிய விளக்கம் காணப்படுகிறது எனில், அது தனிச் சிறப்புடைய நூல் அன்றோ!

தமிழுக்கு அகராதி கண்ட திறத்தால், அவரது பணி எந்நாளும் மறக்க முடியாததாகிறது. தமிழ்ச் சொற்களை அகர வரிசைப்படுத்துவதில், பல பொருள் கொண்ட பெயர்ச் சொற்களாகத் தொகுத்துப் பெயரகராதி எனவும், பல பெயர் கொண்ட பொருள்களின் பெயர்களாகத் தொகுத்துப் பொருள் அகராதி எனவும், சொற்கள் பலவாகக் கூடி நின்று ஒரு சொல்லாக வழங்குவதைத் தொகுத்துத் 'தொகையகராதி' எனவும், எதுகை ஓசை ஒன்றாக வரும் சொற்களை யெல்லாம் வரிசைப் படுத்தித் 'தொடையகராதி' எனவும் அமைத்துச் 'சதுரகராதி' கண்டார். தமிழ்மொழியில் தோன்றிய நிகண்டு களிலும் சிறந்த முறையில், தமிழ் கற்போருக்குத் துணையாவது இந்தச் சதுரகராதி.

மேலும் மொழி பெயர்ப்புக்குத் துணையாகுமாறு இலத்தீன் மொழியில், 'தமிழ் - இலத்தீன்' அகராதி ஒன்றும் 'போர்ச்சுகீசியம்—தமிழ், இலத்தீன்' அகராதி ஒன்றும் அவர் உருவாக்கினார்.

மேலும் இலத்தீன் மொழியில் திருக்குறள் அறத்துப் பாலும், பொருட்பாலும் இவரால் மொழிபெயர்க்கப்பட் டுள்ளன.

இந்த வகையில் தமிழ்மொழியின் சிறப்புகள் பிற நாட்டவருக்கும் புலனாகுமாறு அருந் தொண்டாற்றிய பெசுகி அவர்கள், தமிழ் எழுத்து வடிவத்திலேயும் இன்றியமையாத சில திருத்தங்களைக் கண்டார். எ, ஒ என்னும் இரண்டு உயிர் களையும், அவற்றுடன் மெய் கூடுவதால் பிறக்கும் உயிர் மெய் களையும் குறிக்க அவற்றின் மேலே புள்ளிவைத்தும் நெடிலாயின் புள்ளி இன்றியும் அக் காலத்தில் எழுதி வந்தனர். புள்ளி வைக்கத் தவறுவதால் தோன்றும் குறைகளைத் தவிர்க்க எண்ணிய அப் பெரியார் புள்ளி முறையை நீக்கி, இன்று

வழங்கும் முறையில் நெடில் வடிவத்தை 'ஏ', 'ஓ' என மாற்றி வழங்கலானார். அதுவே நிலைபெற்று அவரது தொண்டுக்கு ஒரு நினைவுச் சின்னமாகவே விளங்குகிறது.

தமிழுடன் கலந்த அப் பெரியார், தமது இயற்பெயராகிய கான்ஸ்டான்டியஸ் என்பது தமிழருக்கு விளங்குமாறு 'தைரிய நாதன்' என்று மொழிபெயர்த்துக் கொண்டார். அவரது தமிழ்த் தொண்டையும் துணிவையும் பாராட்டி மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் அவரை, 'வீரமாமுனிவர்' என்று பெயரிட்டு அழைத்துச் 'செந்தமிழ்த் தேசிகர்' என்னும் பட்டமும் வழங்கினர். மேலைநாட்டிலும் தமிழ் முழங்க வழிகண்டு, தமிழ் எழுத்திலும், இலக்கணத்திலும் புதுமை கண்ட பெரியார் வீரமாமுனிவர் செந்தமிழ் வளர்த்த தேசிகரேயன்றோ !

அடுத்து, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையே தமிழகம் போந்த அமெரிக்க நாட்டு வித்தகரான டாக்டர் வின்ஸ்லோவின் தமிழ்த் தொண்டு போற்றத்தக்கதாக அமைந்தது. தக்கார் பலரது துணைகொண்டு, தமிழைத் துறைபோகக் கற்று அதன் சிறப்பினைத் தெளிந்து உலகிற்கும் உணர்த்தினர். ஆங்கிலம் அறிந்த மேலைநாட்டினர் தமிழை எளிதாகக் கற்றுக்கொள்வதற்குத் துணையாக ஒரு தமிழ்—ஆங்கில அகராதியை விரிவானதாகத் தொகுக்க அவர் முற்பட்டார். வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதி முதலான சுவடிகளைத் துணைகொண்டு, இலக்கியச் சொற்களும் வழக்குச் சொற்களுமாக முப்பதினாயிரம் சொற்களைக் கொண்டதான அகராதியை இயற்றினர். அதற்கு முன்னர் இந்த அளவு சிறப்புடைய அகராதி வெளிவரவில்லை என்று கூறுமாறு அமைந்தது அது.

அந்த அகராதியின் முன்னுரையே, தமிழைக் குறித்து டாக்டர் வின்ஸ்லோ அவர்கள் ஆராய்ந்து கண்ட பல முடிவுகளை வெளியிடும் சிறப்புடையது.

'வேற்று மொழியின் துணை இன்றித் தனித்து இயங்கும் ஆற்றலுடைய தமிழின் தொன்மை வியப்பளிப்பதாகும்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் நிலவிய காலத்துத் தொகுக்கப்பட்ட நூல்கள் பெருமை யளிப்பவையாகும்' என்னும் கருத்துடைய வராய், 'தமிழ்ச் செய்யுள், வடிவிலும் நடையிலும் கிரேக்க மொழிச் செய்யுட்களைக் காட்டிலும் தெளிவுடையதாகவும் திட்ப முடையதாகவும் கருத்தாழம் உடையதாகவும் விளங்குகிறது' எனவும், 'தமிழ் மொழி, நூல் மரபிலும் பேச்சு வழக்கிலும் இலத்தீன் மொழியைக் காட்டிலும் மிகுந்த சொல்வளம் கொண்டது' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்மொழி ஆங்கிலத்துக்கும் செருமானிக்கும் ஈடாக ஆற்றலோடு இயங்குகிறது எனவும் பாராட்டுகிருர். உலகத்தில் வழங்கும் மொழிகளை, மொழி நூலார் ஆரியம், (இந்திய ஐரோப்பிய மொழிகள்) துரானியம், செமிடிக் என்னும் முப் பிரிவாகப் பகுத்துக் காண்பர். அப் பிரிவுகளுள் ஒன்றில் இணைத்துக் காண வேண்டியதே முறை என்னும் கருத்தில், பேராசிரியர் மாக்ஸ்மூலர் அவர்கள், தமிழைத் துரானியக் குடும்பத்தில் சேர்த்தும், டாக்டர் கால்டுவெல் அவர்கள் தமிழைச் சித்திய குடும்பத்தில் சேர்த்தும் கருதுவர். டாக்டர் வின்ஸ்லோ அவர்கள், தமிழின் வேர்ச் சொற்களைக் கண்டு, அவற்றின் தனி இயல்பை ஆராய்ந்து காட்டித் தமிழ் ஒரு மூல மொழியாக, ஒரு தனிப் பிரிவாகக் கொள்ளப்பட வேண்டும் என்ருர். எழுத்து, சுவடி முதலான தூய தமிழ்ச் சொற்களின் தொன்மையினையும் பொருண்மையினையும் கொண்டே தமிழ்க் குடும்பம் ஒரு தனிக் குடும்பம் எனக் காட்டுகின்ருர் அவர்.

மேலும், 'தமிழ் எவ்வகையிலும் இழிந்த மொழியன்று; ஆங்கிலத்தின் மூல மொழியானது, எழுத்து வடிவம் பெறுதற்கு முன்னரே தமிழ் தெளிவுடன் சிறந்து விளங்கியது. அதன் பெயரே இனிமைப் பொருளது' எனவும் பாராட்டியுள்ளார்.

அரிய முயற்சியால் தாம் கண்ட தமிழ் ஆங்கில அகராதி மூலம் தமிழின் பெருமை உலகு உணருமாறு செய்த டாக்டர் வின்ஸ்லோவின் தமிழ்த் தொண்டு பெரிதன்ருே?

போப் ஐயர் போற்றிய தமிழ்

பல்லாற்றுனும் தமிழ்ஒளி பரவத் தொண்டாற்றிய மேல்நாட்டவருள் தனிப் பெருமைக்குரிய பெரியார் ஜி. யு. போப் அவர்கள். அவர்களைத் தமிழறிஞர்கள் போப் ஐயர் என்றே பெருமைப்படுத்துவர்.

தமிழகத்திற்கு ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்பதாம் ஆண்டில் வந்த அப் பாதிரியார் இங்கே தங்கிய நாற்பதாண்டு களும் தமிழுக்குத் தொண்டாற்றியது மட்டுமன்றிப் பின்னர் இங்கிலாந்துக்குச் சென்றும் பல ஆண்டுகள் தமிழே மூச்சாகக் கொண்டு வாழ்ந்தார்.

கிறித்தவ சமய அறிவை ஆங்கிலத்தின் வாயிலாகவே மக்களுக்கு விளக்கம் செய்ய முடியும் என்னும் கருத்துடைய பாதிரிமார்களிடையே போப் அவர்கள் மக்களின் தாய் மொழி வாயிலாகவே அதனை விளக்குதல் பயனுடையது என்னும் கருத்தை வலியுறுத்தி வெற்றியும் கண்டார். அவர் தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணங்களைத் தமிழறிஞர்களிடம் கேட்டுத் தெளிந்து வல்லவரும் ஆனார்.

ஒப்புயர்வற்ற திருக்குறளிலும், வீரம் கொழிக்கும் புறநானூற்றிலும், முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத் திலும், புத்த நெறி விளக்கும் மணிமேகலையிலும், திருவாசகம், திருக்கோவையார் முதலான உள்ளம் நெகிழும் தமிழ்ப் பாடல் களிலும், நன்னெறி, நல்வழி, நீதிநெறி விளக்கம் முதலான ஒழுக்க விளக்க ஏடுகளிலும் அவர் பெருமதிப்புடையவராய்ப் பலகாலும் பயின்றார். பிறரைப் பயிலச் செய்வதையும் தம் கடமையாக மேற்கொண்டார். அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடுவதே மேலைநாட்டவர் அறிந்து பயனுற ஏதுவாகும் என்ற எண்ணத்தோடு அம் முயற்சியில் ஈடுபட்டார். 'இந்தியன் சஞ்சிகை', 'இந்தியாவின் தொல் பொருள் ஆய்வு' முதலான ஏடுகளில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை களை எழுதி வரலானார். புறநானூற்றுப் பாடல்களும், புறப் பொருள் வெண்பாமாலை திணை விளக்கங்களும் தமிழ்ப்புலவர்கள் வரலாறும் அக் கட்டுரைகளால் ஆங்கிலத்தில் வெளிவந்தன.

போப் அவர்கள், உயர்ந்த பண்பாட்டுக்கு வேண்டிய பொறுமை, சினமின்மை, நட்பு முதலானவற்றை விளக்கும் அறுநூறு செய்யுட்களை நீதி நூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்துத் 'தமிழ்ச் செய்யுட் கலம்பகம்' என்னும் நூலைத் தொகுத்ததோடு, அந்தப் பாக்களுக்கு ஆங்கிலத்திலே விளக்கமும் தந்துள்ளார்.

'நாலடியார்' என்னும் நூலினை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்ததோடு அதன் அரிய முன்னுரையில் தமிழர்கள் நெஞ்சில் பதிக்க வேண்டிய அறிவுரையும் கூறியுள்ளார். தமிழர் களுள் பலர் ஆங்கிலத்தில் புலமைபெறப் பெரிதும் முயன்றனரா யினும் தமக்குரியதும் உலகோர் வியப்பதுமான தாய்மொழியின்

அருமை உணராது ஒதுக்கி வைக்கும் இயல்பு குறித்து வருந்தி, இத்தகு மொழிபெயர்ப்பு நூல்கள் அவரது கண் திறப்பனவாகும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தமிழின் தனி வழியான சிந்தனைப் போக்கையும் அதன் உயர்வையும் உணர்ந்து, வடமொழி மாயை—தமிழைச் சூழ்வதற்கு இடனில்லாது கருத்தறிவித்த போப் அவர்கள் நமது கண் திறந்தவர் அல்லரோ !

தென்னாட்டு மொழிகளைப் பற்றிய கட்டுரை ஒன்றில் போப் அவர்கள், "ஒவ்வொரு கோணத்திலிருந்து நோக்கினும், அளவிடற்கரிய மதிப்பு வாய்ந்தனவாக விளங்குவனவும், பெரிதும் நல்லொழுக்கத்தையும், சான்றாண்மைக் கடமைகளையும் விவரிப்பனவுமாகவே உள்ள ஏராளமான ஏடுகள் தமிழிலே உள்ளன. அவை அவர்களது சிந்தனையில் அளவற்ற செல்வாக்கும் கொண்டுள்ளன" என்று புகழ்ந்துரைக்கின்றார்.

நாலடியார் மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில் டாக்டர் போப் அவர்கள் மொழிவது இது : "திருக்குறள், நாலடியார் போன்ற அருமை வாய்ந்த அற நூல்களைப் படைத்துள்ள தமிழ்மக்களின் பண்பாட்டுச் சிறப்பு எத்துணை உயர்ந்ததாக உளது என்று நான் உன்னியுன்னிப் பலகாலும் வியந்திருக்கின்றேன். அத்தகு மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ்மக்கள், தங்கள் தாய்மொழியைத் தாழ்வாக மதித்து நாணித் தலைகுனியும் போக்கை விட்டொழிவாராக!"

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேகூடத் தமிழர்களைத் தன்மதிப்புடையவராக உயர்த்த வேண்டிய நிலை இடைக் காலத்திலே தோன்றியிருந்தது எனில், டாக்டர் போப் அவர்களின் பணியால், தமிழ்மொழியுடையார் தலை நிமிர்ந்தனர் என்பது மிகையாமோ ?

தமிழில் நிலவும் தொன்மை வாய்ந்த இலக்கணங்களும் யாப்பு அமைப்பும் பன்னெடுங் காலமாகத் தமிழ்மொழி வளர்ந்து வந்துள்ளதைக் குறிப்பன என்பதும், மேற்கொள்ளப் பட்ட குறிக்கோளுக்கும் விளக்கும் பொருளுக்கும் ஏற்றபடி

அமைகின்ற செய்யுள் நடையும் தமிழின் இயற்கை வளர்ச்சியைக் காட்டுவன என்பதும் போப்பையரின் கருத்தாகும்.

தமிழர்களிடையே நிலவிய சமய நெறியை மேலைநாட்டவருக்கு அறிவிக்க விரும்பிச் சிவஞானபோதநூலையும் திருவாசகத்தினையும் அரிய முயற்சியோடு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

'சைவசித்தாந்த நெறி திராவிட அறிவின் தேர்ந்து தெளிந்த நிலையின் பயன்' என்று பாராட்டியும் உள்ளார். தத்துவங்கள் பல வடமொழியிலேயே எழுதப்பட்டிருந்தனவாதலால், யாவும் ஆரியர்களின் அறிவின் பயன் என்று கருதிக் கிடந்த நாட்களில் அவை தமிழரின் அறிவிலே முகிழ்த்தவை என்று தெரிவிக்கப்பட்ட அக் கருத்து, தமிழ்ப் பெருமையை நிலைநிறுத்தத் துணையாயிற்று.

பரிதிமாற் கலைஞன் இயற்றிய தனிப்பாசுரத் தொகையின் கவிதைநலம் பாராட்டி அதனையும் மொழி பெயர்த்துள்ளார். 'மனோன்மணீயத்தையும்' சிறப்பித்துக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் இலக்கணத்தை எல்லாரும் எளிதிலே கற்கும் வண்ணம் எளிய உரைநடையில் முதன்முதல் எழுதிய பெருமை அவருக்கே உரியது. இன்றும் பிற மொழியாளர் தமிழ் இலக்கணம் அறிய அவரது நூலே சிறந்த கருவியாக உள்ளது.

அவர், உலகம் போற்ற வேண்டிய நூல் திருக்குறள் என்பதை உள்ளங் கொண்டு அதன் முப்பாலையும் முழுவதுமாக மொழி பெயர்த்துள்ளார்.

தமிழைக் குறித்தும், திருக்குறள் முதலான தமிழ்நெறி விளக்க நூல்களைக் குறித்தும் அவர், வெளியிட்ட கருத்துகள் என்றும் நம்மை எழுச்சி கொள்ளச் செய்பவையாம்.

அவர் கூறுவதைக் கேண்மின்: "இன்று தமிழர்களுக்கென உரியதாகியுள்ள இலக்கியம், சில துறைகளில் கீழை நாட்டு இலக்கியங்கள் அனைத்தினும் தனித் தகுதியுடையதாகும். பிற இந்திய மொழிகளில் உள்ளவாறே சமக்கிரதத்தைத் தழுவியனவாக உள்ள தமிழ்நூல்களைக் கருதியன்று நான் இவ்வாறு கூறுவது. ஆனால், செகப்பிரியரின் நூல்கள்

ஆங்கிலத்திற்கு எவ்வாறு உரிமையாமோ அவ்வாறே தமிழுக்கே உரியனவாகத் தமிழரின் தெளிந்த சிந்தனையிலிருந்து பிறந்த மூலத் தமிழ் நூல்களைக் கொண்டே இவ்வாறு கூறுகிறேன். சமக்கிரதத்திற்கு அப்பாற்பட்டுத் தனித்துத் தோன்றியது மட்டுமன்றி அதன் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்பதும் பரந்து விரிந்த தன்மையும் உள்ளங் கவரும் திறனுமுடைய தமிழ் இலக்கியத்தைத தமிழர்கள் பெற்றுள்ளனர்.''

தமிழ்ப் புலவோர் பிராமணீயத்தையும், பிராமணர்களையும் விரும்பாததோடு வடமொழி இலக்கியந் தழுவிய நூல்கள் இயற்றுவதை விட, அவற்ருேடு போட்டியிடக்கூடிய தனிச் சிறப்புடைய தமிழ் இலக்கியத்தைப் படைப்பதில் ஈடுபட்டுக் குறிப்பிடத்தக்க வெற்றியும் கண்டுள்ளனர். தமிழ் இலக்கியங் களில் பலவிடத்தும் சமக்கிரத மொழிவழிக்கும் தென்னகத்துத் தமிழ்வழிச் சிந்தனைக்கும் இடையே தோன்றிய மாறுபாட்டின் சுவடுகளையே காண்கின்ருேம்.

அம்மட்டோ! தமிழர்கள் தமிழ் கற்பதைத் தாழ்வாக எண்ணி, வடமொழி போற்றியும், ஆங்கிலம் கற்றும் வாழ்வதை உயர்வாகக் கொண்டு, வழி தவறித் தடுமாறி நின்ற காலத்தில், அவர்தம் உள்ளத்தில் தமிழ்மொழியின் மாட்சி, பசுமரத்து ஆணி போன்று பதிய வேண்டும் என்று எண்ணித்தான் போலும், டாக்டர் போப் அவர்கள், ஒரு நண்பர், அவரது கடைசி விருப்பம் யாது என வினவியபோது, 'என் கல்லறையின்மீது நான் ஒரு தமிழ் மாணவன் என்று செதுக்கி வையுங்கள்' என்று கேட்டுக் கொண்டுள்ளார்!

மேல்நாட்டவரான போப் அவர்களின், உயிருடன் ஒட்டி யிருந்த வேட்கை, குருதியுடன் கலந்த விருப்பம், அவரை 'ஒரு தமிழ் மாணவர்' என்று உலகம் உணர வேண்டும் என்பதே எனில், அவரிடத்து அப் பற்றைத் தோற்றுவித்த தமிழ் மாட்சிதான் எத்தகையது? தமிழினது மாண்பைத் தமிழரும் உணரச் செய்த போப் அல்லரோ, இறந்தும் இறவாது வாழும் தமிழ் மாணவராக இன்றும் தமிழ் உள்ளங்களில் எல்லாம் ஒளிர்கின்ருர். வாழ்க போப் ஐயர் தந்த உணர்வு!

தனித்தமிழ் இயக்கங்கண்ட தகைசால் அடிகள்!

இவ்விருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில், தமிழ்மொழி பிறமொழி ஆதிக்க இருளகற்றி, முகிலைக் கிழித்து முகத்தொளி காட்டும் முழுமதிபோன்று வெளிப்பட்டுத் தோன்றவும் தமிழ் மக்கள் அதன் அருமை பெருமைகளைக் கண்டு தெளிந்து வியந்து ஏத்தவும் பெரிதும் ஏதுவாக நின்ற சிறப்பு, தன்னிக ரற்ற தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகளாரையே சாரும்.

'தமிழர்கள்' அறிவுநிலை கெட்டுத் தலைதடுமாறிப் போய், தேவபாஷையின் மயக்கிலே சிக்குண்டு குழம்பித் தமிழ்

இலக்கியத் தனிநெறியறியாதவராய் இடர்ப்பட்டுக் கிடந்தகாலை அடிகளாரின் திருத்தொண்டு தமிழ்மக்களுக்குப் புத்தொளி காட்டிப் புத்துணர்வு ஊட்டியது.

சென்ற நூற்றுண்டின் இறுதியில் பிறந்து இந்த நூற்றுண்டின் இடையாண்டுகாறும் வாழ்ந்து விளங்கிய அடிகளார், தமிழ்க்கடல் அலைஓசை எழும் நாகையிலே பிறந்து தமிழ்க் கல்வியொடும் தவழ்ந்து வடமொழியொடும் நடந்து, ஆங்கிலத்தோடும் தலை நிமிர்ந்தவராய் மும்மொழிவல்லுநராய், முறையான ஆராய்ச்சியில் சிறந்தவராய் உறுதியான கொள்கைகளைக் கண்டவராய், மாறுபாடு எழுதல் கண்டு கலங்காத தெளிவினராய் விளங்கியவராவார்.

தமிழ் மொழியின் தனிமூலத் தொன்மையினைச் சான்றுகளுடன் நிலைநிறுத்தி, தமிழ் இலக்கியங்களின் பண்பாட்டு மேன்மையைப் புலப்படுத்தித் தமிழ் இலக்கணத்தின் தனித்திறத்தை விளக்கிக் காட்டித் திக்கற்ற தமிழ்மக்கள் மொழித்துறையின் கரை அடைதற்குச் சேரவேண்டிய திக்கினை உணர்த்தும் ‘கலங்கரை விளக்கம்’ ஆக ஒளிர்ந்தார்.

அவரது இளமைக் காலத்தே மேல்நிலைத் தமிழர்தம் எண்ணமே வடமொழி வழியால் இயங்கி, பேச்சும் எழுத்தும் அவ்வண்ணமே ஆகிநின்றன.

தமிழர்கள் தம்மைச் சூத்திரர், வைசியர், சத்திரியர் முதலான வருணத்தார் எனக் கொண்டு, சாதி தருமத்தையே சர்வேசுவரன் ஆக்கினை என நம்பி, வருணாசிரம மநுதரும சாத்திரங்களை ஏற்று, வேத ஆகம புராணங்களையே கதிமோட்சமாகக் கொண்டு, பிராமணர்களையே பூதேவர்களாகப் போற்றி, புரோகிதம் பஞ்சாங்கம் ஆகிய சடங்குகளிலே மூழ்கி, வேதியர் நடத்தும் கோயில் கும்பாபிஷேக அருச்சனை பூஜை நைவேத்தியங்களிலே மெய்மறந்து, பூர்வோத்திரகன்மங்களைப் போக்குவதிலும் ஜென்ம சாபல்யம் எய்தி மோக்ஷத்தைத் தேடுவதிலும் ஈடுபட்டிருந்தனர்.

‘ஸ்ரீ ராம ஜெயம்’ என்பதுடன் தொடங்கி, ‘விவாக சுப முகூர்த்தப் பத்திரிகை’ எனத் தலைப்பிட்டு, காசிவிசுவநாதன்

கடாட்சத்தாலே கன்னிகாதானம் செய்வதாக நிச்சயித்து, புரோகிதர் வடமொழி மந்திரம் ஓத-முப்பத்து முக்கோடி தேவர், கின்னரர் கிம்புருடர் சாட்சியாக, ஓமகுண்டம் வளர்த்து, அக்கினி வலம்வந்து கல்யாண வைபவம் நடத்தி—சாந்தி முகூர்த்தமும் சாஸ்திர சம்பிரதாயத்துடன் நடப்பது வழக்கமாகி வந்தது அந் நாட்களில்.

பிறந்த புத்திர புத்திரிகட்கு, புண்யா ஜனனம் செய்வதும் சிறுவர்கட்கு 'அரிநமோத்துசிந்தம்' என அரிச்சுவடி தொடங்கு வதும் இறந்தவர்கட்குத் திதிவைத்துத் திவசம் கொடுப்பதும் ஆலய வழிபாட்டு முறையிலே அருச்சனை நிகழ்வதும் எல்லாம் தேவ பாஷையிலேதான்!

இவற்றால் மேலவர் மொழியாக உயர்ந்து தோன்றிய சமக்கிரதத்தின் சொற்கள் பலப்பல, தமிழர்களின் பேச்சிலும் எழுத்திலும் ஊடுருவிக் கலந்து அவற்றிற்குமுன் வழங்கப்பட்ட பல நூறு தமிழ்ச் சொற்களை நீக்கிவைத்து ஆர்ப்பரிக்கலாயின. தமிழகத்து ஊரும் தமிழர்களின் பேரும் முதலில் வழங்கப்பட்ட முறையே மாற்றங் கொண்டிருந்தன.

திருமறைக்காடு என்னும் ஊர் வேதாரண்யம் ஆயிற்று. மயிலாடுதுறை—மயூரம் எனவும், பழமலை—விருத்தாசலம் எனவும், திருவரங்கம்—ஸ்ரீரங்கம் எனவும், திருவில்லிபுத்தூர்—ஸ்ரீவில்லிபுத்தூர் எனவும், குடந்தை—கும்பகோணம் எனவும் மாறிவழங்கின.

ஓரிரு நூற்றாண்டுக்கு முன்னர் முருகன், நல்லான், சிவப்பன், மணியன், முத்து, கண்ணன், வள்ளி, பச்சை, மயில், பொன்னம்மை முதலான பெயர்பூணும் மக்கள் வடமொழிச் சார்பினால் ராமன், ரகுபதி, ஈஸ்வரன், ஸ்ரீதரன், இலட்சுமி, சரஸ்வதி, விஜயா, பங்கஜம் எனப் பெயரிடுதலை நாகரிகமாகக் கருதலாயினர்.

இவையேயன்றி—எளிதாகப் பொருள் விளங்கும் இனிய தமிழ்ச் சொற்கள் பலவும் சொற்றொடர்கள் சிலவும் நாளடைவில் நிலையிழந்து வடசொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் இட மளித்து மறைந்தன.

தமிழர்தம் கூட்டங்களில் நிகழ்ந்த உரைகளிலே,

திருவாளர்—ஸ்ரீமான் ஆகி,
அவைத்தலைவர்—அக்கிராசனாதிபதி ஆகி,
அவையோர்—சபையோர் ஆகி,
வணக்கம்—நமஸ்காரம் ஆகி,
சொற்பொழிவு—உபன்னியாசம் ஆகி,
இறைவணக்கம்—ஸ்தோத்திரம் ஆகி,
நாட்டுப்பாடல்—தேசியகீதம் ஆகி,
நன்றியுரை—வந்தனோபசாரம் ஆகி,
இசை—சங்கீதம் ஆகி,
பண்—ராகம் ஆகி,
நாயனம்—நாதஸ்வரம் ஆகி,

தமிழ் மேடையே சமக்கிருதப் பாடையாக மாறிக் கிடந்தது.

''தாம் மேல்சாதி'' என்னும் நினைவினர்தம் உரையாடலிலோ,

நீர்—ஜலம் எனவும்
குடிநீர்—தீர்த்தம் எனவும்
குளியல்—ஸ்நானம் எனவும்
சோறு—சாதம் எனவும்
குழம்பு—சாம்பார் எனவும்
சுவைநீர்—ரசம் எனவும்
உணவு—போஜனம் எனவும்
தின்பண்டம்—பக்ஷணம் எனவும்
பாண்டம்—பாத்திரம் எனவும்
உப்பு—லவணம் எனவும்
வரிசை—பந்தி எனவும்

வழங்கித் தமிழையே ஒழித்து வந்தனர்.

பள்ளி மாணவர் தம் தமிழ்ப் பாடங்களிலேயே,

பூ—புஷ்பம் ஆகவும்
மாலை—ஹாரம் ஆகவும்
பூப்பலி—பூஜை ஆகவும்
விளக்கு—தீபம் ஆகவும்
பறவை—பக்ஷி ஆகவும்
பாம்பு—சர்ப்பம் ஆகவும்

தீண்டிக் கொண்டிருந்தன.

தமிழ் உரை நடையிலே

நன்மை—க்ஷேமம் ஆகி,
நலம்—சௌக்கியம் ஆகி,
மகிழ்ச்சி—சந்தோஷம் ஆகி,
உடல்நலம்—திரேக ஆரோக்கியம் ஆகி,
தோள்வலி—புஜபலாக்கிரமம் ஆகி,
அறிவாற்றல்—புத்திசாலித்தனம் ஆகி,
இளைப்பாறுதல்—சிரமபரிகாரம் ஆகி,
காட்சியின்பம்—நேத்திரானந்தம் ஆகி,
இறையருள்—ஈசுவர கடாட்சம் ஆகி,
குடமுழுக்கு—கும்பாபிஷேகம் ஆகி,
பிறவிப்பயன்—ஜென்மசாபல்யம் ஆகி,
அறம் பொருள் இன்பம்—தர்மார்த்த காமம் ஆகி,
வீடுபேறு—மோக்ஷசித்தி ஆகி,
உயிர்த்துன்பம்—ப்ராண அவஸ்தையாகி

தமிழையே திக்குமுக்காட வைத்தன.

அன்னையும் தந்தையும்—மாதாபிதா ஆகி,
மகனும் மகளும்—புத்திரன் புத்திரி ஆகி,
ஆணும் பெண்ணும்—புருஷனும் ஸ்திரியும் ஆகி,

கணவன் மனைவி—பதியும் பாரியாளும் ஆகி,
இல்லறம்—கிருகஸ்தம் ஆகி,
துறவறம்—சன்னியாசம் ஆகித்

தமிழ்மொழியே காட்டுமொழியாக மாறிக் கிடந்தது.

அன்பு	குறைந்த	ப்ரீதியும் (பிரியமும்)
அமைதி	குலைத்த	சாந்தியும்
நட்பு	கெடுத்த	சிநேகமும்
பகை	மறைக்கும்	விரோதமும்
அறிவு	தாழ்த்தும்	புத்தியும்
குறும்பு	தளர்த்தும்	சேஷ்டையும்
நாணம்	விலக்கும்	சங்கோசமும்
வாய்ப்பு	தவிர்க்கும்	அதிர்ஷ்டமும்
இழப்பு	ஓட்டிடும்	நஷ்டமும்
விருப்பம்	மாற்றிடும்	இஷ்டமும்
முழக்கம்	குன்றிடும்	கோஷமும்
வஞ்சினம்	கொன்றிடும்	க்ஷாத்திரமும்
நினைவு	இழப்பிக்கும்	ஞாபகமும்
கனவு	கலைப்பிக்கும்	சொப்பனமும்
குற்றம்	மறைக்கும்	தோஷமும்

தமிழ்ச் சொற்களே என்று எண்ணி மயங்குமாறு விரவின.

நாழி நேராகி, பொழுது முகூர்த்தமாகி, வேளை சமயமாகி, நாள் திதி (திகதி) யாகி, கிழமை வாரமாகி, திங்கள் மாதமாகி, ஆண்டு வருஷமாகி, ஆண்டுக் கணக்கிடுதல் பிரபவ, விபவ முதலான அறுபதாண்டுச் சுழற்சியில் சிக்கிக் கால ஓட்டம்—தடுமாறிப் போயிற்று.

ஞாயிறு சூரியனாகி ஆதித்தனுமானான். திங்கள் சந்திரனாகி சோமனுமாயிற்று. பிற கிழமைப் பெயர்களும் மாறி வழங்கலாயின. உடுக்களும் விண்மீன்களும்—கிரகங்களும் நட்சத்திரங்

களும் ஆயின. உவா நாளும் முழுமதி நாளும்—அமாவாசையும் பௌர்ணமியும் ஆயின.

இந்த வடமொழிச் சொற்கள் வழங்கப்படுவதே தமிழுக்கு அழகு எனத் தவருக எண்ணப்பட்டது அக் காலத்தில். தமிழ் பிறந்த நாள் முதல் உலகையும் உயிர்களையும் படைத்து அளித்துக் காத்து அழித்துவரும் கடவுளே, இக் காலத்தில் ஈசுவரனுகி லோகங்களையும் ஜீவன்களையும் சிருஷ்டி செய்து, ரக்ஷித்து, சம்ஹரித்து வருகின்றுன் எனப்படின்—இந்த வட மொழி புகுத்தப்பட்டதால் விளைந்த கோலத்துக்கு வேறென்ன விளக்கம் வேண்டும் ?

இத்தகு பிறமொழிக் கலப்பின் விளைவைப் பல்லாண்டு களாகத் தொடர்ந்து பல்லாற்றுனும் ஆராய்ந்து வந்தார் அடிகளார். இற்றைக்கு ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் ஒரு நாள் அவருடைய அருமை மகள் நீலாம்பிகையார் வடலூர் வள்ளலார் இராமலிங்கம் அருளிச் செய்த திருவருட் பாவினின்றும் கீழ்வரும் பாடலைப் பாடிக் கொண்டிருந்தனர்.

“பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே”

என்னும் அப் பாடலைக் கேட்டு மகிழ்ந்த அடிகளார், இப் பாட்டில் வரும் ‘தேகம்’ என்னும் வடசொல்லை நீக்கி, ‘யாக்கை’ என்னும் தமிழ்ச் சொல்லைப் பெய்து இசைத்தால், அச் செய்யுள் ஓசை இன்பம் மேலும் மிகுவது அன்ருே என்ருர். தமிழறிவு சான்ற மகளாரும் அவ்வாறே ஆவதைப் பாடி உணர்ந்தனர். அதனைத் தொடர்ந்து அடிகளார், பிறமொழிச் சொற்கள் கலப்பதால் தமிழ் தன் இனிமை குன்றுகிறது. நாளடைவில்

அவ் வேற்றுமொழிச் சொற்கள் நிலைபெறுதலின் முன்னர் அவற்றுக்கு ஈடாகவும் மேலாகவும் வழங்கி வந்த அரிய தமிழ்ச் சொற்கள் பல வழக்கின்றி மறைகின்றன. இந்நிலை நீடிப்பின், அதன் விளைவுகள் எண்ணத்தான் கூடுமோ என்றனர். அது கேட்ட நீலாம்பிகையார், 'அவ்வாறு கேட்டினைத்தரும் வேற்றுமொழிச் சொற்களை அறவே நீக்கித் தனித் தமிழிலேயே பேசவும் எழுதவும் முற்பட்டு அதனைக் கைவிடாது தொடரவும் வேண்டும்' என்று தம் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

அந்த உரையாடலின் பயனாக, அதுகாறும் தம் பெயராக விளங்கி நின்ற 'சுவாமி வேதாசலம்' என்னும் பெயரை அன்றே 'மறைமலையடிகள்' என மொழிபெயர்த்து வழங்க முற்பட்டார் அடிகள். அவர் வெளியிட்டு வந்த 'ஞானசாகரம்' என்னும் திங்கள் வெளியீட்டை 'அறிவுக்கடல்' எனவும் தாம் நிறுவி யிருந்த சமரச சன்மார்க்க நிலையத்தைப் 'பொது நிலைக்கழகம்' எனவும் மொழிமாற்றி அமைத்தார்.

அடிகளாரும் அவருடைய மகளாரும் தமிழோடு சைவத் திலும் ஆழ்ந்த பற்றுடையவரே எனினும் நீலாம்பிகையார், தம் தம்பியர் நால்வரும் பூண்டிருந்த நால்வர் பெயரினும் திருநாவுக்கரசு தவிர்த்து மற்ற மூன்றும் மொழிக் கலப்பாக இருந்தமை கண்டு அவர்தம் பெயரையும் தம் தங்கை பெயரை யும் மாற்றி அழைப்பாராயினர்.

திருஞானசம்பந்தரை 'அறிவுத் தொடர்பு' எனவும், மாணிக்கவாசகத்தை 'மணிமொழி' எனவும், சுந்தரமூர்த்தியை 'அழகுரு' எனவும், திரிபுரசுந்தரியை 'முந்நகரழகி' எனவும் அழைப்பதிலே பெருமை கொண்டனர்.

இவ்வாறு அடிகளாரும் அவருடைய குடும்பத்தாரும் தமிழ் தாங்கி நின்றனர். அடிகளாரும் நீலாம்பிகையும் வெளியிட்ட கட்டுரைகளும் நூல்களும் தனித்தமிழ் ஏடுகளாகவே மலர்ந்தன. 'தனித்தமிழ்க் கட்டுரை' என்னும் நூலையும் முதன்முதலாக அம்மையார் இயற்றி வெளியிட்டார். அடிகளார் தாம் அதுகாறும் இயற்றி வெளியிட்டிருந்த நூல்களிலே விரவிநின்ற

பிறமொழிச் சொற்களை யெல்லாம் அறவே விலக்கித் தனித் தமிழ்ச் சொற்களைப் பெய்து மறுவெளியீடு செய்வாராயினர்.

இவ்வாறு தமிழுக்கு இழைக்கப்பட்ட தீங்கினைக் களைய அடிகளாரும் அவர் மகளாரும் கொண்ட உறுதியும் செயல் முறைத் துணிபுமே தனித்தமிழ் இயக்கமாக அரும்பி, மலர்ந்து இன்று மணம் பரப்பி நிற்பதாகும்.

அடிகளார் கண்ட முடிபும் முறையும் தவறு எனச் சிலர் மாறுபட்டு நின்றகாலையும் அவர் மேலும் மேலும் தம் கொள்கையை நிலைநிறுத்துவதற்கான சான்றுகளையே எடுத்து எழுதிவரலானார்.

'சிந்தனைக் கட்டுரைகள்' என்னும் அவரது நூலின் ஆங்கில முன்னுரையிற் காணப்படுவது இது :

''தமிழிலே வடசொற்களும் தொடர்களும் ஆங்கிலச் சொற்களும் பிறவும் கலந்து வழங்குவதன் மூலமே தமிழ்மொழி, கருத்துவளம் பெற்றுக் காலத்திற்கு வேண்டிய வலிவோடு திகழும் எனச் சில தமிழ்ப் புலவர்களும் கூறி வருகின்றனர். உண்மையாகவே அது தமிழை வளப்படுத்துவதாகுமெனில் இந்தக் கருத்தை யாரும் வரவேற்பர். ஆனால் அது தமிழை வளப்படுத்துவதற்கு மாறாகத் தன் சொல்வளத்தை இழக்கச் செய்து வறியதாகவே ஆக்குகிறது'' என்று தெளிவுறுத்திய அடிகளார், அன்றாட வாழ்வில் இல்லங்கடோறும் வழங்கிவந்த தனித்தமிழ்ச் சொற்களையும் அவற்றின் இடத்தை நிரப்பி—அச் சொற்கள் நாளடைவில் மறைய வழிசெய்து வரும் வடமொழிச் சொற்களையும் எடுத்துக் காட்டுகிறார் ஒரு பட்டியலாக. அது இது :

தமிழ்ச்சொற்கள்	வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்	வடசொற்கள்
நிலம்	— பூமி	வானம்	— ஆகாசம்
நீர்	— ஜலம்	உணவு	— அன்னம்
நெருப்பு	— அக்கினி	ஒளி	— பிரகாசா
காற்று	— வாயு	பகல்	— சூர்யா

தமிழ்ச்சொற்கள்	வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்	வடசொற்கள்
நிலா	— சந்திரா	உயிர்	— ஜீவா
இரவு	— ராத்திரி	மகன்	— புத்ரா
தலை	— சிரஸ்	மகள்	— புத்ரி
மூக்கு	— நாசிகா	கடவுள்	— ஈஸ்வரா
எருது	— ரிஷபம்	நினைவு	— ஞாபகா
ஏனம்	— பாத்திரம்	நூல்	— சாஸ்திரம்
பயன்	— பிரயோசனம்	அடி	— பாதம்
எரிச்சல்	— கோபம்	ஆன்	— பசு
அறம்	— தர்மா	செய்யுள்	— கவிதா
வினை	— கர்மா		

அடிகள் காட்டியவாறு வடசொற்கள் வெட்டுக்கிளிகள் போன்று பேரெண்ணிக்கையில் படையெடுத்துப் புகுவதனால் தமிழ்ப் பயிரின் பொருள்மிகு கதிரின் சொன்மணிகள் வெட்டுண்டு பாழாகிப்போக, தமிழ்ப்பசுமை பட்டுப்போக நற்றமிழர் யார்தாம் இசையக் கூடும்?

மறைமலை அடிகளார் தமிழ்மொழியின் தனித்தன்மையை எந்நாளும் காத்தற்கு எனத் தூய தமிழ் நடையை மேற்கொண்டு நடைமுறையில் கொண்டு வந்தது மட்டுமே யன்றித் தமிழ்மொழியின் தொன்மையையும் தனிமரபையும் சங்க இலக்கிய மேன்மையையும் கருத்துத் தெளிவையும் ஆராய்ந்து கூறிப் பிற மொழிகளிலும் தமிழ் மாட்சியுடையதாவதை உலகறிய நிலைநிறுத்தினர்.

அவர் வெளியிட்ட கருத்துகளைக் காண்க :

''தமிழ்மக்கள் வழங்கிய தமிழ்மொழி மிகப் பழையதாதலும் அஃதொரு தனித்த முழுமுதற் சொல்லாதலும் தேருத வரலாற்றுநூல் ஆசிரியர் பலர் பிற்றைஞான்று தோன்றிய சில தமிழ் நூல்களில் வடசொற்கள் சில வழங்குதல் பற்றித் தமிழ் வடமொழியினின்றும் தோன்றியதாமென்று கூறினர். அதுவேயுமன்றித் தமிழ்மொழியிலுள்ள அரிய பெரிய நூல்க

ளெல்லாம் கி. பி. 11 அல்லது 12 வது நூற்றாண்டிலேதாம் இயற்றப்பட்டனவென்றுங் கூறினர். இவர் கூற்றுகளெல்லாம் நியாயவாராய்ச்சி யின்றிக் கூறப்பட்டனவாகலின் அவற்றின் பொய்ம்மையை ஈண்டறிவித்தல் வேண்டற்பாலதொன்றே யாம்'' என்று தொடங்கினர் அடிகளார்.

''ஒருமொழி பிறிதொரு மொழியோடு இனமுடைத்தோ அன்றோ என்று அறிதல், அம்மொழிகள் முதன் முதல் தோன்றுங்கால் பிறந்த சொற்களை வைத்து ஒத்து நோக்கும் முறையான் மட்டுமே பெறப்படுவதாம். அவ்வாறு பிறந்த தமிழ்ச் சொற்கள் நான், நாம்; நீ, நீர்; அவன், அவள், அவர்; அது, அவை; என்பனவாம். வடமொழியில் வழங்கும் இம் மூவிடப் பெயர்கள் தமிழோடு சிறிதும் ஒற்றுமை எய்தாமையால் அவை வேறுவேருதல் (தனித்தனித் தோற்றமுடைய சொல் லாதல்) தெற்றெனத் துணியப்படும்.''

''தமிழர் தமக்கு உறவினராவாரை அம்மை, அப்பன், பிள்ளை, துணைவன், மனைவி, அண்ணன், தம்பி, அக்கை, தங்கை என வழங்குவர். ஆரியர் அவரையெல்லாம் மாதா, பிதா, சுத அல்லது பால, பதி, பார்யா, அக்ரஜா, ப்ரதா, ஸ்வஸா எனப் பெயரிட்டு (வடமொழியில்) வழங்குவர். இம் முறைப் பெயர்களும் தம்மோடு இனப்படுதலில்லாமையால் இவையும் வேறு வேறு என்பது துணிக.''

''இன்னும் இவ்வாறே உணவுப்பெயர், எண்ணுப்பெயர், காலப்பெயர், இடப்பெயர், பூதப்பெயர், விலங்கின்பெயர், உறுப்புப்பெயர், வினைப்பெயர் முதலியனவும் இவ்விருமொழி களிலும் வேறுபடுதல் காண்க. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளுவு, குறும்பு, எர்க்கலா, ஏனுதி முதலான மொழிகட் கெல்லாம் இப் பத்துவகைச் சொற்களும் பொதுப்பட நிற்றல் கண்கூடாய் அறியக் கிடத்தலின் இவ்வொன்பது மொழிகளும் ஒன்றோடொன்று இனப்பட்ட (தமிழ்க் குடும்ப— திராவிட மொழிகள்) ஒரு தொகுதியாமென்பது உணரப்படும்.

''இனி ஆரியரும் தமிழரும் பிற்றைஞான்று மிக நெருங்கி மருவி வாழ்ந்தனராகலின் ஆரிய மொழிக்குரிய சொற்கள்

தமிழினும், தமிழுக்குரிய சொற்கள் ஆரியத்தினுங் கலப்புற்றன. அவர் அங்ஙனம் நெருங்கியிராது வேருயிருந்த காலத்தே எழுதப்பட்ட (பழந்தமிழ்) நூல்களில் விரவிய சொல்வழக்கு (ஆரியச் சொற்கள்) காணப்படுதல் சிறிதும் இல்லை என்க.

''சங்கச் செந்தமிழ் நூல்களில் நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டு விழுக்காடு (ஆரியச் சொற்கள்) மிக அருகி வந்தனவே யன்றிப் பிற்றை ஞான்றை நூல்களிற் போலப் பெருகிய வரவினவாய் அவை வந்தனவல்ல வென்க.

''இனி ஆணி—அடவி—கடு—கலா—குடி—குண்டம்—கூனி—குளம்—கோட்டை—சவம்—சாயா—பட்டினம்—பாகம்—மீனம்—வளையம்—நாரங்கம்—முகம் முதலான செந்தமிழ்ச் சொற்கள் ஆரிய மொழியில் வழங்குதல் உய்த்துணரற்பால தென்க''

இவ்வாறு சான்றுகள் தந்து தமிழின் தனிப்பிறப்பை நிறுவினர் அடிகள்.

மேலும் தமிழ் தனி மொழியாயினும் அஃது ஆரியம்போல் அத்துணைப் பழைமை உடையதன்று, நிரம்பவும் புதிதாய்த் தோன்றிய தொன்ரும் என்றுரைப்பார் உரை பொருந்தாமையை யும் அவர் விளக்கியுள்ளார்.

''தமிழில் ஒரு பொருளை உணர்த்துதற்குப் பல சொற்கள் நிற்றல், பிங்கலந்தை முதலான நிகண்டுநூல் கற்ற சிறுமகாரும் நன்குணர்வர். எடுத்துக் காட்டுமிடத்து,

குணத்தினை உணர்த்த 21 சொற்களும்
உயர்வினை உணர்த்த 17 சொற்களும்
வலிவினை உணர்த்த 34 சொற்களும்
அச்சத்தினை உணர்த்த 19 சொற்களும்
மலையினை உணர்த்த 28 சொற்களும்

(தமிழில்) வருகின்றன. ஒரே காலத்து இச் சொற்களெல்லாம் ஒருங்கு பிறந்தனவாகா. ஒவ்வோர் சொல்லும் ஒவ்வோர்

காலத்துத் தோன்றி அவ்வக்காலத்திருந்த அறிவுடையோரால் எழுதப்பட்ட நூல்களில் கன்மேல் எழுத்துப்போல் அச் சொற்கள் நிலைபெற்றுள்ளன.

அவ்வாறு வழங்கியனவும் பின்னர் உலக வழக்கிற் கேற்பப் புதுச் சொற்கள் பிறக்குமிடத்து அவற்றிற்கு இடனளித்து உலக வழக்கில் வீழ்ந்து பட்டன வாயின. அச் சொற்கள் எல்லாவற்றையும் பழைய தமிழ் நூல்களில் ஆய்ந்து பொறுக்கி எவ்வெச்சொல் எவ்வெக்காலத்து நூலில் தோன்றிற்றென்று கணிப்பின் தமிழ்மொழியின் காலம் இனிது நாட்டப்படும். ஒரு பொருளைச் சுட்டுதற்குப் பல சொற்கள் காணப்படும். அத் துணையே பற்றித் தமிழ்மொழி மிகப் பழைய மொழியா மென்று கூறுதல் குற்றம் ஆமாறில்லை என்க.

இனி, சொல் வழக்கானேயன்றிச் சொல் உச்சரிப்பு முறை யானுந் தமிழ் மிகப் பழையதொன்ருதலை விளக்கிக் காட்டி யுள்ளார்.

தமிழில் வழங்கும் எல்லாச் சொற்களின் முதலினும் ட், ண், ர், ல், ழ், ள், ற், ன் என்னும் எட்டு (மெய்) எழுத் துகள் நில்லாவென இலக்கண நூல்களில் ஒரு விதி காணப் படும். அவை (அவ்வெட்டெழுத்துகள்) நா மேலண்ணத்தைச் சென்று தொடும் முயற்சியால் பிறப்பன. நாவை மேலே சேர்த்து உச்சரிக்கும் அம் முயற்சி பிள்ளைப் பருவத்தே தோன்ருமையின் (இயலாமையின்) அப் பருவத்தே பிறக்கும் சொற்களெல்லாம் (டமாரம்—ரம்பம்—லட்டு போன்றவை) முதலில் அவ்வெழுத்துக்களை உடையனவாகா. படைப்புத் தொடக்கத்தில் தோன்றிய மக்களது நிலைமையும் பிள்ளைப் பருவத்தோடியைந்ததாகலின் அஞ்ஞான்று அவர் பிறப்பித்த சொற்களிலே (முதலில்) அவ் வெழுத்துகள் காணப்படா வாயின. இதனுல் தமிழ்மொழி மக்களுடைய முதற் பருவத்தில் தோன்றியதென்பது எளிதிற் பெறப்பட்டது.''

''வடமொழி முதலான மற்றை மொழிச் சொற்களின் முதலிலெல்லாம் அவ் வெழுத்துகள் நிற்றல் அறியப்படுதலின்

அவை மக்களுடைய பிற்பருவத்திலே தோன்றியவாமென்பது துணிபொருள்.''

மேலும் இப்போது நூல் வழக்காயுள்ள வடமொழி' மக்களால் எஞ்ஞான்றும் பேசப்பட்டதில்லை யென்றும், இதற்குத் தாய்மொழியான ஆரியமே (அஃது எழுத்து வடிவம் பெறுதது) அங்ஙனம் பேசப்பட்டதொன்ரும் என்றும் அம் மொழியாராய்ச்சிவல்ல பண்டிதர்கள் பலரும் உரையா நின்றனர். இவ்வாற்ருல், மக்களுடைய **முற்பருவத்திலே பிறந்த தமிழ்மொழி, அவருடைய பிற்பருவத்திலே தோன்றிய (தோற்றுவிக்கப் பட்ட) வடமொழிக்கும் முற்பட்டதொன்ருதல் முடிந்த உண்மையாம்.**

இவ்வளவேயன்றித் தமிழ், இலக்கண இலக்கிய விரிவாலும் மிகப் பழையதொன்று என்பதை அடிகளார் விளக்கினர்.

''தமிழ் நாட்டில் பண்டைக் காலத்துக் கற்றறிவுடைய சான்ருேர் கணக்கின்றி யிருந்தனர் என்பதன்றி அவர்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட அளவிறந்த நூல்களும் பாட்டு களுமே சான்ரும்......இற்றைக்கு 2000 ஆண்டுகளின் முன்னே நமது செந்தமிழ் மொழி எவ்வளவு திருத்தமாக வழங்கப்பட் டுலாவியது......அக் காலத்தில் எழுதப்பட்ட தெய்வத் திருக்குற ளுக்கு இணையான நூல் இவ்வுலகில் உண்டோ? அஃது உயர்வு ஒப்பில்லா உவரா அமிழ்தமன்ருே! முழுக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை என்பவற்றின்முன் தலையெடுத்து நிற்கும் வேறு காப்பியங்கள் இவ்வுலகில் எந்த மொழியிலேனும் உளவா? இல்லையே! மக்கள் மெய்யுணர்வின் இயற்கையினைப் பகுத்து விளக்கிய இறையனு ரகப்பொருள் உரை போன்ற நூல் இவ் விரிகட லுலகினும் இல்லையே! கலித்தொகையில் உள்ள இயற்கைப் பொருள் நுட்பமும் பலதிறப்பட்ட மக்கள் வழக்க ஒழுக்க ஆராய்ச்சியும் வேறு எம் மொழி நூலிலாயினும் உள்ளனவா? மனு முதலிய (வடமொழி) அறநூல்கள் எல்லாம் நாலடியாரை ஒக்குமா?

''இந் நூல்கட்கெல்லாம் மிக முற்பட்ட தொல்காப்பிய நூற் பெருமையைச் சிறிது ஆராய்ந்திடுவோமாயின், தமிழர்

வரலாற்றுக் காலத்திற்கு முன்னும் மிக்க நாகரிகம் பெற்று வாழ்ந்தாரெனல் தெற்றென விளங்குகின்றது............இது வடமொழியிற் பாணினிமுனிவர் இயற்றிய "அட்டாத்தியாயி" என்னும் அரிய பெரிய இலக்கண நூலுக்கு முந்தியது."— இவ்வாறு சான்றுகள் தந்து விளக்கிய அடிகளார், பாணினிக்கு நானூறு ஆண்டுகளின் முன்னே ஆசிரியர் தொல்காப்பியனார் இருந்தார் என்று கொண்டு, இற்றைக்கு 3200 ஆண்டுகட்கு முன் தொல்காப்பியர் காலம் கணிக்கப்படும் என்று முடிவு கூறுகிறார்.

மேலும் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தின் முதலிலேயே அவ்வாசிரியர், தமிழ் ஒலி எழுத்துகளை முறையே நிறுத்திக் கூறிய திறத்தை வியந்து ஏத்தும் அடிகள் இவ்வெழுத்து முறை, வடமொழி முதலான பிறமொழிகளினும் காணப்படுவதாயினும் இது தமிழுக்கே உரியதென்பதனை ஆராய்ந்து காட்டுகிறார்.

"ஆரியர் இந்தியாவிற் புகுமுன்னே அம்முறை அறிந்தாரில்லை. ஏனை ஆரிய சாதியார் வழங்கிய இலத்தீன், கிரீக்கு, டியூடானிக், சிலாவிக் முதலிய ஆரிய மொழிகளிலெல்லாம் எழுத்துகள்—உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் ஒரு முறையுமின்றிப் பலவாறு மயங்கிக் கிடக்கின்றன. [இதனால்] அவ்வாரியர் இந்தியாவிற் புகுந்தபின் தமக்கு முன்னே அங்கு வாழ்ந்துவரும் தமிழர் கண்ட அவ்வெழுத்து முறையையே எடுத்தாண்டு கொண்டார் என்பது தெளிவாம்"

"ஆரியரோ தம்பாற் பிறந்த ஓசைகளை எழுத்திலிட்டுக் காட்டும் வகை அறியாமையினால், தம் முன்னோராற் பாடப்பட்ட பாட்டுகளை நெட்டுருப் பண்ணுதற்குக் கிடைகூட்டிப் பயின்று வந்தார். அவ் வழக்கம், இன்றும் ஒருங்கு கூடியிருந்து வேதம் ஓதுமாற்றால் நன்கறியப்படும். அதனாலன்றே அவை (வேதம்) 'எழுதாக்கிளவி' என்று பெயர் பெறுவனவாயின.

"மேலும் வடமொழிக்கென்றே ஓரெழுத்து இல்லாமையினாலேதான், வடநாடுகளிலுள்ளோர், மகாராட்டிரத்துக்குரிய தேவநாகர எழுத்திலும், தென்னாடுகளிலுள்ளோர் தமிழுக்குரிய

கிரந்த எழுத்துகளாலும், ஆந்திர நாட்டிலுள்ளோர் தெலுங்கு எழுத்துகளாலும், வடநூல்களை எழுதுதலும் பதிப்பித்தலும் செய்துவருகின்றனர்''

''பண்டைநாள் ஆரியர் எழுத்தறியாமையின் தம்முடைய பழைய நூல்களைப் பாதுகாத்து (ஓசையுடன்) வழங்கற்பொருட்டுத் திருத்தமாக அவற்றை ஓதுதற்குரிய முறைகளையெல்லாம் பிராதிசாக்கியங்களில் மிக விரித்தெழுதினர். எழுத்தறிந்திருந்தனராயின் (பின்னாட்களில்) அவ்வாறு விரித்தெழுதல் வேண்டப்படாதென்க''

''நினைக்கப்படுவது என்னும் பொருளையுடைய 'ஸ்மிருதி' என்னும் சொல்லும், கேட்கப்படுவது என்னும் பொருளையுடைய 'சுருதி' என்னும் சொல்லும், அவ் வடநூல்களுக்குப் பெயராய் அமைந்ததனை உற்று நோக்குமிடத்து அவை நினைக்கப்பட்டும் கேட்கப்பட்டும் வந்தனவேயல்லாது எழுத்திலிட்டு எழுதப்படவில்லை என்பது போதரும்''

இவ்வாறு, ஆரியர் தம் மொழிக்கென ஓர் எழுத்து முறையையும் தனியே பெருதிருந்து தமிழ் மொழியின் எழுத்து முறை கண்டே அமைத்துக் கொண்டவராவர் என அடிகளார் காட்டிய சான்றுகள் தமிழின் தனிச் சிறப்பை நாட்டவருக்கு அறிவுறுத்துவதாம். சொல்லால் தொன்மையும் எழுத்தால் முதன்மையும் ஒலி உச்சரிப்பு முறையால் மேன்மையும் உடையது தமிழே எனக் காட்டிய அடிகளார், உலகியல் பொருள் (அறியும்) பாகுபாட்டிலும் தமிழே செம்மையுடையது எனக் காட்டினர். உயர்திணையும் அஃறிணையும் ஆண்பாலும் பெண்பாலும் பிறவும் தமிழிலேயே பொருளுடைய பாகுபாடாக விளங்குவன.

ஆனல் வடமொழியிலுள்ள சொற்பொருட் பாகுபாடுகள் நுண்ணறிவிற்குச் சிறிதும் இயையா. வடமொழியில் கோயில்—என்னும் சொல் ஆண்பால், சாலை—என்னும் சொல் பெண்பால் எனப் பகுக்கப்படுகிறது. விருப்பம் என்னும் பொருள்தரும் சொற்களில் 'இச்சா'—பெண்பால். 'மநோரத'—ஆண்பால்.

உலகம் என்னும் பல பொருள் தரும் சொற்களுள் ஜகதோ—பெண்பால்; லோக—ஆண்பால். இவை போன்று வருவன மிகப்பல. இவற்றைக் காட்டிச் சடப்பொருளான இவையெல்லாம், ஆண் பெண் எனக் கூறினல் யாருக்குத்தான் நகை விளையாது? என வினவுகிருர் அடிகள்.

''ஆனல் இற்றைக்கு 4000 ஆண்டுகளின் முன்னரே தமிழ் இலக்கண ஆசிரியர், உயர்திணை அஃறிணை—ஆண் பெண் பாகுபாட்டினை இயற்கைநெறி திறம்பாதே உணர்ந்து, அறிவுடையார் எல்லார்க்கும் ஒப்ப விளக்கிய நுண்ணறிவாற்றல், பெரிதும் போற்றற் பாலதாம். பண்டைத் தமிழ் நூல்களிற் சொல்லப்பட்ட ஒவ்வொரு பொருளும் கிடைத்தற்கரிய முழு மாணிக்கங்களாம்! இவ்வரும் பெரும் மாணிக்கங்களெல்லாம் வரன் முறையே தொகுத்த தொல்காப்பியம் விலை வரம்பறியாக் களஞ்சியமாம்!'' என்று முழங்குகிருர் அடிகள். மேலும் தொல்காப்பிய ஆசிரியர் பொருளதிகாரத்தில், செய்யுட் பொருளை (எண்ணங்களை) அகம்—புறம் எனப் பகுத்த முறையின் அருமையை வியந்து, அதன் தனித்த வழியை விளக்கித் தமிழின் உயர்வை நிலைநாட்டுகிருர்.

தமிழுக்குரிய தெளிந்த கடவுட் கொள்கையோடு வேதங்களிற் போந்த பல தேவர் வழிபாட்டை ஒப்பிட்டுக் காட்டுகிருர் அடிகள். மதுக்களிப்பை விளைத்து அறிவை மயக்கி மழுக்கும் சோமரசபானத்தைச் சிறப்பித்துப் புகழ்ந்த இருக்குவேத பதிகம் ஒன்றினை மொழி பெயர்த்துக் கூறி—அப்பெற்றித்தாய பதிகங்களே இருக்குவேத முழுவதும் நிரம்பிக் கிடப்பன என்று அறிவித்து அதன் தகுதியை உணர்த்துகின்ருர்.

மேலும், ''இவ்வாறு வேதத்தின் உண்மைகூறி மாந்தர்க்கு அறிவு கொளுத்த வருவாரைக் கண்டு மனம் புழுங்குவோர் சிலர், 'அவைதிகர்' எனப் புறம் பழிப்பர்; அவர் கூறும் அப் புறப் பழிப்புரைக்குச் சிறிதும் அஞ்சன்மின்!......நமக்கும், மற்றும் அறிவுடையார் எல்லார்க்குஞ் சிறந்த பிரமாண மெய்நூல்களாயுள்ள தொல்காப்பியம்—திருக்குறள் முதலியனவே நமக்குச் சாலுமென்று மனந்திருந்துமின்கள்! பிறர் கூறும் பகட்டுரைக்கு

அஞ்சி உண்மையைக் கைவிட்டு விடாதீர்கள்!' என அடிகளார் அறிவுறுத்தி எச்சரிக்கின்றார்.

இவ்வாறு தமிழின் தனிமை—தொன்மை—முதன்மை—நன்மை—செம்மை—முழுமை—இறைமை ஆகிய அனைத்தையும் தக்க சான்றுகளுடன் விளக்கியுரைத்து வடமொழியினும், அம் மொழியின் உச்சி எனக் கொள்ளப்படும் வேதசாஸ்திர புராணங்களினும், அம் மொழியிற் பிறந்த இலக்கண இலக்கியங்களினும், தமிழும் தமிழில் பிறந்த இலக்கண இலக்கியச் சிந்தனைகளுமே ஈடு இணையற்ற பெருமையுடையவை என்று நாடறிய முழங்கி, ஏடுநிரம்ப எழுதி, தலைகவிழ்ந்து கிடந்த தமிழ்மக்களைத் தலைநிமிரச் செய்யுமாறு தமிழ்த் தொண்டு ஆற்றிய அடிகளாரின் திருத்தொண்டாம் தமிழ்த்தொண்டின் அருமை அளவிட்டு உரைக்கப்பட முடியுமோ!

வாழ்க அடிகளார் நினைவு! வளர்க தனித்தமிழ் இயக்கம்!!

வடமொழி மயக்கறுத்த பல்கலைப் புலவர்

தமிழர்களின் உள்ளம், உரை, செயல் அனைத்திலும் உறையத் தொடங்கிய தாழ்வு மனப்பான்மையை அகற்றவும், பண்டை நாட்களிலே தமிழர்தம் அறிவு பல்வேறு துறையிலும் மேலோங்கிச் சிறந்திருந்தது என்பதைத் தமிழர்கள் உணர்ந்து, தாய்மொழியைக் குறித்து ஒரு பெருமித எண்ணத்தோடு தலைநிமிர்ந்து வாழவும் உறுதுணையாக நின்றவர் பல்கலைப் புலவர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களாவார்.

அவர் இளமையிலேயே தெளியக் கற்றுத் தமிழுடன் ஆங்கிலத்திலும் முது கலைஞராய்த் தேர்ந்து, சட்டத் துறை

யிலும் பேரறிஞராய்ச் சிறப்புப் பெற்று தாகூர் சட்ட விரிவுரை யாளர் என்னும் பெருமையுடன் விளங்கினார்.

இந்த நூற்றாண்டின் இடைக்காலம் வரையிலுங் கூட, தமிழ் நன்கு கற்றவரிடமும் ஒரு தவறான கருத்து நிலவியது. தமிழ் மொழி இலக்கண, இலக்கிய மேம்பாடுடைய தொன் மொழியே எனினும் சமய நூல்கள், தத்துவ நெறி விளக்கங்கள், தெய்வ வழிபாட்டுக்கான மறை மொழிகள் ஆகிய பலவும் வடமொழியிலேயே இயற்றப்பட்டுள்ளனவாகையால், அவை சமக்கிரதத்திலிருந்தே தமிழர்க்கு வாய்த்த செல்வம் என்பதும், வாழ்வை ஈடேற்றும் சமய அடிப்படை விளங்கும் மொழி எதுவாயினும் அம்மொழி (வடமொழி) தமக்கு இன்றியமை யாதது என்பதும், அத்தகு வடமொழி பல்லாற்றானும் உயர் வுடைய தெய்வ மொழியே என்பதும், அதனைத் தாம் கற்காவிடினும் அதன் கருத்து அறிந்து தெளியக் கூடாவிடினும், அதனை நீக்குதல் ஆகாது என்பதும் அவர்தம் நம்பிக்கையாக வேரூன்றி யிருந்தது. சைவ சமயத்தவரும், வைணவ மதத்தவரும், வேறு சில சமயக் கோட்பாடுடையவர்களும், தமது சமயச் சார்புடைய தமிழ்நூல்கள் பலவற்றைப் பெற்றிருப்பினும், அவற்றுக்கெல்லாம் மூலமாகச் சுட்டப்படும் நூல்கள் பல வடமொழியில் விளங்குவது கொண்டு அதனைப் பெரிதும் மதித்ததோடு, தமிழைப் போற்றவும் தவறி நின்றனர்.

ஆராய்ச்சித் திறன், தெளிவு, துணிவு, குறிக்கோள் ஆகிய வற்றால் மறைமலை அடிகளாரை ஒத்து விளங்கிய கா. சு. பிள்ளை அவர்கள், சமயப் பற்றோடு விரவிநின்ற வடமொழி மயக்கத் தைத் தெளிவித்து அதன் ஆதிக்கத்தை அகற்றுதற்கு ஆற்றிய அறிவுப் பணி தனிச் சிறப்புடையதாகும்.

மேலைநாட்டவரின் ஆராய்ச்சிக் கருத்துகளை எல்லாம் ஒப்புநோக்கி உண்மை கண்டு, தமிழர் வாழ்வே தனித்தமிழ் மொழி வழியால் அமைந்த பெருமையுடையது எனவும், சமயத் துறையிலும் தமிழர்கள் வடமொழிக்கு முதன்மையும் உயர்வும் அளிப்பது தகாது எனவும் சான்றுகள் காட்டி அறிவுறுத்தினார். அவர்தம் கருத்துகளில் சில இவை :

''ஆரியர் இந் நாட்டிற்கு [இந்தியா] வருவதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் நாகரிகத்தோடு திகழ்ந்தனர் என்பது சரித்திர ஆசிரியர் முடிவு. தமிழ் நூல் முறைப்படி இடைச் சங்ககாலமாகிய தொல்காப்பியர் காலத்தில்தான் வடக்கிருந்து வந்த ஆரியரின் தொடர்பு தமிழருக்கு ஏற்பட்டதாகும். தலைச்சங்க காலத்தில் [கடல் கொண்ட நாட்டில்] தமிழ் வளர்ச்சி அடைந்தபோது ஆரியத் தொடர்பு [சிறிதும்] ஏற்படவில்லை

''ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய் என்னும் அடியில் [அப்பர் திருத்தாண்டகம்] மொழி வேறுபாடே குறிக்கப்பட்டது என்று கொள்ளினும் ஆரிய மொழி பேசும் மக்கள் வேறு; தமிழ் மொழி பேசும் மக்கள் வேறு என்பது அதனாற் பெறப்படும். உரையாசிரியர், 'பேராசிரியர்' 'ஆரியர் கூறுந் தமிழ்' நகைச்சுவைக்குக் காரணமாகும் என்றதும் காண்க.''

''இப்பொழுதுள்ள வடமொழி நான்மறைகளை வியாசர் வகுத்தமைப்பதற்கு முன்னரே தொல்காப்பியம் முழு முதல் நூலாக இலங்கிற்றென்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிர உரையில் கூறிப் போந்தனர்.

''இப்பொழுதுள்ள சிறந்த வடமொழி இலக்கண நூலாகிய பாணினீயம் கி. மு. 8ஆவது நூற்றாண்டுக்கு முற்பட்டது அன்றாதலின், தொல்காப்பியம் அதற்கும் முற்பட்டது என்பது தெளிவு. ஆராய்ந்து காணுமிடத்து இப்பொழுதுள்ள பண்டை இலக்கண நூல்கள் யாவற்றிலும் பழைமையும் பெருமையும் மிக்கது தொல்காப்பியமே ஆகும்.''

''தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் ஆவணி [திங்கள்] முதலாக மாதங்களை எண்ணுதல் காணப்படுதலின், அப்படி எண்ணும் வழக்கம் வானநூல் ஆராய்ச்சியால் சுமார் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று புலனாவதால் தொல்காப்பியம் அத்துணைப் பண்டைக் காலத்திலேயே தோன்றியிருக்கக் கூடும் என்று எண்ண இடமுண்டு.''

''தமக்கு முன்னிருந்த பல புலவர்களின் கருத்துகளைத் தொல்காப்பியர் தொகுத்துரைத்தாராதலின், அவர் காலத்திற்கு

முன்னேயே பலவகைத் தமிழ் இலக்கியங்களும் தழைத்தோங்கி யிருந்திருக்க வேண்டும். ஆதலால் அறிவு வளர்ச்சியில் எந்நாட்டினருக்கும் முன்னாகத் தமிழர் சீருஞ்சிறப்பும் அடைந் தனர் என்பது போதரும்''

''மருத்துவ நூலும் தமிழர்க்குள் மிக்க நயம் வாய்த்திருந் தது. சித்தர் கண்ட முறையாதலின் சித்த மருத்துவம் என்றே பெயர் பெற்றுள்ள தனிமருத்துவ முறையாக இன்றும் விளங்கு வது கண்கூடு.

''நீதிகளைச் சுருக்கமான மொழிகளில் திட்பமாகக் கூறுஞ் சிறப்புத் தமிழருக்கே உரியது. நீதி கூறும் மொழிகளுக்கு 'முது மொழி' என்ற பெயர் தொல்காப்பியத்துள் அளிக்கப்பட்டது.''

''கணிதத்தில் தமிழ் வணிகர் மிகப் பேர் பெற்று விளங் கினர். 'எண்ணும் எழுத்தும்' - 'எண்ணென்ப ஏனை எழுத் தென்ப' என்னும் தொடர்களில் எண்ணே முதலில் நிற்றல் காண்க. தமிழில் இலக்கண நூல்கள் தனியே செவ்வையாக அமைந்துள்ளன. இயல், இசை, கூத்து என்ற முத்தமிழுக்கும் அகத்தியர் இலக்கணம் செய்ததாகக் கூறுவதுண்டு.''

உணவிலும், உடையிலும், கட்டிடத் தொழிலிலும், ஓவியம், சிற்பம், இசை, கூத்து, செய்யுள், இலக்கணம் முதலான பல் வேறு துறைகளிலும் ஆரியர் தொடர்பு ஏற்படும் முன்னமேயே தமிழர் மேன்மையுற்று வாழ்ந்தனர் என்பதைப் பல்கலைப் புலவர் நிலைநிறுத்தினர். வடமொழி நூல்கள் தமிழரிடையே பெற்ற செல்வாக்கு நியாயமற்றது என்பதையும், வடமொழிக் கலப்பு முறையற்றது என்பதையும் அவர் தெளிவுபடுத்தினர்.

தமிழ்நூல்களிலுள்ள வடமொழிச் சொற்களை ஆய்ந்து கொண்டு போனால், இற்றை நாளிலும் கம்பர் காலத்தில் வடசொற்கள் குறைவாகவும், சங்க காலத்தில் அதிலும் மிகக் குறைவாகவும் காணப்படும். திருவள்ளுவர் நூலில் உள்ள சுமார் பன்னீராயிரம் சொற்களுள் ஐம்பதுக்கு மேற்பட்ட வட மொழிச் சொற்கள் இல்லை என்ப. அவைதாமும் தமிழிலிருந்து வடமொழிக்குப் போயினவோ என்னும் ஐயப்பாட்டிற்கு இடந்

தருவன. பண்டைக் காலத்தில் (சங்ககாலம்) ஆரியக் கலப்பு மிகவும் குறைவாய் இருந்தது. அதற்கு முற்பட்ட காலத்தில், ஆரியக் கலப்பு அறவே இல்லாதிருந்திருக்கவேண்டும்.

கடைச் சங்க காலத்திலே, தமிழ் மக்கள் வட நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பிற தெய்வ வழிபாட்டையும் கைக் கொண்டனர். வடநாட்டினர் கூட்டுறவால் நாற்குலப் பிரிவு (வருணுசிரமம்) தலை காட்டிற்று. ஆரியக் குருமார்கள் தங்கள் மறைகளை (வேதங்களை)த் தமிழ் மக்கள் நம்பும்படி செய்து பார்ப்பனர் என்னும் பெயரையும் மேற்கொண்டனர். சமயச் சார்பான வடசொற்கள் தென்னுட்டில் மிகுதியும் வழங்கலாயின. தமிழர்கள் மணத்தைக் கந்தருவ மணத்தோடு ஒப்பிட்டுக் கூறும் வழக்கமும், வெவ்வேறு வகைத்தாய மணச் சடங்குகள் நிகழ்த்தும் வழக்கமும் ஆரியக் கலப்பின் பயன்களாமென்க.

நாமெல்லாம் இந்துக்கள்—இந்து மதத்தினர் என்னும் தவருன எண்ணமும், இந்து சமயத்தின் மூலாதார மொழி வடமொழியே என்னுங் கருத்துமே தமிழர்கள்மீது சமக் கிரதம் ஆட்சி நடத்துதற்குக் காரணமாக நின்றன. அந்தப் பொய்மையைக் களைய அவர் விளக்கிய உண்மைகள் பல.

இந்து மதம் (ஹிந்து) என்ற பெயர் தமிழிலாவது வடமொழியிலாவது உள்ள பண்டை நூல்களில் இல்லை. உலகத்தில் மதங்களுக்குப் பெயர், வழிபடும் தெய்வத்தை வைத்தாவது, சமயத் தலைவன் (வழிகாட்டி) பெயரை வைத்தாவது பிரமாண (சான்று) நூல்களைப் பொறுத்தாவது அமைவதேயன்றி—மக்களினத்தின் பெயரால் அமைவதில்லை. வழிபடும் கடவுள் சிவமாயின், அம்மதம் சைவ மெனப்படும். தெய்வத்தின் பெயர் விட்ணு (திருமால்) ஆயின் அம்மதம் வைணவம் எனப்படும். கிறித்தவம், புத்தம், சமணம் ஆகிய மதங்கள் சமயத்தலைவர்கள் பெயரால் ஏற்பட்டவை. சொராஸ்டிரர் மதமும், கன்பூசியசு மதமும் அத்தகையனவே. வைதிகம் சுமார்த்தம் என்னும் மதங்கள், வேதம், ஸ்மிருதி முதலிய பிராமண நூல்களின் பெயர் பெற்றன. 'இந்து' என்ற சொல் கடவுள், ஆசிரியன் (வழிகாட்டி) சான்று நூல் (பிரமாண நூல்) என்பவற்றுள் எதன் பெயரையும் பெற்றதாகத் தெரியவில்லை.

'சிந்து' நதிக்கரையில் இருந்தவர்களைச் சிந்து, 'ஹிந்து' என்று பாரசீகரும் கிரேக்கரும் பெயரிட்டு அழைத்தனர். அந்தப் பெயரிலிருந்தே ''இந்தியா'' என்ற பெயரும் ஏற்பட்டது.

இந்தியாவின் பழைய மக்களை, ஐரோப்பியர் 'இந்துக்கள்' என்று அழைத்தனர். 'இந்துக்கள்' என்று குறிப்பிடப்பட்டவர்களுக்குள் பல மதங்கள் இருப்பதை அறியாத மேலை நாட்டினர் இந்துக்கள் எல்லோருக்கும் ஒரே மதம் இருப்பதாக எண்ணி 'இந்து மதம்' என்ற பெயரைத் தோற்றுவித்தனர். 'ஆங்கில மதம்,' 'சப்பானிய மதம்', 'அமெரிக்க மதம்' என்று மதங்கள் இருக்குமாயின் 'இந்துமதம்' என்ற ஒரு மதமும் உண்டெனலாம். அவை இலவாதல் போல 'இந்து' என்றொரு மதமும் இல்லை.

இக்காலத்தில் வடமொழி வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட வைதீகர்கள், தங்கள் மதமே இந்து மதம் என்றும் அதுவே இந்தியாவிலுள்ள எல்லா மக்களுக்கும் உரிய மதம் என்றும் நிலைநாட்ட முன்வந்துள்ளனர். வேதத்தையும் ஸ்மிருதியையும் சான்றாகக் கொண்ட மதமே இந்து மதம் என்றால், அஃது இந்தியாவிலுள்ள பல மதங்களில் ஒரு மதமாகுமேயன்றி அஃது இந்தியர் எல்லார்க்கும் உரிய பொது மதமாகாது.

இந்தியாவில் தோன்றிய புத்தம், சமணம், வைதிகம், சுமார்த்தம், சைவம், வைணவம் முதலிய எல்லாச் சமயங்களையும் இந்துமதம் என்று கூறுதல் பொருந்தாது. இந்தியாவில் உள்ள பல சமயத்தவரையும் கிறித்தவர், முஸ்லீம்கள் உட்பட, இந்தியர்கள் என்று அழைப்பதே பொருந்தும்.''

அதற்குமேலும் அவர் கூறிய விளக்கம், சமய உண்மைகள் வடமொழி வாயிலாகவே உணர்த்தப்பட்டன என்றெண்ணிக் கிடந்த தமிழரைத் தெளிய வைப்பதாகும்.

வடமொழி வேதத்தின் வேறான சிறந்த பிரமாணங்களையுடைய, தமிழ் நூல்களையுடைய சைவ, வைணவ சமயங்களை இந்துமதம் என்று கூறுதல் அறிவுக்குப் பொருந்துவதில்லை.

வேத வாக்கியங்களுக்குச் சைவத்திற்கும் வைணவத்திற்கும் ஏற்ற முறையில் பொருள் கொள்ளுதல், பைபிளுக்கும்

திருக் குரானுக்கும், சைவ, வைணவப் பொருள் கொள்ளுதல் போலாகும். வேதத்திலும் உபநிடதங்களிலும் சிற்சில இடங்களில் சைவ, வைணவக் கருத்துகள் காணப்படுதல் பற்றி அவற்றைப் பிரமாணமாகச் (சான்றாக) சைவர்களும் வைணவர்களும் கொள்ளுதல் பொருத்த மின்றாம்.

தமிழ்ச் சைவ, வைணவ சமயங்கள் அடிப்படையில் ஒத்த கருத்துடையன. அது தொல்காப்பியம், திருக்குறள், பரிபாடல் முதலிய சங்கநூலாராய்ச்சியாலும் தேவார, திருவாசக, திருவாய் மொழி, திருமொழி ஆராய்ச்சிகளாலும் நன்கு புலனாகும்.

தமிழ்நாட்டிலுள்ள சைவ, வைணவக் கோயில்களெல்லாம் தமிழருக்கே உரியனவாம். வைதீகர்கள் (வடமொழிச் சார்பால்) கோயில் வழிபாட்டின் பகுதிகளுக்கு வைதீகத் தொடர்பும் பொருளும் கூறுதல் வழக்கம்.

இனிக் கோயில்களில் உள்ள (தமிழ்நெறி உடன்படாத) ஆரியச் சார்புகள் யாவை எனில் தமிழ்க் குருக்கள் தம்மை ஆரியராய் (மேல் சாதியாய்) எண்ணிக் கொள்வதும், வருண (சாதி) வரம்புகள் பற்றி இன்னினார் இன்னின்ன இடத்தில் நிற்க வேண்டும் என்பதும், தாழ்த்தப்பட்டவர்க்கு இடம் (அக் காலத்தில்) அளிக்காமையும், பரிசாரகம் முதலிய தொண்டுகள் சுமார்த்தரால் செய்யப்படுவதும், வடமொழி வேத பாராயணம் முதலியவையும் வேதச் சார்பான ஓமச் சடங்குமாம் என அறிக. மேலும் அவர் கூறுவது இது: ''தமிழர் கோயில்களில் சமய ஆசாரியர்கள் தமிழிலேயே பாடி இறைவனை வணங்கியது போலத் தமிழிலேயே பூசனை, துதிகள் எல்லாம் நடைபெற லாயின. கோயிற் பணத்தைப் பிறமொழிப் பாராயணத்துக்கும், பிறமொழியில் பூசனை முறைகள் கற்பிப்பதற்கும் செலவு செய்தல் கூடாது.''

இவ்வாறு தமிழர்களிற் பெரும்பாலோர் கொண்டிருந்த சமய நம்பிக்கையோடு ஒட்டி, உறவாடி, வேர்விட்டுத் தழைத்து நின்ற சமக்கிரதத்தின் ஆதிக்கத் தளையை அறுத்தெறிந்தார் பல்கலைப் புலவர். கா. சு. பிள்ளை எனில்—அவர்தம் தமிழர் சமயக் கொள்கை தந்த விழிப்புணர்வு மங்கலாமோ?

தனித்தமிழர் மரபு போற்றிய நாவலர் பாரதியார்

தமிழின் வழிவந்த தனிக் கொள்கைகளையும், தமிழர் நாகரிக உயர்வினையும் பல்வேறு சான்றுகளை ஆராய்ந்து எடுத்துக் கூறி நிலைநிறுத்திய தனிப் பெருமை பசுமலை நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கட்கு உரியதாகும்.

கல்லூரியில் மறைமலை அடிகளாரின் மாணவராகப் பயின்று, தொழிலில் வழக்கறிஞராக வளர்ந்து, ஆர்வத்தால் தமிழ் அறிஞராய்ச் சிறந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின்

தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்து, எப்பொருளையும் நுண்ணி தின் ஆராயும் திறனுடையராய் உயர்ந்து, எவ்வெவர் தம் கொள்கை மாறுபடக் காணினும் கடா விடைகளான் அவற்றைத் தகர்த்து, உண்மை ஒளியினுல் தமிழர்தம் மயக்கறுத்துத் தமது கோட்பாடு நிறுவும் வீறுடன் விளங்கினுர் அவர்.

அக்காலத்தில் எத்துறை நோக்கினும், அத்துறை ஒவ்வொன்றிலும் தமிழ்மொழியினும் வடமொழியே முன் வைக்கப் பட்டுத் தமிழ்ச் செல்வமெல்லாம் வடமொழியினின்றும் பெயர்க் கப்பட்ட கடன் பொருளே என்னும் கருத்து வலிபெற்றுத் தனிப் பெரும் புகழுடைய தமிழ்ப் புலவரெல்லாம் ஆரியக் கால் வழியினரே என்னும் கட்டுக் கதைகள் பரவி நின்று, தமிழுடன் பிறவாததோர் இழுக்குத் தமிழ்மீது ஏற்றப்பட்டிருந்தது.

தமிழகத்துப் புலவர்கள் பலரும் இதனை உணர மாட்டா தவராய் இந்தப் பொய்மைக்குத் தலை வணங்கி வாய்பொத்திக் கைகூப்பி நின்றதனைக் கண்டு மனம் பொருது அந்தக் கட்டுக் கதைகளைச் சுட்டிக் காட்டி விட்டெறியுமாறு முழங்கியவர் நாவலர் பாரதியார்.

தமிழ் மறை கண்ட வள்ளுவனையும் அவன் புகழ் பொருது, ஆரிய மறையோனுக்கு மகனுக்கத் தாழ்குலப் பெண்ணே தாயெனக் கற்பித்த மடமையையும், தமிழ் மாட்சி உணர்த்தும் தொல்காப்பியனை ஆரியப் பார்ப்பனுக்கியதோ டமையாமல், அவரை, இல்லா அகத்தியருக்குப் பொல்லா மாணுக்கராக்கிய புனை சுருட்டையும் பொடிபடச் செய்தவர் பாரதியார்.

சேரர் தாய முறை இதுவெனக் கண்டுணர்த்தி, சிலப்பதி காரம் வழங்கிய இளங்கோ அடிகளும் மணிமேகலை அளித்த மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுரும் ஒரு காலத் தவரல்லர் என்பதைத் தெளிவுறுத்தி, தமிழர் வாழ்வின் அகமும் புறமும் இதுவென விளக்கிக் கூறி, தமிழ்இலக்கணங் கூறும் 'உயர்திணை', ஒழுக்கத்தின் வழியதே அன்றிப் பிறப்பின் வழிய தன்று என்பதை நிலைநிறுத்திப் பலப்பல உண்மை விளக்கம் கண்டவர் பாரதியார்.

பழந்தமிழ்ச் செய்யுட் பரவையிலே படிந்து கிடக்கும் அருஞ் சொற்பொருள் நாடி, முத்துக் குளிப்பார் மூச்சடக்கி மூழ்குதல் போல, பலகாலும் மூழ்கி மூழ்கி வெளிப்போந்து முத்துமுத்தான முத்தமிழ்ப் பொருளைக் கைக்கொண்டு வந்து உலகோர் கண்டு மகிழ வழங்குவது அவரது திறனாகும்.

நாவலர் பாரதியாரின் கருத்துரையினைக் காண்மின்: "அளவிட்டு அறிய வொண்ணா அறப் பழங்காலத்துத் தமிழ் நாட்டில் ஆரியத்தின் வேறுபட்ட சீரிய கலைச் சிறப்பும் செம் பொருட் செல்வமும் நிறைந்து சிறந்த தமிழ் வழங்கிற்று என்பது, வரலாறு அறியா இக்காலத் தமிழர் சிலர் ஐயுறினும், ஆரிய நூல்களும் பிற அயன்மொழிச் செய்யுட்களும் நற்சான்று கூறி வற்புறுத்தல் உண்மையாகும். எனவே, ஆரியர் இங்கு வருவதற்குப் பலப்பல நூற்றாண்டுகட்கு முன்னரே இந்நாட்டில் செல்வமும், புகழும் சிறக்க வாழ்ந்தவர் தமிழர்; அறனறிந்து மூத்த அறிவும் அகன்றாழ்ந்த அறிவு நூல் வளமும் நிறைந்து நின்றவர்; ஊழையும் உப்பக்கம் காணும் உலைவிலா ஊக்கமும், திரைகடலோடியும் திருவினைத் தேடித் தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்து மகிழும் ஆக்கமும் படைத்தவர். ஒழுக்கமே உயிரினும் ஓம்பற்குரியது என உணர்ந்து தம் மொழியியல் முறையிலும், வழக்கொடு செய்யுள் வகைப்படு பொருள் வரலாறுகள் அனைத்தினும் திணை வகுத்து, உயரும் வாழ்க்கையை உவந்து கொண்டவர்".

அத்தகைய பழைய தமிழரின் வாழ்க்கை நெறி, ஒழுக்க நெறி, அடிப்படை வழக்கு முறை, குறிக்கோள்கள், நூன்மரபு, மொழி மரபுகள் இவற்றை உள்ளவாறு இன்று நம்மவர் ஆய்ந் தறிய விரும்புவது இயல்பாகும்.

அவ்வாராய்ச்சிக்கு ஓரளவு உதவுவன பண்டைச் சான்றோர் செய்யுட்களேயாம். முதற்பெரு நூல் பல நீரிலும், நெருப் பிலும், போரிலும் அழிந்து போயின. எஞ்சிய சிலவும் துஞ்சிய நம்மவர் மடியும் மறப்பும் மடிய விட்டன. கபாடமுண்ட கடல் கோளில் தப்பிப் பிழைத்தது தொல்காப்பியன் நூல் ஒன்றே யாகும்.

அத்தகைய தொன்னூல் ஆசிரியனைக் குறித்து எழுந்த கற்பனையையும் அதன் விளைவையும், தொல்காப்பியன் குறித்து ஆராய்ந்து எழுதுமிடத்துப் பாரதியார் இவ்வாறு சுட்டுகிறார்:

"பழங்காவியக் குடியினனான திரண தூமாக்கினி எனும் பார்ப்பனன் இந்நூல் இயற்றினன் எனும் கட்டுக்கதை வட நூலிலும் ஆதார மற்றதும் அறிவால் மறுக்கப் படுவதுமான பொய்க்கதை. இவ்வம்புக் கதை வள்ளுவனுள்ளிட்டு நல்ல தமிழ்ப் புலவர் எல்லாரும் ஆரியரெனக் கூறித் தமிழரைப் பழிக்கும் பார்ப்பன மாக்களின் குறும்பின் விளைவாகும்."

தொல்காப்பியன் முதலான பெரும் புலவர் மட்டுமே அன்றி, தமிழ்க் கடவுளரும் வரலாறு திரிந்து புதுவடிவம் பெறு தற்கு ஆரியப் புராணக் கலவை காரணமாகும் என்று கண்ட பாரதியார், 'முருகன்' நிலை குறித்து இரங்கிக் கூறுவது இது:

"தனிமுதற் கடவுளான தமிழ் முருகனை, ஆரிய தேவ குமாரனுக்கிச் சுப்பிரமணியன் என்று தீட்சா நாமகரணச் சடங்கும் செய்து, தேவ சேனாதிபதிப் பதவியும், தெய்வயானைத் திருமணமும் தந்தபின், குறவள்ளி பால் அறம் திறம்பாக் கடவுட் காதலுடையானைக் கருகாம லோலன் ஆக்கிப் புதிய பெருந்திணைக் கோவைகளும், காமத்து மிகுதிற உலாக்கள், சிந்து கீர்த்தனைகளும், திருப்புகழ் முதலியனவும் பெருகின." இவ்வாறு கடவுளின் மணவாழ்வே களங்கத்திற்கும் காமத் திற்கும் இரையாக்கப்பட்டது எனில், மக்களின் மணநிகழ்ச்சி மட்டும் தப்புமோ? கண்ணகி திருமணங் குறித்த ஆராய்ச்சியில், திருமண முறைபற்றி அவர் குறிப்பது இது:

"கரண (சடங்கு) வகை இதுவெனத் தமிழ் நூல் எதுவும் வரையறுத்திலது. காலந்தோறும் கொள்கைகள் மாறும். அவ் வழிக் கரணமும் பல திறப்படலாம். எனினும் தொன்று முதற் சான்றோர் நன்றெனக் கொண்ட, முளைப் பாலிகையும், மங்கல மடவார் மலரொடு வாழ்த்தும் மாலை மாற்றும் எங்கும் என்றும் தமிழர் திருமணங்களில் நின்று பயிலும். அம்மி மிதித்தலும், ஏழடி நடத்தலும் மறையோர் மன்றலுக்கே இன்றியமை யாதன".

இவ்வாறு ஆரியத் தொடர்பு மிகுதியால் ஏற்பட்ட விளைவை நாவலர் பாரதியார் விளக்கி உரைப்பது காண்க :

"சென்ற 1500 ஆண்டுகளாக ஊறியேறிய புதிய ஆரியக் களியால் தமிழர் தமிழையும் மறந்து முன்னோர் பெருமையும் உரனும் துறந்து பிறர் நகைப்புக்கு ஆளாயினர். உலகமெல் லாம் நெட்டிருள் நீங்கி வெட்டென விடிந்து அறிவொளியேறும் இக்காலத் தமிழ் இளைஞரும் நாட்காலை தூய காற்றைச் சால மோப்பாராயினர். களித்த ஆரியம் புளித்த பின், அதில் அரு வருப்பும் தமது பழந்தமிழ்த் தூய வாழ்வினை மீள மேற்கொள்ளும் பெருவிருப்பும் ஒருங்குணர்வாராயினர். இப் புதிய நன்முயற் சிக்குப் பழைய நூல்களே துணையாமாதலின் முன் மறந்து துறந்த செய்யுட்களைத் தேடத் தொடங்கினர். துருவிக் கண்டு உருவும் செல்லரித்த சுவடிகளைத் துடைத்துப் புதுக்கித் தம் முன்னேற்றக் கருவியாகக் கருதுவர்."

செந்தமிழில் வடசொல் கலத்தல் குறித்து நாவலர் பாரதியார் எழுதுமிடத்து வரன் முறை கடந்த ஆரியக் கலப்பை விளக்கியுள்ளார்.

"அப் பழங்காலச் சிறப்பொளி மிளிரும் தனித்தமிழ் மண மலர் நனிகமழ் இலக்கியம் பல உள. பின்னர்ப் பன்னாளும் தன்னொடு பழகிய ஆரியர், யவனர், சோனகர்போல் பலர் பிற மொழி உறவினை விளக்குங் குறிகளும் தமிழில் செறியக் காணு வோம். தமிழரொடு பழகிய பிறமொழியாளருள் நெடுந் தொடர்பு உடையவர் வடபுல ஆரியர்.

மதம், கலை, அறிவியல் வாழ்க்கைத் துறைகளில் நாளுங் கலந்து இருவரும் உறவுகொள நேர்ந்ததால், ஆரியச் சொற்கள் அவசியம் இன்றியும் அளவிறந்து தமிழில் செய்யுள், வழக்கு எனும் இரண்டிலும் விரவிப் பெருகலாயின. துவக்கத்தில் வந்த வடசொல், தமிழின் எழுத்தியலுக்கு ஏற்ப உருவம் மாறியும், மொழிமரபு தழுவியும், மருவியும், திரிந்தும் அருகி ஆங்காங்கே அறிஞரால் மட்டும் ஆளப்பட்டன. பிறகு ஆரியர் (வடமொழி வல்லார்) தமிழில் கவிகள் புனையவும் வடநூற் கதைகளை மொழி

பெயர்த்துதவவும் முயன்றனர். அதனுல் நாளடைவில் எண்ணிறந்த வடசொற்கள் தமிழொடு கலந்தன. எனினும் நெடுங் காலம் தமிழில் இலக்கண அமைதியும் மரபும் மாருதிருந்தன. காலம் கழியக் கழிய வடநூல் வல்ல பார்ப்பனரோடு சமணரும் தத்தமக்கினிய வடசொற் றொடரையும் தமக்கு எளிய அம் மொழி நூல் முடிபையும், மரபு கடந்து தமிழில் முடைந்து மகிழ்வாரா யினர். தமிழ் மரபுணர்ந்து பேணுத வடநூல் வல்ல உரைகார ராலும் [தமிழ் இலக்கண இலக்கியங்கட்கு உரை எழுதியவர் களுட் சிலர்] இத்தகவிலா வழக்குப் பெருகி, தமிழ் ஒரு தனி மொழி ஆகாது என இகழும் பிரயோக விவேகம், இலக்கணக் கொத்துப்போற் சில நூல்களும் எழுந்தன.

அன்றியும் தராதரமின்றித் தத்தம் சமய, புராணக் கதை களைத் தமிழ்ப் பழம் பாட்டொடும் உராயப் பரப்பியும், இராம கதைகளைக் குருகுலச் சாதிகளோடு புகுத்துப் பெருக்கியும் கவிகள், காவியங்கள் புனையப் பெற்றன. கம்பர் இன்கவிக் கருவூலத்தோடு, தலபுராணப் பெருங் குப்பையும் குவியலாயின. அருந்தமிழ்க் கூத்தும், பொருநர் (நடிகர்) கலையும் மறைய லாயின. பண்ணும் பாட்டும் எண்ணுவாரின்றி இகழப் பெற்றன. இயல், இசை, நாடகத் தமிழில் முதலது மாறியும், மற்றவை இரண்டும் மறக்கப் பெற்றும், பெயரளவல்லால் பழைய வழக் கிழந்து மாறவும் காண்கிரேம். இன்னும் உலக வாழ்வினில் உவர்ப்பை ஊட்டி, வினைப்படும் முயற்சியில் வெறுப்பை விளைத்து மகிழ்வையே இகழும் தகவிலாக் கவிதைகள் தழைக்கலாயின.

இவ்வாறு ஆரியக் கலப்பால் தமிழ்மொழி வளத்திலும், தமிழர் வாழ்விலும் விளைந்த குறையையும், குற்றத்தையும் விளக்கிய நாவலர் பாரதியார், தமிழ் இலக்கியத்தின்,—செய் யுளின்—சிறப்பையும், வடமொழி இலக்கியப் பரப்பின் தரத்தை யும் விளக்கக் கூறியது இது :

''தமிழ்ச் சங்கப் பழம் பாடல்கள் அல்லது நூற்றொகுதிகள் யாவும் அகம், புறம் என்னும் இரு பெரும்பிரிவில் அமைந் தவை. 'அகம்' என்பது காதல் உள்ளப் பாங்கினையும், அதன் பிற சார்புகளையும் வெளிப்படுத்தி யமையும் செய்யுட்களை முறை

யால் வரைந்து காட்டுகிறது. அது போன்று, 'புறம்' என்பது இல்லின் புறத்தனவாகும், மக்கள் ஊதியங்கள் எல்லாவற்றையும் பற்றிய பாடல்களின் முழு எல்லையைப் பற்றியதேயாம்.

சமக்கிரத இலக்கியப் பரப்புள், செய்யுட்கள் யாவும், தர்ம, அர்த்த, காம, மோட்சங்களாய நான்கு புருடார்த்தங்களுள் ஒன்றையோ, சிலவற்றையோ விரித்துரைப்பன ஆகும். இவ் விதிதான் சமக்கிரதச் செய்யுள் இலக்கியங்களின் எல்லாப் பகுப்புகளுக்குள்ளும் நன்கு வற்புறுத்தப் பெற்றும், கையாளப் பெற்றும் உள்ளது. முறையானே எச் செய்யுளும் புருடார்த்தப் பகுப்பில் ஒன்றுள் அல்லது சிலவற்றுள் அடக்கப் பெறலாம். இவ்வாறே பழந்தமிழ்ச் சங்கப் பாட்டுகளும் இந்நூல் பகுப்புட் பட்டுப் பொருந்தித் தோன்றுமாறு வகைப்படுத்தப்படலாம். ஆனால், மக்கள் ஊதியங்கள் எல்லாவற்றையும், ஒருவன் அக வாழ்க்கை அல்லது தனிநல வாழ்க்கை, புறவாழ்க்கை அல்லது பொதுநல வாழ்க்கை என்னும் இரு பகுப்புட் படுத்தும் தமிழர் வழக்கே பெரிதும் இயற்கையதாகவும் அறிவிற்கும் பொருத்த மானதாகவும் தோன்றுகின்றது. சமக்கிரத நாற்பிரிவுகள் அளவை நெறியாற் சிறிது குறைபாடுடையனவாகத் தோன்றும். எழுத்துக் கல்வி அல்லது கலையறிவு தன்னியல்பில் இந் நான் கனுள் முற்றும் முறையே அடங்காததாகவும், அர்த்தம் அல்லது காமத்தை யொக்க இத்துணை கருதற்குரித்தாகவும், முதன்மைத் தாகவும் கொள்ளப் பெறவில்லை. இதற்கு மாருக, இந்தச் சமக் கிரதப் பிரிவுகள் [நான்கும்] தமிழிலக்கண ஆசிரியர்கள் உயர்த் துரைக்கும் இரு பெரும் [அகம்—புறம்] பிரிவுகளுள் மாறு பாடின்றி எளிதில் அடங்கும். இதுவே தமிழர், சமக்கிரதக் காரர் இவர்கள் தம் இலக்கியங்களுள் தாம் தாம் கொள்ளும் பழமையான முதல் வேறுபாடாகத் தோன்றுகிறது.''

இவ்வாறு தமிழர் தம் பரந்து விரிந்த தமிழ்ச் செய்யுட் கடல், குறிக்கோள் அடிப்படையில் பாகு படுத்தப்பட்ட முறையும், வடமொழி இலக்கியப் பரப்பு குறிக்கோள்வழி பாகுபடுத்தப் பட்ட முறையும் அடிப்படை வேற்றுமை உடையதாவதை அவர் தெளிவு படுத்தினர்.

மேலும், 'இலக்கியம்' என்னுந் தமிழ்ச் சொல்லே 'லட்சியம்' என்னும் வடசொல்லின் திரிபு என்றொரு கருத்தும், அதனால் தமிழ் இலக்கியச் சிறப்புடைய மொழி ஆகாது என்றோர் எண்ணமும், தமிழில் உள்ள செய்யுட்கள் எல்லாம் தனித்தனிப் பாட்டுகள் என்னும் அளவிலேயே ஏற்கப் படுவதற்குரியன என்னும் மயக்கமும் பலரிடையே நிலவிற்று அந்நாள்.

அது குறித்து நாவலர் பாரதியார் நவின்றதனைக் காண்க:

''இடைக்காலத்தில் தமிழர்கள் தன்மதிப்பிழந்து பெயர்கள் முதலாயின பிறமொழியில் இருந்தால்தான் பெருமை என எண்ணி, மக்கள்பெயர் முதல் மரப்பெயர் ஈறாக உள்ள எல்லாப் பெயர்கட்கும் வடமொழிப் பெயர்களையே இட்டு வழங்கலாயினர்.

இலக்கியம் என்பது 'லட்சியம்' என்ற வட சொல்லின் திரிபு என்பர். தமிழில் 'கங்காரு' என்ற சொல் வந்து வழங்குவதுபோல் இரவல் கொண்டதென்பர்.

இலக்கியத்தைச் செய்யுள் என்பர் பண்டைத் தமிழர். ஆங்கிலேயர் லிட்டெரச்சர் என ஆங்கிலத்தில் சொல்வர். எழுதப் பட்ட எல்லாவற்றையும் அது குறிக்கும். பாட்டு, உரை எவையாயினும் ஒரு பொருள் பற்றி விரித்தெழுதும் அனைத்தையும் தமிழில் செய்யுள் என்பர். வடமொழியில் லட்சியம் என்ற சொற் பொருள் நோக்கின் செய்யுளின் பொருளோடு வேறுபடும்.

'லட்சியம்' என்பதற்கு நோக்கம் என்ற பொருளைக் கொண்டு ஒரு நோக்கத்தோடு எழுதப்படுவதே இலக்கியம். அஃதும் புருடார்த்தம் நான்கைக் கருதிச் செய்யப் படுவதேயாக இருக்கும். 'மக்கள் உணர்ச்சியினை வெளிப்படுத்துவன வெல்லாம் இலக்கிய மல்ல' என்பர் வடவர். இப்பொருள் பொருந்தாது என்னை? புருடார்த்தம் நான்கை மட்டும் லட்சியமாகக் கொண்டு ஏனையவற்றை லட்சியமாகக் கொள்ளாதிருத்தல் சிறப்பன்று. தவிர ஏதாவது ஒரு கருத்தை நிலைநாட்டச் செய்வது இலக்கியமாகாது.

தமிழர்கள் இலக்கியம் என்பதைக் குறுகிய நோக்கின்றிப் பரந்த நோக்குடன் "'செய்யுள்' என வழங்கினர். செய்யுளாவது யாது? விழுமிய கருத்துகளை அவர் காலத்தில் சொல்லக் கேட்டவற்றோடு ஒழியாமல், பிற்காலத்தார்க்கும் பயன்படுமாறு எந்த உருவத்தில் (உரை—பாட்டு) செய்யப் படினும் அது செய்யுள்.

இவ்வாறு விளக்கிய நாவலர் பாரதியார், தமிழர்கள் கண்ட சங்கச் செய்யுளும் பிறவுமே உயர்ந்த இலக்கியமாதலையும், தமிழ் இலக்கிய மாட்சியுடைய மொழியாதலையும் புலப்படுத்தி—வட மொழிக்குத் தெண்டனிட்டுக் கிடந்த தமிழ் உள்ளத்தை மயக்கம் நீங்கித் தெளிவடையச் செய்தார்.

புத்துணர்ச்சி பெற்ற தமிழ் உள்ளம் வடமொழிக் கற்பனைக்கு அடிமைப்படுமோ? கற்பிக்கப்பட்ட அடிமைத்தனத்தி லிருந்து தமிழ்ப்புலவோர் விடுதலை உணர்வுபெற வழிகண்ட நாவலர் பாரதியாரை நாடு மறத்தலுங் கூடுமோ?

சங்க இலக்கியங்களைச் சாகாது வழங்கிய டாக்டர் உ. வே. சா.

கடந்த நூற்றாண்டில், பழந்தமிழ்* ஏடுகள் பலவும் அச்சாகாத நிலையில், தமிழ் கற்கப் புகுவார் எத்தகைய ஏடுகளை மட்டுமே பயின்றார்கள் என்பதை அறிந்தால் தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த சூழல் புலப்படும்.

டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் வாழ்க்கை வரலாற்றிலிருந்து இது விளங்கும். அவர், குடந்தையில் தமிழாசிரியர் பணி பூண்ட தொடக்க நாட்களில் அங்குத் தமிழ்ப்பற்று மிக்க சேலம் இராமசாமி முதலியார் அவர்கள் நீதிபதியாகத்

திகழ்ந்தார். முதன் முதலாக நீதிபதியைக் காணச் சென்ற போது அவர் கேட்டதற்கிணங்கத் தாம் கற்ற இலக்கியங்களின் பட்டியலை ஐயர் விளக்கினார்.

'குடந்தை அந்தாதி, மறைசை அந்தாதி, புகலூரந்தாதி, திருவரங்கத் தந்தாதி, அழகரந்தாதி, கம்பரந்தாதி, முல்லையந் தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை, எனத் தொடர்ந்து அந்தாதிகளில் இருபது, கலம்பகங்களில் இருபது, கோவைகளில் பதினைந்து, பிள்ளைத் தமிழில் முப்பது, உலாக்களில் இருபது, தூதுகள் பல என ஐயர் கூறினார்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த நீதிபதி, 'இதெல்லாம் படித்து என்ன பயன்? என்று வினவ ஐயர் மேலும் தொடர்ந்து,

திருவிளையாடற் புராணம், மயூரப் புராணம், குற்ருலப் புராணம் முதலான புராண வரிசையை முடித்து, நைடதம், பிரபுலிங்க லீலை, சிவஞான போதம், சிவஞான சித்தியார் உரை முதலானவற்ருேடு, கம்ப இராமாயணத்தை ஒரு முறைக்கு இரு முறை படித்திருப்பதாகத் தெரிவித்தார்.

இந்தப் பட்டியலைக் கேட்டும் நீதிபதி மகிழாமல் ஐயரைப் பார்த்து, 'சீவக சிந்தாமணி படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக்கிறீர்களா? சிலப்பதிகாரம் படித்திருக்கிறீர்களா?' என்று கேட்க, ஐயரோ, 'புத்தகம் கிடைக்கவில்லை, கிடைத்தால் அவற்றையும் படிக்கத் துணிவுண்டு' என்று பதிலளித்தார். அவரது உள்ளத்திலோ 'என் ஆசிரியரே படித்ததில்லை; நானும் படித்ததில்லை. இத்தகைய புத்தகங்களைக் கூட நான் கண்ணால் பார்த்ததில்லையே' என்னும் நினைவு அப்பொழுதுதான் பிறந்தது என்று தோன்றுகிறது.

''பிரபந்தங்கள் இயற்றுவதிலே புகழ் பெற்ற மகாவித்து வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடமும் வேறு பல தக்க தமிழ்ப் பெருமக்களிடமும் பாடங் கேட்டவரும் தமிழ் கற்கும் ஆர்வம் மிக்கவரும் ஒரு கல்லூரி ஆசிரியருமாக விளங்கிய ஐயரவர்களே கற்கக் கூடியதாக வாய்த்திருந்த ஏடுகள் எவை

ளவை என்பதிலிருந்து அக் காலத்தில் (கி.பி. 1880) தமிழ் இலக்கியம் பரவியிருந்த நிலை தெளிவாகின்றதன்றோ?

அந்த உரையாடலைத் தொடர்ந்து சேலம் இராமசாமி முதலியார் ஐயரவர்களிடம் சிந்தாமணித் தாள் ஏடு ஒன்றை அளித்ததோடு, 'சிந்தாமணி மிகச் சிறந்த நூல். கம்ப இராமாயணத்தின் கவிதை நெறிக்கெல்லாம் இந்தக் காவியமே வழி காட்டி. இதைப் படித்துப் பொருள் கண்டு விளக்கினால் உங்களுக்கும் நன்மை, எனக்கும் இன்பம் பயக்கும்' என்று தெரிவித்தார். அது முதலாகவே சிந்தாமணியைப் படித்தலில் அரும்பிய விருப்பம், பொருள் காணும் முயற்சியாக மலர்ந்து, பல படிகளை ஒப்பு நோக்கிச் சரியான பாடம் காண்பதாகக் காய்த்து, புதிய அச்சுப் பதிப்பாகக் கனிந்தது என்று தெரிகிறது.

சேலம் இராமசாமி முதலியாரிடத்தே ஐயருக்குத் தொடர்பு ஏற்படாதிருக்குமாயின், அக் காலத்தில் பழந்தமிழ் இலக்கியங்களின் அருமை அவருக்கு விளங்கி யிருக்க வேறு ஏதுவில்லை என்று ஐயருடைய எழுத்தால் தெரிய வருகிறது. "அவருடைய நட்பினால் என்னுடைய வாழ்க்கையில் ஒரு புதுத் துறை தோன்றியது. தமிழ் இலக்கியத்தின் விரிவை அறிய முடிந்தது. அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, கோவை முதலிய பிரபந்தங்களிலும், புராணங்களிலும் தமிழின் இன்பங் கண்டு மகிழ்வதோடு நில்லாமல், பழமையும் பெருமதிப்புமுடைய தண்டமிழ் நூல்களில் பொதிந்து கிடக்கும் இன்றமிழ் இயற்கை இன்பத்தை மாந்தி, நான் மகிழ்வதோடு பிறரும் அறிந்து இன்புறச் செய்யும் பேறு எனக்கு வாய்த்தது" என ஐயரவர்கள் நன்றியோடு மகிழ்ந்து கூறியுள்ளார்.

அக் காலத்தில் வழங்கிய ஏடுகளின் படி கிடைப்பதும் அரிதாக இருந்ததால் ஐயர் பட்ட துன்பங்கள் பல. திருக்குறள் உரையுடன் கூடிய நூல் ஒருவரிடம் இருப்பதை அறிந்து அதைப் பெறுவதற்குப் பல மைல் நடந்திருக்கிறார். இராமாயணம் ஏழு காண்டங்களும் மாயூரத்தில் ஒரு கடையில் இருந்ததைக் கண்டு, உடனே அதன் விலைக்காகும் தொகையைப் பெற்றுவரத் திருவாவடுதுறை வரை சென்று திரும்பியிருக்கிறார்.

அரிதான ஏடுகளுங்கூட முறையாக அழிக்கப்பட்டு வந்த விதத்தையும் வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ளார். அவர் பழைய தமிழ்ச் சுவடிகளைத் தேடிச் சென்றபோது வரகுண பாண்டியர் வைத்திருந்த ஏடுகள் கரிவலம்வந்தநல்லூர் ஆலயத்தில் இருக்கின்றன என்று கேள்வியுற்று வினவியபோது, அறங் காவலர் குழுவைச் சேர்ந்த ஒருவர்,

''குப்பை கூளமாகக் கிடந்த சுவடிகளை நான் பார்த்திருக் கின்றேன். அந்தக் கூளங்களையெல்லாம் என்ன செய்வ தென்று யோசித்தார்கள். ஆகம சாத்திரத்தில் சொல்லி யிருக்கிறபடி செய்து விட்டார்கள்'' என்று கூறினார். அதைக் கேட்டு ஐயருக்கு ஒன்றும் புரியவில்லையாம். ''என்ன செய்து விட்டார்கள்'' என்று பதற்றத்துடன் கேட்டாராம்.

''பழைய ஏடுகளைக் கண்டகண்ட இடங்களிலே போடக் கூடாதாம் அவற்றை நெய்யில் தோய்த்து ஹோமம் செய்துவிட வேண்டுமாம். இங்கே அப்படித்தான் செய்தார்கள்'' என்றார் அவர்.

'ஆ' என்று தம்மையும் மறந்து அலறினார் ஐயர்.

''குழி வெட்டி, அக்கினி வளர்த்து, நெய்யில் தோய்த்து அந்தப் பழைய சுவடிகள் அவ்வளவையும் ஆகுதி செய்து விட் டார்கள்'' என்றார் அவர்.

''இப்படி எங்காவது ஆகமம் சொல்லுமா? அப்படிச் சொல்லியிருந்தால் அந்த ஆகமத்தை அல்லவா முதலில் ஆகுதி செய்ய வேண்டும்!'' என்று கோபம் கோபமாக வந்தது என்று ஐயரவர்கள் வேதனையை வெளியிடுகின்றார்.

ஆகமத்தின் பெயரால் வளர்ந்த அறியாமை நெய்க்கு மட்டுமேயன்றித் தமிழுக்கே அழிவை உண்டாக்கியதை இது காட்டும். ''பழைய சுவடிகள் சிதிலமான நிலையில், அவற்றைப் புதிய படி எடுத்துக் கொண்டு பழையவற்றை ஆகுதி செய்வது வழக்கம். பிற்காலத்து மேதாவிகள், படி செய்வதை மறந்து விட்டுச் சுவடிகளைத் தீக்கு இரையாக்கும் பாதகச் செயலைச் செய் தார்கள். என்ன பேதைமை! இத்தகைய எண்ணத்தால்

எவ்வளவு அருமையான சுவடிகள் இந்த உலகத்திலிருந்து மறைந்தன'' என்றும், ''அது முதல் என் உள்ளத்தில் அமைதி யில்லாமற் போயிற்று. இனி இந்த நாட்டிற்கு விடிவு உண்டா!'' என்றும் எழுதியுள்ளார் ஐயர்.

மற்ருேர் இடத்திற்குச் சுவடி தேடிச் சென்றபோது ஏக்க முற்று அவருக்குக் கிடைத்த பதில் இது :

''எங்கள் வீட்டில், ஊர்க்காட்டு வாத்தியார் சுவடிகள் வண்டிக் கணக்காக இருந்தன. எல்லாம் பழுதுபட்டு ஒடிந்து போய்விட்டன. பயனின்றி இடத்தை அடைத்துக் கொண் டிருந்த அவற்றில் என்ன இருக்கிறதென்று பார்க்கவும் எனக்குத் திறமை இல்லை. அச்சுப் புத்தகங்கள் வந்துவிட்ட இக்காலத் தில் இவற்றைச் சுமந்துகொண்டிருப்பது என்ன பயன் என்றெண்ணினேன். ஆற்றிலே போட்டு விடலாமென்றும் ஆடிப் பதினெட்டில் சுவடிகளைத் தேர்போல் கட்டி ஆற்றிலே விடுவது முறையென்றும் சில முதிய பெண்கள் சொன்ஞர்கள். நான் அவ்வாறே ஓர் ஆடிப் பதினெட்டாந் தேதி அவற்றை வாய்க்காலில் விட்டு விட்டேன்''.

இதைக் கேட்டுத் ''தமிழின் பெருமையைச் சொல்லிய சிலர், அது நெருப்பிலே எரியாது நின்றதென்றும், நீரிலே ஆழாமல் மிதந்ததென்றும் பாராட்டியிருக்கிருர்கள். அதே தமிழ் இன்று நெருப்பில் எரிந்தும், நீரில் மறைந்தும் புறக்கணிக்கப்படுவதை அவர்கள் பாராமலே போய்விட்டார்கள். பார்த்து இரங்குதற்கு நாம் இருக்கிருேம்'' எனக் கண்ணீர் விடுகிருர் ஐயர்.

மற்ருெரு கவிராயரிடத்தே சென்றபோது அவர் 'சிலப்பதி காரம் என்று சொல்லக் கூடாது; சிறப்பதிகாரம் என்றுதான் கூறவேண்டும்' என்று உரைத்ததோடு, அதைக் காட்டுமாறு கேட்டபோது 'அவ்வளவு சுலபமாகக் காட்ட முடியுமா? இப்போ தெல்லாம் அவற்றைத் தொடலாமோ! சரசுவதி பூசையில்தான் அர்ச்சனை பண்ணிப் பூசை செய்து எடுக்க வேண்டும்' என்றும் கூறிஞராம். இவ்வாறு பூசா மனேபாவம் வளர்ந்து, அறிவுக்குத் தடை விதித்து அர்ச்சனை என்னும் பெயரால் சுவடிகளை அரித்து வந்ததை இது காட்டும்.

மற்றோரிடத்தில், 'ஏட்டுச் சுவடிகளின் (ஓலை தொடுக்கும்) கயிறுகளை எல்லாம் உருவி எடுத்துக்கொண்டு ஒரு கயிற்றில் பல சுவடிகளைக் கட்டியிருந்தார்கள். சுவடிகளைக் காட்டிலும் கயிறுதான் அவர்களுக்குப் பெரிதாகப்பட்டது. கணக்குச் சுருளைகளும் கம்ப இராமாயண ஏடுகளும் கலந்திருந்தன' என்று ஐயர் கூறுகிறார்.

இவ்வாறு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த பழந் தமிழ் ஏடுகளைப் பதிப்பித்து வெளியிடும் விருப்பம் கொண்ட ஐயரவர்கள், மேற்கொண்ட உழைப்பு சிறிதன்று.

ஏடு தேடும் முயற்சியில் நாடெங்கும் உள்ள கவிராயர் வீடெல்லாம் ஏறி இறங்க வேண்டும். வேண்டிய ஏடு கண்ட போது அதை உரியவரிடமிருந்து பெறுவதும் எளிதாக இராது. ஒரு நூலைப் பதிப்பிக்குமுன் கிடைத்த சுவடியை வேறு பல சுவடிகளோடு ஒப்பு நோக்கிக் காண வேண்டும். அவ்வாறு நெடிய பலப் பல இரவுகள் கண் விழித்திடவும் வேண்டும். ஒப்பு நோக்குமிடத்துப் பாட வேற்றுமை தோன்றின், சரியான பாடத்தைத் தெளிய, உரையும் தெளிய வேண்டும். பழைய உரையுள்ள ஏடெனில் உரையில் ஆளப்பட்டுள்ள எடுத்துக் காட்டுகளை உரிய நூலும் இடமும் காட்டிக் குறிக்க வேண்டும். இவ்வாறு ஒப்பு நோக்கி ஆராய்ந்து மூல பாடம் இதுவெனவும், முறையான உரை இதுவெனவும் முடிவு கட்டிப் பாட வேறுபாடும் குறிப்புந் தந்து அச்சியற்ற முற்படும்போது, அச்சுப்பிழை மலியாதவாறு பரிசீலித்த வண்ணம் இருக்க வேண்டும். அச்சு இயற்றியவுடன் விலைக்கு வாங்கத் தக்காரிடத்தே முன்னமே ஒப்பமும் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வளவு பணியும் இடையூறின்றியே நிறைவேறிடுமா? வரும் இடையூறுகளைத் தாங்கிக் கொள்ளும் உரமும் வேண்டும். இவ்வாறு ஒரு நூலை முற்ற முடித்து வெளியிடுதல் அரிய செயலன்றோ!

ஐயரவர்கள் முதன் முதல் பதிப்பித்த இலக்கியம் சீவக சிந்தாமணி. அதைப் பதிப்பிக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சியின் அருமை அவர் எழுதிய இக் குறிப்பால் உணரலாம். ''பலவகையில் முயன்று தேடியதில் சிந்தாமணி ஏடுகள் இரு பத்து மூன்று கிடைத்தன. அவற்றைப் பார்க்கப் பார்க்கப் பல

உண்மைகள் புலப்பட்டன. பாட பேதக் கடலுக்குக் கரை காணவே முடியவில்லை.

'சுவடிகள் எழுதப் பட்டுள்ள முறையில் இது கொம்பு, இது சுழி என்று பிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியே இராது. 'ர' கரத்திற்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சரபம் சாபமாகத் தோற்றும். சாபம், சரபமாகத் தோற்றும். ஓரிடத்தில் 'சரடு' என்று வந்ததை 'சாடு' என்றே பலகாலம் எண்ணியிருந்தேன். 'தரன்' என்பதைத் 'தான்' என்று நினைத்தேன். 'யானை நாகத்திற் ருேற்றுதலின்' என்று பல ஏடுகளில் காணப்பட்ட ஒருவரி, 'யானை நாதத்தில் தோற்றுதலின்' என்றிருக்க வேண்டுமென்பதை ஒரு படியால் தெளிந்தேன். இடையின 'ர' கரத்துக்கும் வல்லின 'ற' கரத்துக்கும் பேதந் தெரியாமல் தடுக்கி நின்ற இடங்கள் பல. உரை இது, மூலம் இது, மேற்கோள் இதுவென்று தெரியாமல் முட்டுப் பட்ட இடங்கள் பல!

''இவ்வாறு தடுமாறித் தடுமாறிச் சிரமப்படுவதில் எனக்கு அலுப்புத் தோன்றவில்லை. மயங்கித்தவித்துநின்ற பிறகு உண்மை விளங்கும்போது பின்னும் பன்மடங்கு ஊக்கம் ஏற்படும்!''

இவ்வாறு ஏடு பதிப்பிப்பது குறித்து ஐயரே விளக்கி யுள்ளார். சிந்தாமணியை அவர் பதிப்பிக்க முயன்று கொண்டிருந்த காலை, அறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களும் அம் முயற்சியில் ஆர்வமுடையராய், ஐயரைக் கண்டு தம் விருப்பத்தைத் தெரிவித்துத் தம்மிடத்தே அப் பணியை விடக் கேட்டனர். ஐயரவர்களோ தாம் மேற்கொண்டு செய்திருந்த ஆராய்ச்சி முதலானவை வெளிப்படுவதற்கு அதுவே வாய்ப்பு என்று கருதியமையினுல், அதற்கு இசைய மறுத்து விட்டார். எனினும் அப் பெரியார்களிடையே தோன்றிய நட்பும் மதிப்பும் குன்ருது வளர்ந்திட அவ்விருவரும் மேலும் பல நல்ல நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டு ஒருவருக் கொருவர் உறு துணையாகவே வாழ்ந்தனர்.

உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் கி. பி. 1855இல் தஞ்சை மாவட்டம் உத்தமதானபுரத்தில் பிறந்தவர். சிறு

வயதில் திண்ணைப் பள்ளியில் ஏடும் எழுத்தாணியுங் கொண்டு பயின்றவர். தந்தையார் இசைப் பயிற்சி உடையவராதலின், அவருக்கும் தமிழ்ப் பாட்டுகளை இசையுடன் பாடும் பயிற்சி ஏற்பட்டது. இசையில் ஏற்பட்ட ஆர்வத்தினும் தமிழிலேயே அவரது ஆர்வம் மிகுந்தது. அவரது பதினேழாம் வயது வரை தமிழ்ப் புலவர் பலரிடம் பயின்று, பின்னர் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களை அடைந்து பல நூல்களைப் பாடங் கேட்டார். அவ்வாறு கற்குங் காலத்து, ஆசிரியர் பல பாடல்களைப் புதியனவாக இயற்றிக் கூற அவற்றை அவ்வாறே ஓலைகளில் பிழையின்றி எழுதி வந்துள்ளார். மகாவித்துவான் மறைந்த பின்னர், திருவாவடுதுறை மடத்துத் தலைவராக விளங்கிய சுப்பிரமணிய தேசிகர் அவர்களிடமும் பல நூல்களைக் கற்றுத் தெளிந்தார். அக் காலத்தில் குடந்தைக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக விளங்கிய தியாகராயச் செட்டியார் அந்தப் பணியினின்றும் விலகிக் கொண்டபோது, அவர் உதவியால் கி. பி. 1880இல் ஐயர் அப் பதவியில் அமர்ந்தார். அதனால் அவரது பேரும் புகழும் சிறக்கலாயின.

அவ்வாறு கல்லூரி ஆசிரியராக இருந்த காலத்திலேயே, சிந்தாமணி பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கி. பி. 1887இல் அந்நூலை நச்சினார்க்கினியரது உரையோடும் வெளியிட்டுப் பலருடைய பாராட்டுரைகளையும் பெற்றார்கள். ஐயர், ‘சமண சமயத்தினர் அல்லாதவர்’ என்ற கண்கொண்டு, அந்நூல் பதிப்புக் குறையுடைய தாகவே இருக்கும் என எண்ணிக் கண்டனம் செய்தவரும் நாளடைவில் அதன் சிறப்பை உணரலாயினர். இந்த நூலை வெளியிட்டதினால் கிடைத்த பாராட்டும் புகழும் ஊக்குவித்ததனால், தொடர்ந்து சங்க இலக்கியங்களிலே தலையான நூலாக விளங்கும் பத்துப்பாட்டைப் பதிப்பிக்க முற்பட்டார். இரண்டே ஆண்டுகளில் பத்துப்பாட்டையும் நச்சினார்க்கினியர் உரையோடு அச்சிட்டு வழங்கினார்.

பத்துப்பாட்டு என்னும் நூல் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தது ஆதலின், அதன்மூல ஏடுகள் கிடைத்தும் உரையுள்ள ஏடுகளைத் தேடி அவர் பட்டபாடு பெரிதாகும்.

அடுத்து, அவர் சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து, அடியார்க்கு நல்லார் உரையோடும், பழைய அரும்பத உரையோடும் பதிப்பித்தார். அதற்குச் சில ஆண்டுகள் முன்பே சோடசாவதானம் சுப்பராய செட்டியார், சிலப்பதிகாரத்தை அடியார்க்கு நல்லார் உரையோடு பதிப்பித்திருந்தார். எனினும் ஐயர், தம் பதிப்பில் அரும்பத அகராதித் தொகுப்பும், அரிய செய்திகள் குறிப்பும், அரசர், புலவர், நாடு முதலான பெயர்களின் வரிசையும், விளக்க மேற்கோள் அகராதியும், கதைச் சுருக்கமும், ஆசிரியர் இளங்கோவடிகள் வரலாறும் எழுதிச் சேர்க்கப் பட்டதால் இப்பதிப்பு நிறைவுடையதாயிற்று. இப் பதிப்பு வெளியான காலத்து, தமிழ்ப் புலவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை ஐயர் இவ்வாறு குறிக்கின்றார்:

''சீவக சிந்தாமணியும், பத்துப் பாட்டும் தமிழ் நாட்டில் உலாவத் தொடங்கிய பிறகு பழந்தமிழ் நூல்களின் பெருமையை உணர்ந்து இன்புறும் வழக்கம் தமிழர்களிடையே உண்டாயிற்று. அவற்றின் பின்பு சிலப்பதிகாரம் வெளிவரவே பண்டைத் தமிழ் நாட்டின் இயல்பும், தமிழில் இருந்த கலைப் பரப்பின் சிறப்பும் யாவர்க்கும் புலப்படலாயின. 'கண்டறியாதன கண்டோம்' என்று புலவர்களும் ஆராய்ச்சியாளர்களும் உவகைக் கடலில் மூழ்கினர்''.

ஒவ்வொரு நூலையும் பதிப்பித்த போதே பிற நூல்கள் பற்றி அவருக்குக் கிடைத்த குறிப்புகளையும் பிறவற்றையும் அவர் குறித்துக்கொண்டு வந்ததால், அடுத்து வேறு சுவடிகளைப் பதிப்பிக்கும் முயற்சி அவருக்குக் கைவந்ததாயிற்று. அதன் பயனாக 1894ஆம் ஆண்டில் புறநானூற்றைப் பதிப்பித்தார். அடுத்த ஆண்டிலேயே புறப்பொருள் வெண்பாமாலை பழைய உரையுடன் அச்சேறியது. அடுத்த மூன்று ஆண்டுகளில் 'மணிமேகலை' அதன் உரையோடும் புத்த சமயம் பற்றிய விரிவான ஆராய்ச்சிக் கட்டுரையோடும் வெளிவந்தது. பின்னர், பதிற்றுப்பத்து, பரிபாடல் முதலான சங்க நூல்களையும் பதிப்பித்து வழங்கினார். உதயணன் கதைச் சுருக்கம் மற்றும் பல உரைநடை நூல்களும் எழுதினார். அவர் எழுதிய வாழ்க்கை வரலாறு நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டின்

பிற்பகுதியில் இருந்த 'தமிழ்க் கல்வி நிலையைப்' படம் பிடித்துக் காட்டுவதாம்.

சாமிநாத ஐயர் அவர்கள் புலவராய், பண்டிதராய், பதிப்பாசிரியராய்ச் சிறந்த காலத்து 1906இல் 'மகாமகோபாத்தியாயர்' என்னும் பட்டத்தை அரசினரிடம் பெற்ருர். பின்னர், 'தாக்ஷிணுத்திய கலாநிதி' என்னும் சிறப்பையும், சென்னைப் பல்கலைக் கழகம் அவரது தமிழ்த்தொண்டைப் பாராட்டி வழங்கிய 'டாக்டர்' பட்டத்தையும் பெற்றுத் திகழ்ந்தார்.

சங்கத் தமிழ் இலக்கிய நன்மணம் பரவுவதற்கு ஐயரவர்கள் ஆற்றிய தொண்டினைப் பெரிதும் பாராட்டித் தமிழன்பு மிக்க மேல் நாட்டவரான ஜி. யு. போப் அவர்கள் கடிதம் வரைந்துள்ளார். பேராசிரியர் ஜூலியன் வின்சோன் என்னும் பிரெஞ்சு அறிஞரே சிந்தாமணிப் பதிப்பைப் பாராட்டி, பாரிசிலிருந்து மடல் எழுதியுள்ளார். தமிழகத்தில் வாழ்ந்த பல்துறை அறிஞர்களான மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார் முதலான பலர் அவரது பணியைப் பாராட்டியுள்ளனர். ஆம்! ஐயரவர்களின் திருப்பணியும் தாமோதரம் பிள்ளை அவர்களது திருத்தொண்டுமே மேன்மை மிகு சங்கத் தமிழ் நூல்கள் நமக்குக் கிடைக்கச் செய்யக் காரணம் என்ருல் தமிழறிந்த யார்தாம் அவர்களை மறக்கக் கூடும்!

''என்னுடைய வாழ்வின் நோக்கமெல்லாம் பெரும்பாலும் தமிழ்த் தொடர்புடையதுதான். தமிழ் நூல்களை ஆழ்ந்து பயில வேண்டும். கற்றவரிடத்து ஒழுங்காகப் பாடங் கேட்க வேண்டும். கேட்டவற்றைச் சிந்தித்து முறையாகப் பாடஞ் சொல்ல வேண்டும். அதைவிடப் பெரிய உபகாரம் [தொண்டு] வேறில்லை'' என்று அடக்கத்தோடு தமது குறிக்கோளைத் தெரிவித்துள்ள ஐயர் அவர்கள், அந்தக் குறிக்கோள்வழித் தொடர்ந்து பல பத்தாண்டுகள் அரும்பாடுபட்டு அயராது உழைத்து, தமிழ் காக்கும் திருப்பணியில் வெற்றி கண்டுள்ளார். எந்நாளும் உளவாகும் தமிழ் இலக்கியங்களோ அவர்தம் நினைவும் உளதாகும்! வாழ்க தமிழ் காக்கும் திருப்பணி!

பழந்தமிழ் ஏடுகளைப் பதிப்பித்துத் தந்த தாமோதரனர்

இவ் விருபதாம் நூற்றுண்டில் தமிழ் என்று சொன்னலே, முப்பால் வழங்கும் குறளும், முத்தமிழ் முழங்கும் சிலம்பும், மூவாத் தமிழ் இலக்கணமாம் தொல்காப்பியமும், மண நூலாம் சிந்தாமணியும், சங்க இலக்கியச் செல்வங்களாம் எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் கற்றவர் தம் சிந்தையைக் கவர்ந்து நிற்கும். அவர் தம் நெஞ்சம் தமிழின் தொன்மைக்கும், பெருமைக்கும், அருமைக்கும், அழகுக்கும் சான்றுக நிலவும். அவற்றை எண்ணி எண்ணிப் பெருமிதத்தால் துள்ளும்.

சென்ற நூற்ருண்டிலோ எனில் இவை யாவும் ஒளி காணுத வைர மணிகளாய்ப் புதை பொருளாய்ப் புழுதி படிந்த ஏடு களாய் இருட்டறையில் மக்கிக் கொண்டிருந்தன. அக் காலப் புலவர்களும் கவிராயர்களுமே அவற்றின் அருமை உணராது அவற்றைத் தீண்டாமைக்கு ஆட்படுத்திப் புறக்கணித்து நின் றனர். அக் காலத்தில் சமய வழியிலேயே இலக்கியங்கள் போற்றப்படும் நிலை இருந்தமையின் கம்பரும், சேக்கிழாரும், வில்லியும், பரஞ்சோதியும், நம்மாழ்வாரும், நால்வரும், அருண கிரியும், ஆண்டாளும் அனைய புலவர்களே நினைவு கொள்ளப் பட்டனர். இவர் தம் இலக்கியங்களோடு, பிரபந்தங்களும் தல புராணங்களுமே கவிராயர்கள் கற்றுக் கைக் கொள்வனவாக நிலவின. கவிபாடுந் திறன் கைவரப் பெற்ற சீர்சால் புலவர் களும் சமய வழியிலேயே ஊன்றிய உள்ளத்தினராயினமையின் தத்தம் தெய்வங்கள்மீதே பிள்ளைத்தமிழ், உலா, கலம்பகம், அந்தாதி புராணம் ஆகிய சிற்றிலக்கியங்களை இயற்றி வந்தனர்.

இந் நிலையில், பொன்னவிர் மேனியளாய்த் தமிழன்னை விளங்கிய காலத்துப் பிறந்த சங்கச் செய்யுட்கள் வழக்கற்றுப் போனதுடன் தமிழே பல்லாற்ருனும் தாழ்நிலையுற்றிருந்தது. வழக்கிறவாது பலராலும் கற்கப்பட்ட சங்க நூல் ஒன்றிருக்கு மாயின் அது திருக்குறளேயாம். மற்றும் நாலடி முதலான சில அறநெறி ஏடுகளும் இலக்கண நூல்கள் சிலவுமே ஒரு சிலரால் கற்கப்பட்டன.

ஒரு நூற்ருண்டுக்கு முன்பு வரையில், தமிழ் எழுதுதற்கு உரிய கருவிகளா யிருந்தவை ஓலையும் எழுத்தாணியுமேயாம். எழுதுகோலும் [பென்சில்] [மைக்கட்டை] பழக்கத்திற்கு வர வில்லை. சிறுவர் தம் கல்விப் பயிற்சிக்குப் பயன்படும் கரும் பலகையும் குச்சியும் அக்காலத்தில் தான் தலைகாட்டின. பொதுக் கல்விமுறைப் பள்ளிகள் தோன்ருத காலம். கற்றவர் மிகச் சிலர். கற்க விரும்பிய இளைஞர்களோ குருவைத் தேடி, ஓடி நாடி நின்று அவர் கற்பிக்க விரும்பிய சில சுவடிகளையே பாடங் கேட்க வேண்டும். அதற்கும் மாணவராகிக் கற்க விரும்பு வோர் ஆசிரியரின் சமயத்தைத் தழுவியவராக இருக்கவேண்டும் என்ற கட்டாயமும் சிலரால் வற்புறுத்தப்பட்டுள்ளது. இவ்

விடர்ப்பாடுகளிடையே தமிழ்க் கல்வி எப்படிப் பரவும் ? முடங்கிக் கிடந்தது.

மேலும் அக்காலத்து நூல்கள் யாவும் ஓலைச் சுவடிகளே. இரும்பு எழுத்தாணி பிடித்து ஓலையில் எழுதுவது எளிதன்று. மிகுந்த பயிற்சியும் ஊக்கமும் இருந்தாலன்றி எவரும் முனையார். எழுதப்பட்ட நூலைப் படி எடுப்பது என்றால் மிகுந்த உழைப்பு வேண்டும். சுவடிகளை அழியாது காத்தற்கோ பெருமுயற்சியும் கவனமும் வேண்டும். காலத்தால் ஓலை மடித்து விடும்போது அவற்றை மறுபடியும் படி எடுத்துக் காத்து வைப்பதற்குப் படும் பாடு பெரிது, மிகப் பெரிது. தாள்களிலே எழுதுவது, நூலை அச்சியற்றுவது ஆகிய முறைகளோடு ஒப்பிட்டு நோக்கின், ஓலைச் சுவடிக் காலத்தில் அந்த முறைக்குத் தேவைப்பட்ட உழைப்பும், காலமும் பொருளும் பலப் பல மடங்காகும். இருந்தும் அம் முறையால் பிழைகள் மலிந்து, பாட வேற்றுமைகள் நிறைந்து, சிதைவுக்கும் அழிவுக்குமே'தமிழ்' ஆட்பட்டு வந்தது.

இந்த நிலையால் தமிழ், தமிழ்ப் புலவர்தம் நாவிலே நடமாடிய அளவு எழுத்திலே நடமாடாமலும், எழுத்திலே இடம் பெற்ற அளவும் ஏட்டிலே நிலைபெறுமலும், ஏட்டிலே நிலை பெற்ற அளவும் நாட்டிலே கால்கொள்ளாமலும், தமிழரிடையே ஒருகாலத்துப் பிறந்த அறிவுச்செல்வ மெல்லாம் பிற்காலத்து மக்கள் பெற்றுப் பயன் கொள்ளுமாறு எக் காலத்தும் நிலை பெறச் செய்யும் கருவி யில்லாமலும், தமிழன்னை காலத்தால் நலிந்தும் மெலிந்தும் குற்றுயிராகக் கிடந்தாள் என்றால் தவறாகாது.

மேலும் வேற்று நாட்டவர் ஆட்சிமொழி, பிறமொழி ஆதிக்கம், பொதுக்கல்வி யின்மை, தாய்மொழிப் பற்றுணராமை, சாதி சமய வேற்றுமையினில் தழைத்த சமயக் காழ்ப்பு, இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாகும் அச்சுப் பொறி காணாமை முதலான காரணங்கள் பலவற்றால், தமிழ் இலக்கியங்கள் கற்பாரும் கற்பிப்பாருமின்றிக் கருத்தினில் தோன்றாது கண்ணிற் படாது, கவிராயர் வீட்டு மச்சிலே மறைவாகக் கிடந்து

மக்கிக் கொண்டிருந்தன. இராமபாணம் முதலான எலும்பற்ற புழுக்களாலும் துளைக்கப்பட்டு, அறிவுடைய மக்கட்கு விருந்தாவதற்கு வாய்ப்பின்மையின் ஓரறிவுயிர்க்கே உணவாகிப் புழுதியாகிக் குவிந்தன. அவ்வாறே கிடந்து, 'சமாதி' நிலைகண்டு, படி எடுத்து வைத்துக் கொள்ளப் படாமலே அழிந்து மறைந்து போன ஏடுகளும் பலப்பலவாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே கிறித்தவப் பாதிரிமார்கள் தமிழ்மக்களிடையே தமது சமயத்தைப் பரப்பும் ஆர்வத்தால், விவிலிய நூலைத் தமிழிலே மொழி பெயர்த்து அச்சேற்றியதோடு வேறு சில நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டனர். அதனைக் கண்ட சைவம் முதலான சமயத்துப் புலவர்களும் தத்தம் சமய நூல்களை அச்சியற்ற முனைந்தனர். அவ்வாறு வெளிவந்த நூல்கள் பலவும், பெரும்பாலும் சங்க காலத்திற்குப் பிற்பட்ட கால நூல்களும் சமய, புராண ஏடுகளாகவுமே அமைந்தன. எனினும் தமிழ் ஆர்வம் கொண்டு பழந்தமிழ்ச் சுவடிகளுக்கு அச்சுருவம் அளித்து அவை முற்றும் அழியாது காக்க முற்பட்டோரின் அருஞ்செயல் எந்நாளும் போற்றுதற்குரியதாகும்.

அக் காலத்தில் வரலாற்று அறிவு நிலைபெறுமையின், தமிழ் இலக்கியங்களுள் தலைமையுடைய சங்கச் செய்யுட்கள் பற்றி அறிந்தோர் மிகச் சிலர். அவற்றின் அருமை உணர்ந்து அவற்றை அச்சியற்றிப் பாதுகாக்க எண்ணியோர் ஒரு கைவிரல் அளவும் ஆகார். அவரினும், அம் முயற்சியிலே ஈடுபட்டு உழைத்த நல்லறிஞர் தம் அருமை உரைக்கக் கூடுமோ? அத்தகு அரிய பணியில் ஈடுபட்டுத் தமது உடல், பொருள் ஆவியைத் தமிழுக்கே ஒப்படைத்துச் சங்க இலக்கிய இலக்கணங்களை வெளியிட்ட தகைசால் பெரியார் இருவர். ஒருவர் யாழ்ப்பாணம் பயந்த அறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள், மற்றொருவர் சோழநாடு வழங்கிய சான்றோர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்.

அவர்கட்கு முன்னரே சுவடிகள் சிலவற்றை அச்சியற்றி வெளியிடும் தொண்டிலே ஈடுபட்ட சிலருள், திருப்பெருந்திரு

ஆறுமுக நாவலர், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், திரு மயிலை சண்முகம் பிள்ளை, மழவை மகாலிங்கய்யர் முதலானோர் குறிப்பிடப்பட வேண்டியவராவர்.

தாமோதரம் பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுபிட்டி என்னும் ஊரிற் பிறந்து, இளமையிலேயே கல்வியிற் சிறந்து, சுன்னாகம் முத்துக்குமார கவிராயர் என்னும் பெரும் புலவரிடத்தே தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி பெற்றார். கல்லூரியில் பயின்ற காலத்திலேயே அவரது தமிழ்ப் புலமையை அவர்தம் ஆசிரியர் ஒருவர் கண்டு பாராட்டிப் 'பண்டிதர்' என்று அழைத்துள்ளார் என்பதினின்று அவரது அறிவின் சிறப்பு விளங்கும்.

அவரது திறமையை அறிந்த பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தாம் நடத்திய 'தினவர்த்தமானி' என்னும் கிழமை ஏட்டில் அதன் ஆசிரியராக அமரச் செய்தார். பின்னர் மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராகவும் விளங்கினார். சென்னைப் பல்கலைக் கழகம் முதன் முதலில் நடத்திய பி. ஏ. தேர்வில் முதல்வராகவும் பின்னர்ச் சட்டத்துறைத் தேர்விலும் வெற்றி பெற்றார். அரசாங்க அலுவலில் பல ஆண்டுகள் பணி ஆற்றி, பின்னர்ச் சில ஆண்டுகள் வழக்குரைஞராகவும் புதுக் கோட்டை நீதிபதியாகவும் இருந்து புகழ் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் தேர்வாளராகவும் அவர் இருந்தார். பின்னாட்களில், பரிதிமாற் கலைஞன் எனப் புகழ்பெற்ற சூரிய நாராயண சாத்திரி அப்போது பி. ஏ. தேர்வு எழுதினார். அவரது தமிழ்ப் புலமையைக் கண்டு மகிழ்ந்து பாராட்டி 'திராவிட சாத்திரி' என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கினார். அறிஞர் தாமோதரம் பிள்ளை அவர்களது தமிழ்த் தொண்டு பல வகையானுஞ் சிறந்திருந்தது கண்டு 'இராவ்பகதூர்' என்னுஞ் சிறப்புத் தகுதியை அரசாங்கம் அவருக்கு அளித்தது.

அவர் இளமையிலேயே தமிழ்க் கல்வியில் சிறந்ததனால், அந்நாளில் ஏட்டுச் சுவடிகளாக இருந்த நூல்கள் பலவும் பதிப் பிக்கப்பட வேண்டுமென விழைந்தார். ஏட்டுச் சுவடிகள் பல, பூச்சிகளால் அரிக்கப்பட்டும், படிப்பாரும் பாதுகாப்பாரும்

இன்றியும் மண்ணுக்கு இரையாகி வருவதைக் கண்டபோதெல்லாம் அவர் துணுக்குற்றார். பழங்காலத்து ஏடுகள் பல இவ்வாறே அழிந்து போயுள்ளன என்பதையும் அவர் வருத்தத்தோடு உணர்ந்துள்ளார்.

அவர் அச்சேற்றிய கலித்தொகைக்கு எழுதிய பதிப்புரையில் குறித்துள்ளது இது:

"என் சிறு பிராயத்தில் எந்தையார் எனக்குக் கற்பித்த சில நூல்களை இப்பொழுது தமிழ் நாடெங்கும் தேடியும் அகப்படவில்லை. ஒட்டித் தப்பியிருக்கும் சுவடிகளும் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலைமை தொட்டுப் பார்த்தவர்க்கன்றோ தெரியவரும்! ஏடு எடுக்கும்போதே ஓரம் சொரிகிறது; கட்டு அவிழ்க்கும்போது இதழ் முறிகிறது; ஏட்டைப் புரட்டும்போது துண்டு துண்டாகப் பறக்கிறது. இனி, எழுத்துகளோ வென்றால் வாலுந் தலையுமின்றி நாலு புறமும் பாணக் கலப்பை (புழு) மறுத்து மறுத்து உழுது கிடக்கிறது.

"இந்த நிலையிலேனும் எல்லா இலக்கிய இலக்கணங்களும் ஏடுகளாகவாவது கிடைத்தனவா என்றால் அதுவும் அரிதேயாக இருந்தது எனவும், அவை அச்சில் பதிக்கப்படாவிட்டால் தமிழ் மக்கள் அவற்றின் பயனைப் பெற முடியாது போய்விடும் என அஞ்சியே பதிப்பிக்கத் தலைப்பட்டதாகவும்" தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் தோன்றிய நூல்களின் சுவடிகளே முழுதாகக் கிடைப்பது அரிதாகுமாறு அவ்வளவு குறுகிய காலத்தில் சுவடிகள் அழிவுற்றுப் போவதையும் அவர் குறிப்பிடுகிறார்.

மேலும் அந்தச் சுவடிகளைக் கொண்டு நூலைப் பதிப்பிப்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கடப்பதும் எளிதன்று. ஏடுகளைப் பிடித்து ஒப்பு நோக்கி உண்மையான பாடம் காண்பது கடினமாக இருந்தது என்பதனைத் தாமோதரம் பிள்ளை அவர்களே இவ்வாறு விவரித்துள்ளார்:

"இலக்கணக் கொத்துடையார், நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என வகுத்த மூவகை ஆசிரியரோடு

யான் பரிசோதகாசிரியரென, இன்னுமொன்று கூட்டி, இவர் தொழில் முன்மூவர் தொழிலினும் பார்க்க மிகக் கடியதென்றும், அவர் அறிவு முழுவதும் இவர்க்கு வேண்டிய தென்றும் வற்புறுத்திச் சொல்கின்றேன். தூக்கினாலன்றோ தெரியும் தலைச் சுமை? பரிசோதகாசிரியர் படுங் கஷ்டமும் ஓர் அரிய பழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. ஒன்றற்கொன்று ஒவ்வாத இருபது இருபத்தைந்து பிரதிகளையும் அடுக்கி வைத்துக்கொண்டு என் கண் காணச் சிந்தாமணியைப் பரிசோதித்துப் பதிப்பித்த கும்பகோணம் தமிழ்ப்பண்டிதர் உ. வே. சாமிநாதய்யரைக் கேட்டால் இந்நால்வகை ஆசிரியர் பாட்டின் தாரதம்மியம் சற்றே தெரியலாம். எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி''.

இவ்வாறு பல்லாற்ருனும் பேருழைப்பும் விடாமுயற்சியும் குன்ருத ஊக்கமும் வேண்டும். இவ்வரிய பதிப்பாசிரியர் பணியைத் தாமோதரம் பிள்ளை அவர்கள் தாமே விரும்பி மேற்கொண்டார். அதனுல் நமக்குக் கிடைத்த செல்வங்கள் பல.

திருப்பெருந்திரு ஆறுமுக நாவலரோடு தொடர்புடைய வராகத் தாமோதரம் பிள்ளை அவர்கள் தமிழ்த் தொண்டு செய்த நிலையில் நாவலர் அவர்கள் 1879 ஆம் ஆண்டில் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தைச் சேனுவரையர் உரையோடு வெளியிட்டனர். நாவலருக்குப் பின்னும், இவர் அப் பணியை விடாது தொடர்ந்து தொல்காப்பியம் பொருளதிகாரத்தை நச்சினுர்க்கினியர் உரையோடு 1885 இல் பதிப்பித்தார். அதற்கு முன்னரே வீரசோழியம், கட்டளைக் கலித்துறை ஆகிய நூல்களைப் பதிப்பித்திருந்த பிள்ளை அவர்கள் இறையனுர் அகப்பொருளையும், தணிகைப் புராணத்தையும் பதிப்பித்தனர். அதன் பின்னர்ப் பல ஏடுகளையும் ஆராய்ந்து 1887 இல் கற்ருேர் ஏத்துங் கலித்தொகையை அச்சேற்றி வழங்கினுர். அதைத் தொடர்ந்து இலக்கண விளக்கத்தை உரையுடன் பதிப்பித்ததோடு, தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணியையும் வெளியிட்டார். அதன் பின்னர்த் தொல்காப்பியம் எழுத்ததிகாரமும் நச்சினுர்க்கினியர் உரையுடன் வெளியிடப்பட்டது. மழவை மகாலிங்க அய்யர் அவர்கள் பல ஆண்டுகட்கு முன்பே

இதனைப் பதிப்பித்திருந்த போதிலும் தொல்காப்பியம் முழுவதும் பிள்ளை அவர்கள் பதிப்பாக வெளிவந்தது சிறப்பேயாகும். பின்னும் அவர்கள், அகநானூற்றைப் பதிப்பிக்க விரும்பி ஆராய்ந்துகொண்டிருந்த காலத்தில் 1901இல் தம் உயிரினும் இனிதெனக் கொண்ட தமிழொடு கலந்துவிட்டார்.

அவரது தூயதமிழ்ப் பணியாலேயே சங்க இலக்கியங்கள் பல தமிழ் கற்பாரிடையே பேச்சிலும் எழுத்திலும் நடமாடும் நிலை பிறந்தது என்றால் அது மிகையாகாது.

மேலும் அவர் பதிப்பித்த ஏடுகளுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரைகள் பலவும், அக்காலத்திய தமிழ்மொழி ஆராய்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. தமது ஆராய்ச்சியில் தவறியதைப் பிறர் விளக்கி உரைப்பின், அக்கருத்தை ஏற்றுக்கொள்ளவும் அவர் தயங்கியதில்லை ஆனால், தமிழ் மொழியை இழித்தும் தாழ்த்தியும் கூறுவார் கருத்தை அவர் கண்டித்துரைக்கத் தவறியதில்லை.

தமிழ் ஒரு தனிமொழி; அதன் பெயர் திரவிட மரூஉ அன்று, 'தமிழே' என்பதும், அது பரதகண்டத்தில் எம் மொழிக்கும் பிந்தியதன்று என்பதும், எவ்வாற்றானும் பிற மொழிக்குத் தாழ்ந்ததன்று என்பதும் வீரசோழியப் பதிப்புரையில் அவர் குறித்த கருத்துகளாகும்.

தமிழ் என்னும் பதம் 'திராவிடம்' என்னும் பதத்தினின்றும் மருவி வருதற்கு இடனுண்டு என்பதைக் காட்டி, 'திராவிடமே தமிழாயிற்று' என்று சிலர் கூறி வாதித்ததைக் கண்டு அதனை மறுத்து அவர் எழுதியதில் ஒரு பகுதி இது:

''அகத்தியர் காலத்தின் முன் தொட்டு உள்ள பதினாருயிரம் வயதுள்ள 'தமிழ்' பதத்தையும் உச்சயினி புரத்தில் இரண்டாயிரம் வருடத்திற்கு முன் பிறந்த 'திராவிட' பதத்தையும் ஒன்றென்றால் யார்தாம் நகையார்? மூதாதை திருமன்றலில் பௌத்திரன் சந்தன, தாம்பூலம் பரிமாறினான் என்பதற்கும் இதற்கும் யாது பேதம்? தமிழ் என்னும் பதத்தை எடுத்தாண்ட அகத்தியர், தொல்காப்பியர் காலத்துச் சமற்கிருத நூலுடை

யோராய நாரத, வியாச, வசிட்டராதியர் வாய்மொழியினின்று திராவிட சப்தம் வழங்கியதை முதற் காட்டியன்றோ பின்னர் இம்மதம் நாட்டப் புகுதல் வேண்டும்? சிவபெருமான் அகத்தியரைப் பொதிகைக்கு அனுப்பிய கதை, காந்தம் முதலிய பழைய புராணங்களில் உளதாகவும் ஆண்டுத் திராவிட சப்தத்தைக் காண்கிலமே! ஆலசிய புராணம், பாகவதம் முதலிய பிற்றை நாள் நூல்களிலன்றோ அது முளைத்தது! அகத்தியரும், 'யான் போகுமிடம் கலை வல்லோரும் முனிவரும் நிறைந்த பெருமாண்பினது ஆதலின் அவர்கள் மொழியை உபதேசித்து என்னை அனுப்புக' என்று கேட்டதன்றித் 'திரவிட' மென்று கேட்டதில்லையே''.

இவ்வாறு தமிழ் என்னும் பெயரே தமிழுக்கு உரியதாவதை நிலைநாட்டியது முதல்,—சங்க இலக்கியச் செல்வங்களை வழங்கியது வரை—தமிழ் மக்கள் புத்துணர்ச்சி கொள்ளுதற்குத் துணைநின்றார் பெருந்தகை தாமோதரம் பிள்ளை அவர்கள்.

‘மொழிநூல்’ கண்ட மூதறிஞர்

இன்றைக்குச் சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்னர், தமிழ் மொழியின் சிறப்பியல்புகளையும், தோற்றம், வளர்ச்சி, வரலாறு ஆகியவற்றையும் பலவாண்டுகள் தொடர்ந்து ஆராய்ந்து ‘மொழி நூல்’ வரைந்தவர் மாகறல் கார்த்திகேய முதலியார் ஆவார். அவர் வாழ்ந்திருந்த காலம் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியும்-இவ்விருபதாம் நூற்றுண்டின் தொடக்க ஆண்டுகள் சிலவும் ஆகும். அவர் பிறந்த ஊராகிய ‘மாகறல்’ என்பது தொண்டை நாட்டில், காஞ்சிக்கு அண்மையில் உள்ள தாகும். சென்னை நகரினை அடுத்த சைதையில் வெசிலேயனியன்

மிசன் கல்லூரி ஒன்றில் பலவாண்டுகள் தமிழ் ஆசிரியராகப் பணி ஆற்றியுள்ளார்.

அக்காலத்தில் தமிழ்ப் புலவராயினூர், தமிழ்மொழிக்குப் பெருமை கூறுவதாக எண்ணிப் பல்வேறு புராணக் கதைகளிலே அடியவர் பெருமையாகக் கூறப்பட்ட கற்பனைகளையே எடுத்து மொழிவதன்றி, ஒரு மொழியின் உண்மையான சிறப்புகளாகிய தொன்மை, வளமை, இனிமை, நுண்மை, எளிமை, மேன்மை, தெளிவு முதலானவற்றையோ, எழுத்து வைப்பு, சொல் ஆக்கம், பொருள் விரிவு, ஓசைநலம், இலக்கணப் பகுப்பு, இலக்கிய நெறி முதலானவற்றையோ ஆராய்ந்து காட்டுவதில் ஈடுபடவில்லை.

மேல்நாடு தந்த மேதை டாக்டர் கால்டுவெல் அவர்கள் பலவாண்டுகள் தொடர்ந்து நிகழ்த்திய அரியதோர் ஆராய்ச்சியின் பயனுக, கி பி. 1856 இல் வெளியிட்ட ''திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'' என்னும் நூல் ஒன்றே அக்காலத்தில் அத்துறையில் விளங்கி நின்றதாகும். எல்லை காணுத் தொன்மையுடைய தமிழின் மொழிக் கூறுகளைத் தமிழின் வழி வழிப் பிறந்த தமிழ்ப் புலவோர் ஆராய முற்பட்டாலன்ரு பிற நாட்டவர் கண்டறியாத நுண்மைகள் பலவற்றையுங் கண்டு உலகுக்கு உணர்த்தக் கூடும்? அந்த முயற்சியில் ஆர்வத்துடன் அடியெடுத்து வைத்து நடந்து காட்டிய முதல் தமிழ்ப் புலவர் கார்த்திகேயர் எனலாம்.

அவர் வரைந்த மொழிநூலுக்கு முன்னுரை வழங்கிப் பாராட்டியவர் சென்னை, வேப்பேரி கமிசிஸ் கல்லூரி முதல்வராகவும், திராவிட ஆராய்ச்சிக் கழகத்தின் செயலாளராகவும் விளங்கிய பேராசிரியர் மு. சி. பூரணலிங்கம் பிள்ளை அவர்களாவர். அந்த முன்னுரையில் காணக்கிடப்பது இது:

''தமிழ்ப் புலவர்கள் வரலாற்று உணர்வும், ஒப்பியல் அறிவும் இல்லா நடமாடும் 'சுவடிக் கட்டுகள்' எனவும், 'கருநாடகங்கள்' எனவும் பழித்துரைக்கப்படும் இழிவுக்கு ஆளாகியுள்ள இந்தக் கெடுநாட்களில், திறமான மொழிப் புலமையும், ஐயத்

திற்கிடனில்லாத தெளிவும், தனி ஆற்றலும், ஆழமான அறிவும் பெற்றிருந்தாலன்றிக் குறுகிய நோக்கம், பொருமை முதலியவற்ருல் வளர்ந்து நிற்கும் தடுப்புச் சுவரைக்கடந்து மேலோங்கி விளங்குதல் யார்க்கும் இயல்வதன்று.

அவருள்ளும் தொன்மையான இலக்கியக் கடலுள் மூழ்கி, அரிய கலைச்செல்வங்களையெல்லாம் தேடிக் கொணர்ந்து, சிறந்த வடிவுடையதாய்ப் பதிப்பித்து வழங்குவார் ஒருவகை. தொன்னுள் முதல் வளர்ந்துவரும் மொழியின் வரலாற்றை ஆராய முற்பட்டு நள்ளிரவெல்லாம் கண் விழித்துச் சிந்தனையிலே ஆழ்ந்து அல்லற்பட்டு அரும்பெரும் உண்மைகள் சிலவற்றைக் கண்டு தெளிந்து உலகிற்கு வழங்குவார் ஒருவகை. அறிவுடன் பொருந்திய நல்வாழ்வுடையவராக மக்கள் உயருதற்கு இவ்விரு வகையாரது தொண்டும் வேண்டப்படுவதே.

பொறுமையுடன் அயராது உழைத்து, அரிய சங்க இலக்கியங்களைப் பதிப்பித்த பெருமையுடைய சாமிநாத ஐயர் அவர்களின் திருப்பணியை ஒப்பவே, தளராது ஆராய்ச்சி நிகழ்த்திய கார்த்திகேயனுர் தொண்டும் தமிழுலகத்திற்கு வேண்டப்படுவதாகும். இன்றைய ஆட்சியாளர்கள் சாமிநாதய்யர் அவர்களது தொண்டைப் போற்றி, மகாமகோபாத்தியாயர் என்னும் சிறப்பு வழங்கியுள்ளது போன்றே, பண்பட்ட ஆராய்ச்சியாளரான கார்த்திகேயனுரையும் பாராட்டிச் சிறப்புச் செய்ய முன் வரவேண்டும்.

இந்த 'மொழிநூல்' அரிய பல உண்மைகளை ஆராய்ந்து எடுத்துரைப்பதாகலின், இது மேலும் பலரைச் சிந்திக்கத் தூண்டும், ஆராய்ச்சித் துறையில் மிகப் பலரை ஈடுபடுத்தும்.'' இவ்வாறு தமிழ்ப் பேரறிஞர் ஒருவரது பாராட்டைப் பெற்ற பெரியார் கார்த்திகேயனுர்.

அவரது நூலில் காணப்படும் அரிய கருத்துகளை ஈண்டுக் காண்க :

'குமரிக்குத் தென்பால் ஒரு பெரு நிலப்பரப்பு இருந்ததென்பதும், அஃது உலகிற்கு நடுமையமென்பதும், ஆண்டிருந்

தோர் தமிழரென்பதும் சிறந்த பல காரணங்களால் பெறப்படு கின்றன.'

'இலத்தீன் மொழியில் 'தாப்ரொபேன்' என்று வழங்கும் பெயர், தாம்பிரபரணி என்பதன் சிதைவென்று மொழி நூல் வல்லார் கூறுகின்றமையானும் இந்தியாவும், கடல்கோட்பட்ட தமிழ் நிலமும் ஒரு காலத்தில் ஒன்ருயிருந்ததென்பதற்கு இது வும் ஓர் சான்ருகின்றது. இன்றுள்ள தாம்பிரபரணி என்னும் நதி கடல்கோளுக்கு முன்னர் இலங்கை முழுதும் சென்று பயன் பட்டிருந்தமையின், இலத்தீன் மொழியினர் இலங்கைக்கு 'தாப்ரொபேன்' எனப் பெயர் வைத்தனர்.'

'சாவக முதலிய ஐவகைத் தீவிலுள்ள மொழிகளும், இமய மலைச் சரிவில் ஒருவகைச் சாதியார் பேசுகின்ற மொழியும், விந்திய மலையின் கிழக்கு முனையிலுள்ள சூடிய நாகபுரியில் ஓர் வகைச் சாதியார் பேசுகின்ற மொழியும், அம்மலையில் அபு சிகரத் தில் வசிப்பவர்தம் மொழியும், பெலுஜிஸ்தான் தேசத்தில் தவுத்புத்திர என்னும் சாதியார் பேசுகின்ற மொழியும் தமிழின் சிதைவெனச் சரித ஆராய்ச்சியில் வல்ல பெரியோர் கூறுவர். தவுத்புத்திர என்பது திராவிடபுத்திர என்பதன் சிதைவு.'

'ஆப்கனிஸ்தான் நாட்டில் ஓர் நகருக்குத் 'தமிழுக்' என்னும் பெயர் வழங்கி வருவதோடு அந்நகர மக்களும் தமது மொழியோடு தமிழையும் கலந்து பேசுகின்ருர்கள் என்பர்.'

'ஆசியாவில் சைபீரியா நாட்டில் அக்கிரீன் சாதியார் மொழியும், வட ஐரோப்பாவில் பின் சாதியார் மொழியும், மீதியா நாட்டிலுள்ள பிகிஸ்டன் சாசனங்களில் எழுதியுள்ள மொழியும், திராவிட சம்பந்தம் பெற்றுள்ளன. பால்டிக் கடல் முதல் மலையாளம் வரையில் திரவிட சம்பந்தமாகும். திரவிடம் தொன்று தொட்டுள்ளது; ஆரியத்துக்கு முன் நாகரிகமடைந் தவர் திராவிடர். ஆஸ்திரேலியா தேசத்து வடபால் மேல்பா லுள்ள மக்களின் மொழியுள், நான், நாம், நீ, நீங்கள், அவன் என்னும் சொற்கள் ஒத்துள்ளன. மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளுவம், குடகு, தோடம், கோட்டம், காண்டி, ஓரான் முதலிய மொழிகள் தமிழ்ச் சிதைவு' என்று சரித்திரப்

புலவர் ஹண்டர் என்பவர் கூறுவர். பாலி, பிராகி, திமல் என்னும் மொழிகளும் தமிழ்ச் சிதைவாம் என்பர்.' 'பெரும் பான்மையும் எல்லா மொழிகளிலும் அம்மை, அப்பன் என்னும் தமிழ்ச்சொல் வழக்குள்ளது. ஆரியர்க்குமுன் நாகரிகமடைந்த எகிப்து நாட்டு நூல்களும் தமிழரது நாகரிகத்தை எடுத்துக் கூறுமென்பர்.'

'எட்வர்டு களார்டு என்பவர் தாம் எழுதிய யூதருடைய சரித்திரத்தில் மங்கோலியர், பின்னிஸ் ஆகிய சாதியாருக்கு மூலமக்களா யிருந்தவர்கள் ஈழநாட்டிலிருந்து வந்து பாரசீக வளைகுடாவைச் சூழ்ந்து குடியேறி யிருந்தார்கள் எனவும், சுமேரி யருக்கும் எகிப்தியருக்கும் முன்னமேயே அவர்கள் நகரங்களை யும் தலைநகர்களையும் ஏற்படுத்தினர் எனவும், அவற்றிற்கு 'ஊர்' என்று பெயர் எனவும் கூறியுள்ளார்.'

இவ்வாறு தமிழர்களின் தொன்மைச் சிறப்பையும் 'தமிழ்' மொழி பரவி நின்ற நிலையையும் எடுத்துக் காட்டிய ஆசிரியர் - தமிழின் உயர்வையும் விளக்கியுள்ளார். 'ஊழிக்காலத்துக்கு முன்னமே தமிழுள்ளது. வேதங்களுக்கு முன்னரே தமிழுள் ளது' என்று சித்தர் நூல்கள் கூறுகின்றன.

'இருக்குவேதம், குமரிநாடு கடல் கொள்ளப்படுமுன் உண்டாயிற்று; அக் கடல் கொண்ட நிகழ்ச்சியை அதர்வண வேதம் எடுத்துக் கூறும் என்றலின் வேதங்களுக்கு முன்னரே தமிழுள்ள தென்பது உண்மைக் கூற்றே.'

'ஆரியத்துக்கு முன் தமிழ் இருந்ததென்பது கடுக்கனுக்கு முன் பொன் இருந்ததுபோலக் கொள்ள வேண்டும். இனிப் பாளியும் பஞ்சத் திராவிடமும் தமிழின் வழிமொழிகளாம். கிரந்தம் இவ்வெல்லாவற்றினின்றும் உண்டான சார்புமொழி யாகும். கிரந்தத்துக்குப் பிறகு ஆரியமென்னும் பெயர் உண் டாயது. ஆரியத்தின் திருத்தம் சமக்கிருதம்.'

'வடமொழிக்கண் எல்லாக் கலைகளும் நிரம்பியிருத்தலின், புலவர்கள், அதுவே முன்னுண்டாய மொழியெனவும் ஏனைய வெல்லாம் அதன் வழிமொழி யெனவும் கூறுவர்.

ஆங்கில மொழிக்கண் இஞ்ஞான்று எல்லாக் கலைகளும் நிரம்பியிருத்தலின் அதனை முன்மொழி என்னல் கூடுமோ! ஒரு மொழிக்கு அரசுரிமை வரின் எல்லாக் கலைகளுந் தோன்றலும் அவ்வுரிமை போயின் வருந்திக் கற்பாரின்மையின், அக் கலை களுள் அரியன அழிதலும் இயற்கை. இந்நிலை ஒரு காலத்து வடமொழி வளர்ச்சி பெற்றமையை உணர்த்தற்பாலதன்றி முன்மொழி என்பதை உணர்த்தற் பாலதன்று.'

'செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணி'

என்பதுள், முந்துநூலென்பதற்கு உரையாசிரியர் முதனூல்கள் என்பர். நச்சினார்க்கினியர் முன்னை இலக்கணங்களென்பர். இதனால் அகத்தியனார்க்கு முன்னும் இலக்கிய இலக்கணங் களுண்மை பெற்றாம்.

மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகள் ஒவ்வொன்றும் தொன்மையது, புதுமையது என இருவகைப் படும். அவை தமிழ்ச் சந்தம் பெற்றுள்ள காலம் வரையில் தொன்மைய எனவும் ஆரிய சந்தம் பெற்றது முதல் புதுமைய வெனவும் கொள்க. தமிழ்ச்சந்தமாவது எடுத்தல் படுத்தல் ஒலிகளாற் சிறந்து யாழிசை போன்று மெல்லிசை இன்பம் பயப்பது; ஆரிய சந்தமாவது கனைத்தல், உரப்பல் ஒலிகளாலும் சிறந்து பல வாச்சியங்களினிசை போன்று வல்லிசை இன்பமும் பயப்பது.

மலையாள மொழியில் துஞ்சத்து எழுத்தச்சன் இயற்றிய பாரத, பாகவதம் முதலியன சிறுபான்மை ஆரிய சந்தம் பெற் றுள்ளன எனலாம்.

கன்னடர் தாமே பழங் கன்னடத்தை ஹள கன்னடமென வும், புதுக் கன்னடத்தை ஹொச கன்னட மெனவும் கூறுவர். சிறந்த நூல்கள் பழங் கன்னடத்திலேயே உள்ளன.

தெலுங்கில் அச்ச தெலுகு என்பது பழைய தெலுங்காம். அச்ச தெலுகு எனினும் தூய தெலுங்கு எனினும் ஒக்கும்,

ஈண்டுத் தூய்மை (சுத்தம்) தமிழ்ச் சந்தமே உடையது என்ப தாம். நன்னய பட்டரென்பவர், தமிழின் வழிமொழியாகிய தெலுங்கிற்குத் தமிழ் வழக்குப்படி இலக்கணம் செய்யாது, ஆரிய வழக்குப்படி இலக்கணம் செய்தனர். அது பொருந்தாது. அச்ச தெலுங்கில் இராமாயணம் உள்ளது. இது தமிழ்ச் சந்தவின்ப முடையது.

மலையாளம், தமிழின் வழிமொழி யென்று நன்கறிந் திருந்தும் இலக்கணம் மட்டும் ஆரிய வழக்குப்படியே செய் தனர். அதுவும் பொருந்தாது.

கூர்ச்சரம், மராட்டியம் முதலிய மொழிகளின் சிதைவாம். இனி மராட்டியம் முதலிய மொழிகள் வடமொழிக் கலப்பைப் பெற்றன. மலையாளம் கன்னடம் முதலியன அக்கலப்பைப் பெறுகின்றன. பஞ்ச திராவிடத்துள் தெலுங்கே வடமொழிக் கலப்பை முதன் முதல் பெற்றது. தெலுங்கர் ஆரியவர்த்தத்தை அடுத்திருந்ததும் அதற்குக் காரணமாகும்.

பிற மொழிகளிற் போந்த தமிழ்ச் சொற்கள் சிறிது (ஒலி) வேறுபட்டமையின், அவ்வக் காலத்துள்ளார் அவற்றை ஒதுக்கிக்கொண்டே யிருந்தமையின் வேறு வேறு மொழிகளாகப் பிரிந்து வளர்ந்தன. இக் காலத்துத் தெலுங்கில் வழங்கும் வீகம், வீய முதலிய சொற்கள் பிங்கல நிகண்டிலுள்ளமையின் அவை அக் காலத்துத் தமிழ்க்கண் வழங்கியிருத்தல் வேண்டும். தமிழினின்று பஞ்ச திராவிடமும், பாலி முதலிய மொழிகளும் உண்டாயின. இவ் வெல்லாவற்றினின்றும் பாகதம் பிரிந்தது.

ஆரியம், வேதம் முதலியன நிறைந்துள்ள தெய்வமொழி என்று அடிபடுகின்றமையின் தெலுங்கு முதலியன அதனினின்று பிறந்தனவெனின் அவ்வம் மொழியார் கனிவு காட்டுதலும், தமிழினின்றும் அவை பிறந்தனவெனின் முனிவு காட்டுதலும் பற்றுள்ளமேயன்றி முறைமையாகாது. அப் பற்றுள்ளத்தினின் றும் நீங்கி உண்மை எதுவென ஆராய்ந்து தெளிதல்வேண்டும்.

தமிழில் தோன்றிய தொன்மையான நூல்கள் அழிந்து அதன் புதுமை முதலாயின வேறுபட்டமையானும் ஆரிய

நூல்கள் அழிவு படாது அதன் புதுமை முதலாயின வேறு படாமையானும் ஆரியம் தமிழுக்குப் பிற்பட்டதென்பது பொருந்தும்.

இவ்வாறு தமிழின் தொன்மையையும், முதன்மையையும் பலவாறு விளக்கிக் கூறிய கார்த்திகேயனார் தமிழின் ஒலியும் சொல்லும் இயற்கையாக அமைந்தவாற்றையும் விளக்கியுள்ளார்.

இயற்கை யொலி பழந்தமிழில் ஒரு சிறிது திரிந்தும், தமிழில் (வளர்ந்த செந்தமிழில்) அதனிற்றிரிந்தும், மலையாள கன்னடங்களில் மேலும் திரிந்தும், பாகதங்களில் அதனின் மிகத் திரிந்தும் உருகுலைந்துள்ளது. ஆதலின் தமிழ் மொழியில் அன்றிப் பிறமொழிக் கண்ணுள்ள எல்லாச் சொற்களுக்கும் காரணம் (பொருள் மூலம்) அறிந்து கூறல் அரிது.

தமிழ்ச் சொற்களை மட்டும் ஒருவன் நன்கு ஆராய்ச்சி செய்தலைத் தலைக்கொள்வனாயின் ஏனைய மொழிகளை யெல்லாம் ஆராய்ச்சி செய்வதற்கு இதுவே கருவியாகு மென்பதிற் சிறிதும் ஐயுறவில்லை. தமிழ்ச் சொற்களெனவே சிறுபான்மை அதன் வழிமொழிகளாகிய கன்னடம் முதலியனவும் அடங்கும்''.

பண்டைக் காலத்துள்ள சொற்களின் தன்மையும் அவற்றின் தோற்ற வரலாறுகளும் அறிதற்கு அவை காத்து வழங்கப் படவேண்டும் என்னும் கருத்தினை விளக்கிய ஆசிரியர், அவ்வாறு வழங்கிய சொற்கள் பலவற்றை எடுத்துக் காட்டியுள்ளார்.

கடற் கரையை உணர்த்தும் ''புலம்பு'' என்பது ஐங்குறுநூற்றிலும், கரடியை உணர்த்தும் ''வெண் பல்லம்'' என்பது உரிச்சொல் நிகண்டிலும், திரட்சியை உணர்த்தும் ''அவையம்'' என்பது மதுரைக் காஞ்சியிலும், மேலிடத்தை உணர்த்தும் ''மேதகம்'' என்பது சம்பந்தர் தேவாரத்திலும், குளிர்ச்சியை உணர்த்தும் ''ஓமம்'' என்பது சுந்தரர் தேவாரத்திலும்; மயிலிறகை உணர்த்தும் ''புத்தகம்'' என்பது மருத்துவ நூலிலும்; மூங்கிலை உணர்த்தும் ''நால்'' என்பது சுப்பிர

மணிய வைத்திய வெண்பாவிலும்; தென்னையை உணர்த்தும் "நாலி" என்பது போகர் நிகண்டிலும்; மூங்கில் நெல்லினை உணர்த்தும் "ஞாங்கல்" என்பது மஞ்சிகன் ஐந்திசைச் சிறு நிகண்டிலும் உள்ளன. இவ்வாறு பழந்தமிழ்ச் சொற்கள் பல முன்னர் வழங்கிய காலத்து அவை குறித்துநின்ற பொருளையும் கண்டறிந்தே சொல்லொலி பிறப்பு ஆராய்ச்சி நிகழ்த்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழைத் தாழ்த்தி உரைப்பவர்க்கு அவர் இறுத்த விடையாக அமைவது இது:

முன்னம் ஆரியத்தினின்றே தமிழ் பிறந்த தென்பர் பலர். நச்சினர்க்கினியர், வீட்டின் தன்மை தமிழால் கூறுரென்பர். அவரே காலம், உலகம் என்பன வடசொல் அன்றென்பர். ஈசான தேசிகர், "அளவற்ற தமிழ்நூல்களுள் ஒன்ருயினும் தனித் தமிழ் நூல் ஆகுமா? தனதென ஐந்தெழுத்தே கொண்ட தொரு பாடையை ஒரு மொழி என்று பேசவும் புலவர்கள் நாணுரோ?" என்று முழங்குவர். சுப்பிரமணிய தீட்சிதர் தொல்காப்பிய முதலியவற்றிற்கு முதனூல் பாணினீய மென்பர். சிவஞானமுனிவர் அதனைப் பலகாரணம் கூறி மறுத்துத் தமிழ் தனிமொழி என்பர். இது பலர் கோட்பாடு.

பழமொழி, பழையவள், முது தமிழ், முதிய மாதமிழ் என்று (திருப்புகழில்) கூறப்படுதலானும் தமிழ் ஆரியத்திற்கு முற்பட்ட தெனல் வேண்டும்.

சேனுவரையர், தமிழ்ச் சொல் வடமொழிக்கண் செல்லா தென்பர். சத்த நூல் வல்ல ஐரோப்பிய பண்டிதர் தமிழ்ச் சொற்களுட் பல வடமொழியிலும் சில கிரேக்கு, எபிரேயம், முதலிய மொழிகளிலும் கலந்துள்ளன என்பர். கால்டுவெல் துரை, அக்கா, அடவி, ஆணி, குடி, கடுகு, மீனம், வலை முதலிய பல தமிழ்ச் சொற்கள் வடமொழியிற் கலந்துள்ளன என்பர்.

"மீனம்" என்பது பழைய வடமொழி நிகண்டுகளிலில்லை அது பிற்காலத்திலேற்பட்ட அமர நிகண்டிலுள்ளது.

தமிழின் மாட்சி குறித்து அவர் கூறுவது இது :

ஆரியத்தினும் தமிழ் தொன்மையுடைய தென்பதும், ஆரியம் வருவதற்கு முன் சக முழுதும் தமிழ் இருந்த தென்பதும், ஆரியத்திற்கு முன்னேயே தமிழ் திருத்தப்பாடுள்ள தென்பதும், தமிழ்ச் சொற்கள் (வடமொழி முதலான) பற்பல மொழிகளிலும் கலந்துள்ளன என்பதும், தமிழ்ச்சொல்லில் பொருள் பொதிவு (பொருள் அடி) உள்ள தென்பதும், வடமொழி முதலியவற்றினும் தமிழ் பாவிலினிய தென்பதும், தமிழ் திணைபால் முதலிய பகுப்பால் சிறந்த தென்பதும், வடமொழி முதலியவற்றினும் தமிழ்ச் சொற்றொடர் அழகுடைய தென்பதும், தமிழில் நீதி நூல்கள் நடுவு நிலைச் சிறப்புற்றுள்ளன என்பதும் தமிழரசு நெடுநாள் இருந்த தென்பதும், தமிழரிடத்து வீரம் மிக்கிருந்த தென்பதும் பிறவும் பெறப்பட்டன.

மேலும் வடமொழியில் உலகத்து முதன்முதல் ஏற்பட்ட இயற்கை நிலப் பாகுபாடாகிய குறிஞ்சி முதலிய திணைகளுக்கும் இயற்கைக் காலப் பாகுபாடாகிய பெரும் பொழுது, சிறு பொழுது என்னும் முதற் பொருளுக்கும் இலக்கணம் இன்மையானும்; செயற்கையிற் செயற்கையாய்க் கனைத்த லோசையும் உரப்பலோசையும் மிகுந்திருக்கின்றமையானும்; செயற்கையாய ஐகார ஔகார யகார முதன் மொழிகளால் சிறந்திருக்கின்றமை யானும்; பிற்காலத் துண்டாய உபசர்க்கச் சொற்களும், தொடர் மொழிகளும் நிரம்பியிருக்கின்றமையானும்; ஒன்று முதலிய எண்களுக்கு வரிவடிவமும், நுணுகி யுணர்வதற்கு முந்திரை, இம்மி, சுவடு முதலிய அளவுப் பெயர்களும் மிளா, பூட்டு, சாவி முதலியவற்றுக்குத் தனிச் சொற்களும் இன்மை யானும்; ஆகுபெயர் இலக்கண மின்மையானும்; உரை வழக்கின்மையானும் தமிழ்மொழியில் பவ்வீ முதலிய பெயர் களும் ஆண்குறி பெண்குறி முதலியவற்றை உணர்த்தும் சில பெயர்களும் அவையல் கிளவி ஆயினமை போலக் கடிதடம் நிதம்ப முதலிய பெயர்களும் அங்ஙனம் ஆகாமையானும்; நாவிற்குக் கடினமாகிய வல்லினமெய்யீற்றுச் சொற்கள் உண்மையானும்; செயற்கை எழுத்துகள் மொழி முதலில் வரு

கின்றமையானும்; மூவகைச் சொற்கள் மிகுதிப்பட்டிருக்கின்றமையானும்; நாவின் செயற்கை நிகழ்ச்சியாகிய மயக்கம் பெரிதுண்மையானும் பிறவாற்றானும் ஆரியம் தமிழுக்குப் பிறகுண்டாய தென்பதே துணிபு.

இவ்வாறு கூறிய ஆராய்ச்சியாளர் தமது முடிவுக்குத் துணையாக மேல்நாட்டு அறிஞர் சிலர் தமிழைக் குறித்து வியந்துரைத்த செய்திகளையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

''நடுவு நிலைமையாகப் பார்க்குமிடத்து உலகத்தார் இதுவரை அறிந்தவற்றுள் மிகவும் மேன்மையான கலைஞானங்களில் ஒன்றைத் தமிழர் (தமிழில்) பெற்றிருக்கின்றனர்'' என அறிஞர் பெர்சிவல் ''வேதபுருடன்'' என்னும் தமது சிறந்த நூலில் குறிப்பிட்டுள்ளதும்; "சுருங்கக் கூறல் என்னும் அழகில் நிறைந்த பொருட் பொதிவை அடக்கிக் கொண்டிருக்கும் தன்மை தமிழொழிந்த வேறு எந்த மொழிக்கும் இலது. மனத்தின் தோற்றங்களை வெளியிடுவதில் தமிழிலும் நுணுக்கமாகவும், தெளிந்த தத்துவமாகவும் சொல்லத்தக்க பிறமொழிகள் இல்லையென்று உறுதிபடச் சொல்லலாம். இம்மொழி, மனோபாவனைக் கேற்ற வலிமையை மனத்திற்குத் தருவதுடன், அதன் செம்பாகமும் தருக்க வழக்கும் அவ் வண்ணமே மனத் தோற்றத்தைத் தெளிவாகக் கூறுதற்கு ஏற்ற வலிமையையும் தருகின்றன'' என அறிஞர் சார்லஸ் கோவர் என்பார் கூறியுள்ளதும்; ''திராவிட மொழிகளுக்குத் தலைமையாக நிற்கத்தக்க தமிழ் மொழியானது, மக்களாற் பேசப் படுவதற்கு மிகுதியும் பொலிவும் திருத்தமும், சீரும் உடைய மொழிகளுள் ஒன்று'' எனவும், ''ஆந்திர திராவிட செய்யுட்களின் சிறப்பினை உணர்ந்து ஐரோப்பாவில் நன்கு கற்றல் வேண்டும். அங்ஙனம் கற்பாராயின் கிரீக்கு இலத்தீன் செய்யுட்களுக்கும் ஈடானவை உலகில் இல்லை என்பதாக எண்ணி அவை புகழப்பட்டது முற்றிலும் நியாயந்தானா? என்பது குறித்துத் தகுதியான நடு நிலைமையுள்ள சான்றோர் பின்னர்த் தீர்மானிக்க வேண்டியிருக்கும்'' எனவும் அறிஞர் டெயிலர் என்பார் கூறியுள்ள கருத்தும், தமிழின் தனிச் சிறப்புக்குச் சான்றாக அவரால் எடுத்தாளப்பட்டுள்ளன.

மேலும் தமிழ் மக்கள் தாய்மொழியைப் போற்ற வேண்டியது அவரது கடனுதலையும் மூதறிஞர் வலியுறுத்தத் தவறவில்லை.

"பதினேராவது நூற்றுண்டில் ஆங்கில நாட்டில் பிரஞ்சு மொழி பரவி ஆங்கிலந் தாழ்ந்து ஒடுங்கித் தன்னிலை குலையுங் கால், அக்காலத்து வாழ்ந்த ஆங்கிலப் புலவர்கள் தம் தாய் மொழியில் பற்றுள்ளம் வைத்துப் பதினுன்காம் நூற்றுண்டு முதல் பண்டைய நிலைமைக்குக் கொண்டுவர முயன்றனர். அதனு லன்றோ ஆங்கிலம் இக் காலத்து வளர்ச்சியுறலாயிற்று? அதன் வளர்ச்சியோடு பொருந்திப் பரவிய நிலையால், தமிழும் ஒடுங்கித் தன்னிலை குலைகின்றமையின், தமிழரும் அவர்போல் பற்றுள்ளம் வைத்துத் தமிழை உயர்த்துதல் வேண்டும். தமிழர்கள் பற்று வைத்துத் தமிழ்நூல்களைக் கற்றல் வேண்டும். வறியவனு யினும் தமிழ் கற்க. கற்பிக்க. எப்பொழுதும் தமிழையே தெய்வம் போலவும் நற்றுய் போலவும் சிந்திக்க. நீ தமிழ் மயமாவை, நின் மக்களும் தமிழ் மயமாவர். நின்கை தமிழ் நூல் எழுதுக; நின்வாய் தமிழையே பேசுக; நின் மனம் தமிழையே சிந்திக்க."

இவ்வாறு கார்த்திகேயனுர் ஊட்டிய தமிழ்ப் பற்று தமிழ் இனத்தின் குருதி யெல்லாம் கலந்து நெஞ்செல்லாம் நிறை வதாக !

வடமொழி உயர்வுக்குக் கண்டனம் எழுப்பிய செல்வகேசவராயர்

இன்றைக்கு ஒரு நூற்றுண்டுக்கு முன்னர், கி. பி. 1864இல் சென்னைக்கு அருகில் உள்ள திருமணம் என்னும் சிற்றூரில் பிறந்தவர் செல்வகேசவராயர். அவருடைய தந்தை ஒரு தமிழாசிரியர். அதனுல் அவர் இளமையிலேயே தமிழொடு ஆங்கிலமும் பயின்ருர். பச்சையப்பன் கல்லூரியில் படித்துத் தேர்ந்தார். கலை இளைஞர் (பி. ஏ.) பட்டமும் பெற்ருர். அக் காலத்தில் கல்லூரியில் படிப்பவர்கள் தமிழ் படித்தாகவேண்டும் என்ற முறை இல்லை. அது விருப்பப் பாடமாகவே இருந்தது

எனில், தமிழே படித்துப் பட்டம் பெறுவதிலே ஆர்வமா பிறக்கும்? எனினும் செல்வகேசவர் தமிழ்மொழித் துறையி லேயே முதுகலைப் (எம். ஏ.) பட்டமும் பெற வேண்டும் என விழைந்து, முதன் முதலாக அப்பட்டம் பெற்ருர். அதன் பின் பச்சையப்பன் கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராகவும் அமர்ந்தார்.

அக் காலத்தில் பட்டம் பெறும் அளவு படித்தவர்கள் வேறு அலுவலில் நுழைந்தால் பெரும் பொருளை ஊதியமாகப் பெற லாம். ஆயினும், தமிழையே பொருளாக மதித்துக் குறைந்த ஊதி யத்திலேயே அப் பணியில் ஈடுபட்டார். அவருடைய விரிந்த கல்வியும், ஆழ்ந்த அறிவும், தமிழ், ஆங்கிலம், மலையாள இலக் கியத் தேர்ச்சியும், பழமொழிகளைக் கையாளும் திறனும், நகைச் சுவை விரவிய பேச்சும், தாய்மொழிப் பற்றும், மாணவர்கட்கு அவரிடம் மட்டுமேயன்றித் தமிழிடமும் மிகுந்த மதிப்பும், பற்றும் ஆர்வமும் பிறக்க ஏதுவாயின. அவர் அணி செய்த காலந் தொட்டே, பச்சையப்பன் கல்லூரி, தமிழ்ப் புலமைக்குப் பெயர் பெற்று விளங்கலாயிற்று எனலாம். அண்மைக் காலத்தே புகழ் பெற்று விளங்கிய பேராசிரியர் சொல்லின்செல்வர் சேதுப் பிள்ளை அவர்களும், இன்றும் பெருமையொடு விளங்கும் பன் மொழிப் புலவர் மீனுட்சிசுந்தரனுர் அவர்களும் செல்வகேசவ ராயரிடத்தே பயின்றவர்கள் என்பது அவர் பெருமைக்குச் சான் ருவதன்றே!

தமிழ் மொழியிலே அவர் கொண்டிருந்த பற்று, தம் பிள்ளை களுக்கு அவர் இட்டு வழங்கிய பெயர்களாலேயே புலப்படும். சிறந்த புலமையுடையவராய், பழைய இலக்கண இலக்கியங் களுக்கு உரை கண்டவர்களான, பரிமேலழகர், நச்சினுர்க் கினியர், சேனுவரையர் ஆகியோர் பெயர்களையே தம் பிள்ளை களுக்கு வைத்து அழைப்பதிலே அவர் பெரு மகிழ்ச்சியுற்ருர்.

அவரது காலத்தில் தமிழ் உரைநடை இலக்கியம் ஒரு வாற்ருன் இடம் பெற்று வந்ததேயன்றிக் கவிதைநடை ஏடுகள் போன்று வளம்பெற்றுத் திகழவில்லை. கவிதை நடையிலே தான் புலமை சிறப்பது என்னுங் கருத்தால், நல்லறிவுத்

திறனுடையார் பலரும் ஆங்கிலத்திலே உரைநடையைக் கைக் கொள்ளினும் தமிழிலே விருத்தமும் வெண்பாவும் ஆசிரியமும் இயற்றுவதிலேயே ஆர்வமுடையவராய் வாழ்ந்தனர். கட்டுரைகள், மேல்நாட்டு மொழிகளிலும், குறிப்பாக ஆங்கிலத்திலும் அமைந்தவாறு தமிழில் எழுதப்படுவதில்லை. தமிழ் உரை நடை பலரும் விரும்பிப் படித்தற்கும் பொருள் அறிந்து தெளிதற்கும் ஏற்ற கருவியாகக் கைக்கொள்ளப் படவில்லை.

பழந்தமிழ் இலக்கணங்களுக்கும், இலக்கியங்கட்கும் பொருள்கண்ட பேராசிரியர்கள், ஏழு, எட்டு நூற்றுண்டுகட்கு முன்னரே உரைநடையைக் கையாண்டனர் எனினும், அவை புலமைச் செறிவுடைய அரிய நடையில் அமைந்தவை. பின்னர்ச் சமயச் சார்புடைய ஏடுகள் சிலவற்றுக்கு விரிவான விளக்கங்கள் (வியாக்கியானங்கள்) உரைநடையில் எழுதப்பட்டுள்ளன. அவையும் அனைவராலும் படிக்க முடியாதவை.

பதினேழு பதினெட்டாவது நூற்றுண்டுகளிலேதான் கிறித்தவச் சமயக் கருத்தைப் பரப்புவதற்கு விழைந்த பாதிரிமார் பலர், இக்கால உரைநடைக்கு அடிகோலும் முறையில் பல உரைநடை ஏடுகளை எழுதி வெளியிட்டனர்.

வீரமா முனிவர் என்று பெயர் பெற்று விளங்கிய பெசுகி பாதிரியார் எழுதிய 'அவிவேக பூரண குரு' கதையே முதல் உரைநடை இலக்கியமாகும். பின்னர் வேறு சிலர் உரைநடையில் எழுத முன்வந்தனர். எனினும் அவருள்ளும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருந்த யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் அவர்களும், வடலூர் இராமலிங்க வள்ளலாரும், நீதிபதி வேதநாயகம் பிள்ளை அவர்களும் முதன்மையுடையோ ராவர். வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் கதை குறிப்பிடத் தகுந்த சிறப்புடையது. வள்ளலாரின் உரைநடை எளிதன்று. ஆறுமுக நாவலர் சைவ சமயச் சார்பில் நின்றே பல ஏடுகளையும் எழுதி வெளியிட்டாரெனினும் அவை கற்பார்க்கு ஏற்ற பெற்றி அமைந்து உரைநடைக்கு ஆக்கஞ் செய்தன. ஆயினும் அக்காலத்தில் பல்வேறு துறைக் கருத்துகளும் படிப்பார்க்கு

ஆர்வமும் தெளிவும் பிறக்கும் வகையில் தமிழ் உரைநடையில் எழுதப் பெறவில்லை.

இருபதாம் நூற்றாண்டில்தான் அந்நிலை அரும்பியது. செல்வகேசவராயர் அவர்கள் முதன் முதலாகப் பல்வேறு பொருள் குறித்தும் நல்ல தமிழ்ச் சொற்களையும் தெளிந்த நடையையும் மேற்கொண்டு கட்டுரைகள் வரையலானார். அவ்வாறு வரைந்த கட்டுரைகள், தமிழ் உரைநடை நூல்களாக வெளியிடப்பட்டு, மக்களிடையே தமிழ் அறிவும் நல்ல தமிழ் நடையும் வளர வழிசெய்தன.

முதன் முதலாகத் தமிழ்ப் புலவர்களைக் குறித்தும், இலக்கியங்களில் காணப்படும் பாடல் கருத்துகளைக் குறித்தும், தமிழ் மொழியைக் குறித்தும் ஆராய்ந்து வெளியிட்ட தமிழ்ப் புலவரும் அவரே எனலாம். தம்முடைய ஆராய்ச்சியில் உண்மையென்று கண்டவற்றை அஞ்சாது உரைக்கும் ஆண்மையுடையவராயும் அவர் விளங்கினார்.

தமிழ்மொழி குறித்து அக்காலத்தில் நிலவிய தவறான கருத்துகள் பலவாகும். அவற்றை நீக்கும் வகையில் 'தமிழ்' என்னும் பெயரில் செல்வகேசவராயர் எழுதிய நூலில் காணப்படும் அரிய செய்திகள் பலவாகும். அவை அக்காலத்தில் தமிழர்கட்குத் தம்மொழி குறித்துப் புதிய உணர்ச்சி ஊட்ட ஏதுவாயின.

'தமிழரும் தெலுங்கரும், மலையாளிகளும் கன்னடரும் ஆகிய நால்வரும் புகைத் தேரிலே ஒருங்கு செல்ல நேர்ந்தால் ஒருவர் சொல்வதை ஒருவர் அறிவதில்லை. ஆயினும் இவர்தம் மூதாதையர் அனைவரும் ஓரிடத்திலே வதிந்த ஒரே கூட்டத்தினர் எனக் கூறினால், சிலர், 'இதுவும் ஒரு கலிகாலக் கூத்து' என நகுதல் செய்வர். எனினும் ஈதுண்மை என்பது மொழிநூல் உணர்ந்த பலருக்கும் அங்கைக் கனியாமன்றோ! இக் கூட்டத்தார் திராவிடர் என்னுங் குறியீடு பெறுவாராயினர். இவர்களுடைய மொழிகளும் 'திராவிடம்' என்னும் பிண்டப் பெயர் பெறுவனவாயின. தொல்லைநாள் தொட்டுப் பெற்றுள்ள தலைமையால், பிற திராவிட மொழிகள் தனி எழுத்து வடிவமும்

வளர்ச்சியும் பெறு முன்னரே தமிழ் விளங்கி நின்ற தன்மையால், தமிழ் ஒன்றனையும் சிறப்பு வகையால் திராவிடம் என்றே தம்முள் வழங்குவாராயினர். வடமொழி வாணர்தம், மொழியில் 'திராவிடம் என்பது ஓடி வளைந்தது' என்னும் பொருளுடைய தாம். ஆகவே மேற்கூறிப் போந்தவர்கள், சென்று வளைந்து குடியேறியிருந்த தென்னாட்டினைத் திராவிட தேசம் என்றும், அவர்களைத் திராவிடர் என்றும், அவர்களுடைய மொழியைத் திராவிடம் என்றும், வடமொழியாளர் தம்முள் வழங்கலாயினர் என்பது வெளிப்படை.

'இனித் திராவிடம் என்னும் ஆரியமொழிச் சொல்லே தமிழ் என மரீஇயது (மருவியது) என்பார் கூற்றும் பலர்க்கு உடன்பாடாவதில்லை. திராவிடம்—த்ரவிடம்—த்ரமிடம்—த்ரமிளம்—தமிழ் என, மரூஉவின் முறைகாட்டி மயக்கஞ் செய்கின்றவர்களை நோக்கி, 'அற்றன்று; தமிழ் என்பதை உச்சரிக்க இயலாத ஆரியர்கள் தமிழை—தமிளம், த்ரமிளம், த்ரமிடம், த்ரவிடம், த்ராவிடம் என, தம் உச்சரிப்பு வகையால் மாற்றஞ் செய்வாராயினர்', என மறுத்து வாதுக்கழைப்பர்.

''தமிழ்'' என்னுந் தமிழ்ச் சொல், 'தண்டமிழ் யாழினுமினிய சொற்கிளியே' (கம்பர்) என வருவது போன்று இலக்கியத்தில் பலவிடங்களில் இனிமை என்னும் பொருட்டாய் இயங்கா நிற்பவும், திராவிடம் என்னுஞ் சொல்லைத் தமிழ் என்னும் பெயர்ச் சொல்லோடு சம்பந்தமுடையதாய் மொழிவது, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவதே யாகும்.

திராவிடம் என்பது வடநூல்களுள்ளும் பண்டைப் பனுவல் களில் காண்கிலாததோர் நலமொழி என்றே நன்குணர்ந்த புலவர்கள், பன்னெடுங்காலமாய் இங்கு நிலைபெற்றிருந்த 'தமிழைத்' திராவிடம் என்பதன் திரிபென்பது மலடி பெற்ற மகவு என்பதனை ஒக்கும்.''

இவ்வாறு தமிழ் என்னுஞ் சொல் தமிழகத்திலேயே தொன்று தொட்டு வழங்கிவரும் பெயர் **என்று கூறும் ஆசிரியர்** அதற்குச் சான்று காட்டினர்.

"தொன்று தொட்டே 'தமிழ்' என்பது மரபுச் சொல்லாக வழங்கி வந்ததனாலன்றோ, ஆசிரிய மரபையே மரபாகக் கொள்ளும் மாண்புடைய தொல்காப்பியனாரும், தமது இலக்கண நூலில், 'தமிழென் கிளவியும்'—'தமிழ் கூறு நல்லுலகம்'—'செந்தமிழ் இயற்கை' என்பன போன்று, பலவிடத்தும் அதனை எடுத்தாண்டுள்ளார் என வினவி, இங்கு வடமொழி வாடை வீசு முன்னரே 'தமிழ்' என்னுங் கிளவி வழக்காறுடையதாக இருந்தது என்பது போதரும்" என முடிவு செய்துள்ளார்.

மேலும், "தமிழர்களுடைய நெடியதொரு தொன்மையை நோக்குங்கால் ஆரியர் இங்கே குடியேறிய காலம், கண நேரத்துக்கு முன் பெற்ற தந்திச் செய்தியை ஒக்கும்" என முன்னால் தமிழக ஆளுநராக இருந்த கிராண்ட்டப் என்பார் கூறிய கருத்தை அவர் சான்றாகக் காட்டியுள்ளார்.

அவர் காலத்தில், தமிழ்மொழி, வடமொழி வழிப்பிறந்த மொழி என்றும், கடவுள் அருளிய மொழி யென்றும் கூறுவதிலே பலரும் பெருமை கொண்டனர். அதன் குற்றத்தையும் குறையையும் உணர்ந்தாரில்லை. அவர்கள் அவ்வாறு கொள்ளுதற்கு எடுத்துக் காட்டிய பாடல்கள் பல. அவற்றை ஐயுறுதற்கும் அஞ்சினர் புலவர். ஆனால் செல்வகேசவராயர் அந்த அச்சத்தை விலக்கித் தாம் கண்ட உண்மையைத் துணிவுடன் உரைக்க முற்பட்டார். அவ்வாறு அவர் எழுதியது இது :

"தமிழ்தான் ஆரியத்தின் வழி வந்ததன்றித் தன்னில் தானாயதோர் தனிமொழி அன்று என்று ஒருசார் புலவர்கள் தமிழ் நூல்களினின்றே சான்று காட்டுவார். அன்றியும் தமிழ் நூற்கு அளவிலை, அவற்றுள் ஒன்றே யாயினுந் தனித்தமிழ் உண்டோ? அன்றியும் ஐந்தெழுத்தால் ஒரு பாடை உண்டென்று அறையவே நாணுவர் அறிவுடையோரே" என்ற இலக்கணக் கொத்தைக் காட்டினால் அலக்கண் உறுவேன்.

"தழற்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்" என்று அகத்தியனாரைக் கூறும் இராமாயண அடியை ஓத எனக்கு நா எழுவதில்லை.

''இரு மொழிக்கும் கண்ணுதலார் முதற் குரவர்'' என்னும் விருத்தத்தின் ஏனைய அடிகளைக் கேட்க நான் ஆற்றகில்லேன்.

''வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்தக் குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்'' என்பதைக் கண்டால் அம்மட்டிலே நான் அந்தப் புராணத்தை மூடிவிடுவேன்.

''கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந்து ஆய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ!

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை யழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்''

என்ற திருவிளையாடலைப் படிப்பதுதான் எனக்குப் பெருவிளையாடல்! (ஒருவாறு தமிழினைப் பெருமைப் படுத்தி யுரைப்பதால் இதனைப் படிப்பதிலே அவர் மகிழ்ந்துள்ளார் போலும்) 'செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி' என்பது ஒன்றுமே எனக்குப் பேரானந்தத்தை விளைவிப்பது. இவ்வாறு தமிழின் பெருமைக்கு ஒவ்வாத எந்தக் கருத்தையும் அவர் ஏற்க மறுத்துப் புராணக் கருத்தைப் பொய்யாக்கினர்.

தமிழானது வடமொழிக்குத் தலைமகளென்றும், தமிழரும் ஆரியருடைய நாற்பாற் குலத்திற் கீழ்ப்பாற் குலத்தாரென்றும், காரணம் காட்டாது கண்மூடிப் பேசுகின்றவர்களுடைய கோட்பாடுகளை வெட்டிப் பேசுவதற்கு முன்வந்தார். மேலும், சிவபெருமான் பாணினி முனிவருக்கு வடமொழி இலக்கணமும், அகத்தியருக்குத் தமிழ் இலக்கணமும் அருளிச் செய்தார் எனவும், சிவபெருமானின் உடுக்கையின் வல, இடப் பக்கங்களினின்றும் எழுந்த ஓசைகளைக் கொண்டே அம்முனிவர்கள் வட, தென்மொழி இலக்கணங்களைச் செய்தார் எனவும், மேலெழுந்த

தென்பாலைச் சமன் செய்து அடக்க வந்த அகத்தியர் அறுமுகக் கடவுளிடம் தமிழ் கற்ருர் எனவும், வழங்கும் புராணக் கற்பிதக் கருத்துகளை எடுத்துக் கூறி அவை அறிவுக்குப் பொருந்தா வெனக் கடிந்து ஒதுக்கியுள்ளார். ''அகத்தியர் ஏதோ ஒரு காரணத்தினுல் தென்னுட்டினை அடைந்தவர், தமிழ் வல்ல சான்ருேரிடத்து அதனை ஓதி யுணர்ந்தார், என்பதே எமக்குத் துணிவு'' என்றும் அறுதியிட்டுள்ளார். தமிழை அகத்தியர் தாமே படைத்தார் என்பது எவ்வாற்ருனும் பொருந்தாது. ஒரு மொழியை ஒருவர் உண்டாக்கினுர் என்பது மொழிநூல் முடிவுக்கு முற்றும் முரண்பாடாகும். அகத்தியர் தென்னுடடைவதற்கு முன்னரே அங்கே தமிழ் வழங்கியிருந்த தென்பதற்கும், அந் நாளில் அதனை வழங்கினேர் ஆரியரல்லாத வேறு இனத்தவர் என்பதற்கும், இராமாயணத்திலேயே சான்று உள்ள தெனவும் காட்டியுள்ளார்.

தமிழானது மிக்க சொல்வலிமையும், வடமொழிக்கு முற்றும் புறம்பான இலக்கிய வகையும் இலக்கண அமைதியும் உடைய தனிமொழியே என்று விளக்கி உரைத்துள்ளதோடு, தமிழில் வந்தேறிய நூல்களில் இடம் பெற்ற பிறமொழிச் சொற்களைப் பற்றியும் ஆராய்ந்து கூறியுள்ளார்.

வட மொழியினின்றும் தமிழில் **வந்தேறிய** சொற்கள் வட சொற்கள் எனவும், பிறமொழிகளினின்றும் வந்தடைந்து அருகி வழங்குபவை திசைச் சொற்கள் எனவும், குறிக்கப்படும். அவை தாமும் வாணிபத்தின் பொருட்டாகவும், பிற காரணங்களாலும் தமிழரும் பிறரும் விரவிய விடத்துத் தமிழிற் புகுவனவாயின.

அவ்வாறு வழங்கும் போர்த்துகீசியச் சொற்கள் : கிராம்பு, சன்னல் (பலகணி), சாவி (திறவு கோல்), அலமாரி, பாதிரி முதலியன. பாரசீகச் சொற்கள் : ஜமீன் (பெருநிலக் கிழார்), சிபார்சு (பரிந்துரை), சிப்பந்தி (பணியாள்), சிப்பாய் (வீரன்), சுமார் (ஏறக்குறைய), தஸ்தாவேஜு (சான்றேடு), பந்தோபஸ்து (காவல்), ரஸ்தா (சாலை), மேஜை, பக்கிரி முதலாயின. அராபியச் சொற்கள்: அலாக்கு, அஞமத்து, ஆசாமி, இரிசால், இலாக்கா, வாய்தா, நகல், நாசூக்கு, மாமூல், முனிசீப், வசூல்,

ஐப்தி, முதலாயின. இந்துஸ்தானிச் சொற்கள்: அசல் அந்தஸ்து, அலுவா, அம்பாரி, ஆஜர், இஸ்திரி, உஷார், கலாயி, குமஸ்தா, குல்லா, ஜமுக்காளம், ஜாபிதா, ஜல்தி, ஜோடு, தபால், தாணு, தர்பார், துப்பட்டா, நபர், பஞ்சாயத்து, பங்களா, பாரா, மாகூல், ஜவாப், சவாரி, சபாஷ், ஜவான் முதலாயின.

இவை முதலாயின திசைச் சொற்கள் பலவும் நூல் வழக்கில் இடம் பெற்றவையாகா. பேச்சு வழக்கிலே வழங்குபவையே மிகுதி. நூல் வழக்கில் ஏறியிருக்கும் அளவையும் அவர் கணக்கிட்டு உரைத்திருப்பது அறிய வேண்டியதொன்றாகும்.

ஆத்திசூடி முதலான நீதிநூல்களில் வருகின்ற ஈராயிரத்து இருபது சொற்களுள் வடசொல்லாவன நூற்றைம்பத்தாறு. இது நூற்றுக்கு எட்டு வீதமும் ஆகவில்லை. நறுந்தொகையில் [வெற்றி வேற்கை] அறுநூறு சொற்களுள் இருபானான்கு வடசொற்கள் அமைந்துள்ளன. இது நூற்றுக்கு நான்கே ஆகிறது. நைடதம் வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப்பட்ட நூலாயினும், அதனுள் சராசரியில் மூன்று பாட்டில் இரண்டு வடசொல்லின் மிகுவது அருமை. திரிகடுகத்தில் இருபத்தைந்து வடசொற்கள் உள்ளன. இது நான்கு வெண்பாவிற்கு ஒரு வடசொல் ஆகின்றது. நான்மணிக்கடிகை முற்றும் தடவிப் பார்த்ததில் இருபது வடசொல் கண்டோம். திருக்குறளில் ஓரோ வோரதிகாரத்து இரண்டும் ஒவ்வொன்றில் ஒன்றுதானும் காண்பதரிதாய் இராநின்றது. நாலடியில் ஐந்து வெண்பாவில் ஒரு வடசொல் காண்பது கடினமாக இருந்தது. கலித்தொகையில் கலிப்பாட்டு ஒவ்வொன்றிலும் வடசொல் ஒன்றின் மிக்கிலது. கல்லாடத்தில் அகவல் ஒன்றில் ஐந்தின் மிக்க வடசொல் இல்லை. பத்துப்பாட்டைப் பதமுறச் சுவைத்த விடத்து, பற்பானூறும் சிற்சினூறுமாய வரிகள் கொண்ட பாட்டு ஒவ்வொன்றிலும் வடசொற்கள் நான்கைந்தின் மிகவில்லை. அவை தாமும் வடசொல்லோ தமிழ்ச் சொல்லேயோ என ஐயம் கொள்ளுதற்கு ஏதுவாக நின்றன. சைவ, வைணவ சமய நூல்களாகும் திருவாசகம், தேவாரம்,

நாலாயிரப்பிரபந்தம் முதலியவற்றில் மேலே காட்டின அள விலும் வடசொற்கள் மிக்குள்ளன. இன்னும் சோதிடம் முதலியவற்றை நோக்குமிடத்து வடசொற்கள் பின்னும் பல வாம். இவ்வாறு கணக்கிட்டுக் காணுமிடத்துக் காலத்தால் பின்னே போகப் போகத் தொன்மையான இலக்கியங்களில் அம் மொழிக்கலப்புக் குறைந்துகொண்டே போகின்றது என் பதும், அதனால் தன்னால் இயன்ற தனித்தமிழ் ஒரு காலத்து உள தாயிருந்தது என்பதும் பட்டம் பகலாகத் திட்டப்படுகின்றது. என்பது அவர் தந்த ஆய்வுரை.

''இன்றளவும் வழங்கும் தமிழை மேனோக்காகக் காண்ப வரும் அதன் சொற்களின் தனித் தன்மையைக் காணலாம்'' என்பார், எடுத்துக் காட்டி விளக்குவது இது:

'உழவும் கலப்பையும், காரும் கயிறும், குண்டையும் நுகமும், சாலும் வயலும், வாய்க்காலும் ஏரியும், மடுவும் ஏற்றமும் பிறவும், பயிரும் களையும், நட்டலும் கட்டலும், முதலாய ஏரெழுபதும் தமிழ் மொழிகளான் இயன்றனவே. தமிழர்கள் வதியும் வீடுகளின் கூறுகளாகிய தலைக்கிடையும், புழைக்கடையும், கூரையும் வாரையும், கூடமும் மாடமும், தூக்கும் தூணும், கல்லும் கதவும், திண்ணையும் குறடும் தரையும் சுவரும், மண்ணும் மாணும், மற்றவுந் தமிழே. தலையும் காலும், கண்ணும் காதும், மூக்கும் மூஞ்சியும், வயிறும் மார்பும், நகமும் சதையும், நாவும் வாயும், பல்லும் மயிரும் மற்றவும் ஆகிய உடற் கூற்று மொழிகள் தனித் தமிழன்றோ! தமிழ்நாட்டிலுள்ள சிற்றூர், சீரூர், ஆரூர், பேரூர், புத்தூர், புற்றூர், சேய்ஞலூர், மணலி, நெல்லூர், நெல்லை, கொன்னூர், குறட்டூர் என்னும் ஊர்கள் பலப் பல தமிழ்மொழியே புனைந்தன. ஞாயிறுந் திங்களும், செவ்வாயும் வியாழமும், வெள்ளியும் ஆகின்ற கிழமை கட்குத் தமிழ்ப்பெயர் பெயரே. தொண்ணூற்றொன்பதினா யிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பது வரையில் எண்ணப்பட்ட எண்களில் ஒன்றேனும் வடமொழியால் எண்ணப் படுவதில்லை. ஆழாக்கு, உழக்கு, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலன் என்னும் முகத்தலளவையும், இன்னும் கீழ் வாயிலக்கமும் அவற்றின் குறியீடுகளும் எல்லாம் *தமிழே.

தமிழர்கள் உண்ணும் சோறும் சாறும், காயும் கறியும், பாலும் பழமும், நெய்யும் தயிரும், உப்புமுதல் ஒன்பதும் பருப்பு முதல் பத்தும், தமிழ்ச் சுவையே. எழுத்தும் சொல்லும், பொருளும் யாப்பும், அணியும் ஆகிய ஏடுஞ் சுவடியும், எடுத்துப் பார்க்கு மிடமெல்லாம் தமிழே. துணியும் அணியுந் தமிழே. தொழும் கடவுளும் தமிழ் மயமே. வீடும் நாடும், காடும் மேடும் ஆகிய எங்கும் தமிழ் மயமாகவே இருக்கின்றது. தமிழின் தனிப் பிறப்பை ஏற்க மறுப்பாரும் இருந்தமையன்றோ வியப்பு!

மேலும், தமிழின் தொன்மையுணராத வடமொழி வலவர் சிலர் 'என்ன ஐயா, தமிழ்! தமிழ்!! எனப் பெருமலைவு செய் கின்றீர்? உங்கட்கு வடமொழி தழுவாத இலக்கியம் உண்டா? காவியங்கள் உண்டா? நாடகம், சங்கீதம் உண்டா? தருக்கம் வேதாந்தம் முதலான சாத்திரங்கள் உண்டா? உங்கள் தமிழைக் கட்டிவையுங்கள். எல்லாம் நாங்கள் உமிழ்ந்த சக்கை தானே!' எனக் கூறிப் பெருமிதம் எய்துகின்றனர். 'இவ் வட மொழி வலவரோடு எதிர்த் தட்டாக நிற்பது தமிழ்ப் புலவர் களுக்குச் சிங்க சொப்பனமாக இருக்கிறது' என்று தொடங்கி, தமிழின் தனிப் பெருமைக்குரிய சான்றுகளைக் காட்டி எதிர் வழக்காடியுள்ளார். அவ்வாறு அவர் கூறியனவற்றுள் சில இவை: முதலிடைச் சங்கமிருந்த மதுரையுங் கபாடபுரமும் கடல் கொள்ளப்பட்ட ஞான்று, வழி வழிப் பெயரு மாள, வாரணம் (கடல்) வாரிக் கொண்ட ஏரணம், உருவம் யோகம், இசை, கணக்கு......நீர், நிலம், உலோகம், ஆரணம், பொருள் என்று இன்னபிற நூல் யாவும் போக; இராமபாணங்கள் துளைத்துச் செல்லரித்தும், உக்குதல், மக்குதலானும் ஒழிந்த பண்டை நூல்கள் பலவும் நீங்க; இந்நாள்காறும் எஞ்சி நின்றனவற்றை (1900ஆம் ஆண்டில் காணக் கிடைத்தவற்றை) ஒரு சார் ஆராய்வோம்' என விளக்க முற்பட்டார்.

'திருவள்ளுவப் பயன் என்பது திருக்குறள். இதனைப் பரிமேலழகர் பாயிரத்தும் பிறவிடங்களிலும் முடிந்து காட்டிய முடிபு கொண்டு இது வடநூன் முடிபும் போக்குமாக முடிந்த தென்பது நமக்கு உடன்பாடாவதில்லை. புறப்பொருள், அகப் பொருள்களின் பிரிவாகிய அறம், பொருள், இன்பம் என்ப

தொரு வரையறையை அடியாகக் கொண்டு, வள்ளுவனர், மன்பதைகள் உய்ந்துபோம் ஆற்றைத் (வாழும் நல்வழியை) தமது கருத்தில் செப்பமாகச் சீர் செய்தவாறே, இந்நூல் கூறினர் என்பதே பொருந்தும். வள்ளுவ மாலையின் நோக்க மும் இதுவேயா மென்பது கண்டு தெளிக!' என்று தெளிவு படுத்தினர்.

'வடமொழியில் வான்மீகி இயற்றிய இராமாயணத்தை வட மொழி வல்லவர் உரைப்பச் செவியேற்றுக் கம்பநாடர் தாம் வேண்டியவாறு இராமாயணம் கூறினரல்லது, சொல் தோறும், செய்யுள் தோறும் கட்டுண்டு, மொழிபெயர்த்துக் கூறினர் அல்லர். பாரத வெண்பாவும் இங்ஙனமே பெருந்தேவனரால் செய்யப்பட்டது' எனவும் விளக்கியுள்ளார்.

'தகடூர் யாத்திரை—சிலப்பதிகாரம் முதலியன உரை நடை யிட்ட பாட்டுடைச் செய்யுட்களாகத் தமிழிலேயே மலர்ந்தவை. உரை நடையும் தமிழர்கள் அறியாத தொன்றன்று' எனவும், 'பத்துப் பாட்டெனும் பாட்டுகள் பத்தும் தமிழ்நாட்டின் ஐந்திணை வளங்களையும், குடிகளின் நிலைமைகளையும் அற்றை நாளரசர் பெருமைகளையும் பலவற்றையுங் கூறும். நற்றிணை நானூறு முதலிய எட்டுத் தொகையும் தமிழுக்கே உரிய அகப் பொருள்களைப் பல வகையான் விரித்தியம்புகின்றன. ஆசாரக் கோவை ஒழிந்த ஏனைக் கீழ்க் கணக்கெல்லாம் அகப் புறப் பொருளான உலகிய னெறியும் வீட்டு நெறியும் கூறும் தமிழ் இலக்கியங்களாம்......கல்லாடம் தமிழுக்கே உரியது. முத் தொள்ளாயிரம் என்பதும் தமிழரசரைப் புனைந்துரைத்த நூலே. கலிங்கத்துப் பரணி, மூவருலா, மடல் முதலியன தமிழே. சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியனவும் தமிழ்நாட்டு நிகழ் பொருளையும் சரிதங்களையும் புனைந்துரை வகையால் தொடுத்த பொருட்டொடர் நிலைச் செய்யுள்களாம். ஆத்திசூடி முதலியன தமிழுக்கான இலக்கியங்களே. மருத்துவ நூல்கள் பலவும் மொழி பெயர்ப்பு ஆவனவல்ல' எனவும் அறிவித்துத் தமிழின் முதன்மையை நிலைநிறுத்தி யுள்ளார். மேலும், 'சமயத்துறை இலக்கியங்களான, நாலாயிரப் பிரபந்தமும், சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் வடமொழியினின்றும்

மொழி பெயர்க்கப்பெற்றனவென்று கூறுதற்குச் சான்றுண்டா?' எனவும் வினவுகின்றார்.

'நாடக நூல்களும் இசை நூல்களும் இறந்து போயின. இவற்றின் பண்டை நிலைமையை அறிய அவாவுறுகின்றவர்கள் சிலப்பதிகார உரையைக் கண்டு தெளிவாராக. இப்பொழுது நாமறிவன வெல்லாம் அக்காலத்துச் சங்கப் புலவர்கள் இயற்றிய பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், மதிவாணனார் நாடகத் தமிழ்நூல், கூத்தநூல் என்றாற்போன்ற நூல்களின் பெயர்களேயாம்' என்று மறைந்த தமிழ்க் கலைச் செல்வத்தைக் குறித்து இரங்குகின்றார்.

மேலும், 'தமிழ் இலக்கணம் வடமொழியின் வழிப்பட்டதோ அன்றோ என்பதை இனித் துணிதல் வேண்டும்' எனத் தொடங்கி, இருமொழிப் புலமையும் ஆராய்ச்சித் தெளிவும் மிக்க சிவஞான முனிவரது கருத்துகளைச் சான்றாகக் காட்டித் தமிழ் இலக்கணம் தனிவேரும், அடியும், கிளையுந் தழையுங் கொண்டது என்பதனை விளக்கி உரைத்தார்.

இத்துணைச் சான்றுகள் காட்டியும், இன்னும் தமிழை இழித்துக் கூறி அபசாரப்பட்டு (குற்றமிழைத்து) அழிகின்றோர் உளரேல், நாம் அவரை, நக்கீரனார் பாடியது போன்று 'ஆனந்தஞ் சேர்க சுவாகா' என்பதோடு நிறுத்திச் சாகப் பாடாமல், 'அவர்கள் தாமே எரிவாய் நிரயத்து வீழ்வர் கொல்' எனப் பரிந்து, 'செந்தமிழே தீர்க்க சுவாகா' என முடித்துக் கூறி அவரை வாழ்விப்போம் எனக் கூறியுள்ளார். தமிழ்ப்பகை பாராட்டுவோர் தாமே அழிவர் என்பதை அறிவுறுத்தி, தமிழ்ப் பெருமையை அவரும் உணர்ந்து வாழ்வுபெற வழிகாட்டுவோம் எனப் பேராசிரியர் செல்வகேசவராயர் கூறியது அவரது தமிழ்ப் பற்றையும்—தமிழ் வாழும் நெஞ்சத்தையும் ஒருங்கே காட்டுவதாம்.

உரைநடை நூல்கள் பல இயற்றித் தானான தமிழின் தனிச் சிறப்பை நிறுவி, தமிழ்ப் புலவர்கள் நெஞ்சுயர்த்த வழி செய்த செல்வகேசவராயர் நினைவு போற்றப்பட வேண்டியதன்றோ!

தமிழ்த்திருநாள் கண்ட நமசிவாயனர்

பொங்குக பொங்கல் பொங்குக எங்கணும்
பொங்குக பொங்கல் இன்பமே எய்துக.

“பொங்கற் புதுநாள் போந்தது போந்தது
எங்கணும் எவர்க்கும் இன்பமே எய்துக !
பொங்குக பொங்கல், பொங்குக பொங்கல் !
பொங்குக பொங்குக பொங்குக பாலும் !
ஒக்கலும் மக்களும் உவந்துடன் உண்க !
மக்கள் அனைவரும் மகிழ்ந்தே உண்க !
புத்துடை உடுமின் புத்தணி அணிமின் !
பத்தி கொண்டே பரமனைப் பணிமின் !

நந்தம் தமிழ்மொழி நலம்பெற் ஶேங்கிட
எந்தக் காலும் இன்புற வாழ்த்துக!
தண்கடற் பரப்பிற் சாரும் மணலினும்
பண்புற வானில் பரவும் மீனினும்
வாழ்க அனைவரும் வாழ்க பல்லாண்டு!
வாழ்க பல்லாண்டு வளமெலாம் படைத்தே!

முதன்முதலாகப் பொங்கல் விழாவைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாடத் தலைப்பட்ட தமிழ்ப் பேராசிரியர் கா. நமசிவாயனுர் வழங்கிய திருநாள் வாழ்த்து இதுவாகும்.

இந்த நூற்ருண்டின் முற்பகுதியில் தமிழ்மக்கள் வாழ்வு தமிழர் என்னும் உணர்வற்றுத் தட்டுத் தடுமாறி நின்றது. தமிழ் மரபு, தமிழர் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு என்பவை குறித்துத் தெளிவின்றி நிலை கெட்டு நின்றனர் தமிழர். தமிழ் கற்ற புலவர்களிலேயே பலர், சமயச் சார்பால் கருத்துக் குழம்பிக் கிடந்தனர் எனில் மக்களைப்பற்றிக் கூறவாவேண்டும்? தமிழ் கற்ருர் சிலர், கற்ருருள்ளும் தெளிந்தார் மிகச் சிலர், அவருள்ளும் தெளிந்ததனை வெளியிடும் துணிவுடையாரோ அரியர்.

அந்நிலையைத் தெளிந்தார் நமசிவாயனுர். மக்களிடையே விளங்கிய பல்வேறு விழாக்களும், சில நம்பிக்கைகளையும் சமயச் சார்பான கதைகளையும் வடமொழிவழி எழுந்த வழக்குகளையும் ஒட்டியே கைக்கொள்ளப்பட்டன வாதலையும், பொங்கல் விழா ஒன்றுமே தமிழர் மரபொடு பொருந்தியும், இயற்கை நெறியோடும் உழவுத் தொழிலோடும் வேளாண்மைப் பண்போடும் விழாச் சூழலோடும் விளங்கியும், சமய வேற்றுமை கடந்து தமிழர் யாவர்க்கும் உரியதாயும் அமைதலைக் கண்டறிந்தார். வாழ்கின்ற தமிழ்மக்கள் எல்லோரும், தாய்மொழிப் பற்றும் தமிழ் மொழித் தெளிவும் கொள்ளுதற்கு இத்திருநாளே ஏற்ற நன்ளுள் எனக் கொண்டார்.

பண்டைத் தமிழரின் பெருவாழ்வை—சங்கத் தமிழ் இலக்கிய மாட்சியை—தமிழர்கள் பயின்ற கூத்தை—இத் திருநாளில் விளக்கி யுரைத்தும், பாடிக் கேட்டும், ஆடிக் கண்டும் மக்கள் அறிந்து மகிழ வேண்டும் என்று விரும்பினுர்.

அதன் பயனாகவே, பழந் தமிழ்ப் பொங்கல் விழா, உழவரும் பிறரும் மகிழ்ந்த கொண்டாட்டம், முத்தமிழ் முழங்கும் தமிழ்த் திருநாளாய் வண்ணங் கொண்டது. நமசிவாயனார் துவக்கி வைத்த தமிழ்த் திருநாளே, தென்னவர் எழுச்சிக்கு உரமூட்டும் திராவிடர் திருநாளாகவும் கொண்டாடப் படுவதாயிற்று.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், மக்களிடையே தமிழ்ப் பற்று இல்லை. மாணவரிடையே தமிழ் கற்கும் ஆர்வம் இல்லை. அறுநீர்க் குளத்தில் ஆம்பல் பூக்குமோ? காயும் வெயில் எரிக்கையில் அல்லிதான் மலருமோ? தமிழகத்தின் தலையாய பல்கலைக் கழகத்திலும் ஒரு வட்டாரப் பேச்சு மொழி என்னும் பெயருடன், செந்தமிழ் ஓர் ஒதுக்கிடத்தில் தான் நிறுத்தப்பட்டிருந்தது. தமிழர்கள் தமிழ் நூல்களைக் கற்றுத் தமிழ்ப்புலமை எய்துதற்குப் பல்கலைக்கழகத் தேர்வு முறையிலேயே இடமில்லை. வடமொழியும் கற்றார்க்கே தமிழ்ப் புலமை உடையார் என்னும் தகுதி கிடைக்கும் என்னும் இடர்ப்பாடும் இழுக்கும் அடர்த்து நின்றன. பள்ளிச் சிறார் தம் வயதுக்கும் வகுப்புக்கும் ஏற்பக் கற்றற்கான நடையில் எழுதப்பட்ட ஏடுகளும் இல்லாது தமிழ்த் துளிர்கள் கருகிக் கொண்டிருந்தன.

அந்நிலையில் இந்தக் குறைகளைக் களைவதில் முன்னின்று, தமிழுக்குப் பல்லாற்றானும் தொண்டாற்றியவர் பேராசிரியர் நமசிவாயனார்.

தொண்டை மண்டலத்தில் உள்ள காவேரிப் பாக்கத்தில் 1876 ஆம் ஆண்டில் பிறந்து, இளமையிலேயே தமிழ்க் கல்வி கற்று, சென்னையில் ஒரு தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து, பெரும்புலவர் [மகா வித்துவான்] சண்முகம் பிள்ளை என்பாரிடம் தம்மை மாணவராக ஆக்கிக்கொண்டு, தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கேட்டுத் தெளிந்தார். பின்னர் உயர்நிலைப் பள்ளிகள் சிலவற்றிலும், மேரி அரசியார் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றிப் புலமைத் திறத்தாலும், தமிழ் ஆர்வத்தாலும் தம்மிடம் பயின்ற மாணவ மாணவியர்க்குத் தமிழ் அமுதூட்டி, இலக்கியத் தேன் சுவை பயிற்றி, இளந் தமிழ் உள்ளங்களில் தமிழ் ஆர்வப் பயிர் தழைத்தோங்கச்

செய்தார். அதுகாறும், தமிழ் மாணவர்கட்குத் தமிழ் வகுப்பு என்றாலே வேண்டப் படாத வேம்பாக, கசப்பு மருந்தாக இருந்தது போக, அவரது தமிழ் இனிமையால், அதுவே விரும்பிச் சுவைக்கும் கரும்பாக, இனிப்புக் கட்டியாக மாற்றங் கொண்டது என்றால் மிகையாகாது.

அக்காலப் புலவர்கள் சமய நோக்கத்துடனேயே தமிழ் ஏடுகளைப் பயின்றதன் பயனாக, அவர்களிடையே சமய வேற்றுமை தலைதூக்கி நின்றது. சாதி பற்றிய மூடநம்பிக்கையானும் வெறுப்பு வளர்ந்தது. இவற்றால் பிறந்த சண்டைகளும், தாக்குதல்களும் பலப்பலவாகலின், புலவரிடையே ஒற்றுமையும் புலமையிலே மொழிப் பற்றும் அரிதாயின. அவர்களால் தமிழ் தழைத்து வளரத்தான் கூடுமோ? நமசிவாயனாரோ, தம்முடைய ஆசிரியரான பெரும்புலவர் சண்முகனாரிடம் கற்கப் புகுந்த காலத்திலேயே, தாம் சமயச் சண்டையிலும், சாதிப் பிணக்குகளிலும் ஒருநாளும் தலையிடாதிருப்பதாக, அவர் விதித்த கட்டளையை உளமார ஏற்றிருந்தார். பின்னாள்களில் அவரது எண்ணமும் செயலும் பொது நோக்குடையனவாகச் சிறக்க அஃது ஏதுவாயிற்று எனலாம். அவர் சைவந் தழுவி நின்ற போதிலும், அவரது தமிழ்த் தொண்டு, ஒரு பக்கச் சார்புடையது ஆகாது, புலவர்களிடையே தமிழ் அடிப்படையினின்று எழும் பொது உணர்ச்சியும், ஒற்றுமையும் உருவாகத் துணையாயிற்று.

தமிழ்ப் புலவர்கள் ஒன்று கூடுதற்கும், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளுதற்கும் வாய்ப்பில்லாதிருந்த நிலையில் அவற்றிற்கு வாய்ப்பாக முதன் முதலாகப் புலவர் சங்கம் ஒன்று தோற்றுவிக்க முனைந்தார் அவர். சென்னைத் தமிழ்ப் பண்டித சங்கம் பிறந்தது. புவர்கள் ஒன்று கூடி, உரையாடி மகிழக் கருத்து விருந்து நுகரத் தம் குறைகளை அரசினருக்கு எடுத்துக் கூறிக் களையுமாறு கேட்க, தமிழாசிரியர் தம் மதிப்பைக் கல்வித் துறையிலும் சமுதாயத்திலும் உயர்த்திக் கொள்ள இச் சங்கமே உறுதுணையாயிற்று.

அக்காலத்தில் உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றிய தமிழ் ஆசிரியர்கள் சிறந்த புலவர்களாயினும் குறைந்த ஊதியமே

பெற்று வருந்தினர். நமசிவாயர், அரசாங்கத்தை வற்புறுத்தித் தமிழாசிரியர் தம் ஊதியத்தை உயர்த்தச் செய்தார்.

பேராசிரியர் 1917 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்மொழித் தேர்வுக் குழுவின் தலைவராகவும் 1920ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தமிழ்க் கல்விக்குழுத் தலைவராகவும் அமர்ந்தார்.

அந்நாள்களில் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம் பெற விரும்பும் ஒரு தமிழ்மகன், தமிழேயன்றி வடமொழியிலும் தேர்ச்சி பெறவேண்டும் என விதி இருந்தது. வடமொழியை ஒதுக்கின் பிறிதொரு மொழியில் தேர்ச்சி பெறவேண்டும். அதன் பயனாகத் தமிழ் நாட்டில் வாழும் பிறமொழியாளர்கள் 'வித்துவான்' ஆதற்கு இருந்த எளிய வாய்ப்பு தமிழர்க்கு இல்லை. 'வித்துவான்' பட்டம் பெற்றவர்களும், அச் சொல்லின் வடிவுக் கேற்பப் பெரும்பாலும் வடமொழி பயின்றவர்களே! வடமொழியும் கற்றவர் என்று கூறுவது பொருந்தாது. தமிழும் கற்றவர்கள் எளிதாகத் தமிழ் வித்துவான்கள் ஆனார்கள். உண்மையான தமிழ்ப் புலமையுடையார் பலரும், 'வித்துவான்' பட்டம் பெறுதற்குக் கருதவே இடமில்லாத நிலை! என்னே தமிழ்த் தாயின் அவலம் இருந்தவாறு!

நமசிவாயனார் கல்விக் குழுத் தலைவராக அமர்ந்த பின்னரே, பல்கலைக் கழகத்தில், தமிழ்ப் புலமையும் அமர்வதாயிற்று. தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு, இத் தேர்வு விதிகள் இடையூறுகும் வகையை அரசினருக்கு விளக்கிக் கூறி, வலியுறுத்தி அதனை மாற்றுதற்கு இசைய வைத்தார். அதன் பயனாகவே தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை முறையாகக் கற்ற அளவில், வித்துவான் பட்டம் பெறலாகும் நீதி பிறந்தது. இக்காலத்தில் தமிழ்ப் புலமையுடையார் பலராகப் பெருகி வாழ் தற்கு வழியமைத்துத் தந்த பேரறிவாளர் அவரே.

தமிழ்மொழி, காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் ஒவ்வொரு துறையிலும் சிறக்க வேண்டுமென விரும்பி அவர் ஆற்றிய பணிகள் பல.

பள்ளியில் அடியெடுத்து வைக்கும் குழந்தைகள் படித்தற்கு ஏற்ற 'சிறுவர் ஏடு' முதல் உயர்நிலைப் பள்ளி, கல்லூரி வகுப்புகள் முடிய ஒவ்வொரு நிலையிலும் வகுப்பிலும் உள்ள மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற, உற்ற பாட நூல்கள் வரை, ஆங்கில மொழி யில் அமைந்தவற்றிற்கு ஈடான பல ஏடுகளை எழுதினர் பேரா சிரியர். எளிதான சில சொற்களில் தொடங்கி, வளமான கருத்துச் செறிந்த செந்தமிழ்க் கட்டுரை வரையில் இயற்றி, தமிழ்க் கல்விப் பயிர் வேர்விட்டு வளர நீர் பாய்ச்சினர். கற்ருர் பலரும் படித்தற்கு ஏற்ற நூல்களும் எழுதினர்.

நாடகத் துறையில் மேல் நாட்டு இலக்கிய வளர்ச்சியைக் கண்ணுற்ற அவர், சில நாடகங்களும் (கீசகன்; பிருதிவிராசன்) இயற்றினர். நல்ல தமிழ் நடை வளரவும் இலக்கியப் பயிற்சி செழிக்கவும், ஒரு திங்கள் ஏடு தேவை எனக் கண்டு 'நல்லாசிரி யன்' என்னும் இதழைத் தொடங்கிப் பதினைந்து ஆண்டுக் காலம் பயனுற நடத்திப் பலருக்கும் அத்துறையில் வழிகாட்டி யானர்.

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதிலும் அவர் ஆர்வம் கொண்டார். இளம்பூரணர் உரையோடு, தொல்காப் பியத்தின் சொல் பொருள் அதிகாரங்களையும், இறையனர் களவியலையும் வேறு சில இலக்கியங்களையும் அவர் பதிப்பித் தார்.

அவரது தமிழ்ப் பணியின் அருமையும் பெருமையும் அவர் மறைந்த ஞான்று, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் உள்ளங் கரைந்து பாடிய இரங்கற்பாவின் அடிகள் சிலவற்ருல் விளங்கும்.

> 'அருந்தினை தமிழைப் பொருந்தி அமிழ்தென
> என்றும் இன்மொழி நன்றே வழங்கினை
> சாதியை யொழித்து நீதியில் நடந்தனை
> செந்தமிழ்த் தாயின் சிந்தை மகிழக்
> கால ஒப்பனை சாலச் செய்தனை
> ....

நின்மொழி யுன்ன நின் செயல் எண்ண
உள்ளங் குழையும் ஊனுங் கரையும்
என்பு நெக்குறும் அன்புக் கடலே
பெரிதே துன்பம் பெரிதே
காண்ப தென்றோ
மாண்புறு முகமே!'

இவ்வாறு தமிழ்ப் பெரியார் உள்ளத்தில் இடம் பெற்ற நமசிவாயர் தமது உள்ளத்தில் தமிழுக்குத் தந்திருந்த இடம் தான் என்னே?

'தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக் கிருகணாய் வயங்குநன் மொழியே!
தரணியில் சிறப்புறு தனித்தமிழ் மொழியே!
தனித்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!'

தனித்தினிது ஓங்குவாய் எனத் தமிழை வாழ்த்தி, தமிழ் உணர்வு வளரும் வழி போற்றித் தமிழ்த் திருநாள் விழா எங்ஙனும் தோற்றித் தமிழனாக வாழ்ந்த பேராசிரியர் நினைவு தமிழொடும் வாழாதோ?



தமிழ்த் தென்றல்

இவ்விருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் தமிழ் மொழியின் நிலைதான் யாது? தமிழ் மக்களின் தாய்மொழிப் பற்று இடங் கொண்டிருந்த தன்மைதான் யாது? தமிழ் வழக்குந் தேய்ந்து, சொற்களும் உருக் குலைந்து, இசையும் திரிந்து தமிழ் அறிவும் மங்கித் தமிழர்கள் அடிமைகளாகவன்றோ நின்றனர். அந்த அடிமை நிலையினும் ஆங்கிலக் காதல் கொண்டு அதனைப் போற்றி வணங்குவோராய்த் தமிழை இகழ்ந்தன்ருே அலைந்தனர்! அக்காலத்தில் அவர்தம் சிறுமையை விளக்கி உண்மையைப் புலப்படுத்தி, உள்ளத்தைத் தொட்டு 'உயிரோடு கலந்தது தாய்மொழியே' என்னும்

உணர்வூட்டி, பல்வேறு துறைகளாலும், தமிழர்தம் நிலை உயர்வதற்கு உழைத்த உத்தமர் தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களாவர்.

அவருடைய தமிழ்ப்பணியும் பொதுத் தொண்டும் பின்னிப் பிணைந்தவை. அவரது குரல் தமிழின் குரல்; அவரது செந்நா செந்தமிழ் நடமிடும் மேடை; அவரது எழுத்து பைந்தமிழ் பிறப்பிடம்; அவரது உள்ளம் தமிழ் அறச்சாலை; அவரது மூச்சு தமிழ் இலக்கியச் சோலையில் உலவி வரும் தென்றல்; அவரே தமிழ்! அவர் செயலெல்லாம் தமிழ்த் திருப்பணி.

நாட்டு விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு, மக்கள் மன்றத்திலே ஏற்றம் பெற்று மேடைகளிலே சிறப்புற்று, ஏடுகளிலே புகழோங்கி அவர் வாழ்ந்த வாழ்வெல்லாம், பெற்ற பெருமையெல்லாம், தமிழுக்குக் கிடைத்த நல்வாழ்வாகவே அமைந்தது என்றால் அது தவறாகாது.

அவர் ஆசிரியராக இருந்து மாணவரிடையே நல்ல தமிழ்ப் பயிர் வளர்த்தார். அரசியலில் ஈடுபட்டு நாட்டுப் பற்றோடு மொழிப்பற்றை இரண்டறக் கலக்கச் செய்தார். தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டு அவர்தம் உரிமைக்குத் 'தமிழ் நெஞ்சம்' துணையாவதை விளக்கினார். பெண்ணின் பெருமைக்குத் தமிழ் இலக்கியம் அரண், தீண்டாமை ஒழிப்புக்குத் தமிழ் அறமே போர்க் கருவி என அவர் எடுத்துக் காட்டினார். அவரை ஆசிரியராகப் பெற்றிருந்த ஏடுகள், தமிழ்மொழியைக் கையாளும் திறத்தால் பிற ஏடுகளுக்கெல்லாம் வழிகாட்டிகளாயின. தமிழின் இனிமையை, பொருள் தெளிவை, கருத்து ஆழத்தை, செஞ்சொல் வளத்தை, இலக்கியப் பின்னணியை, பண்பட்டிருந்த அறவழியை, அவரது பேச்சும் எழுத்தும் உலகிற்கு உணர்த்தின. பழந்தமிழ் புதுத் தமிழாயிற்று அவரால்! எண்ணற்ற தமிழர்—தமிழார்வம் கொள்ளத் துணையானார் அவர்.

செந்தமிழ் நாவீறு தோன்ற இனிய தமிழை மேடையேறி முழங்கி நாட்டுமக்களின் செவிகளிலெல்லாம் நல்ல தமிழை

நிரப்பி—நற்றமிழ்ச் சொற்களெல்லாம் வழக்காறு பெற வழி செய்தவர் தமிழ்ப் பெரியார். அவரது மேடைப் பேச்சு நாட்டில் வழங்கிய மேடைப் பேச்சு முறையையே திருத்தமுறச் செய்யும் கருவியாயிற்று.

எழுத்திலும் பேச்சிலும் திருந்திய செந்தமிழ் நடையையே கைக் கொண்ட திரு. வி. க. அவர்கள் அந்த நடை படிப்பவர்க்கு விளங்குமாறே, கேட்பவர்க்கும் விளங்குதல் வேண்டித் தமது கருத்துகளைச் சிறுசிறு சொற்றொடராக, எடுத்ததொரு கருத்தை முடித்து, அடுத்த கருத்தைத் தொடங்கும் ஒரு முறையை மேற்கொண்டு எளிதாக விளங்கவைத்தார். ஆம்! அவர் தம் கொள்கையை விளக்கி உரைநிகழ்த்திய அதே பொழுதில், செந்தமிழ் வகுப்பும் நடத்தினர். கேட்டாரைப் பிணிக்கத் தவருத அவரது பேச்சுக்கு, மாணவராயினர் பல்லாயிரவர்.

அவரது எழுத்தோ ஒரு கலைக்கூடம். அதில் இடம் பெருத பொருளில்லை; உலகமும் மனித வாழ்வும் பல்வேறு கோணங்களில் 'படம்' பிடித்துக் காட்டப்படும். வாய் விட்டுப் படிப்பவர்க்கு, அதன் ஓசைநலம் இறும்பூது விளைவிக்கும். அவர் பலகாலும் எண்ணி எண்ணி ஆய்ந்து ஆய்ந்து சிந்தித்துத் தெளிந்து வெளியிட்ட நூல்கள் ஒரு சிறு நூல் நிலையமாகும். அவையே, அவரது உயிருடன் உறைந்து, ததும்பி நின்ற உணர்வின், இன்றைய உடலாக உள்ளன.

இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற தமிழ் நடையின் தந்தை அவர். உரைநடையில் மட்டுமன்றிச் செய்யுள் நடையிலும் அவர் இயற்றிய நூல்கள் பல துறை பற்றியவை. நூல் இயற்றுவதும் அவருக்கு ஒரு தொண்டு; தொழிலல்ல. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் நூலின், முன்னுரையில், ''என் தாய் நாடு உரிமை பெற்ருலன்றி, என் தமிழ்த் தாய், அரசு போற்றுங் கழகமேறி அரியாசனம் வீற்றிருக்க மாட்டாள் என்றும், சிறப்பாக அரசியல் துறை நண்ணிப் பணி செய்தால் தமிழ்த்தாய்க்கு நலம் விளையும் என்றும் எண்ணி, அத் துறையில் இறங்கித் தொண்டு செய்யலானேன்'' என்று

குறிப்பிட்டுள்ளதைக் காண்போர் அவரது உள்ளக்கிடக்கையை உணர்வர்.

அறநெஞ்சத்தையும் அதன் பயனாகிய தொண்டினையும் விவரித்திடும் வாயிலாக 'மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் நூலை எழுதினார்.

இயற்கை அழகில் ஈடுபடும் உள்ளம், என்றும் அழியாத இறையழகை உணருமாற்றை விளக்கி 'முருகன் அல்லது அழகு' என்னும் இலக்கியத்தைப் படைத்தார்.

நாயன்மார் திறம், சைவத்தின் சமரசம், கடவுள் மாட்சியும் தாயுமானாரும், சைவத்திறவு, இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், தமிழ்நாடும் நம்மாழ்வாரும், சித்தமார்க்கம், இமயமலை அல்லது தியானம் ஆகிய நூல்கள் யாவும் பொது நோக்குடன் பேரன்பு வயப்பட்டு, உள்ளொளி பெருக்கும் சமரச சன்மார்க்க அடிப்படையை விளக்கி உரைப்பனவாம்.

பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை நலம், சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து. தமிழ்த்தென்றல் முதலானவை அறிவுப் புரட்சியை உருவாக்கிச் சமுதாயச் சீர்திருத்தம் விளையத் துணை செய்பவை. இப்படி வெளிவந்த நூல்கள் பலப்பல. அவை யாவும், தமிழ் அன்னையின் குறை தீர்ப்பன—அவலம் நீக்குவன.

''எல்லாம் தமிழால் உணர்த்தலாம்—தமிழால் உரைக்கலாகாத அறிவும் துறையும் எதுவும் இல்லை'' என்னும் தெளிவும் உறுதிப்பாடும் பிறக்கத்தக்க வகையில் அவரது நூல்கள் தமிழுக்கு ஆக்கஞ் செய்தன. தாமே சிந்தித்துப் புதிய புதிய எண்ணங்களை வெளியிடும் ஆற்றல் வளரவும் அவருடைய நூல்கள் துணை நிற்பன.

திரு. வி. க. அவர்கள் தமிழின் மறுமலர்ச்சிக்கு வழி கண்டார். துறைகள்தோறும் தமிழ்ஆட்சி நிகழுதற்கு வித்திட்டார். தமிழைக் கற்றறியாதாரும் தமிழ்ப் பற்றுடையவராகுமாறு எழுச்சியூட்டினார். ஆம்! தமிழ்த்தென்றல் வீசிய

போது விளைந்த புத்துணர்ச்சியை அந்தத் தென்றலிலே தோய்ந்தவர்கள் எய்தாதிருக்கக் கூடுமோ ?

அக்காலத்தில் தமிழ்மொழி உற்றிருந்த நிலையைத் தமிழ்ப் பெரியாரே விளக்கிக் கூறுவதைக் கேளுங்கள் ! தமிழ்த் தென்றலிலே தோய்ந்து நிற்போம் நாம்.

"அருமைத் தமிழ் மாணுக்கர்களே ! உங்கள் நாட்டை நோக்குங்கள் ! அஃது எப்படி இருக்கிறது ? அருமைத் தமிழ் நாடு சின்னு பின்னமாகக் கிடக்கிறது. காரணம் என்னை ? தலையாய காரணம் என்னை ? தாய் மொழியைப் பேணுமை, அதனை ஓம்பாமை, அதன்பால் பற்றுள்ளம் கொள்ளாமை. தமிழ்த் தாயின் நிலையை உன்ன உன்ன உள்ளம் குழைகிறது. உலகிலுள்ள எல்லாத் தாய்மார்களிலும் நந்தமிழ்த் தாயே மிக இழிந்த நிலையுற்றிருக்கிருள்.

ஒருபோது முடியணிந்து, கோலேந்தி, கலையணிந்து அரியாதனம் வீற்றிருந்த நம் அன்னை-எல்லார்க்கும் மூத்த நம் பெரும் அன்னை இப்போது எந்நிலையிலிருக்கிருள் ? அவள் முடியிழந்து, கோலிழந்து, கலையிழந்து, நலமெலாமிழந்து கிடக்கிருள்; அவள் உடற் கூறுகளெல்லாம் ஊறுபட்டுக் கிடக்கின்றன. அவள் முகமெல்லாம் குறுமருக்கள் எழும்பி, அவள் எழிலைக் கெடுத்து வருகின்றன; அவள் இருக்கச் சிறு குடிலுமில்லை. அவளைத் தூறும் புற்றும் மூடிக் கொள்ளுமோ என்று அஞ்சுகின்றேன். அவளைப் பழையபடி கொலுவீற் றிருக்கச் செய்யும் பொறுப்பு எவருடையது ? உங்களுடையது ! உங்களுடையது ! என்று அறை கூவுகிறேன். தமிழ்நாட்டு மக்கள் யாவரையும் தமிழராகப் பார்க்கும் நெஞ்சம் உங்கள்பால் அரும்பி மலர்வதாக ! அம் மலர் பிலிற்றும் இன்பத்தேன் தாயின் நோய்களையெல்லாம் போக்குவதாக !"

இவ்வாறு தமிழ்த்தாயின் நோய் நீக்கும் தென்றலாக உலவினர் திரு. வி. க.

'தமிழ்ச் சோலை'யிலே நாம் காணும் காட்சி இது. தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்று' என்பதை உணர்த்து

வாராகி அவர் கூறுகிறார், "ஈன்ற ஒருத்தியையும், பிறந்த நாட்டையும் ஒருவன் தாய், தாய், தாய் என்று போற்றுகிறான். ஒருவனுக்குப் பெற்ற தாயின்பால் எத்தகைய அன்புண்டோ அத்தகைய அன்பு அவனை அளித்த நாட்டினிடத்தும் அவனை வளர்க்கும் மொழியினிடத்தும் அவனுக்கு இருத்தல் வேண்டும். பேசுந் தாய்மொழிமாட்டு அன்பில்லா ஒருவன் தாயையும் நாட்டையும் பழித்தவனாவான்.

நாட்டில் செல்வாக்குப் பெற்றிருப்பவர் பெரிதும் ஆங்கிலம் கற்றவர். இவர்களால் எழுதப்படும் நூல்கள் பல இதுகாலை வெளிவருகின்றன. அவைகளின் கருத்து வேண்டற்பாலதே. ஆனால் அவைகளிலுள்ள மொழியோ அவைகளைத் தொடவும் மனத்தைத் தூண்டுவதில்லை! என் செய்வது?

ஆட்சியை 'ஆக்ஷி'யாகவும், காட்சியை 'காக்ஷி'யாகவும், செலவைச் 'சில'வாகவும், நாகரிகத்தை 'நாகரீக'மாகவும் காணும்போது தமிழுணர்ந்த எவர் உள்ளந்தான் வருந்தாது! பாஷையாலென்ன? எப்படி எழுதினாலென்ன? என்று சிலவறிஞர் கூறுகிறார்! இக்கூற்றுத் தமிழ்மொழியை மட்டுமே பற்றி எழுவதா? ஆங்கில மொழியைப் பற்றியும் எழுவதா? என்று அவ்வறிஞரைக் கேட்கிறோம்.

ஆங்கில நினைவு தோன்றும்போது எழும் மொழி வனப்பு தமிழ் நினைவு தோன்றும்போது ஏன் எழுவதில்லை? 'தமிழ்த் தாயை எவ்வாறுவது குலைக்கலாம்; ஆங்கிலத் தாயை ஓம்பினால் போதும்' என்னும் எண்ணம் இந்நாட்டார்க்கு உதித்திருக்கிறது போலும்! ஈன்ற தாய் பட்டினி! மற்ற தாய்க்கு நல்லுணவு! என்னே காலத்தின் கோலம்!

தமிழ் நாட்டைப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டுமாயின் தமிழ்மக்கள் முதலாவது தங்கள் மொழியினிடத்துப் பற்றுக் கொள்ளுதல் வேண்டும். தமிழ்மக்கள் எம்மதத்தைப் பற்றி ஒழுகினும் ஒழுகுக. அவர்கள் தாய்மொழிப் பற்றை மட்டும் விடுதல் ஆகாது. மேலும் மொழியினிடத்துப் பற்றில்லாதார் தேச சேவை இடும்பையை அடிப்படையாகக் கொண்டதாக முடியும்.

வங்கக்கவி ரவீந்திரநாத தாகூரை உலகம் போற்றுவதற்கு என்ன காரணம்? அவரால் அருளிச் செய்யப்பெற்ற 'கீதாஞ்சலி' என்னும் நூல் இப்போது ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. தாகூர் அதனை முதன் முதல் ஆங்கில மொழியிலா எழுதினார்? முதன் முதல் அவரது தாய் மொழியான வங்கத்திலேதான் அவர் அதை எழுதினார்.

தேச பக்தியிற் சிறந்த பாலகங்காதர திலகர் 'கீதா ரகசியம்' என்னும் நூலை ஆங்கிலத்திலா எழுதினார்? அவரும் முதலில் அதைத் தமது தாய் மொழியாகிய மகாராட்டிர மொழியிலேயே எழுதினார். இவ்வுலகம் போற்றும் மகாத்மா காந்தி, தம் வாழ்க்கை வரலாற்றைத் தமது தாய்மொழியான கூர்சரத்திலன்றோ எழுதினார்!''

இந்தத் தாய்மொழிப் பற்றும்—தாய்மொழியை வளர்க்கும் வேட்கையும் தமிழருக்கெல்லாம் வேண்டும் என்று விளக்கிய திரு. வி. க. அவர்கள், தமிழின் தனிப்பெருமையையும் தமிழர் நாகரிகச் சிறப்பையும் விளக்கி எழுச்சியூட்டினார்.

அவர் நிகழ்த்திய உரைக் கோவையின் பகுதியே இது. ''நமது இந்தியா தேசம் ஒரு கண்டம் போன்றது. அதன் பகுதிகளுள் ஒன்றாயிருப்பது நம் தமிழ்நாடு. அதன் நிலை நாளும் தாழ்வதுதான் ஏன்?

உலகத்திலுள்ள நாகரிக இனத்தவர்களுள் தமிழ்மக்கள் தலையாயவர் என்று கூறுவது மிகையாகாது. நேற்றுத் தோன்றிய இனத்தவர்கள் தங்கள் முயற்சியால் எவ்வளவோ அரிய செயல்கள் செய்கிறார்கள். பழங் கூட்டத்தவராகிய தமிழ் மக்கள், தங்கள் நிலை, தங்கள் முன்னோர்கள் நிலை ஆகியவற்றைக் கருதாது வாழ்ந்து வருவதால் அவர்கள் எல்லா வழியிலும் சிறுமையுற்று வருகிறார்கள்.

முதலாவது தமிழ்மக்கள் தங்கள் பழமையைப் பாராட்டப் பயிற்சி பெறுதல் வேண்டும். நிலநூல், தாவர நூல், உயிர் நூல் முதலிய நூல்களை ஆராய்ச்சி செய்த, கூர்த்தமதியின

ராகிய ஹெக்கல் முதலிய அறிஞர், மக்கள் முதன் முதல் தோன்றிய நிலத்தைக் குறிப்பிட்டிருப்பதைச் சரித்திரக்காரர் ஆராயும்பொழுது அந்நிலம் பழந்தமிழ் நாடாகவே முடிந்திருக்கிறதென்று கருதுகிறார்கள்.

சரித்திர காலத்துக்கு எத்துணையோ நூற்றாண்டுகட்கு முன்னர்த் தோன்றிய தமிழ்மக்கள் பேசிய மொழி இன்னும் இறந்துபடாது நிலவி வருவதை நுண்ணறிவால் ஆராய்வோருக்கு அம் மொழியின் தொன்மையும், வளமும், பண்பும் புலனாகும்.''

அந்நாட்களில் பழந்தமிழர் வாழ்ந்த வாழ்வையும் நிலையையும் இந்நாள் மக்கள் உணர எடுத்துக் காட்டிக் கூறுவது இது :

''தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய கல்வித் துறைகளை வளப்படுத்தியிருந்தார்கள். தமிழில் மருத்துவ நூல், கோள் நூல், நீதி நூல், கடவுள் நூல், இலக்கண நூல், இலக்கிய நூல் முதலிய நூல்கள் இருந்திருக்கின்றன. இந்நூல்களில் சில சரித்திர காலத்திற்கு முன்னரே யாக்கப்பட்டவை. தமிழ்மக்களின் தன்னாட்சி வீழ்ந்துபட்டமையானும், பல நாட்டார் தமிழ் நாட்டில் புகுந்தமையானும், தமிழ்மொழிப் புலமையுடையார் தொகை அருகிற்று. இவ்விடையூறுகள் நிகழாதிருக்குமாயின், தமிழ்மொழி உலகம் போற்றும் ஒரு பெரும் மொழியாக மாண்புற்றிருக்கும்.

இக்கால அறிஞர்கள் (ஆராய்ச்சியாளர்கள்) புதிதாகக் காணும் சில பொருள்கள், பண்டைத் தமிழ் நூல்களில் மல்கிக் கிடக்கின்றன. இதனால் பண்டைத் தமிழ்ப் புலவர்களின் அறிவின் வெற்றியை என்னென்று பாராட்டுவது? பண்டைத் தமிழ் நூல்களை ஆராய்வோர்பால் அன்பு, அமைதி, பொறுமை, இன்னா செய்யாமை, இயற்கை இன்பம் முதலிய அருங்குணங்கள் பொலிதல் காணலாம். **இடைக்காலத்துத் தமிழ் நூல்களிலும், தற்காலத்துத் தமிழ்நூல்களிலும் பல, தமிழ்நாட்டின் சிறப்பைக் குலைக்க வந்த கோடரிக் காம்புகளாய்த் தமிழுக்குக் கேடு சூழ்ந்து வருகின்றன.**

இசை மயமான இயற்கை நிலத்தில் வாழ்வு நடத்தி, அவ்வியற்கைத் தமிழைச் சுவைத்தவர்கள் நம் முன்னோர்கள். 'தமிழ்' என்பதற்கு இனிமை என்பது பொருள். 'தமிழ் தழீஇய சாயலவர்' என்றும், 'தமிழ் சேர் காஞ்சி' என்றும், புலவர்கள் இனிமை என்னும் பொருள்படத் 'தமிழ்' என்னுஞ் சொல்லை ஆண்டிருத்தல் காண்க. பழமை மக்கள் இயற்கையில் ஊறும் தமிழையே (இனிமைச் சுவையையே) பின்னைத் தாங்கள் அவ்வியற்கைப் பொருளுக்கிட்டு வழங்கிய சொல்லினை மொழிக்கும் வழங்கினார்கள் போலும்!''

இவ்வாறு 'தமிழ்' பெயர் பெற்றது என்றுரைத்த தமிழ்ப் பெரியார், தமிழ் இசையைக் குறித்துக் கூறுவதையும் காண்க:

தமிழ் என்றால் என்ன? இனிமையன்றோ! தமிழ் இனிமை, இசை இனிமை. இரண்டின் இனிமையும் ஒன்று பட்டால் எத்தகைய இன்பம் சுரக்கும்! தமிழிசையின் மாண்பு என்னே! என்னே! தமிழர் திருவே திரு.

தமிழிசை தொன்மை வாய்ந்தது; மிகத் தொன்மை வாய்ந்தது. அவ்விசை எந்நாளில் தோன்றியது, வளர்ந்தது, முதிர்ந்தது என்று அறுதியிட்டுக் கூறுதல் இயலவில்லை. அது சரித்திர காலத்தையும் கடந்து நிற்பது. பல நாட்டவர் இசை நுட்பம் இன்னதென்று தெரியாது திரிந்த காலத்தில், தமிழ் நாட்டவர் இசை நுட்பத்தைச் செவ்வனே தெளிந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் பலபடக் கிடக்கின்றன. தமிழர் கோவில்களும், மறைகளும், காவியங்களும், ஓவியங்களும் பிறவும் எடுத்துக்காட்டுகளாக இலங்குகின்றன.

தமிழ்நாடு கலைக்கூடமாய்ப் பொலிந்த காலமும் உண்டு. இது பண்டைப் பெருமை. பிற்காலத்தில் தமிழ்நாடு பல கலைகளை இழந்தது; இசைக் கலைகளில் பல கூறுகளை இழந்தது; பொல்லா விலங்குகளையும் வயப்படுத்த வல்ல யாழை இழந்தது. இது பிற்காலத் தமிழ்மக்களின் கலை ஈனத்தால் விளைந்தது. இசைக்கு ஏற்றந் தந்திருந்த பழந்தமிழகத்தில் தமிழ்ச் சொல்லோவியங்களைக் கொண்ட இன்பப் பெட்டகங்கள், கலித்தொகை, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம் முதலிய

நூல்கள் பிறந்தன. இது மட்டுமா? அத்தகைய கலை மலிந்த தமிழ் நடமாடிய நாட்டினையும் காண்மின்!

குமரியாறும் பஃறுளியாறும் வளஞ்செய்த செழிய நிலப் பரப்பே குமரி நாடென்று சொல்லப்படுவது. இப்பொழுதுள்ள இந்துமகா சமுத்திரம் என்னும் பெரு நீர்ப்பரப்பு நிலப்பரப்பா யிருந்த தென்றும், ஆண்டே மக்கள் தோற்றம் முதன்முதல் உற்றதென்றும், அந்நிலம் பின்னைக் கடலால் விழுங்கப்பட்ட தென்றும், ஆசிரியர் ஏர்னெசுடு ஹெக்கல், ஸ்காட், எலியட் உள்ளிட்ட அறிஞர் பலர் தமது ஆராய்ச்சியிற் கண்ட உண்மையை உலகிற்கு உணர்த்தியிருக்கின்றனர். லெமூரியா என்னும் நிலப்பரப்பே தமிழ்நூல்கள் கூறும் குமரி நாடு. அந்நாடு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் கடலால் கொள்ளப்பட்டது.

பஃறுளியாற்றின் நிலையைப் புறநானூறு முதலிய நூல்கள் கூறுகின்றன. அதன் அழிவைச் சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் கூறுகின்றன. பஃறுளியும் குமரியும் அவை ஓடிய நாடும் கடலால் விழுங்கப்பட்டன. அந்நாட்டில் வாழ்ந்த மக்களிடைப் பூத்த நாகரிகமும் அறிவுமே இப்பொழுது உலகத்தில் பரந்தும் விரிந்தும் மருவியும் நிலவுகின்றன.

இத் தொன்னிலப் பரப்பின் அழிவுபோக எஞ்சி நிற்பதே இதுபோழ்து நாம் வாழும் தாயகம். இத் தமிழகத்தின் தொன்மையை எக்கால அளவுகொண்டு கூறுவது? 'இத் தொன்மை வாய்ந்த நாட்டிற் பிறந்தவர்கள் நாம்' என்று சொல்லும்போது, என்னை அறியாதே என்பால் இறுமாப்பு எழுகின்றது.''

தொன்மையின் பெருமையில் இவ்வாறு இறுமாப்பு கொள்ளுவதாகக் கூறிய அடக்கம் மிகுந்த தமிழ் உள்ளம், அவர் காலத் தமிழ்நிலை பற்றி எண்ணி அலறியதையும் காணுங்கள்.

''இப்பொழுது நமது தாய்மொழி எந்நிலை யுற்றிருக்கி றது? தமிழ்த்தாய் யாண்டு உறைகின்றாள்? அரசாங்கத்தில் வீற்றிருக்கின்றாளா? மன்றங்களில் வதிகிறாளா? சட்ட சபை

களில் வாழ்கிருளா? கல்லூரிகளெனப்படும் கல்வி நிலேயங் களிலாதல் அவளைப் பார்க்கலாமா? தமிழ்ப் பத்திரிகைகளி லாதல் அவளுக்கு இடமுண்டா? பல பத்திரிகைகள் தமிழ்த் தாயின் சிகையை, கழுத்தை, இடுப்பைக் கொய்யும் இறுவா ளாகவும், உடைக்குந் தண்டமாகவும் அன்ருே உலவுகின்றன?

சிலர் சிற்சில இடங்களில் 'தமிழ், தமிழ்', என்று கண்ணீர் விடுகிருர். அவருள் சிலர் தமிழுக்கு ஆக்கந்தேடுவதுபோல் அழிவு தேடி வருகிருர். தமிழ்த்தாய் நாளு பக்கங்களிலும் தாக்கப்பட்டு வலியிழந்து வீழ்ந்து கிடக்கிருள். 'ஐயுந் தொடர்ந்து, விழியுஞ் செருகி' அவதியுறு நிலேயை நந்தாய் அடைந்திருக்கிருள். தமிழ் வேந்தர்கள் காலத்தில் 'கன்னி' என்றும் அழியாதவள் என்றும் பெயர் தாங்கிய நம் அன்ஃன இக்காலத்தில் இறந்துபடுவளோ என்னும் ஐயமும் நிகழு கின்றது.'' இவ்வாறு ஐயம் எழுவதாகக் கூறிய தமிழ்ப்பெரியார் அவர்களே, வரலாற்றை நோக்கி-இளேஞர்களே! தமிழ் ஒரு நாளும் அழியாது! அதனே அழிக்க எந்நாளும் எவராலும் எதனுலும் ஆகாது! எனப் புத்துணர்ச்சியூட்டுகிருர். ''இதே பழந்தமிழ் நாட்டைக் கடல் கொண்டது பல முறை. அதனுலும் தமிழ் அழியவில்லே. எத்துணேயோ புதுமக்கள் தமிழ்நாட்டில் குடி புகுந்தார்கள். அதனுலும் தமிழ் அழியவில்லே. தமிழைத் தொலேக்கவும் சிலர் முயன்றனர். அவர்தம் முயற்சியாலும் தமிழ் அழியவில்லே. தமிழ் மொழிக்குப் பின்னர் எத்துணேயோ மொழிகள் தோன்றி இறந்தன, ஆனல் தமிழ் மொழியோ சாவா—மூவா மருந்தாக உலகில் நிலவுகிறது.'' என்று அறை கூவினர்.

இவ்வாறு 'என்றும் உளதாகும் இன்றமிழ் என்னும்' உணர்ச்சியூட்டி, வாழ்க்கையின் துறைகள்தோறும் தமிழ் மொழியையே கைக்கொண்டு தமிழராக வாழவேண்டும் என்று அறிவுறுத்தி, தமிழ்மக்களிடையே தாய்மொழிப்பற்று ஓங்கச் செய்து, தமிழ்மொழியின் மறுமலர்ச்சிக்கு—தமிழ் அன்னேயின் ஆட்சிக்கு அடிகோலினர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. எனில் அது மிகையாமோ?

வாழ்க தொண்டுள்ளம்! வளர்க தாய்மொழிப்பற்று!

அன்னையைப் போற்றுவோம் !

முப்புரமும் நீலத் திரைக் கடல்கள் சூழவும் வடபுரத்தே திருவேங்கடமலை வானளாவி நிற்கவும் அவற்றினிடையே வாழும் நாலரைக் கோடி தமிழ் மக்களுக்கு இன்று மூச்சாக நின்று உயிர் ஊட்டி வரும் தமிழ், சில பல நூற்றாண்டுகட்கு முன்னர், இதனினும் பல பலமடங்கு விரிந்து பரந்த நிலப்பரப்பு முழுவதும் வாழ்ந்தோருக் கெல்லாம் உயிர்க்காற்றாக நிலவிய மொழியாகும்.

இன்று தமிழகத்திற்கு உரிய மொழியாக மட்டுமே அமைந்து, கூனிக் குறுகிக் காணப்படும் நம் தாய்மொழி, முன்னர், 'விந்திய மாமலை வரைப் பரவிக் கிடந்த தென்னகம் முழுவதற்குமே உரியமொழியாகவும், அதற்கு முன்னர், குமரி முனைக்குத் தெற்கே இன்று பரவிக் கிடக்கும் கடல்பரப்பு முற்றும் குமரிக்கண்டம் (இலெமூரியா) என்னும் பெருநிலமாகக் கிடந்த காலை, அப் பரப்பு முழுவதும் தனியாட்சி நடாத்திய மொழியாகவும் வழங்கியதாகும்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்த குடியினராகிய மூவேந்தர் என்ற பெருமைக்குரிய முடி மன்னர் வழி தோன்றக் காரணமான தமிழர் மரபு - தன் தொன்மைக்குச் சான்றாகவும், தன் வளர்ச்சிக்குத் துணையாகவும், தன் பெயருக்கு ஏதுவாகவும் பெற்ற தமிழ், தொல்லுலகுடன் பிறந்து நல்லுலகம் காணும் வகை வளர்ந்து, இன்றும் நிலவுவதாகும். அக்காலத் 'தமிழ்' இக்காலத் 'தமிழுடன்' வரிவடிவில் வேறுபட்டதாகலாம். ஆயினும் அன்று முழங்கிய 'ஒலிவடிவே' தான் இன்றும் வழங்கும் பெருமையுடையதாகும். 'வரி' வடிவம் என்னும் 'உடல்' மாறுபடினும் 'ஒலி' வடிவம் என்னும் 'உயிர்' ஒன்றாகவே உள்ளது என்பது தெளிவாகும்.

இன்று தென்னகத்தின் பகுதிகளான கேரளத்தில் வழங்கும் மலையாளமும், கருநாடகத்தில் வழங்கும் கன்னடமும்,

ஆந்திரத்தில் வழங்கும் தெலுங்கும், குடகில் வழங்கும் துளுவும், சில நூற்றுண்டுகட்கு முன்னர் வழங்கிய தமிழ், பெற்ற மாற்றத்தின் பயனுக அடைந்த திரிபுகளேயாகும். வரலாற்றுத் துறை அறிஞர் 'திராவிடம்' என்னும் சொல்லால் குறிப்பிடும் மொழிக் குடும்பமும் அம்மொழி பேசும் மக்களும் தமிழ்த் தொடர்பானவர்; தமிழினின்றும் பிறந்த ஓர் இனத்தவர் என்பதையே தெளிவாக்கும்.

மொழியின் வழியே இலக்கியமும், இசையும், கலையும், கற்பனை வளமும், நாகரிகமும், நாட்டாட்சி முறையும், பண்பும், பண்பாடும் பிறந்து வளர்ந்துள்ளன. இவை யாவும் ஒரு மொழி வழங்கிய வட்டாரத்தின் தனித் தன்மைகளாக, அடையாளங்களாக இன்றும் நிலவுவன.

ஏடெடுத்துச் செய்யுள் ஒன்றைப் படித்தாலும், யாழெடுத்துப் பாட்டொன்று இசைத்தாலும், இயற்கையின் நலத்தினை வருணித்தாலும், செயற்கையின் சிறப்பினை விளக்கினுலும், வண்ண ஓவியமானுலும், கருங்கற் சிலையானுலும், வானளாவும் கோபுரமானுலும், குடியிருப்புமனையானுலும், வடித்தெடுத்த வேலானுலும், பெண்டிர் போற்றும் அணிமணியானுலும், உடுத்தும் உடையானுலும், தொடுக்கும் பூமாலையானுலும் இத்தனையிலும் - ஒரு நெருங்கிய தொடர்பு, பிறமொழி வட்டாரத்தினெடு காணப்படாததோர் ஒற்றுமை இருப்பதை நாம் காணலாம். இதனையே 'திராவிடம்' எனனும் பெயர் மலைவிளக்காக உணர்த்திக் கொண்டுள்ளது. விளக்கு - குருடருக்கேயன்றிப் பிறருக்கெல்லாம் ஒளி காட்டத் தவறுவதில்லையன்றே !

இந்தப் பேருண்மையை உணர்ந்து பிறருக்கும் உணர்த்தும் வாயிலாகவே, 'மனேன்மணீயம்' சுந்தரனர் அவர்கள் தமது தமிழ்த்தாய் வணக்கப் பாடலை இயற்றியுள்ளார்.

கடல் சூழ்ந்த வையகமென்னும் பெண்ணுக்கு முகமென விளங்கித் தோன்றும் பாரதமெனும் இந்தியத் துணைக் கண்டத்தில், சிறிய பிறைமதியன்ன நெற்றியாக ஒளிரும் தெற்குப் பகுதியும் அதில் அழகாகப் பொருந்திய திலகமெனச் சுடரும்

திராவிடமும் அமைந்திருக்க, அத் திலகத்தின் மணம் பரவினால் ஒப்ப அனைத்துலகத்திலும் புகழ் பரப்பிச் சிறந்து விளங்கு கின்றாள் தமிழ்ச்செல்வி என்றார் அவர்.

"நீராருங் கடலுடுத்த நிலமடைந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறை நுதலும் தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத் துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழ் அணங்கே"

எத்தனை முறை படித்தாலும் - இன்பமன்றோ இப்பாடல்! அத் துடன் நிறுத்தவில்லை அப்பெரும்புலவர்.

நமது தமிழ், கன்னித்தமிழ், என்றுமுள தென்றமிழ், இறைமைகொண்ட இயற்கைத்தமிழ், திராவிட மொழிகளை ஈன் றெடுத்த தாய்த்தமிழ், இறவாத புகழ்கொண்ட வளருந்தமிழ் என் னும் பேருண்மைகளை எல்லாம் அழகுபட உணர்த்தியுள்ளார்.

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி இருப்பதுபோல்,
கன்னடமும், களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதிரத் துதித்தெழுந்தே ஒன்றுபலவாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"

தமிழ்க் கன்னியின் வளரும் ஆற்றலும் வாழ்வளிக்கும் ஆற்ற லும், அதனை உணர்ந்த பெரியாரைச் செயல் மறந்து வாழ்த்தச் செய்கிறது பாடிப் பரவிப் பணிந்து நின்று போற்றுகின்றார் அவர். அதுமட்டுமின்றித் தென்னகத்தில் மெல்ல மெல்லப் புகுந்து, வைதீக ஏடுகளைத் துணையாகக் கொண்டு, இறைவழி பாட்டுத்துறையில் இடம் பிடித்து, மக்கள் மனத்தில் ஆதிக்கம் கொண்டு, தமிழ்மொழியின் உரிமைக்கும் உயர்வுக்கும் ஊறு செய்துவரும் 'வடமொழி' உலகவழக்கில் இன்று நிலவாது அழிந்துபோய்விட்டதனை, அதனைத் தெய்வமொழி என்று இன்றும் நம்புவோர் தெளிவடையுமாறு எடுத்துக்காட்டுகின்றார்.

வாழாத வடமொழி, வாழும் தெய்வங்கட்கு உரிய மொழி என்று வாதிடுவோரும், வாழுகின்ற மொழியேயன்றி, வேறு பல மொழிகளையும் பிறப்பித்து வாழச் செய்த தெய்வமொழியான தமிழின் பெருமையை உணரும் வகை கூறுகிறார். தெய்வத்தின் மொழி - வடமொழி என்பாரும், தெய்வமே தமிழ்மொழி என்பதை உணர்ந்தால் போற்ற முற்படுவரன்றோ!

நாகரிகமே அறியாது நாட்டுமுறை காணாது, விலங்குலகில் விறிட்டெழுந்து காடாண்ட மாக்கள் பிறிதொரு சூழலில், நானில வாழ்வுகண்ட மக்களையே, அடக்கியாண்ட செய்தியைப் போன்றதே இதுவும். எனினும், வரலாறு சுழலாமலா போகும்? எப்படியோ இன்று தமிழின் தொன்மை, மேன்மை, வலிமை, வண்மை, தனிமை, செம்மை, இனிமை, நன்மை முதலிய சிறப்புகள் யாவும் புலப்படத் தொடங்கியுள்ளன.

இன்றும், கோயில் வழிபாட்டிற்கும் சடங்குமுறை நிகழ்ச்சிகட்கும் 'வடமொழி' யே உரிமை கொண்டாடுகின்றது. இசை நிகழ்ச்சிகட்கும் கலைவிழாக்களுக்கும் தெலுங்கும் இந்தியும் முந்துகின்றன. நீதி மன்றத்திலும் விஞ்ஞானப் பகுதியிலும் ஆங்கிலமே கோலோச்சுகின்றது. அரசியல் பீடத்தில் 'இந்தி' இடம் பிடித்துக் கொண்டு வருகிறது.

தமிழின் தனிச் சிறப்புகள் கண்டறியப்பட்ட இக்காலத்தும், தமிழ்நாட்டில் தமிழே ஆட்சிமொழி என்று அறிவிக்கப்பட்ட பின்னரும் அனைத்தும் பயிற்றும் மொழியாகக் கல்லூரிகளில் இடம்பெற்றபாடில்லை.

ஆம் - 'தமிழ்' வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழர்கள் தாம் காலத்தோடு ஒட்டி வாழவில்லை. எனவேதான் தமிழுக்கு முழு வாழ்வில்லை. அனைத்துத்துறையிலும் தமிழ் முதல் இடம் பெறவில்லை.

தான் பிறந்த மண்ணில் தன் வாழ்வுக்குப் போராடும் ஏழைத் தமிழனாகத்தான் - 'தமிழ்மொழியும்' போராடிக்கொண்டுள்ளது. 'உலக மொழிகளில் ஒன்று தமிழ்' என்னும் உணர்வோடு தமிழன் தலைநிமிர்ந்து நின்றாலல்லவா தமிழும் தனிநிலை பெறமுடியும்?

பரந்து விரிந்து கிளைத்து வளர்ந்து செழித்து முழங்கிச் செங்கோலோச்சி நின்றது தமிழ் அந்நாள். தேய்ந்து சுருங்கித் தளர்ந்து மெலிந்து வளைந்து ஒடிந்து தாழ்ந்து நின்றது தமிழ் இந்நாள். ஆனால், தமிழ் இனி மெல்ல மெல்லத் துளிர்த்து, ஓங்கி வளர்ந்து கிளைத்து நின்று தழைத்து வாழும்; திட்டவட்டமான மறுமலர்ச்சியடையும்; பூத்துக் குலுங்கி ஆட்சிமணங் கொண்டு திகழும் என்று உறுதியாக நம்புதற்குரிய அரசாட்சி ஏற்பட்டுள்ளது இன்று.

எண்ணம் பேச்சு எழுத்து யாவும் தமிழாகவேண்டும். அறிவு ஆராய்ச்சி, இலக்கியம், விஞ்ஞானம், யாவும் தமிழிலே பிறத்தல் வேண்டும். கல்விக்கூடம், ஆட்சிமுறை, சட்டசபை, நீதி மன்றம் யாவும் தமிழால் நடைபெற வேண்டும்; பொறியியல் கல்வி, தொழிற்கூடக் கல்வி, மருத்துவக்கல்வி, யாவும் தமிழால் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். கோயில் வழிபாடு, சமய வழிபாடு, திருமணம் முதலான சடங்கு நிகழ்ச்சிகள் யாவும் தமிழிலேயே நிகழ்தல் வேண்டும். இசையும், கூத்தும், கலையும், காட்சியும் யாவும் தமிழ்ச் சுவை மிகுத்தல் வேண்டும் என்று இளைஞர் உலகம் எண்ண முற்பட்டுள்ளது இந்நாள்.

இளைஞர்களின் மொழி ஆர்வம் சிறந்து நற்பயன் நல்க, முன்னாள் கருத்துடைய முதியவர்கள், முன்கொண்ட முறைதனை மாற்றுவதற்கு மனமற்றோர், இனியும் முட்டுக்கட்டை இடுவதனை நிறுத்தி - இளைஞர் தம் முயற்சிக்குத் துணை நிற்க வேண்டும். மொழி வாழ வழி விடுவது, தமிழ்மொழியின் ஆக்க வழியில் குறுக்கிட்டுநிற்கும் முதியோர் கடனாகும். தமிழ் மொழியினைத் தம் விழியெனக் காத்துவளர்த்துப் புத்தொளி காணும் வழி நடத்தலே இளைஞர் கடனாகும்.

பெற்றதாயின் வாழ்விலே பிறந்த சேய்களின் வாழ்வு பிணைந்துள்ளதன்றோ! 'அன்னை' மகிழ்ந்திடின் பிள்ளைகட்குத் தேனன்றோ! தமிழ்மக்கட்கே உரித்தான அன்னையைப் போற்றிப் பணிசெய்ய அனைவரும் உறுதிகொள்வோமாக!

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் திருவாரூரையடுத்த காட்டூரில் 1922ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தையார் திரு. மு. கலியாணசுந்தரனார் அவர்கள் தேசிய இயக்கத்திலும், சுயமரியாதை இயக்கத்திலும் ஈடுபட்டவர். அன்பழகன் இளமையில் ராமையா என்னும் பெயருடன், மாயவரம் உயர்நிலைப்பள்ளியில் பயின்றார். பின்னர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போதே பெரியாரின் இந்தி எதிர்ப்பு இயக்கத்திலும், பகுத்தறிவுக் கொள்கை விளக்கத்திலும் ஈடுபட்டார். பேரறிஞர் அண்ணா அவர்களையும், பெரியார் அவர்களையும் பல்கலைக்கழகத்திற்கு அழைத்துப் பேசச் செய்த பெருமை இவருக்குண்டு. 1944முதல் சென்னை, பச்சையப்பன்கல்லூரியில் துணைப்பேராசிரியராகப் பணியாற்றினார். 1957ல் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் 1962ல் தமிழகச்சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் திகழ்ந்தார். 1967ல் நாடாளுமன்ற உறுப்பினராகி, தி. மு. க. தலைவராகப் பொறுப்பேற்றார். 1971ல் தமிழ்நாடு சட்டப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று, கலைஞரின் அமைச்சரவையில் நல்வாழ்வுத்துறை அமைச்சராகப் பணியாற்றுகிறார். நம் தமிழ்மொழிப் பற்றிலேயே வளர்ந்து, தனித்தமிழ் ஆர்வங்கொண்டு, பேச்சாலும், எழுத்தாலும் தமிழ்த் தொண்டாற்றி வருபவர். கொள்கையில் தெளிவு - அரசியலில் துணிவு - நண்பர்களிடத்தில் கனிவு-பெரியோர்களிடத்தில் பணிவு ஆகியவை இவர்தம் சிறப்பியல்புகள். உரிமை வாழ்வு, கலையும் வாழ்வும், விடுதலைக் கலைஞர், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் முதலானவை இவர் இயற்றிய பிற நூல்கள

20.00